# தொல்காப்பியம்

பழந்தமிழ் நூல்களின் வழியே நமக்குக் கிடைத்துள்ள முழு முதல் இலக்கண நூல் தொல்காப்பியமே. ஆசிரியர், தொல்காப்பியம் என்னும் நூலை இயற்றியமையால்தான் தொல்காப்பியன் எனத் தம் பெயர் தோன்றச் செய்தார் என்பதைப் பாயிரம் "தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி" என்று தெளிவாகக் கூறுகிறது.

தொல்காப்பியம் 'பழமையான இலக்கண மரபுகளைக் காக்கும் நூல்' என்பதற்குப் பலப்பல சான்றுகள் இருப்பவும், 'பழமையான காப்பியக்குடியில் தோன்றியவரால் செய்யப்பட்டது' என்னும் கருத்தால், "பழைய காப்பியக்குடியில் உள்ளான்" என நச்சினார்க்கினியர் கூறினார்.

பழைய காப்பியக்குடி என்னும் ஆட்சியைக் கண்டு 'விருத்த காவ்யக்குடி' என்பது ஒரு வடநாட்டுக்குடி என்றும், பிருகு முனிவர் மனைவி 'காவ்ய மாதா' எனப்படுவாள் என்றும் கூறித் தொல்காப்பியரை வடநாட்டுக் குடி வழியாக்க ஆய்வாளர் சிலர் தலைப்படலாயினர். இம்முயற்சிக்கு நச்சினார்க்கினியர் உரையின் புனைவையன்றி நூற் சான்றின்மை எவரும் அறியத்தக்கதே. இவ்வாய்வுகளையும் இவற்றின் மறுப்புகளையும் **தமிழ் வரலாறு** முதற்றொகுதி[1] (பக். 255 - 257) **தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி**[2] (பக். 2, 3) **தமிழிலக்கிய வரலாறு** - தொல்காப்பியம்[3] (பக்.17-23) என்பவற்றில் கண்டு கொள்க.

**காப்பியர்**

தொல்காப்பியர் சிறப்பால் அவர் வழிவந்தவரும், அவரை மதித்துப் போற்றியவரும் அவர் பெயரைத் தம் மக்கட்கு இட்டுப் பெருக வழங்கினராதல் வேண்டும். இதனால் காப்பியாற்றுக் காப்பியன், வெள்ளூர்க் காப்பியன் என ஊரொடு தொடர்ந்தும், காப்பியஞ் சேத்தன், காப்பியன் ஆதித்தன் எனக் காப்பியப் பெயரொடு இயற்பெயர் தொடர்ந்தும் பிற்காலத்தோர் வழங்கலாயினர். இனிப் பல்காப்பியம் என்பதொரு நூல் என்றும் அதனை இயற்றியவர் பல்காப்பியனார் எனப்பட்டார் என்றும் கூறுவார் உளர். அப்பெயர்கள் 'பல்காயம்' என்பதும் பல்காயனார்

1. இரா. இராகவ ஐயங்கார்
2. மு. இராகவ ஐயங்கார்
3. க. வெள்ளைவாரணனார்

என்பதுமேயாம்; படியெடுத்தோர் அவ்வாறு வழுப்படச் செய்தனர் என்று மறுப்பாரும் உளர்.

### தொல்காப்பியர் தமிழ் நாட்டாரே

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து வழக்கும் செய்யுளும்" ஆய்ந்து, தமிழியற்படி "எழுத்தும் சொல்லும் பொருளும்" ஆகிய முப்பகுப்பு இலக்கணம் செய்தவரும்,

"போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவையும்" (1006)

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியையும்" (1336)

"தமிழென் கிளவியும் அதனோ ரற்றே" (385)

எனத் தமிழமைதியையும்,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (884)

என வடவெழுத்துப் புகாது காத்தலையும் கூறிய தொல்காப்பியரை வலுவான அகச்சான்று வாய்த்தால் அன்றி வடநாட்டவர் என்பது வரிசை இல்லை என்க. இனி, சமதக்கினியார் மகனார் என்பதும் திரணதூமாக் கினியார் இவர் பெயர் என்பதும் பரசுராமர் உடன் பிறந்தார் என்பதும் நச்சினார்க்கினியர் இட்டுக் கட்டுதலை அன்றி எவரும் ஒப்பிய செய்தி இல்லையாம்.

### தொல்காப்பியப் பழமை

சங்க நூல்களுக்குத் தொல்காப்பியம் முற்பட்டதா? பிற்பட்டதா? ஆய்தல் இன்றியே வெளிப்பட விளங்குவது முற்பட்டது என்பது. எனினும் பிற்பட்டது என்றும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு அளவினது என்றும் குறித்தாரும் உளராகலின் இவ்வாய்வும் வேண்டத் தக்கதாயிற்று.

தொல்காப்பியர் பரிபாடல் இலக்கணத்தை விரிவாகக் கூறுகிறார். அவ்விலக்கணத்துள் ஒன்று, கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்து என்னும் நான்கு உறுப்புகளையுடையது அது என்பது. மற்றொன்று, காமப் பொருள் பற்றியதாக அது வரும் என்பது.

இப்பொழுது கிடைத்துள்ள பரிபாடல்கள் இருபத்திரண்டனுள் "ஆயிரம் விரித்த" என்னும் ஒரே ஒரு பாடல் மட்டும் பலவுறுப்புகளை யுடையதாக உள்ளது. எஞ்சிய பாடல்கள் இருபத்து ஒன்றும் உறுப்பமைதி பெற்றனவாக இல்லை. பரிபாடல் திரட்டிலுள்ள இரண்டு பாடல்களுள் ஒரு பாடல் பலவுறுப்புகளை யுடையதாக உள்ளது. மற்றது உறுப்பற்ற பாட்டு.

பரிபாடல் காமப் பொருள் பற்றியே வரும் என்பது இலக்கணமாக இருக்கவும் கடவுள் வாழ்த்துப் பொருளிலேயே பதினைந்து பாடல்கள் வந்துள்ளன. பரிபாடல் உயர் எல்லை நானூறடி என்பார். கிடைத்துள்ள பரிபாடல்களில் ஒன்றுதானும் சான்றாக அமையவில்லை. இவற்றால் அறியப்படுவது என்ன?

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள இலக்கணங்களையுடைய பரி பாடல்கள் இவையில்லை. அவ்விலக்கணங்களையுடைய பரிபாடல்கள் இறந்தொழிந்தன. தலைச்சங்கத்தார் பாடியதாக வரும் 'எத்துணையோ பரிபாடல்களின்' அமைதியைக் கொண்டது தொல்காப்பிய இலக்கணம். ஆதலால், பாடலமைதியாலும் பொருள் வகையாலும் இம்மாற் றங்களையடைய நெடிய பலகாலம் ஆகியிருக்க வேண்டும் என்பதே அது.

தொல்காப்பியர் குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி என்பவற்றை எழுத்தளவு வகையால் சுட்டுகிறார். அவ்வடிவகை கட்டளை யடி எனப்படும். அவ்வாறாகவும் சங்கப் பாடல்கள் சீர்வகை அடியைக் கொண்டனவாக உள்ளனவேயன்றிக் கட்டளை யடிவழி யமைந்தவையாக இல்லை. முற்றாக இம்மாற்றம் அமைய வேண்டுமானால் நெட்ட நெடுங்கால இடைவெளி ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு.

தொல்காப்பியர் நேர், நிரை அசைகளுடன் நேர்பசை, நிரைபசை என்பவற்றையும் குறிக்கிறார். இந்நேர்பசை நிரைபசையை வேறு எவ் விலக்கண ஆசிரியரும் கொண்டிலர்; நேர் நிரை என்னும் இருவகை அசை களையே கொண்டனர். கட்டளையடி பயிலாமை போலவே, இவ்வசை களும் பயிலாமை தொல்காப்பியப் பழமையை விளக்குவதேயாம். யாப்பருங்கலத்திற்கு முற்பட்டது காக்கைபாடினியம். அந்நூலிலும் அவிநயம் முதலிய நூல்களிலும் இவ்விருவகை அசைகளும் இடம் பெறாமையால் இவற்றுக்கு மிகமுற்பட்ட நூல் தொல்காப்பியம் என்பது விளங்கும். காக்கைபாடினிய வழிவந்ததே யாப்பருங்கலம் ஆதலின் அதன் பழமை புலப்படும்.

பாட்டுயாப்பு, உரையாப்பு, நூல்யாப்பு, வாய்மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, முதுசொல்யாப்பு என எழுவகை யாப்புகளை எண்ணுகிறார் தொல்காப்பியர் (1336). இவற்றுள் பாட்டுயாப்பு நீங்கிய எஞ்சிய யாப்புகள் எவையும் சான்றாக அறியுமாறு நூல்கள் வாய்த்தில. ஆகலின் அந்நிலை தொல்காப்பியத்தின் மிகுபழமை காட்டும்.

பேர்த்தியரைத் தம் கண்ணெனக் காக்கும் பாட்டியரைச் 'சேமமட நடைப் பாட்டி' என்கிறது பரிபாட்டு (10:36-7). பாட்டி என்பது பாண்குடிப் பெண்டிரைக் குறிப்பதைச் சங்கச் சான்றோர் குறிக்கின்றனர். ஆனால், தொல்காப்பியம் "பாட்டி என்பது பன்றியும் நாயும்" என்றும் "நரியும் அற்றே நாடினர் கொளினே" என்றும் (1565, 1566) கூறுகின்றது. பாட்டி

என்னும் பெயரைப் பன்றி நாய் நரி என்பவை பெறும் என்பது இந் நூற்பாக்களின் பொருள். முறைப்பெயராகவோ, பாடினியர் பெயராகவோ 'பாட்டி' என்பது ஆளப்படாத முதுபழமைக்குச் செல்லும் தொல் காப்பியம், மிகு நெட்டிடைவெளி முற்பட்டது என்பதை விளக்கும். இவ்வாறே பிறவும் உள.

சங்கச் சான்றோர் நூல்களில் இருந்து சான்று காட்டக் கிடையாமை யால் உரையாசிரியர்கள் "இலக்கணம் உண்மையால் இலக்கியம் அவர் காலத்திருந்தது; இப்பொழுது வழக்கிறந்தது" என்னும் நடையில் பல இடங்களில் எழுதுவாராயினர். ஆதலால், சங்கச் சான்றோர் காலத்திற்குப் பன்னூற்றாண்டுகளுக்கு முற்பட்டவர் தொல்காப்பியர் என்பது வெள்ளிடைமலையாம்!

"கள் என்னும் ஈறு அஃறிணைக்கு மட்டுமே தொல்காப்பியர் காலத்தில் வழங்கியது. அது திருக்குறளில் 'பூரியர்கள்' 'மற்றையவர்கள்' எனவும் கலித்தொகையில் 'ஐவர்கள்' எனவும் வழங்குகின்றது. 'அன்' ஈறு ஆண்பாற் படர்க்கைக்கே உரியதாகத் தொல்காப்பியம் கூறுகின்றது. இரப்பன், உடையன், உளன், இலன், அளியன், இழந்தனன், வந்தனன் எனத் தன்மையில் பெருவரவாகச் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன.

"தொல்காப்பியத்தில் வழங்காத ஆல், ஏல், மல், மை, பாக்கு என்னும் இறுதியுடைய வினையெச்சங்கள் சங்க நூல்களில் பயில வழங்குகின்றன.

"தொல்காப்பியத்தில் வினையீறாக வழங்கப்பட்ட 'மார்', 'தோழிமார்' எனப் பெயர்மேல் ஈறாக வழங்கப்பட்டுள்ளது.

"வியங்கோள்வினை, முன்னிலையிலும் தன்மையிலும் வாராது என்பது தொல்காப்பிய விதி. அவற்றில் வருதலும் சங்கப் பாடல்களில் காணக்கூடியது.

"கோடி என்னும் எண்பற்றித் தொல்காப்பியத்தில் குறிப்பு இல்லை. தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பனபோல எண்ணுப் பெயர்கள் (ஐ அம் பல் என்னும் இறுதியுடையவை) வழங்குவதைச் சுட்டும் அவர், கோடியைக் குறித்தார் அல்லர். சங்கப் பாடல்களில் கோடி, 'அடுக்கியகோடி' என ஆளப் பெற்றுள்ளது. ஐ, அம், பல் ஈறுடைய எண்ணுப் பெயர்கள் அருகுதலும் சங்க நூல்களில் அறிய வருகின்றன.

"சமய விகற்பம் பற்றிய செய்திகள், சமணம் புத்தம் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் இல்லை. ஆனால் சங்க நூல்களில் இவற்றைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. எழுத்து சொல் ஆகிய அளவில் நில்லாமல் வாழ்வியலாகிய பொருள் பற்றி விரித்துக் கூறும் தொல்காப்பியர் காலத்தில் இவை வழக்கில் இருந்திருந்தால் இவற்றைக் கட்டாயம் சுட்டியிருப்பார். ஆகலின் சமண, பௌத்தச் சமயங்களின் வரவுக்கு முற்பட்டவரே தொல் காப்பியர். ஆதலால் தொல்காப்பியர் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு

முற்பட்டதே யன்றிப் பிற்பட்டதாகாது." இக்கருத்துகளைப் பேரா. க.வெள்ளைவாரணரும் (தமிழிலக்கிய வரலாறு - தொல்காப்பியம், பக். 87 - 96), பேரா.சி. இலக்குவனாரும் (தொல்காப்பிய ஆராய்ச்சி, பக். 12 - 14) விரித்துரைக்கின்றனர்.

சிலப்பதிகாரத்தால் இலங்கை வேந்தன் கயவாகு என்பான் அறியப்படுகிறான். அவன் காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டு என்பர். அச் சிலப்பதிகாரத்தில் 'திருக்குறள்' எடுத்தாளப்பட்டுள்ளது. ஆகலின் திருக்குறள் சிலப்பதிகாரக் காலத்திற்கு முற்பட்டது என்பது வெளிப்படை. இளங்கோவடிகள் காலத்து வாழ்ந்தவரும், மணிமேகலை இயற்றியவரும், சேரன் செங்குட்டுவன் இளங்கோவடிகள் ஆகியோருடன் நட்புரிமை பூண்டவரும், 'தண்டமிழ் ஆசான் சாத்தன்' என இளங்கோவடிகளாரால் பாராட்டப்பட்டவருமாகிய கூலவாணிகன் சாத்தனார், திருவள்ளுவரைப் 'பொய்யில் புலவன்' என்றும், திருக்குறளைப் 'பொருளுரை' என்றும் குறித்துக் கூறிப் பாராட்டுகிறார். ஆகலின், சிலப்பதிகார மணிமேகலை நூல்களுக்குச் சில நூற்றாண்டுகளேனும் முற்பட்டது திருக்குறள் எனத் தெளியலாம்.

அத் திருக்குறளுக்கு முப்பால் கொள்கை அருளியது தொல்காப் பியம். 'அறமுதலாகிய மும்முதற் பொருள்' என்பது தொல்காப்பியம். 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு' என வருவதும் தொல்காப் பியம். அது வகுத்தவாறு அறம் பொருள் வழக்காறுகள் திருக்குறளில் இடம் பெற்றுள்ளதுடன், இன்பத்துப்பாலோ, புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனத் தொல்காப்பியர் சொல்லும் உரிப்பொருள் ஐந்தற்கும் முறையே ஐந்தைந்து அதிகாரங்களாக 25 அதிகாரங்கள் கொண்டு முற்றாகத் தொல்காப்பிய வழியில் விளங்க நூல் யாத்தவர் திருவள்ளுவர். ஆகலின் அத்திருக்குறளின் காலத்திற்குப் பன்னூற்றாண்டு முற்பட்ட பழமையுடையது தொல்காப்பியம் என்பது தெளிவுமிக்க செய்தியாம். திருக்குறள் 'அறம்' என்று சுட்டப்பட்டதுடன், குறள் தொடர்களும் குறள் விளக்கங்களும் பாட்டு தொகை நூல்களில் இடம் பெற்ற தொன்மையது திருக்குறள். அதற்கும் முற்பட்டது தொல்காப்பியம்.

இனித் தொல்காப்பியத்தில் வரும் 'ஓரை' என்னும் சொல்லைக் கொண்டு தொல்காப்பியர் காலத்தைப் பின்னுக்குத் தள்ள முயன்றவர் உளர். ஓரை அவர் கருதுமாப்போல 'ஹோரா' என்னும் கிரேக்கச் சொல் வழிப்பட்டதன்று. அடிப்பொருள் பாராமல் ஒலி ஒப்புக் கொண்டு ஆய்ந்த ஆய்வின் முடிவே அஃதாம்.

'யவனர் தந்த வினைமாண் நன்கலம்' இவண் வந்ததும், அது 'பொன்னொடு வந்து கறியொடு (மிளகொடு)' பெயர்ந்ததும், 'யவன வீரர் அரண்மனை காத்ததும்' முதலாகிய பல செய்திகள் சங்க நூல்களில் பரவலாக

உள. அக்காலத்தில் அவர்கள் 'தோகை' 'அரி' முதலிய சொற்களை அறிந்தது போல அறிந்து கொண்ட சொல் 'ஓரை' என்பது. அச்சொல்லை அவர்கள் அங்கு 'ஹோரா' என வழங்கினர்.

கிரேக்க மொழிச் சொற்கள் பல தமிழ்வழிச் சொற்களாக இருத்தலைப் பாவாணர் எடுத்துக் காட்டியுள்ளார்.

ஓரை என்பது ஒருமை பெற்ற - நிறைவு பெற்ற - பொழுது. திருமணத்தை முழுத்தம் என்பதும், திருமண நாள் பார்த்தலை முழுத்தம் பார்த்தல் என்பதும், திருமணக் கால்கோளை 'முழுத்தக்கால்' என்பதும், 'என்ன இந்த ஓட்டம்; முழுத்தம் தவறிப்போகுமா?' என்பதும் இன்றும் வழக்கில் உள்ளவை. முழுமதி நாளில் செய்யப்பட்ட திருமணமே முழுத்தம் ஆயிற்று. இன்றும் வளர்பிறை நோக்கியே நாள் பார்த்தலும் அறிக.

ஆராய்ந்து பார்த்து - நாளும் கோளும் ஆராய்ந்து பார்த்து - 'நல்லவையெல்லாம் ஒன்றுபட்டு நிற்கும் பொழுதே நற்பொழுது' என்னும் குறிப்பால் அதனை ஓரை என்றனர். இத்திறம் அந்நாள் தமிழர் உடையரோ எனின்,

"செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும்
என்றிவை சென்றளந் தறிந்தோர் போல,
இனைத்தென்போரும் உளரே"

என்னும் புறப்பாடலை அறிவோர் ஓரையைப் பிறர்வழியே நம் முன்னோர் அறிந்தனர் என்னார். உண்கலத்தைச் சூழ வைத்திருந்த பக்கக் கலங்களை, "நாள்மீன் விரவிய கோள்மீனுக்கு" உவமை சொல்லும் அளவில் தெளிந் திருந்த அவர்கள், ஓரையைப் பிறர் வழியே அறிந்தனர் என்பது பொருந்தாப் புகற்சியாம்.

### தொல்காப்பியர் சமயம்

தொல்காப்பியனார் சமயம் பற்றியும் பலவகைக் கருத்துகள் உள. அவர் சைவர் என்பர். சைவம் என்னும் சொல் வடிவம் மணிமேகலையில் தான் முதற்கண் இடம் பெறுகிறது. பாட்டு தொகைகளில் இடம் பெற்றிலது. சேயோன், சிவன் வழிபாடு உண்டு என்பது வேறு. அது சைவ சமயமென உருப்பெற்றது என்பது வேறு. ஆதலால் தொல்காப்பியரைச் சைவரெனல் சாலாது.

இனி, முல்லைக்கு முதன்மையும் மாயோனுக்குச் சிறப்பும் தருதல் குறித்து 'மாலியரோ' எனின், குறிஞ்சி முதலா உரிப்பொருளும் காலமும் குறித்தல் கொண்டு அம் முதன்மைக் கூறும் பொருள்வழி முதன்மை எனக் கொள்ளலே முறை எனல் சாலும்.

தொல்காப்பியரை வேத வழிப்பட்டவர் என்னும் கருத்தும் உண்டு. அஃதுரையாசிரியர்கள் கருத்து. நூலொடுபட்ட செய்தியன்றாம். சமயச் சால்பில் ஓங்கிய திருக்குறளை - வேத ஊழியைக் கண்டித்த திருக்குறளை - வேத வழியில் உரை கண்டவர் இலரா? அது போல் என்க.

தொல்காப்பியரைச் சமணச் சமயத்தார் என்பது பெருவழக்கு. அவ்வழக்கும் ஏற்கத்தக்கதன்று. அதன் சார்பான சான்று தொல்காப்பி யத்தில் இல்லை. ஆனால் அச்சமயம் சார்ந்தார் அல்லர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

சமணச் சமய நூல்களாக வழங்குவன அருக வணக்கம் சித்த வணக்கம் உடையவை. அவ்வாறு பகுத்துக் கூறாவிடினும் அருக வணக்கம் உடையவை. சமணச் சமய நூல்களாகக் கிடைப்பவற்றை நோக்கவே புலப்படும். தொல்காப்பியர் காலத்தில் கடவுள் வாழ்த்து நூன் முகப்பில் பாடும் மரபில்லை எனின், அவர் சமணச் சமயத்தார் என்பதும் இல்லை என்பதே உண்மை. என்னெனின் சமணர் தம் சமயத்தில் அத்தகு அழுந்திய பற்றுதல் உடையவர் ஆதலால்.

சமணச் சமயத்தார் உயிர்களை ஐயறிவு எல்லையளவிலேயே பகுத்துக் கொண்டனர். ஆறாம் அறிவு குறித்து அவர்கள் கொள்வது இல்லை. "மாவும் மாக்களும் ஐயறிவினவே" என்னும் தொல்காப்பியர், "மக்கள் தாமே ஆறறி வுயிரே" என்றும் கூறினார். நன்னூலார் சமணர் என்பதும் வெளிப்படை. அவர் ஐயறிவு வரம்பு காட்டும் அளவுடன் அமைந்ததும் வெளிப்படை.

சமணச் சமயத்தார் இளமை, யாக்கை, செல்வ நிலையாமைகளை அழுத்தமாக வலியுறுத்துவர். துறவுச் சிறப்புரைத்தலும் அத்தகையதே. ஆகவும் நிலையாமையையே கூறும் காஞ்சித் திணையைப் பாடுங்காலும், "நில்லா உலகம் புல்லிய நெறித்தே" என 'உலகம் நிலையாமை பொருந்தியது' என்ற அளவிலேயே அமைகிறார்.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (1138)

என அன்பு வாழ்வே அருள் வாழ்வாம் தவவாழ்வாக வளர்நிலையில் கூறுகிறார். இல்லற முதிர்வில் தவமேற்கும் நிலை சமணம் சார்ந்ததன்று. அஃது இம்மண்ணில் தோன்றி வளர்ந்து பெருகிய தொல் பழந்தமிழ் நெறி.

தொல்காப்பியர் சமணச் சமயத்தார் எனின் அகத்திணையியல் களவியல் கற்பியல் பொருளியல் என அகப் பொருளுக்குத் தனியே நான்கு இயல்கள் வகுத்ததுடன் மெய்ப்பாட்டியல் செய்யுளியல் உவம இயல் என்பனவற்றிலும் அப்பொருள் சிறக்கும் இலக்கணக் குறிப்புகளைப் பயில வழங்கியிரார்.

காமத்தைப் ‘புரைதீர்காமம்’ என்றும் (1027) ‘காமப் பகுதி கடவுளும் வரையார்’ என்றும் (1029) கூறியிரார்.

“ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
தேனது வாகும்”

என்பது போலும் இன்பியல் யாத்திரார். கிறித்தவத் துறவு நெறிசார் வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கப் பொருளதிகாரம் காண்பார் இதனை நன்கு அறிவார். சிந்தாமணியாம் பாவிகத்தை எடுத்துக்காட்டுவார் எனின் அவர், திருத்தக்கதேவர் பாடிய நரிவிருத்தத்தையும் கருதுதல் வேண்டும். பாட இயலாது என்பதை இயலுமெனக் காட்ட எழுந்தது அந்நூல் என்பதையும், காமத்தைச் சூடிக் கழித்த பூப்போல் காவிய முத்திப் பகுதியில் காட்டுவதையும் கருதுவாராக.

**கடவுள் நம்பிக்கை**

தொல்காப்பியர் கடவுள் வாழ்த்துக் கூறவில்லை எனினும்,

“கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே”

என்றும் (1034), புறநிலை வாழ்த்து,

“வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின்”

என்பது என்றும் ஆளும் இடங்களில் தெளிவாகக் கடவுள் வாழ்த்து என்பதையும் ‘வழிபடு தெய்வம்’ என்பதையும் குறிக்கிறார். மேலும் கருப்பொருள் கூறுங்கால் ‘தெய்வம் உணாவே” என உணவுக்கு முற்படத் தெய்வத்தை வைக்கிறார். உலகெலாம் தழுவிய பொதுநெறியாக இந்நாள் வழங்கும் இது, **பழந்தமிழர் பயில்நெறி** என்பது விளங்கும். ஆதலால் பழந்தமிழர் சமய நெறி எந்நெறியோ அந்நெறியே தொல்காப்பியர் நெறி எனல் சாலும்.

வாகைத் திணையில் வரும், ‘கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை’, ‘அருளொடு புணர்ந்த அகற்சி’, ‘காமம் நீத்தபால்’ என்பனவும், காஞ்சித் திணையில் வரும் தபுதார நிலை, தாபத நிலை, பலர் செலச் செல்லாக் காடு வாழ்த்து என்பனவும் பழந்தமிழர் **மெய்யுணர்வுக் கோட்பாடுகள்** எனக் கொள்ளத்தக்கன.

கொற்றவை நிலை, வேலன் வெறியாட்டு, பூவைநிலை காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல் சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தல் என வரும் வெட்சிப் பகுதிகள் பழந்தமிழர் வழிபாட்டியலைக் காட்டுவன.

சேயோன் மாயோன் வேந்தன் வண்ணன் என்பார், குறிஞ்சி முதலாம் திணைநிலைத் தெய்வங்களெனப் போற்றி வழிபடப்பட்டவர் என்பதாம்.

ஆசிரியர் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடினாலும், அவர் இன்ன சமயத்தவர் என்பதற்குரிய திட்டவட்டமான அகச்சான்று இல்லாமை போலத் தொல்காப்பியர்க்கும் இல்லை. ஆகவே சமயக் கணக்கர் மதிவழிச் செல்லாத பொதுநெறிக் கொள்கையராம் வள்ளுவரைப் போன்றவரே தொல்காப்பியரும் என்க.

## தொல்காப்பியக் கட்டொழுங்கு

தொல்காப்பியம் கட்டொழுங்கமைந்த நூல் என்பது மேலோட்டமாகப் பார்ப்பவர்க்கும் நன்கு விளங்கும். இன்ன பொருள் இத்தட்டில் என்று வைக்கப்பட்ட ஐந்தறைப் பெட்டியில் இருந்து வேண்டும் பொருளை எடுத்துக் கொள்வதுபோல் எடுத்துக்கொள்ள வாய்த்தது தொல்காப்பியம். அதனையே பாயிரம் 'முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்த'தாகக் குறிக்கின்றது.

எழுத்து சொல் பொருள் என்னும் மூன்றதிகாரங்களைக் கொண்ட தொல்காப்பியம் ஒவ்வோர் அதிகாரத்திற்கும் ஒன்பது ஒன்பது இயல் களைக் கொண்டிருத்தல் அதன் கட்டமைதிச் சிறப்புக் காட்டுவதாம்.

> "ஆயிரத்தின் மேலும் அறுநூற்றுப் பஃதென்ப
> பாயிரத்தொல் காப்பியங்கற் பார்"

என்பது தொல்காப்பிய நூற்பா அளவினைக் கூறுவதொரு வெண்பா. ஆனால் உரையாசிரியர்களின் அமைப்புப்படி 1595 முதல் 1611 நூற்பா வரை பல்வேறு எண்ணிக்கையுடையவாய் அமைந்துள்ளன. இக்கணக்கீடும், தொல்காப்பியர் சொல்லியதோ, பனம்பாரனார் குறித்ததோ அன்று. உரையாசிரியர்களின் காலத்தவரோ அவர்களின் காலத்திற்கு முன்னே இருந்த மூல நூற்பா எல்லையில் கணக்கிட்டறிந்த ஒருவரோ கூறியதாகலாம்.

தொல்காப்பிய அடியளவு 3999 என்று அறிஞர் வ.சுப. மாணிக்கனார் (தொல்காப்பியக்கடல் பக். 95) எண்ணிக் கூறுவர். ஏறக்குறைய 5630 சொல் வடிவங்கள் தொல்காப்பியத்தில் உள்ளமையையும் கூறுவர். அவர் "தொல்காப்பிய இலக்கணத்தைக் காண்பதற்குத் தொல்காப்பியத்தையே இலக்கியமாகக் கொள்ளலாம். தன்னைத் தானே விளக்கிக் காட்டுதற்குரிய அவ்வளவு பருமனுடையது தொல்காப்பியம்" என்று வாய்மொழிகின்றார்.

## முப்பகுப்பு

தனியெழுத்துகள், சொல்லில் எழுத்தின் நிலை, எழுத்துப் பிறக்கும் வகை, புணர் நிலையில் எழுத்தமைதி என்பவற்றை விரித்துரைப்பது எழுத்ததிகாரம். நூன் மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்பன எழுத்ததிகார இயல்கள்.

எழுத்துகள் சொல்லாம் வகை, பெயர்கள் வேற்றுமையுருபேற்றல், விளிநிலை எய்தல், பெயர் வினை இடை உரி என்னும் சொல் வகைகள்

இன்னவற்றைக் கூறுவது சொல்லதிகாரம். கிளவியாக்கம், வேற்றுமை யியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்பன சொல்லதிகார இயல்கள்.

இன்ப ஒழுக்க இயல்பு, பொருள் அற ஒழுக்க இயல்பு, களவு கற்பு என்னும் இன்பவியற் கூறுகள், பொருளியல் வாழ்வில் நேரும் மெய்ப் பாடுகள், பொருளியல் நூலுக்கு விளக்காம் உவமை, செய்யுளிலக்கணம், உலக வழக்கு செய்யுள் வழக்கு என்பவற்றின் மரபுகள் ஆகியவற்றைக் கூறுவது பொருளதிகாரம். அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்பன பொருளதிகார இயல்கள்.

எடுத்துக்கொண்ட பொருளின் அடிக்கருத்தை முதற்கண் கூறி, பின்னர் வித்தில் இருந்து கிளரும் முளை இலை தண்டு கிளை கவடு பூ காய் கனி என்பவை போலப் பொருளைப் படிப்படியே வளர்த்து நிறைவிப்பது தொல்காப்பியர் நடைமுறை.

எழுத்துகள் இவை, இவ்வெண்ணிக்கையுடையன என்று நூன் மரபைத் தொடங்கும் ஆசிரியர், குறில் நெடில் மாத்திரை, உயிர் மெய் வடிவு உயிர்மெய், அவற்றின் ஒலிநிலைப்பகுப்பு, மெய்ம்மயக்கம், சுட்டு வினா எழுத்துகள் என்பவற்றைக் கூறும் அளவில் 33 நூற்பாக்களைக் கூறி அமைகிறார். முப்பத்து மூன்றாம் நூற்பாவை,

> "அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
> உளவென மொழிப இசையொடு சிவணிய
> நரம்பின் மறைய என்மனார் புலவர்"

என்கிறார். இயலிலக்கணம் கூறும் ஆசிரியர் இசையிலக்கணம் பற்றிய நூல்களில் இவ்வெழுத்துகளின் நிலை எவ்வாறாம் என்பதையும் சுட்டிச் செல்லுதல் அருமையுடையதாம். அவ்வாறே ஒவ்வோர் இயலின் நிறைவிலும் அவர் கூறும் புறனடை நூற்பா, மொழிவளர்ச்சியில் தொல் காப்பியனார் கொண்டிருந்த பேரார்வத்தையும் காலந்தோறும் மொழியில் உண்டாகும் வளர்நிலைகளை மரபுநிலை மாறாவண்ணம் அமைத்துக் கொள்வதற்கு வழிசெய்வதையும் காட்டுவனவாம்.

> "உணரக் கூறிய புணரியல் மருங்கின்
> கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே" (405)

என்பது குற்றியலுகரப் புணரியல் புறனடை

> "கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
> வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
> விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
> வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
> நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்" (483)

என்பது எழுத்ததிகாரப் புறனடை.

“அன்ன பிறவும் கிளந்த அல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை ஆணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர்” (879)

என்பது உரியியல் புறனடை.

இன்னவற்றால் தொல்காப்பியர் தொன்மையைக் காக்கும் கடப்பாட்டை மேற்கொண்டிருந்தவர் என்பதுடன் நிகழ்கால எதிர்கால மொழிக் காப்புகளையும் மேற்கொண்டிருந்தவர் என்பது இவ்வாறு வரும் புறனடை நூற்பாக்களால் இனிதின் விளங்கும்.

தொல்காப்பியம் இலக்கணம் எனினும் இலக்கியமென விரும்பிக் கற்கும் வண்ணம் வனப்பு மிக்க உத்திகளைத் தொல்காப்பியர் கையாண்டு நூலை யாத்துள்ளார்.

### இலக்கிய நயங்கள்

எளிமை : சிக்கல் எதுவும் இல்லாமல் எளிமையாகச் சொல்கிடந்த வாறே பொருள் கொள்ளுமாறு நூற்பா அமைத்தலும், எளிய சொற் களையே பயன்படுத்துதலும் தொல்காப்பியர் வழக்கம்.

“எழுத்தெனப் படுவ,
அகர முதல னகர இறுவாய்
முப்பஃ தென்ப”

“மழவும் குழவும் இளமைப் பொருள”

“ஓதல் பகையே தூதிவை பிரிவே”

“வண்ணந் தானே நாலைந் தென்ப”

### ஓரியல் யாப்புரவு

‘ஒன்றைக் கூறுங்கால் அதன் வகைகளுக்கெல்லாம் ஒரே யாப்புரவை மேற்கொள்ளல்’ என்பது தொல்காப்பியர் வழக்கம்.

“வல்லெழுத் தென்ப கசட தபற”

“மெல்லெழுத் தென்ப ஙஞண நமன”

“இடையெழுத் தென்ப யரல வழள”

### சொன்மீட்சியால் இன்பமும் எளிமையும் ஆக்கல்

ஓரிலக்கணம் கூறுங்கால் சிக்கல் இல்லாமல் பொருள் காண்பதற் காக வேண்டும் சொல்லைச் சுருக்காமல் மீளவும் அவ்விடத்தே சொல்லிச் செல்லுதல் தொல்காப்பியர் வழக்கம்.

"அவற்றுள்,
நிறுத்த சொல்லின் ஈறா கெழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென
ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே"

என்னும் நூற்பாவைக் காண்க. இவ்வியல்பில் அமைந்த நூற்பாக்கள் மிகப் பல என்பதைக் கண்டு கொள்க.

## நூற்பா மீட்சியால் இயைபுறுத்தல்

ஓரிடத்துச் சொல்லப்பட்ட இலக்கணம் அம்முறையிலேயே சொல்லப்படத் தக்கதாயின் புதிதாக நூற்பா இயற்றாமல், முந்தமைந்த நூற்பாவையே மீளக்காட்டி அவ்வவ் விலக்கணங்களை அவ்வவ்விடங் களில் கொள்ளவைத்தல் தொல்காப்பிய ஆட்சி. இது தம் மொழியைத் தாமே எடுத்தாளலாம்.

"அளபெடைப் பெயரே அளபெடை இயல"

"தொழிற்பெய ரெல்லாம் தொழிற்பெய ரியல"

என்பவற்றைக் காண்க.

## எதுகை மோனை நயங்கள்

எடுத்துக் கொண்டது இலக்கணமே எனினும் சுவைமிகு இலக்கிய மெனக் கற்குமாறு எதுகை நயம்பட நூற்பா யாத்தலில் வல்லார் தொல் காப்பியர்.

"வஞ்சி தானே முல்லையது புறனே
எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே".

"ஏரோர் களவழி அன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியும்".

இவை தொடை எதுகைகள். இவ்வாறே ஐந்தாறு அடிகளுக்கு மேலும் தொடையாகப் பயில வருதல் தொல்காப்பியத்துக் கண்டு கொள்க.

"மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமையும்
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்".

இவை அடி எதுகைகள்.

"விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே"

"நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை".

முன்னதில் முழுவதும் எதுகைகளும், பின்னதில் முழுவதும் மோனைகளும் தொடைபடக் கிடந்து நடையழகு காட்டல் அறிக.

*முன்னது முற்றெதுகை; பின்னது முற்றுமோனை.*

*"வயவலி யாகும்"*

*"வாள்ஒளி யாகும்"*

*"உயாவே உயங்கல்"*

*"உசாவே சூழ்ச்சி"*

இவை மோனைச் சிறப்பால் அடுத்த தொடரைக் கொண்டு வந்து நிறுத்துகின்றன. இதனை **எடுத்து வருமோனை** எனலாம்.

### அடைமொழி நடை

மரம்பயில் கூகை, செவ்வாய்க் கிளி, வெவ்வாய் வெருகு, இருள்நிறப் பன்றி, மூவரி அணில், கோடுவாழ் குரங்கு, கடல்வாழ் சுறவு, வார்கோட்டி யானை என அடைமொழிகளால் சுவைப்படுத்துதல் தொல்காப்பியர் உத்திகளுள் ஒன்று.

*"இழுமென் மொழியால் விழுமியது பயிலல்"*

*"எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்"*

இவ்வாறு ஒலி நயத்தால் கவர்ந்து பொருளை அறிந்துகொள்ளச் செய்வதும் தொல்காப்பியர் உத்திகளுள் ஒன்று.

*"மாத்திரை முதலா அடிநிலை காறும்*
*நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே"*

*"ஒரூஉ வண்ணம் ஒரீஇத் தொடுக்கும்"*

என எடுத்த இலக்கணத்தை அச்சொல்லாட்சியாலேயே விளக்கிக் காட்டுவதும் தொல்காப்பிய நெறி. 'மாற்றருஞ் சிறப்பின் மரபியல்' என இயலின் பெயர் குறிக்கும் மாற்றானே இலக்கணமும் யாத்துக் காட்டியமை நூற்பாவுள் தனி நூற்பாவாகிய பெற்றிமையாம்.

### வரம்பு

இளமைப் பெயர், ஆண்மைப் பெயர், பெண்மைப் பெயர் என்பவற்றை முறையே கூறி விளக்கிய ஆசிரியர் "பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே" என நிறைவித்தல் நூல் வரம்புச் சான்றாம். செய்யுளியல் தொடக்கத்தில் செய்யுள் உறுப்புகள் மாத்திரை முதலாக முப்பத்து நான்கனை உரைத்து அவற்றை முறையே விளக்குதலும் பிறவும் திட்டமிட்ட நூற்கொள்கைச் சிறப்பாக அமைவனவாம்.

*"வகரக் கிளவி நான்மொழி ஈற்றது"*

*"அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே"*

இன்னவாறு வருவனவும் வரம்பே.

### விளங்க வைத்தல்

விளங்கவைத்தல் என்பதொரு நூலழகாகும். அதனைத் தொல் காப்பியனார் போல விளங்க வைத்தவர் அரியர்.

*"தாமென் கிளவி பன்மைக் குரித்தே"*

*"தானென் கிளவி ஒருமைக் குரித்தே"*

*"ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி*
*இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை"*

*இவ்வளவு விளங்கச் சொன்னதையும் எத்தனை எழுத்தாளர்கள் இந்நாளில் புரிந்துகொண்டுளர்?*

### நயத்தகு நாகரிகம்

*சில எழுத்துகளின் பெயரைத்தானும் சொல்லாமல் உச்சகாரம் (சு), உப்பகாரம் (பு), ஈகார பகரம் (பீ) இடக்கர்ப் பெயர் என்பவற்றை எடுத்துச் சொல்லும் நாகரிகம் எத்தகு உயர்வு உடையது! இஃது உயர்வெனக் கருதும் உணர்வு ஒருவர்க்கு உண்டாகுமானால் அவர் தம் மனம்போன போக்கில் எண்ணிக்கை போன போக்கில் கிறுக்கிக் கதையெனவோ பாட்டெனவோ நஞ்சை இறக்கி 'இளையர்' உளத்தைக் கெடுத்து எழுத்தால் பொருளீட்டும் சிறுமை உடையராவரா?*

*தொல்காப்பிய நூனயம் தனியே ஆய்ந்து வெளிப்படுத்தற்குரிய அளவினது.*

### தொல்காப்பியக் கொடை

*முந்து நூல் வளங்கள் அனைத்தும் ஒருங்கே பெறத்தக்க அரிய நூலாகத் தொல்காப்பியம் விளங்குவதுடன், அவர்கால வழக்குகளையும் அறிந்துகொள்ளும் வண்ணம் தொல்காப்பியர் தம் நூலை இயற்றியுள்ளார். அன்றியும் பின்வந்த இலக்கியப் படைப்பாளிகளுக்கும் இலக்கணப் படைப்பாளிகளுக்கும் அவர் வழங்கியுள்ள கொடைக்கு அளவே இல்லை. தொட்டனைத் தூறும் மணற்கேணியென அது சுரந்துகொண்டே உள்ளமை ஆய்வாளர் அறிந்ததே.*

*பொருளதிகார முதல் நூற்பா 'கைக்கிளை முதலா' எனத் தொடங்கு கின்றது. அக் கைக்கிளைப் பொருளில் எழுந்த சிற்றிலக்கியம் உண்டு. முத்தொள்ளாயிரப் பாடல்களாகப் புறத்திரட்டு வழி அறியப் பெறுவன அனைத்தும் கைக்கிளைப் பாடல்களே.*

*"ஏறிய மடல் திறம்" என்னும் துறைப்பெயர் பெரிய மடல், சிறியமடல் எனத் தனித்தனி நூலாதல் நாலாயிரப் பனுவலில் காணலாம்.*

*'மறம்' எனப்படும் துறையும் 'கண்ணப்பர் திருமறம்' முதலாகிய நூல் வடிவுற்றது. கலம்பக உறுப்பும் ஆயது.*

*'உண்டாட்டு' என்னும் புறத்துறை, கம்பரின் உண்டாட்டுப் படலத்திற்கு மூலவூற்று.*

*'தேரோர் களவழி' களவழி நாற்பது கிளர்வதற்குத் தூண்டல். 'ஏரோர் களவழி' என்பது பள்ளுப்பாடலாகவும், 'குழவி மருங்கினும்' என்பது பிள்ளைத் தமிழாகவும் வளர்ந்தவையே.*

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்த மரபின் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று மரபின்கல்"

என்னும் புறத்திணை இயல் நூற்பா தானே, சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்திற்கு வைப்பகம்.

பாடாண் திணைத் துறைகள் சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு வழங்கியுள்ள கொடை தனிச்சிறப்பினவாம்.

"அறம் முதலாகிய மும்முதற் பொருட்கும்" என நூற்பாச் செய்து முப்பாலுக்கு மூலவராகத் தொல்காப்பியனார் திகழ்வதைச் சுட்டுவதே அவர்தம் கொடைப் பெருமை நாட்டுவதாகலாம்.

இவை இலக்கியக் கொடை. இலக்கணக் கொடை எத்துணைக் கொடை? இலக்கண நூல்கள் அனைத்துக்கும் நற்றாயாயும், செவிலித் தாயாயும், நல்லாசானாயும் இருந்து வளர்த்து வந்த - வளர்த்து வருகின்ற சீர்மை தொல்காப்பியத்திற்கு உண்டு. இந்நாளில் வளர்ந்துவரும் 'ஒலியன்' ஆய்வுக்கும் தொல்காப்பியர் வித்திட்டவர் எனின், அவர் வழி வழியே நூல் யாத்தவர்க்கு அவர் பட்டுள்ள பயன்பாட்டுக்கு அளவேது? "தொல்காப்பியன் ஆணை" என்பதைத் தலைமேற் கொண்ட இலக்கணர், பின்னைப் பெயர்ச்சியும் முறை திறம்பலுமே மொழிச்சிதைவுக்கும் திரிபுகளுக்கும் இடமாயின என்பதை நுணுகி நோக்குவார் அறிந்து கொள்ளக்கூடும்.

**இலக்கணப் பகுப்பு விரிவு**

இனித் தொல்காப்பியம் பிற்கால இலக்கணப் பகுப்புகளுக்கும் இடந்தருவதாக அமைந்தமையும் எண்ணத் தக்கதே. தமிழ் இலக்கணம் ஐந்திலக்கணமாக அண்மைக் காலம் வரை இயன்றது. அறுவகை இலக்கணமென ஓரிலக்கணமாகவும் இது கால் விரிந்தது. இவ் விரிவுக்குத் தொல்காப்பியம் நாற்றங்காலாக இருப்பது அறிதற்குரியதே.

எழுத்து சொல் பொருள் என முப்பகுப்பால் இயல்வது தொல் காப்பியம் ஆகலின் தமிழிலக்கணம் அவர் காலத்தில் முக் கூறுபட இயங்கியமை வெளி.

அவர் கூறிய பொருளிலக்கணத்தைத் தனித்தனியே வாங்கிக் கொண்டு அகப்பொருள், புறப்பொருள் என இலக்கணங்கூறும் நூல்கள் கிளைத்தன. அது பொருளிலக்கணத்தைப் பகுத்துக் கொண்டதே.

அவர் கூறிய செய்யுளியலை வாங்கிக் கொண்டு, 'யாப்பருங்கலம்' முதலிய யாப்பு இலக்கண நூல்கள் தோன்றித் தமிழ் இலக்கணத்தை நாற்கூறுபடச் செய்தன.

அவர் கூறிய உவமையியலையும் செய்யுளியலில் சில பகுதிகளையும் தழுவிக்கொண்டு வடமொழி இலக்கணத் துணையொடு அணியிலக்க ணம் என ஒரு பகுதியுண்டாகித் தமிழ் இலக்கணம் ஐங்கூறுடையதாயிற்று.

இவ்வைந்துடன் ஆறாவது இலக்கணமாகச் சொல்லப்படுவது 'புலமை இலக்கணம்' என்பது. அது தமிழின் மாட்சி தமிழ்ப் புலவர் மாட்சி முதலியவற்றை விரிப்பது.

"தமிழ்மொழிக் குயர்மொழி தரணியில் உளதென
வெகுளியற் றிருப்போன் வெறும்புல வோனே"

என்பது அவ்விலக்கணத்தில் ஒரு பாட்டு.

ஆக மூன்றிலக்கணத்துள் ஆறிலக்கணக் கூறுகளையும் மேலும் உண்டாம் விரிவாக்கங்களையும் கொண்டிருக்கின்ற மொழிக் களஞ்சியம் தொல்காப்பியம் என்க.

தொல்காப்பியரின் சிறப்பாகப் பாயிரம் சொல்வனவற்றுள் ஒன்று, 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்பது. ஐந்திரம் இந்திரனால் செய்யப்பட்டது என்றும், பாணினியத்திற்குக் காலத்தால் முற்பட்டது என்றும், வடமொழியில் அமைந்தது என்றும் பாணினியத்தின் காலம் கி.மு. 450 ஆதலால் அதற்கு முற்பட்ட ஐந்திரக் காலம் அதனின் முற்பட்ட தென்றும், அந் நூற்றேர்ச்சி தொல்காப்பியர் பெற்றிருந்தார் என்றும், அந்நூற் பொருளைத் தம் நூலுக்குப் பயன்படுத்திக் கொண்டார் என்றும் ஆய்வாளர் பலப்பல வகையால் விரிவுறக் கூறினர்.

சிலப்பதிகாரத்தில் வரும் 'விண்ணவர் கோமான்' விழுநூல், 'கப்பத் திந்திரன் காட்டிய நூல்' என்பவற்றையும் 'இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்' என்னும் ஒரு நூற்பாவையும் காட்டி அவ்வைந்திர நூலைச் சுட்டுவர். விண்ணவர் கோமான் இந்திரன் வடமொழியில் நூல் செய்தான் எனின், தேவருலக மொழி வடமொழி என்றும், விண்ணுலக மொழியே மண்ணில் வடமொழியாய் வழங்குகின்றது என்றும் மண்ணவர் மொழி யுடையாரை நம்பவைப்பதற்கு இட்டுக் கட்டப்பட்ட எளிய புனைவேயாம். அப்புனைவுப் பேச்சுக் கேட்டதால்தான் இளங்கோ தம் நூலுள்ளும் புனைந்தார். அவர் கூறும் "புண்ணிய சரவணத்தில் மூழ்கி எழுந்தால் விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவர்" என்பதே நடைமுறைக் கொவ்வாப் புனைவு என்பதை வெளிப்படுத்தும். அகத்திய நூற்பாக்களென உலவ விட்டவர்களுக்கு, இந்திரன் எட்டாம் வேற்றுமை சொன்னதாக உலவவிட முடியாதா?

இவ்வாறு கூறப்பட்டனவே தொன்மங்களுக்குக் கைம்முதல். இதனைத் தெளிவாகத் தெரிந்தே தொல்காப்பியனார்,

"தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"

என்றார். தொன்மை என்பது வழிவழியாக உரைக்கப்பட்டு வந்த பழஞ் செய்தி பற்றியதாம் என்பது இந்நூற்பாவின் பொருள். இவ்வாறு தொல்

காப்பியர் கேட்ட தொன்மச் செய்திகளைப் பனம்பாரனார் கேட்டிரார் என்ன இயலாதே.

"இந்திரனாற் செய்யப்பட்டதொரு நூல் உண்டு காண்; அது வடமொழியில் அமைந்தது காண்; அதன் வழிப்பட்டனவே வடமொழி இலக்கண நூல்கள் காண்" என்று கூறப்பட்ட செய்தியைப் பனம்பாரர் அறிந்தார். 'அறிந்தார் என்பது இட்டுக் கட்டுவதோ' எனின் அன்று என்பதை அவர் வாக்கே மெய்ப்பிப்பதை மேலே காண்க.

திருவள்ளுவர் காலத்திலும், "தாமரைக் கண்ணானின் உலக இன்பத் திலும் உயரின்பம் ஒன்று இல்லை" என்று பேசப்பட்டது. இவ்வாறு பிறர் பிறர் காலத்தும் பிறபிற செய்திகள் பேசப்பட்டன என்பவற்றை விரிப்பின் பெருகுமென்பதால் வள்ளுவர் அளவில் அமைவாம்.

திருவள்ளுவர் கேட்ட செய்தி, அவரை உந்தியது. அதனால் "தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல், தாமரைக் கண்ணான் உலகு?" என்றோர் வினாவை எழுப்பி இவ்வுலகத்தெய்தும் இன்பங்களுள் தலையாய காதலின்பத்தைச் சுட்டினார். அடியளந்தான் கதையை மறுத்து, மடியில்லாத மன்னவன் தன் முயற்சியால் எய்துதல் கூடும் முயல்க; முயன்றால் தெய்வமும் மடிதற்று உன்முன் முந்து நிற்கும் என்று முயற்சிப் பெருமையுரைத்தார். இன்னதோர் வாய்பாட்டால் பனம்பாரனார் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியரைச் சுட்டினார்.

'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று வாளா கூறினார் அல்லர் பனம்பாரனார். "மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்றார். அவர் கேள்வியுற்றது 'விண்ணுலக ஐந்திரம்!' அவ்விண்ணுலக ஐந்திரத்தினும் இம்மண்ணுலகத்துத் தொல்காப்பியமே சிறந்த ஐந்திரம் என்னும் எண்ணத்தை யூட்டிற்றுப் போலும்! "ஆகாயப்பூ நாறிற்று என்றுழிச் சூடக்கருதுவாருடன்றி மயங்கக் கூறினான் என்னும் குற்றத்தின் பாற்படும்" என்பதை அறியாதவர் அல்லரே பனம்பாரர். அதனால் நீர்நிறைந்த கடல் சூழ்ந்த நிலவுலகின்கண் விளங்கும் ஐந்திரம் எனத்தக்க தொல்காப்பியத்தை முழுதுற நிரம்பத் தோற்றுவித்ததால் தன் பெயரைத் தொல்காப்பியன் எனத் தோன்றச் செய்தவன் என்று பாராட்டுகிறார்.

இனி 'ஐந்திரம்' என்பது சமண சமயத்து ஐந்தொழுக்கக் கோட்பாடு. அவற்றை நிறைந்தவர் தொல்காப்பியர் என்றும் கூறுவர். ஒழுக்கக் கோட்பாடு 'படிமையோன்' என்பதனுள் அடங்குதலால் மீட்டுக் கூற வேண்டுவதில்லையாம். அன்றியும் கட்டமை நோற்பு ஒழுக்கம் அவ்வாத னுக்கு உதவுதலன்றி, அவனியற்றும் இலக்கணச் சிறப்புக்குரிய தாகாது என்பதுமாம். ஆயினும், தொல்காப்பியர் சமண சமயச் சார்பினர் அல்லர் என்பது மெய்ம்மையால், அவ்வாய்வுக்கே இவண் இடமில்லையாம்.

இனி 'ஐந்திறம்' என்றாக்கி ஐங்கூறுபட்ட இலக்கணம் நிறைந்தவர் என்பர். அவர் தமிழ் இலக்கணக் கூறுபாடு அறியார். தமிழ் இலக்கணம் முக்கூறுபட்டது என்பதைத் தொல்காப்பியமே தெளிவித்தும் பின்னே வளர்ந்த ஐந்திலக்கணக் கொள்கையை முன்னே வாழ்ந்த ஆசிரியர் தலையில் சுமத்துவது அடாது எனத் தள்ளுக.

'ஐந்திரம்' எனச் சொன்னடை கொண்டு பொருளிலாப் புதுநூல் புனைவு ஒன்று இந்நாளில் புகுந்து மயக்க முனைந்து மயங்கிப்போன நிலையைக் கண்ணுறுவார் ஏட்டுக் காலத்தில் எழுதியவர் ஏட்டைக் கெடுத்ததும் படித்தவர் பாட்டைக் கெடுத்ததும் ஆகிய செய்திகளைத் தெளிய அறிவார். எழுதி ஏட்டைக் காத்த - படித்துப் பாட்டைக் காத்த ஏந்தல்களுக்கு எவ்வளவு தலை வணங்குகிறோமோ, அவ்வளவு தலை நாணிப் பிணங்கவேண்டிய செயன்மையரை என் சொல்வது?

தொல்காப்பிய நூற்பாக்கள் இடமாறிக் கிடத்தல் விளங்குகின்றது. தெய்வச்சிலையார் அத்தகையதொரு நூற்பாவைச் சுட்டுதலை அவர் பகுதியில் கண்டு கொள்க. மரபியலில் "தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன" என்னும் நூற்பாவை அடுத்துப் "பறழ்எனப் படினும் உறழாண் டில்லை" என்னும் நூற்பா அமைந்திருத்தல் வேண்டும். அவ்வாறு அமைந்தால் எடுத்துக்காட்டு இல்லை என்பனவற்றுக்கு இலக்கியம் கிடைத்தல் இயல்பாக அமைகின்றது. "இக்காலத்து இறந்தன" என்னும் இடர்ப்பாடும் நீங்குகின்றது. இடப் பெயர்ச்சிக்கு இஃதொரு சான்று.

இடையியலில் "கொல்லே ஐயம்" என்பதை அடுத்த நூற்பா "எல்லே இலக்கம்" என்பது. இவ்வாறே இருசீர் நடை நூற்பா நூற்கும் இடத்தெல்லாம் அடுத்தும் இருசீர் நடை நூற்பா நூற்றுச் செல்லலும் பெரிதும் எதுகை மோனைத் தொடர்பு இயைத்தலும் தொல்காப்பியர் வழக்காதலைக் கண்டு கொள்க. இத்தகு இருசீர் நடை நூற்பாக்கள் இரண்டனை இயைத்து ஒரு நூற்பாவாக்கலும் தொல்காப்பிய மரபே.

"உருவுட் காகும்; புரைஉயர் வாகும்"

"மல்லல் வளனே; ஏபெற் றாகும்"

"உகப்பே உயர்தல்; உவப்பே உவகை"

என்பவற்றைக் காண்க. இவ்விருவகை மரபும் இன்றி

"நன்று பெரிதாகும்"

என்னும் நூற்பா ஒன்றும் தனித்து நிற்றல் விடுபாட்டுச் சான்றாகும்.

அகத்திணையியல் இரண்டாம் நூற்பா, 'அவற்றுள்' என்று சுட்டுதற்குத் தக்க சுட்டு முதற்கண் இன்மை காட்டி ஆங்கு விடுபாடுண்மை குறிப்பர் (தொல். அகத். உரைவளம். மு. அருணாசலம் பிள்ளை).

இனி இடைச் செருகல் உண்டென்பதற்குத் தக்க சான்றுகளும் உள. அவற்றுள் மிகவாகக் கிடப்பது மரபியலிலேயேயாம்.

தொல்காப்பியரின் மரபியல் கட்டொழுங்கு மரபியலிலேயே கட்டமைதி இழந்து கிடத்தல் திட்டமிட்ட திணிப்பு என்பதை உறுதிப் படுத்துகின்றது.

'மாற்றருஞ் சிறப்பின் மரபியல்' என்று மரபிலக்கணம் கூறி மரபியலைத் தொடுக்கும் அவர் இளமைப் பெயர், ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் ஆகியவற்றைக் குறிக்கிறார். அக்குறிப்பொழுங்குப் படியே இளமைப் பெயர்கள் இவை இவை இவ்விவற்றுக்குரிய என்பதை விளக்கி முடித்து,

"சொல்லிய மரபின் இளமை தானே
சொல்லுங் காலை அவையல திலவே"

என நிறைவிக்கிறார். அடுத்து ஓரறிவு உயிரி முதல் ஆறறிவுடைய மாந்தர் ஈறாக ஆண்பால் பெண்பால் பெயர்களை விளக்க வரும் அவர் ஓரறிவு தொடங்கி வளர்நிலையில் கூறி எடுத்துக்காட்டும் சொல்லி ஆண்பாற் பெயர்களையும் பெண்பாற் பெயர்களையும் இவை இவை இவற்றுக்குரிய என்பதை விளக்கி நிறைவிக்கிறார்.

ஆண்பால் தொகுதி நிறைவுக்கும் பெண்பால் தொகுதித் தொடக்கத்திற்கும் இடையே

"ஆண்பா லெல்லாம் ஆணெனற் குரிய
பெண்பா லெல்லாம் பெண்ணெனற் குரிய
காண்ப அவையவை அப்பா லான"

என்கிறார். பின்னர்ப் பெண்பாற் பெயர்களைத் தொடுத்து முடித்து,

"பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே"

என்று இயல் தொடக்கத்தில் கூறிய பொருளெல்லாம் நிறைந்த நிறைவைச் சுட்டுகிறார். ஆனால் இயல் நிறைவுறாமல் தொடர்நிலையைக் காண்கி றோம். எப்படி?

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய"

என்பது முதலாக வருணப் பாகுபாடுகளும் அவ்வவர்க் குரியவையும் 15 நூற்பாக்களில் தொடர்கின்றன. கூறப்போவது இவையென்று பகுத்த பகுப்பில் இல்லாத பொருள், கூற வேண்டுவ கூறி முடித்தபின் தொடரும் பொருள், 'மரபியல்' செய்தியொடு தொடர்பிலாப் பொருள் என்பன திகைக்க வைக்கின்றன.

நூலும் கரகமும் முக்கோலும் மணையும் படையும் கொடியும் குடையும் பிறவும் மாற்றருஞ்சிறப்பின் மரபினவோ? எனின் இல்லை என்பதே மறுமொழியாம்.

"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"

என்னும் நூற்பா நடை தொல்காப்பியர் வழிப்பட்டதென அவர் நூற்பா வியலில் தோய்ந்தார் கூறார்.

"வாணிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"

என நூற்கத் தெரியாரோ அவர்? இளமை, ஆண்மை, பெண்மை என்பன மாறா இயலவை. பிறவியொடு வழி வழி வருபவை. நூல், கரகம் முதலியன பிறவியொடு பட்டவை அல்ல. வேண்டுமாயின் கொள்ளவும் வேண்டாக்கால் தள்ளவும் உரியவை. முன்னை மரபுகள் தற்கிழமைப் பொருள; பிரிக்க முடியாதவை. பின்னைக் கூறப்பட்டவை பிறிதின் கிழமைப் பொருளவை. கையாம் தற்கிழமைப் பொருளும் கையில் உள்ளதாம் பிறிதின் கிழமைப் பொருளும் 'கிழமை' என்னும் வகையால் ஒருமை யுடையவை ஆயினும் இரண்டும் ஒருமையுடையவை என உணர்வுடை யோர் கொள்ளார்.

இவ்வொட்டு நூற்பாக்கள் வெளிப்படாதிருக்க ஒட்டியிருந்த 'புறக்காழ்' 'அகக்காழ்' 'இலை முறி' 'காய்பழம்' இன்னவை பற்றிய ஐந்து நூற்பாக்களைப் பின்னே பிரித்துத் தள்ளி ஒட்டாஒட்டாய் ஒட்டி வைத்தனர். இதனை மேலோட்டமாகக் காண்பாரும் அறிவர்.

"நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்"

என்னும் நூற்பாவே மரபியல் முடிநிலை நூற்பாவாக இருத்தல் வேண்டும்.

பின்னுள்ள 'நூலின் மரபு' பொதுப் பாயிரம் எனத்தக்கது. அது சிறப்புப் பாயிரத்தைத் தொடுத்தோ, நூன் முடிவில் தனிப்பட்டோ இருந்திருக்க வேண்டும். அதுவும் நூலாசிரியர் காலத்திற்குப் பிற்பட்டுச் சேர்த்ததாக இருத்தல் வேண்டும். அதிலும் சிதைவுகளும் செறிப்புகளும் பல உள. "அவற்றுள், சூத்திரந்தானே" என வரும் செய்யுளியல் நூற்பாவை யும் (1425) "சூத்திரத்தியல்பென யாத்தனர் புலவர்" என வரும் மரபியல் நூற்பாவையும் (1600) ஒப்பிட்டுக் காண்பார் ஒரு நூலில் ஒருவர் யாத்த தெனக் கொள்ளார். மரபியல் ஆய்வு தனியாய்வு எனக் கூறி அமைதல் சாலும். இவ்வியல் நூற்பாக்கள் அனைத்திற்கும் இளம்பூரணர் உரையும் பேராசிரியர் உரையும் கிடைத்திருத்தலால் அவர்கள் காலத்திற்கு முன்னரே இம்மாற்றங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது தெளிவான செய்தி.

மேலும் சில குறிப்புகளும் செய்திகளும் '**வாழ்வியல் விளக்க**'த்தில் காணலாம்.

**- இரா. இளங்குமரன்**

# சொல்லதிகார இயலமைதி

சொல்லதிகாரம் கிளவியாக்கம் (சொல்லாக்கம்) முதலாக எச்சவியல் இறுதியாக ஒன்பது இயல்களை உடையது. அவ்வியல்கள் முறையே கிளவியாக்கம், வேற்றுமைஇயல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்பன. இவை ஒன்றற் கொன்று தொடரிபோல் - சங்கிலிபோல் - தொடர்புடையன.

## சொல்

சொல் என்பது பொருளுணர்த்தும் கருவி; மாந்தர் **தம் நெஞ்ச ஊர்தி; உலகத்தை நெருக்கி வைக்க வல்ல இயக்கி.**

சொல் என்பது மாந்தர்தம் குறிப்பு உணர்த்துவதற்கும் தேவை நிறைவேற்றத்திற்கும் தம் பட்டறிவால் இயற்கையின் துணை கொண்டு படைக்கப்பட்ட செய்நேர்த்தியுடையது.

சொல்லின் ஆற்றல் பெரிது. “ஆவதும் சொல்லால்; அழிவதும் சொல்லால்” என்பது பழமொழி.

சொல் ஆக்கத்திற்கே அன்றி அழிவுக்கும் ஆதலுண்டு என்பதே அதற்குக் ‘**கூற்று**’ என்றொரு பெயரைத் தந்தது கூறுபடுத்துவது அழிப்பது கூற்றெனப்படுதல் அறியத்தக்கது.

சொல் எதுவும் பொருளற்றதில்லை என்பது தொல்காப்பியர் தெளிவு. அதனால்,

“எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே”

என்றார் (640).

அப்பொருள் பார்த்த அளவில் புலப்படல் உண்டு. ஆழ்ந்து பார்த்து அதன்பின் கண்டு கொள்ளத்தக்கனவும் உண்டு என்பதால்,

“மொழிப் பொருட் காரணம் விழிப்பத்தோன்றா”

என்றார் (877).

## நெல்

மணி இல்லாத நெல்லை ‘நெல்’ என்பது வழக்கில்லை. பதர், பதடி என்பனவே வழக்கு.

நெல் மணி பிடித்தலைப் ‘பலன்’ பிடித்தல் என்பர்;ஆடு மாடு கருக் கொள்ளுதல் ‘பலப்படுதல்’ எனப்படும்.

மக்கள் வாழ்வில் கொள்ளும் **பயன்** மற்றை உயிரிகளின் வாழ்வில் **பலன்** எனப்படுகின்றது.

பலன் இல்லா நெல்லும்
பயன் இல்லாச் சொல்லும்

ஒத்தவை என்பதால் ‘சொல்’ என்பதற்கு நெல் என ஒரு பொருள் உண்டாயிற்று. சொல் தரும் உணவு சோறு என்றும் சொன்றி என்றும் வழக்கில் ஆயது.

“பயனில் சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்”

என்னும் வள்ளுவ உவமை எண்ணின், உண்மை விளக்கமாம்.

சொல்லதிகார முதலியலின் பெயர் ‘கிளவியாக்கம்’. ஆக்கம் என்பது என்ன?

ஆக்குவது ஆக்கம். ‘ஆக்குப் புரை’ என்பது சமையல் அறை.

சொல்லை ஆக்குதல், நெல்லைச் சோறாக்கும் செயல்போல்வது என்பதை, உரையாசிரியர் சேனாவரையர், “வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான் இவ்வோத்துக் கிளவியாக்க மாயிற்று. ஆக்கம், அமைத்துக் கோடல், **நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசியமைத் தாரை அரிசியாக்கினார் என்ப ஆகலின்**” என்றது எண்ணத்தக்கது.

கிளவி சொல்லாதல், இரட்டைக் கிளவி என்பதால் வெளிப்பட விளங்கும். கிளத்தல் வழியாவது கிளவி. கிளத்தல் சொல்லுதல்.

இனி, உயர்திணை, அஃறிணை என்னும் இருதிணை; ஆண், பெண், பலர், ஒன்று, பலஎன்னும் ஐம்பால், வினா விடை; இயல்பு வழக்கு தகுதி வழக்கு, தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூவிடம்; ஒருமை பன்மையாகிய எண்; இவற்றுள் வரும் வழு - வழா நிலை என்பனவெல்லாம் கிளவியாக்கத்தில் இடம் பெறுகின்றன.

## வேற்றுமை

அடுத்துள்ள வேற்றுமையியலில் வேற்றுமை வகை, வேற்றுமை உருபு, பொருள் நிலை என்பவை கூறப்பட்டுள்ளன.

வேற்றுமை உருபுகள் மயங்குதல் வேற்றுமை மயங்கியலாக விரிகின்றது.

**விளி**

நான்காவது இயல் விளி மரபு என்பது. விளி என்பதன் இலக்கணம், உயர்திணைப் பெயர் விளியேற்கும் முறை, முறைப் பெயர் விரவுப் பெயர், அஃறிணைப் பெயர் ஆயவை விளியேற்கும் முறை பற்றியது அது.

**பெயர்**

அடுத்த இயல் பெயரியல், சொற்களின் இயல்பு, பெயர்ச் சொல்லின் இலக்கணம், உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள், விரவுப் பெயர்கள் என்பவை பற்றிய விதிகள் விளக்கங்கள் பற்றியது அது.

**வினை**

ஆறாம் இயல் வினை இயல். வினைச் சொல் என்பதன் இலக்கணம் கூறி, உயர்திணை வினை ஆஃறிணைவினை, விரவுவினை, வியங்கோள், வினை, எச்சம் பற்றியது அது.

**இடை**

ஏழாம் இயல் இடை இயல். இடைச் சொல் என்பதன் பொது இலக்கணம் சிறப்பிலக்கணம் பற்றிக் கூறியது அது. எண்ணிடைச் சொல் விளக்கமும் உடையது.

**உரி**

உரியியல் என்பது எட்டாவது இயல். இடைச் சொல் போலவே உரிச்சொல்லும் பொது இலக்கணம் சிறப்பிலக்கணம் என்பவற்றைக் கொண்டுளது. உரிச் சொல்லுக்குப் பொருள் காண் முறையும் கூறுகிறது. **அகராதி எனவும் நிகண்டு எனவும் பின்னே எழுந்த வரவுகளுக்கு இவ்விடையியலும் உரியியலும் மூலவைப்பகம் ஆகும்.**

**எச்சம்**

ஒன்பதாவது எச்சவியல். நால்வகைச் சொற்கள், பொருள்கோள் வகை, தொகைகள் வினைமுற்று வகை, சில மரபுக் குறிப்புகள் ஆகிய வற்றைக் கூறி நிறைகின்றது அது.

இச் சொல்லதிகாரம் உரைவல்லார் பலரைத் தன்பால் ஈர்த்துளது என்பது இதற்குக் கிடைத்துள்ள **உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார், தெய்வச்சிலையார்** ஆகியோர் உரைகளால் புலப்படும்.

- **இரா. இளங்குமரன்**

# சொல்லதிகார வாழ்வியல் விளக்கம்

**திணை**

*திணை பால் எண் இடம் காலம் ஆகிய பொதுவகுப்பு உலகப் பொதுமையது. எனினும் தமிழர் கண்ட திணை பால் வகுப்பு அருமையும் பெருமையும் மிக்கவை. சொல்லதிகார முதலியலாகிய கிளவியாக்க முதல் நூற்பாவே,*

> *"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே*
> *அஃறிணை என்மனார் அவரல பிறவே"*

*என்கிறது.*

*'திணை' என்பது திண்மை என்னும் பண்பு வழியில் அமைந்த சொல். திண்மை உடலுக்கும் உளத்திற்கும் உண்டேனும், இவண் உளத்திண்மை குறித்ததேயாம்.*

*உளத்திண்மையாவது உறுதியான கட்டொழுங்கு. அதனை ஆசிரியர் மேலே விளக்கியுரைப்பார்.*

*பெண்மைக்குத் திண்மை வேண்டும் என்னும் வள்ளுவம் ஆண்மைக்கு நிறையும் துறவர்க்கு நோன்பும் வேண்டும் என்பதையும் வலியுறுத்தும்.*

*உயர்ந்த ஒழுக்கம் உடையவர் எவரோ அவர் உயர்திணையர்; அவ்வுயர் ஒழுக்கம் இல்லாரும் மற்றை உயிரிகளும் உயிரில்லாதனவும் அல்திணையாம் (அஃறிணையாம்) என்கிறார் தொல்காப்பியர்.*

*மக்களெல்லாரும் உயர்திணையர் என்னாமல் உயர் ஒழுக்கம் உடையாரே உயர்திணையர் என்றார், "அவ்வுயர் ஒழுக்கம் இல்லார் மாந்தரே எனினும் அவர்கள் மக்கள் அல்லர்; மாக்கள் எனப்படுவர். விலங்கொடும் இணைத்துச் சொல்லப்படுவர்" என்பதை,*

> *"மாவும் மாக்களும் ஐயறி வினவே"*

*என்பார் மேலே.*

*திணை இரண்டும் ஐம்பாலாகப் பகுக்கப்படுதலை அடுத்து உரைக்கிறார் (485, 486).*

**பால்**

பால் என்பது தூய்மை; வால் என்பதும் அதுவே. பட்டொளி வீசும் பகல் ‘பால்’ ஆகும். இரவு பகல் எனப் பகுத்தலால் பால் என்பது பகுதி, பக்கம் என்னும் பொருள்களைக் கொண்டது. எ-டு: மேல்பால், கீழ்பால். பக்கங்களை இணைப்பது ‘பாலம்’ எனப்பட்டது. இவ்வாறும் மேலும் விரிபொருள் கொண்டது பால். **ஓர் உயிரின் தோற்றம், வளர்வு, வீவு என்பனவும் உலகத்தியற்கை எனப்பட்டது. அதனால் உகலத்தியற்கை யாம் ஊழுக்குப் ‘பால்’ என்பதொரு பெயரும் உண்டாயிற்று.**

திணையை இரண்டாகக் கண்ட நம் முன்னோர் பால் என்பதை ஐந்து எனக் கண்டனர். அவை ஆண், பெண், பலர், ஒன்று, பல என்பன. உயர் திணைப்பால் மூன்றாகவும், அஃறிணைப்பால் இரண்டாகவும் கொண்டனர்.

**திணை பால் என்பவற்றைச் சொல்லமைதி கொண்டு வகுக் காமல் சொல் சுட்டும் பொருள் அமைதியைப் பண்பாட்டு வகையால் வகுத்த அருமை நினைந்து மகிழத் தக்கதாம்.**

ஆண்பால் சொல் அடையாளம் என்ன?

பெண்பால் சொல் அடையாளம் என்ன?

“னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்”

“ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்”

என்கிறார் தொல்காப்பியர் (488, 489) இவ்வாறே பிறவும் தொடர்கிறார்.

நெடிய தொலைவில் இருந்து உருண்டுவரும் கல், தேய்வுறும்; தேய்ந்து தேய்ந்து சுருங்கி நிற்கும். அதுபோல் **நெட்ட நெடுங்காலத்தின் முன் தோன்றிப் பெருக வழங்கும் சொற்கள் தேய்தல் இயற்கை.**

அவன், அவள், அவர், அது, அவை என்பனவற்றின் இறுதி எழுத்து ஒன்றுமே நின்று அச்சொல்லமைதியைக் குறித்த வகை இது.

வந்த+அவன் = வந்தவன்;

எனத் தேய்தல் இல்லையா?

மக்கள் வழக்கில் எப்படி வழங்கப்படுகிறதோ, அதனைத் தக்க வகையில் புலமையாளர் போற்றிக் கொண்ட முறை இன்னதாம்.

### பால் திரிபு

‘அரவானி’ என்பார் உளர். அரவான் இறப்போடு தம்மைப் புனைந்து தாலியறுக்கும் சடங்காக நடத்தி வருகின்றனர். அது வரவரப் பெருக்கமும் ஆகின்றது.

முழுதுறு ஆண்மையோ, முழுதுறு பெண்மையோ அமையாதவர் அவர். ஓர் எருமையின் கொம்பைப், "பேடிப் பெண் கொண்டு ஆடுகை கடுப்ப" என உவமை காட்டுகின்றது கலித்தொகை. போர்க்களம் புக விலக்கப்பட்டவராக இருந்தனர் அவர். ஆனால் களியாட்டத்தில் பங்கு கொண்டனர். பதினோராடல்களுள் ஒன்று பேடு.

ஆண்மை இயல்பு மாறியவரையும் பெண்மை இயல்பு மாறியவரையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

"ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி"

என்கிறார்.

ஆண் தன்மை மாறிப் பெண் தன்மை மிக்கார் பேடியர் என்றும், பெண் தன்மை மாறி ஆண் தன்மை மிக்கார் அலியர் என்றும் கூறப் படுகின்றனர்.

இலக்கணம் கூறவந்த ஆசிரியர் பால்திரி தன்மையரை எப்பால் வகுப்பில் சேர்த்தல் வேண்டும் என்னும் ஐயம் பயில்வார்க்கு எழாவாறு, "இப்பால் படுத்திக் கூறுக" என இலக்கணம் வகுத்தார் என்க.

### செப்பும் வினாவும்

"செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்" என்பதொரு கிளவியாக்க நூற்பா (496).

'**வினா விடை**' மலிந்த காலம் இது. வினாவுதலும் விடை தருதலும் வழக்கு. ஆனால், ஆசிரியர் தொல்காப்பியர் பார்வை ஆழமானது. வினாவுதற்கு உரிய பொருள் ஒன்று இல்லாமல் வினாவுதல் என்பது இல்லையே என எண்ணியவராய் விடை என்பதனைக் குறிக்கும் 'செப்பு' என்னும் சொல்லை முன்வைத்துச் "செப்பும் வினாவும்" என்றார்.

செப்பல் ஓசையமைந்த வெண்பா, வினாவுக்கும் விடைக்கும் பொருந்தி வரக் கண்ட புலமையர், அதனைப் போற்றி வளர்த்த இலக்கியப் பரப்பு பேரளவினதாம். வினா விடை வெண்பா, **சேதுவேந்தர்** அவையில் சிறக்க வளர்ந்தது. **இரட்டையர்**, **காளமேகர்** முதலியோர் பாடியவை தனிப்பாடல் திரட்டில் இடம் பெற்றன.

### வினாவேவிடை

"படிப்பாயா" என வினாவுகிறார் ஒருவர். வினாவப் பட்டவர், "படியேனோ? (படிக்க மாட்டேனோ?)" என அவரும் வினாத் தொடுக்கிறார். இவ்வினாவும் விடையே என்பதை மக்கள் வாழ்வியல் வழக்குக் கண்டு உரைத்துள்ளார் தொல்காப்பியர் அது,

"வினாவும் செப்பே வினாஎதிர் வரினே"

என்பது (497).

### தகுதி

சட்ட மன்றத்திலோ, நாடாளுமன்றிலோ பயன்படுத்தக்கூடாத சொல் என்று அவைக் குறிப்பில் இருந்து விலக்கக் கூறுதல் **மக்களாட்சி நடைமுறை**. இம்முறை பெரியவர் முன்பிலும், பெரு மக்கள் அவை முன்பிலும் பண்டே பயன்படுத்தப்பட்ட செம்முறை ஆகும்.

மாண்டார், இறந்தார், துஞ்சினார், செத்தார் என்பனவெல்லாம் ஒரு பொருள் தருவனவே எனினும், 'செத்தார்' என்பது மதிப்புக் குறைவாகக் கருதப்படுகின்றது.

விடுக்கப்படுவது, 'ஓலை' என்றாலும் அது 'திருமுகம்' எனப் பட்டது.

'விளக்கை அணை' என்னாமல், 'விளக்கை அமர்த்து', 'குளிரவை' என்பவை மின் காலத்திலும் பின்பற்றல் உண்டு.

இவற்றை **அவையல்கிளவி**, (இடக்கரடக்கு) என்றும், **மங்கல வழக்கு** என்றும் கூறப்பட்டன. "இதனை இவ்வாறு கூறுதலே தகுதி" எனச் சான்றோரால் வகுக்கப்பட்டது '**தகுதி வழக்கு**' என்பதாம் இதனைத்,

> "தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
> பகுதிக் கிளவி வரைநிலை இலவே"

என்கிறார் (500).

### இனச் சுட்டு

ஞாயிறு என்பதற்கும் செஞ்ஞாயிறு என்பதற்கும்வேறுபாடு உண்டா? உண்டு. ஞாயிறு என்பதைப் பொது வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் கொள்ளலாம். ஆனால், செஞ்ஞாயிறு என்பது பொது வழக்குச் சொல் அன்று; அது, செய்யுள் வழக்குச் சொல். ஏனெனில், இனச்சுட்டு இல்லாச் சொல் செஞ்ஞாயிறு என்பது கரு ஞாயிறு என ஒன்று இல்லையே; அதனால்

'செந்தாமரை' என்பது பொது வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் உண்டே எனின், அது இனச் சுட்டுடைய பண்பினது. வெண்டாமரை உள்ளதே!

> "இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
> வழக்கா றல்ல செய்யு ளாறே"

என்பது நூற்பா (501).

### இயற்கை செயற்கை

இயற்கைப் பொருளை இவ்வாறு கூறவேண்டும் செயற்கைப் பொருளை இவ்வாறு கூறவேண்டும் என்னும் நெறிமுறைகள் உண்டு.

'மண்திணிந்த நிலம்' என அதன்செறிவு கூறப்படும். மக்கள் வழக்கிலும் நிலம் வலிது; நீர் தண்ணிது எனப்படும். ஆனால் செயற்கைப் பொருளுக்குக் கூறும் முறை வேறானது.

'பயிர் செழுமை**யானது**' என ஆக்கச் சொல் தந்து கூறுதல் வேண்டும். ஆக்கச் சொல்லொடு காரணம் கூறலும் வழக்கு. "நீர் விட்டு களைவெட்டி உரமிட்டு வளர்த்ததால் பயிர் செழுமையானது" என ஆக்கம் காரணம் பெற்று வருதல் உண்டு. ஆக்கம் காரணம் அறிவிக்காமல் அறியத்தக்கது எனின், காரணம் இல்லாமலும் ஆக்கம் வரும். உழவர் முதலோர் வழக்குகளில் ஊன்றிய ஊன்றுதலே இவ்விலக்கண ஆட்சி முறையாம் (502 - 505).

**ஒருவர்**

அவர், பலர்பால் சொல், ஆனால் ஒருவரை அவர் எனச் சிறப்பு வகையால் கூறல் உண்டு. அம்முறை இலக்கண முறை ஆகாது; மக்கள் வழக்கு முறையாகும்.

வேந்தனே எனினும் அவனைப் பாடிய புலவரை அவன் என்னாது அவர் எனல் உரையாசிரியர் மரபு. அதனால் 'அவனை அவர் பாடியது' என்றே நெறியாக வழங்கினர்.

"கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது" என்று சிறப்பு வகையாலே பாடல் தொகுத்தவர்கள் போற்றி உரைத்தனர். ஆர் இறுதி வரும் பெயரோடு சாதிப் பெயர் ஒட்டுதல் இல்லை என்பதை உணர்வார் அதனைப் போற்றத் தவறார்.

ஆனால் செய்யுளில் ஒரு புலவரை ஒரு புலவர் "பரணன் பாடினன்", "கபிலன் பாடிய மையணி நெடுவரை" என ஒருமைப் பெயராகவே குறித்தனர். இவை எண்ணிப் போற்றத்தக்கவையாம்.

தாய்ப்பசு வரும் என்பதை, "இன்னே வருகுவர் தாயர்" என்கிறது முல்லைப் பாட்டு. இஃது அஃறிணையை உயர்திணை ஆக்கிக் கூறியது ஆகும். இவ் விலக்கணத்தைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார் (510).

**யாது எவன்**

யாது என்றோ எவன் என்றோ வினாவின் வினாவப் பட்ட பொருள் முன்னர் அறியப்படாத பொருளாக இருத்தல் வேண்டும் என்பது மரபு.

**வரையறை**

இடக்கண் வலிக்கிறது; வலக்கண் வலிக்கிறது எனத் தனித் தனியே கூறல் உண்டு. ஒரு கண் வலிக்கிறது எனலும் வழக்கே. இரண்டு கண்களும் வலித்தால், இரண்டு கண்கள் வலிக்கின்றன எனல் மரபு ஆகாது. **இரண்டு கண்களும்** வலிக்கின்றன" என்பதே மரபு. ஏனெனின், கண்கள் இரண்டே

ஆதலால் உம்மை இட்டுச் சொல்லல் வேண்டும். இவ்வளவே என வரம்புடையவற்றை உம்மையிட்டுக் கூறாமை பிழையாகும்.

'முத்தமிழ் வல்லார்' என்னாமல் 'முத்தமிழும் வல்லார்' எனலே முறை. ஏனெனின் தமிழ் மூன்றே ஆகலின்.

இதனை,

"இனைத்தென அறிந்த சினைமுதல் கிளவிக்கு
வினைப்படு தொகையின் உம்மைவேண்டும்"

என்கிறார் (516). எங்குமே இல்லாத பொருளைச் சொன்னாலும் அவ்வாறு உம்மை தந்தே சொல்ல வேண்டும் (517).

எ-டு: "எந்த முயலுக்கும் கொம்பு இல்லை"

**அல்லது இல்லது**

துவரம் பயறு உள்ளதா என்று ஒரு வணிகரிடம் வினாவினால் உள்ளது எனின் உள்ளது என்பார். இல்லை எனின் இல்லை என்று கூறார். ஆனால், துவரம் பயறு போன்ற ஒரு பயறு வகையைச் சுட்டிக் கூறுவார். பாசிப்பயறு உள்ளது; மொச்சைப் பயறு உள்ளது என்பார்.

'இல்லை' என்று சொல்லுதல் தம் வணிக மரபுக்கு ஆகாது என அவர் கொண்டுரைக்கும் உரை வழக்கு இன்றும் நடைமுறையில் காண்பதேயாம். இதனை,

"எப்பொருள் ஆயினும் அல்லது இல்எனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்"

என்கிறார் தொல்காப்பியர் (618).

இன்னும், 'இருந்ததுதான்;' 'நாளை வரும்' என்பதும் இவ்வழிப் பட்டதே. இல்லை என்பது இல்லை என்னும் மக்கள் வழக்கைச் சுட்டுவது இது.

**பெயர்; சுட்டு**

ஔவையார் வந்தார்; அவர், அரண்மனையை அடைந்தார். இதில் ஔவையார் என்பது இயற் பெயர். அவர், சுட்டுப்பெயர்.

இயற்பெயரைச் சொல்லிய பின்னரே சுட்டுப் பெயரைச் சொல்லுதல் வழக்கம். ஆனால், செய்யுளில் சுட்டுப் பெயரை முதற்கண் சொல்லிப் பிற்பட இயற்பெயர் கூறலும் உண்டு.

பெயர்களுள் சிறப்புப் பெயர், இயற்பெயர் என இரண்டும் வருவதாயின் சிறப்புப் பெயரை முற்படக் கூறி, இயற்பெயரைப் பிற்படக் கூறவேண்டும் என்பதும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையாகும்.

எ-டு: 'தெய்வப் புலவர் திருவள்ளுவர்'

***சிறப்புப் பெயரைப் பின்னே வைத்து, இயற்பெயரை முற்பட வைத்தல் ஆகாது*** *என்பதை வலியுறுத்தவே இதனைக் கூறினாராம் (524).*

### ஒரு சொல் பலபொருள்

*கால் என்பது பல பொருள் ஒரு சொல். உறுப்பு, சக்கரம், காற்று, கால்பங்கு, கால்வாய் முதலாய பலபொருள்களை யுடையது. இவ்வொரு சொல், இப் பல பொருளுக்கு இடமாகி வருதலை அறிய வகை என்ன?*

*கால், கை, தலை என்னும் இடத்து* ***உறுப்பு*** *என்றும், 'கால் பார் கோத்து' என்னும் இடத்துச்* ***சக்கரம்*** *என்றும், புனல் அனல் கால் என எண்ணுமிடத்துக்* ***காற்று*** *என்றும், ஒன்றே கால் என்றும் இடத்துக்* ***கால் பங்கு*** *என்றும், கண்வாய் கால்வாய் என்னும் போது* ***நீர் வருகால்*** *என்றும் அறிய முடிகின்றது. இவ்வாறு அறியும் முறையை ஆசிரியர் கிளவி யாக்கத்தில் சுட்டுகிறார். பொருள் மயக்கம் உண்டாகா வகையில் பொருள் காண வழிகாட்டுகிறார்.*

*"அவற்றுள்,*
*வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்*
*வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்*
*நேரத் தோன்றும் பொருள்தெரி நிலையே"*

*என்பது அது (535).*

### வேற்றுமை

*தொல்காப்பியர்க்கு முன்னர் வேற்றுமை ஏழாக எண்ணப் பட்டுள்ளது. முதல் வேற்றுமையாகிய எழுவாய் வேற்றுமை விளியாகும் நிலையையும் முதல் வேற்றுமையின் திரிபாகவே கொண்டு அதனைத் தனித்து எண்ணாமல் இருந்துளர். ஆனால் தொல்காப்பியர்,*

*"வேற்றுமை தாமே ஏழென மொழிப"*

*என்று கூறி,*

*"விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே"*

*எனத் தனித்து எண்ணியுள்ளார் என்பது அவர்தம் நூற்பாக்களின் அமைதியால் விளக்கம் ஆகின்றது. வேற்றுமை எட்டு என எண்ணப்பட்ட வகை அது.*

### பெயர், விளி

*வேற்றுமையை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு என எண்ணாமல்,*

*"அவைதாம்,*
*பெயர் ஐ ஒடு கு*
*இல் அது கண் விளி என்னும் ஈற்ற"*

*என எண்ணியுள்ளார்.*

ஐ என்றால் இரண்டாம் வேற்றுமை என்றும்...

கு என்றால் நான்காம் வேற்றுமைஎன்றும்...

கண் என்றால் ஏழாம் வேற்றுமை என்றும்...

அறியச் செய்துள்ளார்.

ஒன்று இரண்டு என எண்ணிக்கையால் சிக்கல் ஏற்பட வாய்ப்பு உண்டு எனினும் பெயர், ஐ, ஒடு என உருபுகளைக் கொண்டு எண்ணும் வகையால் சிக்கல் ஏற்பட வாய்ப்பு இல்லை. ஏனெனில் பொருள் வேறுபடுத்தும் சொல்லே பெயராகி விடுகின்றதே. ஆதலால் இந்நெறி மேற்கொண்டனர் நம்முன்னோர்.

ஐ என்னும் உருபு வெளிப்பட்டோ மறைந்தோ வரக் கண்டதும் அதன் பொருள் புலப்பட்டு விடும். ஆதலால் உருபையும் அவ்வுருபு வழியாக ஏற்படும் பொருளையும் தெளிவாக அறிந்துகொள்ள வேற்றுமை உருபு-பொருள்களைப் படைத்துளர்.

முருகன் என்னும் பெயர் எழுவாய் நிலையில் நின்று உருபுகளை ஒட்டும்போது முருகனை, முருகனால், முருகனுக்கு, முருகனின், முருகனது, முருகன்கண், முருகா என வேறுபடுகின்றது. உருபு மாற மாறப் பொருளும் மாறுபடுதலால் வேற்றுமை என்றனர்.

"முருகன் வாழ்த்தினான்"

"முருகனை வாழ்த்தினான்"

என்பவற்றில் வாழ்த்தியவனும் வாழ்த்துப் பெற்றவனும் வேற்றுமையாகிவிட வில்லையா! இவ் வேறுபாட்டை உருபு ஆக்குதலால் வேற்றுமை உருபு எனப்பட்டது.

**உருபு என்பது வடிவம் அடையாளம். அரசுத்தாள் என்பதன் அடையாளம் உருபா.**

**வினை, பண்பு, உவமை, உம்மை இன்னவற்றின் அடையாளச் சொற்களையும் உருபு என்றது இதனால்தான்.**

மரம் நட்டினான்; மரத்தை நட்டினான்

மரம் வெட்டினான் ; மரத்தை வெட்டினான்

ஊரை அடைந்தான். ஊரை நீங்கினான் 'காளையைப் போன்றான்' இப்படியெல்லாம் வருவனகொண்டு இன்ன உருபு இன்ன பொருளில் வரும் எனக் கண்டு அம்மரபு போற்றுமாறு காத்தனர். ஆயினும் சில உருபு மயக்கங்களும் உண்டாயின. சிலவற்றை ஏற்கவும் சிலவற்றை மறுக்கவும் ஆயின.

*என் வீடு என்பது, எனதுவீடு என ஆறாம் வேற்றுமையாகும்.*

*என் மகள் என்று வரும்போது எனது மகன் எனக் கூடாது. ஏன்? வீடு உடைமைப் பொருள். மகள் உடைமைப் பொருள் அன்று. உறவுப் பெயர்; உரிமைப்பெயர். எனக்கு மகள் என உறவுரிமை தருதலே முறையாகும் (578).* ***இந்நாளில் அடிக்கப்படும் திருமண அழைப்பிதழ் களில் பல இவ்வேறுபாடு அறியாமல் அடிக்கப்படுவதைக் காணலாம்.***

***எவ்வளவோ நுண்ணிய அறிவால் கண்டு வைத்த கட்டுக் கோப்பான நம் மொழி அக்கறை இல்லாத மக்களால் அழிக்கப்படு வதற்கு இஃதொரு சான்றாம்.***

***உருவாக்கிக் காத்த உயர்ந்த அறிவாளர் வைத்துள்ள மொழிச் சுரங்கம் இலக்கணம் என்னும் உணர்வு மக்களுக்கு ஏற்பட்டால் இத்தகு குறைகள் ஏற்படா.***

### வேற்றுமை வரிசை

*சொற்கள் பெயர் வினை இடை உரி என நான்காக எண்ணப்படினும் பெயர், வினை என்னும் இரண்டனுள் அடங்கும். அப்பெயரே முதல் வேற்றுமை;* ***அப்பெயராகிய எழுவாய் வினைபுரிதல் விளக்கமே வாழ்வியலாகும்****. அவற்றை முறையே வைப்பு முறையால் வைத்த அருமையது இரண்டாம் வேற்றுமை முதலியனவாம். இவ்வருமையை முதற்கண் கண்டுரைத்தவர் உரையாசிரியர்* ***தெய்வச்சிலையார்****. அவர் கூறுமாறு:*

*"யாதானும் ஒருதொழிலும், செய்வான் உள்வழி யல்லது நிகழா மையின் அது செய்து முடிக்கும் கருத்தா முன் வைக்கப்பட்டான்.*

*அவன் ஒரு பொருளைச் செய்து முடிக்குங்கால் செய்யத் தகுவது இதுவெனக் குறிக்க வேண்டுதலின் செயப்படு பொருள் இரண்டாவது ஆயிற்று.*

*அவ்வாறு அப்பொருளைச் செய்து முடிக்குங்கால் அதற்கு ஆம் கருவி தேடுதலின் அக்கருவி மூன்றாவதாயிற்று.*

*அவ்வாறு செய்து முடித்த பொருளைத்தான் பயன்கோடலே அன்றிப் பிறர்க்கும் கொடுக்கும்ஆதலின் அதனை ஏற்றுநிற்பது நான்காவது ஆயிற்று.*

*அவ்வாறு கொடுப்புழி அவன் கையினின்றும் அப்பொருள் நீங்கி நிற்பது ஐந்தாவதுஆயிற்று.*

*அவ்வாறு நீங்கிய பொருளைத் தனது என்று கிழமை செய்தலின் அக்கிழமை ஆறாவது ஆயிற்று.*

*ஈண்டுக் கூறப்பட்ட எல்லாவற்றிற்கும் இடமும் காலமும் பொதுவாகி நிற்றலின் அவை ஏழாவது ஆயின.''*

**மணிமாலை போல வேற்றுமையமைவு விளக்கம் சிறத்தல் எண்ணி மகிழத் தக்கதாம். நூலாசிரியர் கண் கொண்டு உரையாசிரியர் நோக்கி யுரைக்கும் இன்னவை நூற்பெருமையை மேலும் பெருமை செய்வதாம்.**

### ஒடு

*''ஊராட்சித்தலைவரொடு உறுப்பினர்கள் கூடினர்''* இது செய்தித் தாளில் வரும் செய்தி. உறுப்பினர்கள் பலர்; தலைவரோ ஒருவர். ஆயினும் தலைவரோடு என அவர்க்கு முதன்மை கொடுப்பது ஏன்?

*''ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே''*

என்பது தொல்காப்பிய நாள் தொட்ட நடைமுறை வழக்கம் (575).

### விளி மரபு

அம்மை அன்னை தந்தை தங்கை அக்கை தம்பி முதலான முறைப்பெயர்கள் விளிக்கப்படும் பெயர்களாக வழக்கில் மாறாமல் உள்ளன. விளித்தல் அழைத்தல், கூப்பிடுதல். அம்மா, அம்மே, அம்மோ என்றெல்லாம் வழங்குதல் பழமையும், 'அம்ம' என்று அண்மை விளியாம் பழமையும் இவ்வியலால் நன்கு அறியப்படும். ''அண்மைச் சொல்லே இயற்கையாகும்'' என்றும் விளியேலாமை குறிப்பார் (612).

இம் மரபு தமக்கு முற்றொட்டே வரும் வகையை உணர்த்துமாறே 'விளிமரபு' என்று பெயரிட்டு வழங்கினார் என்பதும் அறியத்தக்கது.

கோமான், பெருமாள் என்பன ஈற்றயல் நெடிலாகியவை. இவை விளியாம்போது இயற்கையாய் அமையும் என்கிறார். பெருமானே, பெருமாளே, கோமானே எனவருதல் இருவகை வழக்கிலும் உண்டு.

*''உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்*
*அளபிறந் தனவே விளிக்கும் காலைச்*
*சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான''*

என விளியை விரிவாக்கிப் போற்றுகிறார் (637).

குழந்தை தொட்டுப் பெருமுதுமை வரை மக்கள் வாழ்வில் மட்டுமா? இறையடியாரும்

*''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே*
*அன்பினில் விளைந்த ஆரமுதே''*

என்று விளிக்கும் விளிமரபு மாறாமரபு அல்லவா!

### சொல்லும் பொருளும்.

பெயர் வினை இடை உரி என முறையே சொற்களை எண்ணும் ஆசிரியர் அவற்றின் இலக்கண அடிமூலம் கூறுவாராய்,

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" என்கிறார்.

தமிழ்ச் சொற்களில் இடுகுறி என்பதொரு சொல் இல்லை என்பதைச் சொல்லி எல்லாச் சொற்களும் பொருள்புணர்ந்தனவே என உறுதி மொழிகிறார் (640).

### பெயர், வினை

சொற்கள் இரண்டே என்பாராய்,

"சொல்எனப் படுப பெயரே வினைஎன்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே"

என்பது (643) **குடிக்கணக்கு எடுப்பார் தலைக் கட்டு எண்ணுவது போன்ற தாம்**. தலைக்கட்டு வரி ஊர்ப்பொதுப் பணிக்கு ஊரவர் மதிப்பிட்டுப் பெறும் தொகையாகும். ஆள் எண்ணிக்கையில் இருந்து வரிதண்டலுக்கு விலக்கப்பட்ட முறை போல்வது அது.

பொருளை உணர்த்துவது பெயர். பொருளின் பெயர்ச்சி (புடை பெயர்தல்) வினை. என இரண்டன் பொருந்துதலும் நோக்கத் தக்கது.

இடைச் சொல்லும் உரிச் சொல்லும் சொல்லென ஆகாவோ எனின்,

"இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப"

என்பார் (644).

### பெண்மகன்

ஆண், பெண், பிள்ளை எனவும்; ஆண்பிள்ளை, பெண்பிள்ளை எனவும்; வழங்கல் உண்டு. ஆண்மகன்; பெண்மகள் என்பனவும் வழங்கு வனவே.

பெருமகள் பெருமாள் ஆகும்; பெருமகன் பெருமான் ஆவது போல. 'பெண் பெருமாள்' என்பார் வரலாற்றில் இடம் பெற்றுளார். தொல்காப்பியர்,

"பெண்மை அடுத்த மகன் என் கிளவி"

என்பதைக் குறிக்கிறார். அதனால்,

'பெண்மகன்' என வழங்கப் பெற்றமை அறியவரும்.

உரையாசிரியர் சேனாவரையர், "புறத்துப் போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண் மகளை மாறோக்கத்தார் இக்காலத்துப் பெண்மகன் என்று வழங்குப" என்கிறார்.

**கல்வி அறிவாற்றலால் தக்கோர் அவையில் முந்தியிருக்கச் செய்யும் கடமை யமைந்த பெற்றோரை நோக்க, மகற் காற்றல் என்பது இருபாலையும் தழுவியபேறும் உண்டெனக் கொள்ளத் தகும்.**

இனி இந்நாளிலும் பெண்மகவை ‘வாடா’ ‘போடா’ என்பதும், ஆண்பெயராக்கி அழைப்பதுடன் ஆணுடையுடுத்து மகிழ்தலும் காணக் கூடியனவேயாம். குறிப்பாகப் பெண்பிள்ளை இல்லார் அவ்வாறு செல்வமாகப் போற்றி மகிழ்தல் அறியலாம். **தொல்காப்பியர் நாளை எச்சமாக அதனை எண்ணலாம்.**

### பெயர்வகை

உயர்திணைப் பெயர் அஃறிணைப் பெயர் என விரிவாகப் பட்டிய லிட்டுக் காட்டும் ஆசிரியர் நூற்பாக்களொடு சங்கத்தார் பெயர்களை ஒப்பிட்டு ஆய்ந்தால் மொழித் தூய்மை பேணும்வழி தானே புலப்படும்.

நிலப் பெயர், குடிப் பெயர், குழூவின்பெயர், வினைப் பெயர், உடைப்பெயர், பண்பு கொள் பெயர், முறைநிலைப் பெயர், சினை நிலைப் பெயர், திணை நிலைப் பெயர், ஆடியற்பெயர், எண்ணியற் பெயர் என்னும் இவை **இடைக்கால பிற்கால வேந்தர் முதலோரால் கொண்டு போற்றப்படாமையால் இந்நாளில் முறை நிலைப் பெயர் (அம்மா, அப்பா, அண்ணா, அக்கை) தாமும் ஒழிந்துபடும் நிலைமை எண்ணத் தகும். சிறுநுண் நச்சுயிரியினால் பேருயிரியாம் மாந்தர் அழிந்துபடுதல் ஆகாது என அறிவியலாளரும் அரசியலாளரும் எடுக்கும் நலத்துறை அக்கறையில் ஒரு சிறிதளவு தானும் மொழித்துறை, பண்பாட்டுத் துறையில் கருத்துச் செலுத்தவில்லையே என்னும் ஏக்கம் உண்டாக்கு வது தொல்காப்பியர் சுட்டிக் காட்டும் பெயர் வகைகள் ஆகும் (647-650).**

### அவர்கள்

அவன் அவள் அவர் அது அவை என்பன ஐம்பாற் பெயர்கள். இந்நாளில் ‘அவர்கள்’ எனப் பலர்பால் வழங்கப்படுகிறது. ‘ஆசிரியர் அவர்கள்’ எனச் சிறப்பொருமைப் பெயராகவும் வழங்கப்படுகிறது.

‘கள்’ என்பது அஃறிணைப் பன்மைப் பெயர் ஈறு.

அது மக்கட் பெயரொடு ஆண்கள் பெண்கள் அவர்கள் என வருதல் ஆகாது.

ஆடுகள் மாடுகள் மலைகள் எனவரும் என்பது பழைய மரபு.

“கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பல அறி சொற்கே”

என்பது தொல்காப்பியம் (654).

*பலவின் பாலுக்குரிய 'கள்' பலர்பாலுக்கும் வருதல் சங்கத்தார் காலத்திலேயே தோற்றமுற்று வரவரப் பெருக்கமாகிவிட்டது. அவர்கள் எனக் கள்ளீறு இல்லாமல் ஒருவரைச் சொன்னால் அவர் பார்வையே வேறாகிப் 'பண்போடு பேசத் தெரியவில்லை' எனப் பழிப்புக்கும் ஆளாகிவிடுதல் இந்நாளில் கண்கூடு.*

**தாம், தான்**

*தாம் என்பது பன்மைக்குரிய சொல் (669).*

*எ-டு: அவர்தாம் கூறினார்; அவர் தம்முடைய பணிக்குச் சென்றார்.*

*தான் என்பது ஒருமைக்குரிய சொல் (670).*

*எ-டு: அவன்தான் கூறினான்; அவன் தன்னுடைய பணிக்குச் சென்றான்.*

*எல்லாம் என்பது பன்மைச் சொல் (671).*

*எ-டு: அவர் எல்லாம்; அவை எல்லாம்.*

*இப்படித் தெளிவாகத் தொல்காப்பியம் கூறியும் இந்நாளை இதழாசிரியர் நூலாசிரியர் தாமும் கண்டு கொள்வதில்லை.*

*அவர் தன்னுடைய வேலையுண்டு தானுண்டு என்றிருப்பார் - என அச்சிட்ட செய்தி படிப்பார் அப்பிழையைக் கற்றுக்கொண்டு பரப்பாளரும் ஆகிவிடுகிறாரே!*

**வினை**

*வினை என்பதன் இலக்கணம் 'காலத்தொடு தோன்றும்' என்பது. அது 'வேற்றுமை கொள்ளாது' என்பதும் அதன் இலக்கணமே. இதனைச் சொல்லியே வினையியலைத் தொடங்குகிறார்.*

*மெய்யியல் வல்லாராகிய அவர், செயல் வழியாம் வினையைச் சொல்வதை அன்றித் 'தலைவிதி' என்னும் பொருளில் ஆளவில்லை. 49 நூற்பாக்கள் அதற்கென வகுத்தும் அவ்வாறு ஆளாமை தாம் கூற எடுத்துக் கொண்ட பொருளமைதியை விடுத்து வேறு வகையில் செல்லார் என்பது நாட்டும்.*

*'செய்வினை' செய்தல்; அதனை நீக்க 'வினைக் கழிவு' செய்தல் அறிவியல் பெருகிவருவது போலப் பெருகி வருதலை நினைக்க ஏதோ மூளைச் சலவைக்கு ஆட்பட்ட மக்கள் போலத் தோன்றுதல்தானே உண்மை.*

**விரைவு**

*வாரான் ஒருவனும் வருவான் ஒருவனும் விரைவுக் குறிப்பில் வந்தேன் வந்தேன் எனல் உண்டே!*

உண்ணப் போவான் ஒருவன் உண்டேன் எனலும் உண்டே!

இது குற்ற மல்லவோ எனின்,

"வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்பனார் புலவர்"

என அமைதி காட்டுகிறார் ஆசிரியர் (726).

## நிகழ் காலம்

மலை நிற்கும் எனவும், கதிர் இயங்கும் எனவும் வழங்குகிறோம்.

மலை நின்றதும், நிற்கின்றதும், நிற்பதும் ஆகிய முக்காலத்திற்கும் உரியதாக இருந்தும் நிகழும் காலத்துச் சொல்லுதல் வழு இல்லையா?

கதிர் இயங்கியது; இயங்குகிறது; இயங்கும்; இவ்வாறு இருந்தும், நிகழ்காலத்தில் சொல்லுதல் வழுத்தானே!

ஆசிரியர் தெளிவிக்கிறார்:

"முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழும் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்"

என்பது அவர்காட்டும் அமைதி (725).

முக்காலத்திற்கும் ஒத்தியலும் அவற்றைச் 'செய்யும்' என்னும் வாய்பாட்டால் சொல்ல வேண்டும் என வழிகாட்டுகிறார்.

## தெளிவு

இச் சூழலுள் போவான் செத்தான் எனின் வழுவாகும் அல்லவோ! அப்படிச் சொல்லுதல் வழக்கில் உண்டே எனின், நிகழப் போவதை உறுதி யாகக் கொண்டு நிகழ்ந்ததாகக் கூறியது அது என்கிறார்.

"வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையும் தெளிவும் கிளக்கும் காலை"

என்பது நூற்பா (730).

## இடைச் சொல்

'நான்' என்பது தன்மைப் பெயர்.

'நீ' என்பது முன்னிலைப் பெயர்.

'நான் நீ' என்று நின்றால் பொருள் விளக்கம் பெறுவது இல்லை. "நானும் நீயும்" என்னும் போது பொருள் விளக்கம் பெற வாய்க்கின்றது; 'செல்வோம்' எனச் சேர்த்தால் பொருள் முடிபு கிட்டுகின்றது.

சொற்கள் பெயர், வினை எனப் பகுக்கப் பட்டாலும், இத்தகு (உம்) இணைப்புகளும் வேண்டியுள. இவ்விணைப்புச் சொற்களே இடைச் சொற்கள் எனப்படுகின்றன.

இடைச் சொல் என்பதால் சொல்லுக்கு இடையே மட்டும் வரும் சொல் என்பதாகாது. சொல்லுக்கு முன்னும் பின்னும் இடையும் வேண்டும் இடத்தால் வருவது இடைச் சொல் எனப்பட்டது என்க.

"இடைச் சொல் தான் சார்ந்த பெயரின் பொருளையும் வினையின் பொருளையும் தழுவி நிற்றல் அன்றித் தனித்து நடக்கும் தன்மையது அன்று" என்று ஆசிரியர் கூறுகிறார் (734).

எலும்புகளை இணைக்கவும் இயங்க வைக்கவும் இணைப்பு மூட்டுகள் உடலில் இடம் பெற்றிருப்பன போலச் சொற்பொருள் விளக்கத் திற்கு இடைச்சொற்கள் உதவுகின்றன எனல் தகும்.

"யான் அரசன்; யான் கள்வன்" இடைச் சொல் பெறா நிலையில் இத் தொடர்கள் தரும் பொருளுக்கும், "யானோ அரசன்; யானே கள்வன்" என இடைச் சொல் இணைதலால் வரும் தொடர்கள் தரும் பொருளுக்கும் உள்ள வேறுபாடு பளிச்சிட்டுத் தோன்றவில்லையா? இடைச் சொற்கள் சொல்லுறுப்புகளே எனினும் சொல்லுக்கும் பொருளுக்கும்; தொடர்புப் பாலமாக இருப்பவை அவையே.

இனி, இடைச் சொல் தானும் பொருளின்றி வாரா என்பதன் விளக்கமே,

"கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்று
அம்மூன் றென்ப **மன்**னைச் சொல்லே"

என வருவது முதலான நூற்பாக்கள்.

### உரிச்சொல்

இயற்றப்படும் செய்யுள் சுவையும் தெளிவும் உறுதியும் அழகும் கொண்டு விளங்குமாறு இதற்கு இதுவே உரிய சொல் எனத் தேர்ந்து வைக்கப்படும் சொல் உரிச் சொல்லாகும்.

பெயர் வினை இடை என்னும் முச் சொற்களைக் கொண்டே எடுத்த பொருளைக் கூறிவிட முடியும். ஆனால் உரிச் சொல் தரும் சுவை முதலிய நலங்கள் ஏற்பட்டு ஆழ்ந்து எண்ணவும் மீள மீளக் கற்கவும் வாய்க்காமல் அமையும்.

அவையறிந்து பேசுவார் தம்மைச், சொல்லின் தொகையறிந்த தூய்மை யவர், சொல்லின் நடையறிந்த நன்மையவர், சொல்லின் வகை யறிவார் (711 - 713) என்று வள்ளுவர் தொகுத்துக் கூறும் இலக்கணம் அமைந்த சொல் உரிச் சொல் ஆகும்.

**உரிச் சொல் உணர்வில் நின்று சுவை யாக்குதல், உரிப்பொருள் ஒப்பது எனப் பெயரீடு கொண்டு உணரலாம்.**

**நிகண்டு**

படைப்பாளி கொண்ட பொருள் நயம் படிப்பாளியும் கொள்ளல் வேண்டும் எனின் புரிதல் வேண்டும். காட்சிப் பொருள் போலக் குருத்துப் பொருளை அறிதலின் அருமை நோக்கியே உரிச்சொல் விளக்கமாக நிகண்டு நூல்கள் தோற்றமுற்றன. அந்நிகண்டு நூல்களில் ஒன்றன் பெயர் உரிச்சொல் நிகண்டு என்பது. வழக்காற்றில் நிகழ்கின்றவற்றைக் கொண்டு திரட்டி வைக்கப்பட்ட சொல்லடைவே நிகண்டு என்னும் பொருட் (காரணப்) பெயராகும்.

**உரிச்சொல் இயல்**

இத்தகு செய்யுட் சொல்லைப் பொருள் உணர்ந்து ஓதிச் சுவைக்கும் வகையில் வழிகாட்டியவர் தொல்காப்பியர். அவர் வகுத்த உரிச் சொல் இயல் அதன் விளக்கமாகும்.

வேண்டும் வேண்டும் சொல்களை உருவாக்கிக் கொள்ள அடிச் சொல்லாகத் திகழும் அருமை உரிச் சொல்லுக்கு உண்டு.

தொல்காப்பியர், 'உறு தவ நனி' என்னும் உரிச் சொற்களைக் கூறி, மூன்று என்னும் எண் தந்து, மிகுதி என்னும் பொருள் தருவன அவை என்கிறார்.

"சால உறு தவ நனி கூர் கழிமிகல்" (நன். 455)

என ஆறு எண்ணுகிறார் நன்னூலார்.

உரிச் சொற்கள் எல்லாவற்றையும் எடுத்து ஓத வேண்டுவது இல்லை; அவற்றுள் பொருள் வெளிப்பாடு உடைய சொல் பொருள் வெளிப் பாடு அரிய சொல் என்பவற்றுள் பின்னதையே கூறினேம் என்கிறார்.

அவ்வாறானால் வெளிப்பட வாராச் சொல்லென அவர் எண்ணுவன வற்றையே கூறுகிறார் என்பது தெளிவாகும்.

**மிகுதி**

மிகுதிப் பொருள் தரும் உறு என்னும் உரிச்சொல் 'உறுபசி' என வள்ளுவத்தில் ஆளப்படுகிறது; 'உறுதுயர்' என்பதும் அது.

உறு என்பது உறுதல், உறுதி, உற்றார், உறவு, உறக்கம், உறிஞ்சுதல் உறுவலி முதலிய சொல்லாக்க அடிச் சொல்லாக அமைந்திருத்தலும் நெருக்கம் கட்டொழுங்கு மிகுதி என்னும் பொருள்களைச் சார்ந்தே நடையிடுதலும் அறியத் தக்கதாம்.

மிகுதிப் பொருள் தரும் 'தவ' என்பது, தவப்பிஞ்சு தவச் சிறிது என மக்கள் வழக்கிலும் இடம் பெற்றுள்ளது.

*இது, தவம், தவசம், தவசி, தவசு எனச் சொல்லாக்கம் பெற்று வழங்குதலும் காணலாம்.*

*நல், நன், நன்று, நனவு, நனி, நனை என்பன வாழ்வியல் வளச் சொற்களேயாம்.*

**மழ, குழ**

*மழலை, மதலை, குழந்தை, குதலை என்னும் சொற்களை எண்ணிய அளவில் இளமை மின்னலிடல் எவர்க்கும் இயற்கை. தொல்காப்பியர், “மழவும் குழவும் இளமைப் பொருள” என்கிறார். உள்ளங்கள் ஒன்றிப் போகிய வகையால் உண்டாகிய பொருள் அல்லவோ இது.*

**அலமரல்**

*அலமரல் என்பது தொல்காப்பியர் நாளில் வெளிப்படப் பொருள் வாராச் சொல்லாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இந்நாளில் ‘அல மருதல்’ மக்கள் வழக்குச் சொல்லாகி விட்டது. அலமருதல் சுழற்சிப் பொருளிலேயே வழங்குகின்றது. தெருமரல் என்பதும் அப்பொருளதே.*

**சீர்த்தி**

*சீர் சீர்மை சீர்த்தி சீரை என்பன வெல்லாம் இலக்கிய வழக்கில் உள்ளவை. முன்னிரண்டு சொற்களும் மக்கள் வழக்கிலும் உள்ளவை. சீர்த்தி என்ன ஆயது? ‘கீர்த்தி’ ஆகிவிட்டது. வேற்றுச் சொல் எனவும் கொள்ளப் பட்டது. சீரை ‘சீலை’யாகிவிட்டது. சீரை என்னும் துலைக் கோல் பொருள் இலக்கிய அளவில் நின்று விட்டது.*

**குரு**

*‘குரு’ என்பது ஒளி என்னும் பொருள் தரும் உரிச்சொல். உள்ளொளி பெருக்குவான் ‘குரு’. குருந்து, குருந்தம், குருமணி, குருதி என்பன ஒளிப்பொருள் - நிறப் பொருள் - தருவன. குருத்து என்பது மக்கள் வழக்குச் சொல். ஒளியுடன் வெளிப்படுவது அது. குருத்தோலையும் குருத்திலையும் மிக வெளிறித் தோன்றுதல் ‘குரு’ வின் பொருள் காட்டுவன. குருந்தத்துக் குருமணி நினைவில் எழலாமே!*

**அதிர்வு**

*“அதிர்வும் விதிர்வும் நடுக்கம் செய்யும்” என்பது அப்படியே நடையில் வழங்கும் உரிச்சொற்களாக உள்ளனவே.*

*“அதிர்ந்து போனார்”*

*“விதிர் விதிர்த்துப் போனேன்”*

*வழக்கிலும், செய்தித் தாள்களிலும் இடம் பெறும் சொற்கள் தாமே இவை. தொல்காப்பியர் நாளில் அருஞ் சொற்களாக இருந்ததால்தானே விளக்கம் தந்தார்.*

### கம்பலை

கண்ணீரும் கம்பலையும் என்பதோர் இணைமொழி. கண்ணீர் விட்டு அழுவதே அது. அழுகையால் உண்டாகும் ஒலி கம்பலை.

"கம்பலை சும்மை கலியே அழுங்கல்
என்றிவை நான்கும் அரவப் பொருள"

என்கிறார் தொல்காப்பியர்.

அரவம் - ஒலி; நீ இருக்கும் அரவமே இல்லையே என்பது வழக்கில் உள்ளது. பாம்புக்கு அரவம் எனப் பெயர் வந்தமை இதனால் அறியலாம்.

'கமலை' கம்பலை என்பதன் தொகுப்பே. அழுங்கல் அழுகையால் அறியலாம். கலித்தல் துள்ளல்; அலை ஒலியால் கலித்தல் விளங்கும். 'சும்' என்பது மூச்சின் ஒலிக்குறிப்பு.

### புலம்பு

ஆற்றுவார் இல்லாமல் புலம்புதல் உண்டு. தானே பேசுதலை 'ஏன் புலம்புகிறாய்?' என்பதும் வழக்கே. "புலம்பே தனிமை" என்பது தொல் காப்பியம். புலம்பல் உரிப்பொருளுக்கு உரிய நெய்தல் நிலப் பெயர் 'புலம்பு' எனப்படும். அதன் தலைவன் புலம்பன்!

### வெம்மை

கோடைக் காலத்தில் தமிழகத்து வாழும் வளமைமிக்கார் கோடைக் கானைலை நாடி உறைவர். கோடைமலை சங்கச் சொன்றோர் பாடு புகழ் பெற்றது. கோடைக்கு அதனை நாடும் இக் காலநிலைபோல், தொல் காப்பியர் காலத்தே வெப்பத்தைத் தேடி உறையும் குளுமை மிக்க நிலையும் இருந்திருக்கும் போலும் அதனால்,

"வெம்மை வேண்டல்"

என ஓர் உரிச் சொல்லையும் பொருளையும் சுட்டுகிறார். நாம் நம் அன்பர்களைக் குளுமையாக வரவேற்க; குளிர்நாட்டார் 'வெம்மையாக வரவேற்றல்' காண்கிறோமே!

### பேம், நாம்

குழந்தைகள் அழுமானால் அச்சம் காட்டி அடக்குதல் இன்றும் சிற்றூர் வழக்கம். அவ்வச்சக் குறிப்பு 'பே பே' என ஒலி எழுப்புதலும் தொண்டையைத் தட்டுதலும் ஆகும்.

'பே' (பேம்) என்னும் குறிப்பு அச்சப் பொருள் தருதல் தொல் காப்பியர் நாளிலேயும் இருந்தது. 'பேய்' என்பதன் மூலம் இப் பேம் ஆகும். 'ஓர் ஆளும் கருப்புடையும் பேய்' என்பார் பாவேந்தர்.

'நா' (நாம்) என்பதும் அச்சப் பொருள் தருதல் 'நாமநீர்' என்னும் கடலலைப்பால் புலப்படும். நாயும் அச்சப் பொருளாதல் அறிந்தது.

### உரும்

உரும் அச்சமாதல் விலங்குகள் உருமுதலால் விளங்கும். உரும் இடியும் ஆகும். உரும் வழியே உண்டாகிய 'உருமி'க் கொட்டு, கேட்ட அளவால் அசைப்பது தெளிவு. இவற்றைத் தொகுத்து

"பேம் நாம் உரும் என வரூஉம் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள"

என்றார். 'உரு' என்பதை மட்டும் தனியே எடுத்து "உரு உட்கு (அச்சம்) ஆகும்" என்றும் கூறினார். கண்டறியாத் தோற்றங்களும் விலங்குகளும் பாம்பு முதலியனவும் அஞ்சச் செய்தலை எண்ணி 'உரு' எனத் தனித்துக் கூறினார். அவர்தம் விழிப்புணர்வு வெளிப்பாடு இன்னவையாம்.

### ஆய்தல்

'ஆய்தம்' என்னும் எழுத்து முப்பாற்புள்ளி வடிவினது; ஆய்தப் புள்ளி என்பதும் அது; அஃகேனம் என்பதும் அதற்கொரு பெயர்; என்பவற்றைக் கூறும் ஆசிரியர், ஆய்தம் என்பதன் பொருள் 'நுணுக்கம்' என்கிறார்.

"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"

என்பது அது.

'ஆய்வுப் பட்டறை' எனப் பெயரிட்டு ஆய்வாளர் பலர் கூடித் திட்டமிட்டுச் செய்து வரும் தொடர் நிகழ்வாகிய அதன் பெயர் தானும் பிழையாயது என்பது அறியாமலே ஆய்வுகள் நிகழ்கின்றன.

'பட்டடை' என்னும் சொல் தொழிலகப் பெயர். 'பட்டடை' என்பது

"சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு"

என வள்ளுவரால் ஆளப்பட்ட சொல் (821) ஆய்தல் என்பது நாட்டுப்புறப் பெருவழக்குச் சொல். கீரை ஆய்தல், கொத்தவரை ஆய்தல் என்று கூறுதல் இந்நாள் வரை மாறியதில்லை.

முற்றல் அழுகல் பூச்சி முதலியவை போக்கித் தக்கவற்றைத் தேர்ந்து கொள்ளுதலே ஆய்தல் பொருளாக அமைகின்றது. ஆய்தலினும் நுணுக்க ஆய்வு 'ஆராய்தல்' (ஆர் ஆய்தல்). ஆய்வும், ஆராய்வும் கொள்ளுவ கொண்டு தள்ளுவ தள்ளும் நுண்ணிய நோக்குடைய சொற்கள்.

ஒன்றின் ஒன்று நுணுகியவையாக, ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் என்பவற்றைச் சுட்டும் இவ்வுரிச் சொல் விளக்கம் அரிய வாழ்வியல் விளக்கமாம்.

*ஓயா உழைப்பாளி, ஓயாப் போராளி, ஓயாச் சிந்தனையாளர், ஓயாப் பொருளீட்டாளர் ஓய்வு கொள்ளும் நிலை என்பது யாது?*

*தம் ஓயாப் பாட்டின் பயன்பாட்டை மீள் பார்வை பார்க்க வேண்டும் அல்லவா!*

*அவ்வாய்வு தானே ஓய்வின்பயன்!*

*ஓய்வு என்பது சிந்தித்தலும் அற்றுப் போன நிலை அன்றே! அச் சும்மா இருக்கும் நிலை கோடியர்க்கு ஒருவர் இருவர் அல்லரோ தேடிக் கண்டு கொள்வது! அச் '**சும்மா**' அரும் பொருளுள் அரும் பொருள். ஓய்வு கொள்வார்க் கெல்லாம் பொதுப் பொருளாகக் கைவர வல்லது ஆய்தலேயாம். ஆதலால் ஓய்தலில் நுண்ணியது ஆய்தல்.*

*ஆய்ந்து கண்ட பொருளை அடக்கிவைத்துக் கொள்வதால் ஆய்ந்து கண்ட பயன் தான் என்ன? அதனால் ஆய்ந்து கண்ட பயன் கருத்துகளைப் பலருக்கும் பல விடத்தும் சென்று கூறுதல் நிழத்தல் ஆகும். குடை நிழற்றல் என்பது நாடு தழுவுதல் போல் இந்நிழத்தல் ஆய்தலினும் நுண்மை யுடையதாம்.*

*இருந்தும் நடந்தும் நுவலும் நிலையும் இயலாமையாயின் அந்நிலை யிலும் தாம் கண்ட அரும்பயன் பொருள் - நுவன்று நுவன்று வந்த பொருள் - பின் வருவோர்க்குக் கிட்டும் வகையால் நுவன்றதை நூலாக்கி (நுவல் > நூல்) வைத்தல் வேண்டும். அக்கொடை உயர்கொடை என்பதை ஔவையார் "தாதா கோடிக்கு ஒருவர்" என்று பாராட்டுகிறார்.*

*ஓய்தல் முதல் சாய்த்தல் (வடித்தல்) வரைப்பட்டவை ஒன்றில் ஒன்று நுண்ணியவை ஆதலின் "உள்ளதன் நுணுக்கம்" என்றார்.*

*எவ்வொரு கடப்பாட்டில் ஊன்றியவரும் தம் ஊன்றுதல் கடனாக உயர்கொடை புரியலாம் என்னும் அரிய வழிகாட்டுதல், உரிச்சொல் வழியாகத் தரப்பெற்றதாம்.*

### வை

*வையே கூர்மை என்பதோர் உரிச்சொல் விளக்கம் (870).*

*வை என்பதற்குக் கூர்மைப் பொருள் எப்படி வாய்த்தது? 'வை' என்னும் நெல்லைப் பார்த்தால் - நெல் நுனியாம் மூக்கைப் பார்த்தால் கூர்மை நன்கு புலப்படும். மழிதகடு போலும் கூர்மையுடையது நெல் மூக்காகும்.*

### வெகுளி

*"கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள"* (855)

*என்பது வண்ணத்தை விலக்கி எண்ணத்தை வெளிப்படுத்தும் உரிச் சொல் விளக்கம்.*

*சினங் கொண்டார் கண்நிறம் என்ன? அவர் முகத்தின் நிறம் என்ன? - இவற்றை நோக்கின் வெகுண்டாரின் முகமும் கண்ணும் காட்டிவிடும்.*

*"முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்*
*காயினும் தான்முந் துறும்"*

*என்பது குறள்.*

*கறுப்பும் சிவப்பும் நிறம் குறித்து வாராவோ எனின்,*

*"நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப"*

*என்று கூறுவார் (856).*

**எறுழ்**

*காளையை அடக்க விரும்புவார் அதன் கொம்பை வளைத்துத் திமிலைப் பற்றித் தாவி ஏறி அடக்குதல் வழக்கம். திமிலுக்கு 'எறுழ்' என்பது பெயர். எறுழ் என்பதன் பொருள் வலிமை என்பதாம். எறுழ் என்னும் உரியொடு எறும்பு, எறும்பி (யானை) என்பவற்றை எண்ணினால் வலிமை விளக்கமாம்.*

*"எறுழ் வலியாகும்"*

*என்பது நூற்பா (871).*

**கலியாணர்**

*உண்ணாட்டு வாணிகரன்றி அயல் நாட்டு வாணிகராகப் பெரும் பொருள் ஈண்டியவர் கலியாணர் எனப்பட்டனர். கலி=மிகுதி; யாணர் = வருவாயினர்.*

*யாணர் என்பதன் பொருள் புதிதுபடல் (புதிய வளம் பெறுதல்) என்பார் தொல்காப்பியர் (862) யாணர் என்பதை யன்றி 'யாண்' என்னும் உரிச் சொல்லைக் காட்டி,*

*"யாணுக் கவினாம்"*

*என்றும் கூறுவார் (864).*

*புதுவருவாயும் கவினும் பெருக்குவதாய திருமணம் 'கலியாணம்' எனவும் வழங்கப்படுதல் விளக்கமாக வில்லையா? வேற்றுச் சொல்லென மயங்காதீர் என்கிறது உரிச் சொற் பொருள்.*

**உணர்தல்**

*உள்ளது உள்ளவாறு உணரும் உணர்ச்சி எவர்க்கு உண்டு என்று வினாவின்,*

*"உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே"*

*என்கிறார் (876).*

சொல்லும் பொருளும் சொல்வோன் குறிப்பும் வெளிப்படப் புலப்பட்டு விடுமா? என வினாவின், உணர்வோர்க்கும் உடனே வெளிப் படப் புலப்படுதல் அரிது. ஆனால் அவரே ஆழ்ந்து நோக்கின் பொருள் புலப்படுதல் இல்லாமல் போகாது என்பதை,

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோன்றா" என்பதனால் தெளிவுபடுத்துகிறார் (877). இது முன்னரும் சுட்டப்பட்டது.

**எச்சம்**

ஒரு தொகையை ஒருவரிடம் தந்து செலவு கணக்குக் கேட்பார் எச்சம் எவ்வளவு என வினாவுவார். எச்சமாவது எஞ்சியிருப்பது. ஒருவர் தம் வாழ்வின்பின் வைப்பாக வைத்துச் செல்லுவன வெல்லாம் எச்சம் என்பதால்,

"தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தால் காணப் படும்"

என்றார் பொய்யாமொழியார். எச்சம் என்பதற்கு மக்கள் எனச் சொல்லை மாற்றினாரும் பொருள் கண்டாரும் உண்டு. ஆனால் தொல்காப்பிய எச்ச இயல் எஞ்சியது என்னும் தெளிபொருள் தந்து விளக்குகிறது.

இவ்வதிகாரத்தில் சொல்லியவைபோகச் சொல்ல வேண்டி நிற்கும் எச்சத்தைச் சொல்வதால் எச்சவியல் எனப்பட்டது. எச்சம் மக்கள் வாழ்வில் மாறாது வழங்கும் விளக்க மிக்க சொல்லாம்.

**நால்வகைச் சொற்கள்**

தமிழ்கூறும் நல்லுலகச் செய்யுள் வழக்கிலே பயிலும் சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என நான்காக எண்ணி இயலைத் தொடங்குகிறார்.

தமிழுலகத்து வழங்கும் வழுவிலாச் சொல் இயற்சொல் என்றும், ஒரு பொருள் குறித்த பல சொல்லும் பலபொருள் குறித்த ஒரு சொல்லுமாகிய தமிழ்ச் சொல் திரிசொல் என்றும், தமிழ் வழங்கும் நிலப் பரப்பின் அப்பாலாய் வழங்கிய சொல் திசைச் சொல் என்றும், வடக்கிருந்து வந்து வழங்கிய வேற்றுச் சொல் வடசொல் என்றும் இலக்கணம் கூறினார்.

தொல்காப்பியர் காலத்திற்கு முற்படவே தமிழர் கடல் வணிகம் செய்தமையும் அயல் வணிகர் இவண் வந்து சென்றமையும் உண்டாகிச் சொற்கலப்பு நேர வாய்ப்பிருந்தும் அச் சொற்களைச் செய்யுட் சொல்லாக ஏற்றார் அல்லர்.

வட சொல்லையும் தமிழியல்புக்கு ஏற்ப அமைத்துக் கொண்டு தமிழ்நெறிச் சொல்லாக வருவதையே வற்புறுத்தி ஏற்றுக் கொண்டார்.

திசைச் சொல்லும் திரிசொல்லும் தமிழியற் சொல் போலவே தமிழ் எழுத்து வடிவு கொண்டிருந்தமையால் அவ்வெழுத்தை விலக்கிச் சொல்லாட்சி செய்யுமாறு சொல்ல அவர்க்கு நேரவில்லை.

ஆதலால் வடசொல் ஒன்று மட்டுமே தமிழுக்கு வேற்றுச் சொல்லாகவும் வேற்றெழுத்துச் சொல்லாகவும் தொல்காப்பியர் நாளில் இருந்தமை விளங்கும். அச்சொல்லை அப்படியே கொள்ளாமல் தமிழ் மரபுக்குத் தகுமாறு கொள்ளவேண்டும் என்னும் உறுதியால்,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (884)

என நெறிகாட்டினார். இவ்வாணை எந்த அயல் மொழிக்கும் உரிய பொது ஆணையெனப் போற்றுதல் மொழிக்காப்பாளர் கட்டாயக் கடமையாம்.

ஓர் அயற்சொல்லைக் கொள்ள வேண்டும் நிலை எப்படி உண்டாகும்?

ஓர் அயற் சொல்லுக்கு ஒத்த அல்லது ஏற்ற சொல், அதனைக் கொள்ள விரும்புவார் மொழியில் இல்லாமல் இருக்க வேண்டும்.

சொல் இல்லை எனினும், ஏற்ற சொல்லை ஆக்கிக் கொள்ள முடியாத அரிய சொல்லாக அஃது இருத்தல் வேண்டும்.

அச்சொல்லை எடுத்துக் கொள்ளவில்லை என்றால், அப்பொருளை விளக்கிக் கூற முடியாத இடர் எடுத்துக் கொள்வார் மொழியில் இருத்தல் வேண்டும்.

இத்தகு நிலைகளிலேயே அயற் செல்லைத் தம் மொழியியற் கேற்பக் கொள்ள வேண்டும் என்பனவே இந் நூற்பாவின் கருத்துகளாம்.

வளமான செல்வமும் வாய்ப்பான வாழ்வும் உடையான் கடன் கொண்டு வாழ விரும்பான். கடன் கொள்ளல் இழிவெனவும் கொள்வான். அந் நிலையில், கடனாளன் என்னும் பெயர் கொள்வதற்காகக் கடன் கொள்ளுதலை அருவறுப்பாகவும் கொள்வான். அப் பொருட்கடன் போன்றதே வேண்டாச் சொற்கடனுமாம்.

பொருட்கடன் வேண்டாது பெற்றுக் கொண்டே போனால், உள்ளவை உரியவை அனைத்தும் அக் கடனாலேயே இழந்து எல்லாமும் இல்லாமல் ஒழிந்து போவான். இந்நிலையை எண்ணுவார் வேண்டாச் சொற்கடனைக் கொள்ளார்.

ஒரு சொல்லைக் கட்டாயம் எடுத்தாகவேண்டும் நிலை இருந் தாலும், **மகப்பேறு வாயாதவர் ஒரு குழந்தையை மகவாகக் கொள்ளும் போது தம் குடும்பத்துக் குழந்தை என்பதை முற்றிலும் காக்கும் வகையால், அக் குழந்தையின் முன்னைத் தொடர்பை**

**விலக்கித் தம் குடும்பத்திற்குத் தகுபெயர் சூட்டித் தம் குடிமை உறுப்பாகவே வளர்த்து வருதல் போல் அயற் சொல்லைத் தம்மொழிக்குத்தகக்** கொண்டு ஆளவேண்டும் இதனைக் கூறுவதே, "எழுத்து ஒரீஇ, எழுத் தொடு புணர்ந்த சொல்லாகும்மே" என்னும் ஆணையாம்.

இவ்வாணையை **மொழிக் காவலர் காலம் காலமாகப் போற்றி னர். ஆனால் நாட்டுக் காவலர் போற்றத் தவறினர்.** அயன்மொழியார் வழியில் சாய்ந்தனர்.

மொழிக் காவலும் நாட்டுக் காவலும் ஒப்பப் போற்றிய மன்னர் காலத்தில் அயலெழுத்துப் புகவில்லை. அவர்கள் நம்பிக்கைக்கு இடமான வட மொழியார், படிப்படியே ஊர்கள் பெயர்கள் முதலியவற்றை மாற்றி வழங்க இடந்தந்தனர். மெய்க் கீர்த்தியில் மிக இடந் தந்தனர். அயன் மொழி வழிபாடு சடங்கு என்பவற்றை ஏற்றனர். அதனால் பொது மக்கள் வாழ்விலும் இந் நிலை புகுந்தது. கட்டிக் காத்த மொழிக் காவலர்களும், அயற் சொற்களேயன்றி அயலெழுத்துகளும் கொள்ளத் தலைப்பட்டனர். பின்னே வந்த அயன் மொழியாகிய ஆங்கிலம் பிரெஞ்சு போர்த்துக் கேசியம் உருது இந்தி ஆகிய மொழிச் சொற்களும் புகுந்து மொழியழிப்புப் பணியை முழு வீச்சாக செய்தன. தமிழால் வாழ்வாரும் இதற்குப் பங்காளர் ஆயினர். "**தொல்காப்பிய ஆணை மீறிய இக்குற்றம் காட்டுத்தீயாகப் பரவி இந்நாளில் மொழியை அழிக்கின்றது**" என்பதை இன்று உணர்ந்தாலும் பயனுண்டு. இல்லையேல் அயலார் கணக்குப்படி தமிழும் விரைவில் '**இருந்த மொழி**' என்னும் நிலையை அடைதல் ஆகவும் கூடும்.

"தொல்காப்பியப் புலவோர் தோன்ற விரித்துரைத்தார்" எனச் சான்றோர் ஒருவர் பெருமிதம் கொண்டார்! **தோன்ற விரித்துரைத்தாலும் போற்றிக் கொள்வார் இல்லாக்கால் என்ன பயனாம்?**

உரைநடைக்கு இல்லாத சில இடர்கள் செய்யுள் நடைக்கு உண்டு. அதற்கென அமையும் கட்டொழுங்குகள் சில; சுவை, நயம், ஒலி, பொருள் என்பவை கருதி வழங்கு சொற்கள் சற்றே மாற்றமாய் அமைத்துப் போற்றுதற்கு இடனாகும். அதனால் சில சொற்களில் மெல்லெழுத்து வல்லெழுத்தாகவும், வல்லெழுத்து மெல்லெழுத்தாகவும், சில எழுத்து களை விரிக்கவும், சில எழுத்துகளைத் தொகுக்கவும், சில எழுத்துகளை நீட்டவும், சில எழுத்துகளைக் குறுக்கவும் ஆகும். ஆனால் இம்மாற்றங் களால் சொல்லின் பொருள் மாற்றமாவது இல்லை என்றும் செய்யுள் நயம் மிகும் என்றும் அறிய வேண்டும் என்று இலக்கியக் கல்விக்கு நெறிகாட்டு கிறார் (886).

பாடலுக்குப் பொருள்கண்டு சுவைக்கத் தக்க வகையைப் 'பொருள்கோள்' எனக் கூறி அவ் விளக்கமும் தருகிறார் (887).

இவை **பயில்வார்க்குப் பயின்று சிறந்தார் காட்டும் வழியாகத் திகழ்கின்றன.**

ஆக்கிவைத்த உணவை உண்ண அறிந்தான் ஆக்கும் வகையையும் அறிந்துகொள்ளல் இரட்டை நலமாதல் போல் நலம் செய்வன இத்தகு துய்ப்பு நெறி காட்டலாகும்.

### ஈ, தா, கொடு

'ஈ' என்றோ 'தா' என்றோ 'கொடு' என்றோ கூறுவதில் பொதுவாக நோக்குவார்க்கு வேறுபாடு இல்லை. ஆனால் நுணுகி நோக்கின் வேறுபாடு உண்டு. இதனை விளக்குகிறார் தொல்காப்பியர்.

கொடுப்பவனினும் அவனிடம் ஒன்றைப் பெற வருவோன் தாழ்வுடையன் எனின், 'ஈ' என்று கூறுவான்.

இருவரும் ஒப்புடையவர் எனின் பெறுவோன் 'தா' என்று கூறுவான்.

கொடுப்போனினும் பெறுவோன் உயர்ந்தவன் எனின் 'கொடு' என்று கூறுவான் என்று அக்கால மக்கள் வழக்கினை உரைக்கிறார்.

இரப்பவர் அனைவரும் இழிந்தாரும் அல்லர் கொடுப்பவர் அனைவரும் உயர்ந்தாரும் அல்லர். இரு நிலைகளிலும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் உண்டு. உயர்வு தாழ்வு என்பவை வயது அறிவு பண்பு உதவி நன்றிக் கடன் தொண்டு ஆளுரிமை என்பவற்றால் ஆவனவேயாம். **பிறவிக் குல வேற்றுமை இல்லாததும் கருதப்படாததுமாம் காலநிலை தொல் காப்பியர் கால நிலையாம்.**

### வாராதனவும் பேசாதனவும்

இந்தச் சாலை சென்னையில் இருந்து வருகிறது. கன்னி வரை செல்கிறது. என்று கூறுதல் உண்டு. இச் சாலை எங்கே போகிறது என வினாவுதலும் உண்டு.

எறும்பு அணில் மலை முதலியவை பேசுவதாகக் கதைகள் உண்டு. இம்முறை உலகளாவியதாகவும் பெருவரவினதாகவும் உள. குழந்தையர் கல்விக்கு ஏற்றது இம் முறை எனப் போற்றவும் படுகிறது இதனைத் தொல்காப்பியர்,

> "வாரா மரபின வரக்கூ றுதலும்
> என்னா மரபின எனக்கூ றுதலும்
> அன்னவை எல்லாம் அவற்றவற் றியல்பான்
> இன்ன என்னும் குறிப்புரை யாகும்" (905)

என்கிறார் (என்னா = என்று சொல்லாத).

## அடுக்கு

அடுக்கு என்றாலே ஒன்றற்கு மேற்பட்டது என்பது பொருள். அடுக்குச் சட்டி, அடுக்குப் பானை என்பவை அன்றி அடுக்கு மல்லி அடுக்குப் பாறை என இயற்கை அடுக்கும் உண்டு.

பாடலில் இசை கருதி அடுக்கு வரும் எனின், நான்கு முறை அடுக்கலாம் என்றும், விரைவு கருதிய அடுக்கு மும்முறை வரலாம் என்றும் ஓர் எல்லை வகுத்துக் காட்டுகிறார் (906, 907). எந்த ஒன்றிலும் அளவீடு இருத்தல் வேண்டும் என்னும் ஆசிரியர் மொழிக் காவல் நெறி இஃதாம்.

## ஒரு பொருள் இருசொல்

உயர்தலும் ஓங்குதலும் ஒன்று தானே! மீயும் மிசையும் ஒன்று தானே! ஒருபொருள் தரும் இரு சொற்களை இணைத்தல் ஆகுமா எனின் ஆகுமென மக்கள் வழக்குக் கொண்டு தொல்காப்பியர் சொல்கிறார். அது,

"ஒரு பொருள் இரு சொல் பிரிவில வரையார்" என்பது. வரையார் = நீக்கார், விலக்கார்.

## புதுவரவு

பழைய சொற்கள் காலவெள்ளத்தில் அழிந்துபடுவது போலப் புதுப்புதுச் சொற்கள் தோற்றமும் ஆகின்றனவே எனின் வாழும் மொழி என்பதன் அடையாளம் அதுவே என்பர் மொழியறிஞர். இதனைக் "கடிசொல் இல்லைக் காலத்துப் படினே" (935) என்கிறார். கடிசொல் லாவது விலக்கும் சொல் நாட்காட்டி, எழுதுகோல், செய்தித்தாள் என்பன வெல்லாம் காலம் தந்த புதுவரவுகள் அல்லவா! மொழிவளம் செய்யும் சொற்களின் பெருக்கமும் தொடர் வரவுமே மொழிவளம் ஆதலால், அவற்றைப் போற்றிக் காக்க ஏவினார்.

**- இரா. இளங்குமரன்**

# இளம்பூரணர்

**உரையாசிரியர்**

உரையாசிரியர் என்ற அளவானே, 'இளம்பூரணர்' என அறியப் பெறும் பெருமையுடையவர் இவர். தொல்காப்பியத்திற்கு முதற்கண் உரை கண்டவராதலுடன், முதன்மையான உரை கண்டவரும் இவரே. மற்றொரு சிறப்பு இவருரையே நூன் முழுமைக்கும் கிடைத்துள்ளமை. உரை யாசிரியர் புலமை நலத்தையும், பேரருள் பேருள்ளத்தையும், உரையெழுது தற்கே தம் தவவாழ்வைச் செலவிட்ட தமிழ்ப்பற்றையும் எத்துணை விரித்துச் சொல்லினும் குறைவுடையதாகவே அமையும். அத்தகும் உயர்வற உயர்ந்த உயர்வர் இவர்.

"சென்னபட்டணத்தில் இற்றைக்கு ஐம்பதறுபது வருடத்தின் முன்னிருந்த **வரதப்ப முதலியாரின்** பின், எழுத்துஞ் சொல்லுமேயன்றித் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை உரை உதாரணங்களோடு பாடங் கேட்டவர்கள் மிக அருமை. முற்றாய் இல்லை என்றே சொல்லலாம். வரதப்ப முதலியார் காலத்திலும் தொல்காப்பியம் கற்றவர்கள் அருமை என்பது, அவர் தந்தையார் **வேங்கடாசலம் முதலியார்** அதனைப் பாடங்கேட்கும் விருப்பமுடையராயின பொழுது பறையூரில் **திருவாரூர் வடுகநாத தேசிகர்** ஒருவரே தொல்காப்பியம் அறிந்தவர் இருக்கிறார் என்று கேள்வியுற்றுத் தமது ஊரைவிட்டு அதிகத் திரவியச் செலவோடு அவ்விடம் போய் இரண்டு வருடமிருந்து பாடங்கேட்டு வந்தமையாலும் வரதப்ப முதலியார் ஒருவரே பின்பு அதனைத் தந்தைபாற் கேட்டறிந்தவர் என்பதனாலும் அது காரணமாக அவருக்குத் தொல்காப்பியம் வரதப்ப முதலியார் என்று பெயர் வந்தமையாலும் பின்பு அவர் காலத்திருந்த வித்துவான்கள் தமக்கு யாதாயினும் இலக்கணச் சமுச்சயம் நிகழ்ந்துழி அவரையே வினவி நிவாரணஞ் செய்தமையாலும் நிச்சயிக்கலாம்." - என்பது தொல். பொருள். நச்சினார்க்கினியப் பதிப்பில் (1885) சி. வை. தாமோதரம்பிள்ளை எழுதியுள்ள பதிப்புரை. பார்த்திப ஆண்டு ஆவணித் திங்கள் வந்த இப்பதிப்பில் தொல்காப்பியப் பின்னான்கியல் உரைகளே உள. இவை நச்சினார்க்கினியம் அன்று, பேராசிரியம் எனச் செந்தமிழ்த் தொகுதி 1. பகுதி 1; தொகுதி 2 பகுதி 11 ஆகியவற்றிலும், தொல். செய்யுளியல்

நச்சினார்க்கினியர் உரையுடன் வெளிவந்த தமிழ்ச் சங்கப் பதிப்பிலும் பெரும்புலவர் இரா. இராகவ ஐயங்கார் எழுதினார்.

தொல்காப்பியம் வரதப்பர் வரலாறும், தாமோதரனாரின் நச்சினார்க்கினியர் உரைப்பதிப்புக் குறிப்பும் மேல் ஆய்வும் நமக்கு என்ன சொல்கின்றன? இளம்பூரணரும் பிறரும் உரை வரைந்து நூலைப் பொருளுடன் காத்த பின்னரும் அஃதறிஞரும் அறியா நிலையில் இருந்தது என்றால், இளம்பூரணர் உரை வரைதலை மேற்கொள்ளா திருந்திருந்தால் தொல்காப்பியத்தின் நிலைமை என்ன ஆகியிருக்கும், என்பதே!

தொல். பொருள். இளம்பூரணத்தை 1920இல் வெளியிட்ட கா. நமச்சிவாய முதலியார் 1924இல் தொல். பொருள். மூலத்தை முதற்கண் வெளியிட்டுள்ளார், உரையொடு கூடிய மூலத்தில் இருந்து தனியே மூலத்தைப் பெயர்த்துப் பதிப்பித்த பதிப்பே மூலப்பதிப்பு என்பதை எண்ணிப் பார்த்தால், நாம் இளம்பூரணர்க்குப் பட்டுள்ள நன்றிக் கடனுக்கு அளவுண்டோ? இவர்தம் உரைச்சுவடி இல்லாக்கால், மற்றையர் உரைவரையும் வாய்ப்பும் ஏற்பட்டிராதே! தொல்காப்பியம் நமக்குக் கிட்டியமை இளம்பூரணர் உரைகொண்ட நலத்தாலேயே என்பதை எண்ணும் போதே இவர் தொண்டு மலை விளக்கென இலங்குவதாம்.

**இளம்பூரணர்**

இளம்பூரணர் என்னும் பெயரால், "இவர் இளமையிலேயே முழுதறிவு பெற்றுச் சிறந்தமை கண்ட சான்றோர் இச்சிறப்புப் பெயரால் இவரை வழங்கினர்" என்பது விளங்கும். இஃதவர் இயற்பெயராக இருத்தற்கு இயலாது. கண்ணகியார் 'சிறுமுதுக்குறைவி' எனப்பட்டதும், நம்மாழ்வார் 'சிறுப்பெரியார்' எனப்பட்டதும் அறிவார் இதனைத் தெளிவார்.

'இளங்கோ வேந்தர்' 'இளங்கோவடிகளா'ராகப் பெயர் பெற்றமை போல் இளம்பூரணரும் தம் துறவினால் 'இளம்பூரணவடிகளார்' எனப் பட்டார் என்பது விளங்குகின்றது.

இவர் துறவோர் என்பதை நமக்கு வெளிப்படக் கூறுபவர் நன்னூல் முதலுரையாசிரியர் மயிலைநாதர். அவர் எச்சங்களின் வகையை எடுத்துக் காட்டுங்கால்(359) இளம்பூரணர் உரையை உரைத்து "**இஃது ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி இளம்பூரண ரென்னும் ஏதமில் மாதவர் ஓதியவுரையென் றுணர்க**" என்கிறார்.

இதில் இளம்பூரணரை 'ஏதமில் மாதவர்' என்ற செய்தி, இவர் துறவோர் என்பதைக் காட்டும் புறச்சான்றாம். அகச்சான்று உண்டோ எனின் உண்டு என்பது மறுமொழியாம்.

> "கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
> முற்படக் கிளந்த எழுதிணை என்ப"

என்னும் நூற்பா அகத்திணையின் முதற்கண் உள்ளது. இதில் அகத்திணை ஏழும் முறை பெற நிற்கும் வகையைக் கூறுகிறார் ஆசிரியர். இதற்கு உரைவிளக்கம் வரையும் இளம்பூரணர், "இந்நூலகத்து ஒருவனும் ஒருத்தியும் நுகரும் காமத்திற்குக் குலனும் குணனும் செல்வமும் ஒழுக்கமும் இளமையும் அன்பும் ஒருங்கு உளவழி இன்பம் உளதாம் எனவும், கைக்கிளை ஒருதலை வேட்கை எனவும், பெருந்திணை ஒவ்வாக் கூட்ட மாய் இன்பம் பயத்தல் அரிது எனவும் கூறுதலான் **இந்நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துணர வைத்தவாறு அறிந்து கொள்க**" என்கிறார்.

'காமம் நீத்தபால்', 'கட்டில் நீத்தபால்', 'தாபத நிலை', 'தபுதாரநிலை', 'சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயன்' எனவரும் இடங்களில் இத்தகு கருத்து உரைக்கப் பெறின் பருந்தும் நிழலுமென நூலாசிரியர் சொல்லொடு பொருள் பொருந்திச் செல்வதாகக் கொள்ள வாய்க்கும். இவ்விடத்தில் அக்குறிப்பு இல்லையாகவும் 'இந்நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துணர வைத்தவாறு' என்பது இளம்பூரணர் உட்கோளேயாம் என்பதை வெளிப்படுத்தும்.

இவரையன்றி இப்பகுதிக்கு உரைகண்ட பழைய உரையாசிரியர் நச்சினார்க்கினியரே. அவர் தாமும் இவர்க்குப் பின் உரை கண்டவர். இவரை ஏற்றும் மறுத்தும் உரைப்பவர். அவர் பொருளதிகாரத்தில், "இல்லறம் உணர்த்திப் பின் துறவறமும் சிறுபான்மை கூறுப" என்றும், "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும் என்னும் சூத்திரத்தான் இல்லறமும் துறவறமும் கூறினார். இந்நிலையானும் பிறவாற்றானும் வீட்டிற்குக் காரணங் கூறினார்" என்றாரே யன்றிக் காமத்துப் பயனின்மை உய்த்துணரவைத்தாரெனக் கூறினாரல்லர். அவ்வாறு ஆசிரியர் கூறக் கருதியிருந்தால் உய்த்துணர்வில் லாமலே வெளிப்பட விளங்க உரைப்பார் என்பது இளம்பூரணரோ அறியார்? **இவர் கொண்டிருந்த துறவுநிலை உந்துதலால் வந்த மொழி ஈதெனக் கொள்ளல் தகும்**. "இனி மாறுகொளக் கூறல்," என்பதற்குத் "**தவம் நன்று என்றவன் தான்தவம் தீதென்று கூறல்**" என்பதும் (பொ.654) குறிப்பாகலாம். இவர் துறவர் என்பது 'இளம்பூரண அடிகள்' என்னும் அடியார்க்கு நல்லார் குறிப்பாலும் (சிலப்.11 : 18 -20) புலப்படும்.

மயிலைநாதர் வரைந்த தொடரிலே இளம்பூரணர்க்குரிய தனிப் பெருஞ் சிறப்பொன்றைச் சுட்டுதலறிந்தோம். அஃது, 'உளங்கூர் கேள்வி' என்பது. "செவி வாயாக நெஞ்சு களனாகப்" பாடம் கேட்பதும் கேட்ட வற்றை உளத்தமைத்துக் கொள்வதும் பண்டைப் பயின்முறை. அம்முறை யில் பல்கால் பலரிடைச் சென்று கேட்டுக் கருவூலமெனத் தேக்கி வைத்துக் கொண்ட முழுதறிவாளர் இளம்பூரணர் என்பதை நாம் அறிய வைக்கிறது.

இதற்கு அகச்சான்று என்னை எனின், பலப்பலவாம்; முதல் உரையாசிரிய ராகிய இவர் பலரிடைக் கேட்ட உரைகளைக் கொண்டே, '**ஒரு சார் ஆசிரியர் உரைப்பர்**' என்றும், '**உரையன் றென்பார்**' என்றும், '**ஒருவன் சொல்லுவது**' என்றும் கூறிச் செல்கிறார் என்பது கொள்ளக் கிடக்கின்றது என்க.

இளம்பூரணர் தொல்காப்பியர்மேல் கொண்டிருந்த பேரன்பும், பெருமதிப்பும் அவரைத் தொல்காப்பியரெனவே மதிக்கத் தூண்டுகின்ற தாம். அகத்திணை ஏழாதல் போலப் புறத்திணையும் ஏழே என்பதை வலியுறுத்திக் கூறும் இளம்பூரணர், புறப்பொருள் பன்னிரண்டு என்பாரை மறுத்து அவ்வாறு கொள்வது, "**முனைவன் நூலிற்கும் கலி முதலாகிய சான்றோர் செய்யுட்கும் உயர்ந்தோர் வழக்கிற்கும் பொருந்தாது என்க**" என்கிறார். ஆசிரியர் தொல்காப்பியனார், "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதனூல் ஆகும்" என்றதை உளங் கூர்ந்து, அதனை அவர்க்கே ஆக்கி வழிபட்ட சான்றாண்மை இளம்பூரணர் வழியே புலப்படுதல் கண்டு கொள்க.

"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்"

என்பதன் விளக்கத்தில் (எழுத்.33), "இசை நூலாசிரியரும் முதனூலாசிரியர் தாமே யெனினும், 'மொழிப' என வேறொருவர் போலக் கூறியது, அதுவும் வேறொரு நூலாகச் செய்யப்படும் நிலைமை நோக்கிப் போலும்" என்று வரைகின்றார். தொல்காப்பியரை இளம்பூரணர் முதனூலாசிரியராகக் கொண்டார் என்பது இதனால் விளங்கும்.

முன்னிலையாக்கல் எனவரும் பொருளதிகார நூற்பா விளக்கத்தில் (98), "உலகத்துள்ளார் இலக்கணமெல்லாம் உரைக்கின்றாராகலின் இவ்வாசிரியர் உரைக்கின்றவாற்றான் நிகழ்தல் பெரும்பான்மை" எனத் தொடர்கின்றார். தொல்காப்பியர் பற்றி இளம்பூரணர் குறித்த மதிப்பீடு எத்தகு பெருமைக்குரியது!

பொருளதிகாரத் தொடக்கத்திலே, "பிற நூலாசிரியர் விரித்துக் கூறினாற்போல அறமும் பொருளும் விரித்துக் கூறாதது என்னையோ எனின், உலகத்தில் நூல் செய்வார் செய்கின்றது அறிவிலாதாரை அறிவு கொளுத்த வேண்டியன்றே; யாதானும் ஒரு நூல் விரித்தோதிய பொருளைத் தாமும் விரித்து ஓதுவாராயின் ஓதுகின்றதனாற் பயன் இன்றாமாதலால் முதனூலாசிரியர் விரித்துக் கூறின பொருளைத் தொகுத்துக் கூறலும் தொகுத்துக் கூறின பொருளை விரித்துக் கூறலும் நூல் செய்வார் செய்யும் மரபு என்றுணர்க. அஃதேல் இந்நூலகத்து விரித்துக் கூறிய பொருள் யாதெனின் காமப்பகுதியும் வீரப்பகுதியும் என்க. இன்பம்

காரணமாகப் பொருள் தேடும் ஆகலானும் பொருளானே அறஞ் செய்யும் ஆகலானும் இன்பமும் பொருளும் ஏற்றம் என ஓதினார் என உணர்க," என்று வரையும் எழுத்தால் தொல்காப்பிய நூலோட்ட நுணுக்கத்தை நுவல்கிறார்.

உழிஞைத் துறையை, "அதுவே தானும் இருநால் வகைத்தே" என்னும் ஆசிரியர் (பொ.67) அடுத்த நூற்பாவில் அத்துறைகளைக் கூறி "நாலிரு வகைத்தே" (பொ.68) என்றும் கூறுகிறார். இதனைக் கூறியது கூறல் என எவரும் எண்ணி விடுவரோ என்னும் எண்ணம் "கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை" இளம்பூரணர்க்குத் தோன்றிற்றுப் போலும். அதனால், "பதினெட்டு இருபத்தொன்பது என்பார் மதம் விலக்கியமை தோன்றப் பெயர்த்துந் தொகை கூறினார். இது கூறியது கூறலன்று; தொகை" என்றார்.

'ஆசிரியன் ஓதினான்' என்பது போலக் கூறுதலே பண்டை உரை யாசிரியர் மரபு (எழுத்.469). "குறிப்பு என்றார்", "கூறினார்" (பொருள்.104) என இளம்பூரணத்துள் வருதல் பதிப்பாசிரியர் கருத்துப்போலும்!

மிகைபடக் கூறல் என்னும் நூற்குற்றம் விளக்கும் இளம்பூரணர், "மிகைபடக் கூறலாவது அதிகாரப் பொருளன்றிப் பிறபொருளும் கூறுதல். அஃதாவது தமிழிலக்கணஞ் சொல்லுவான் எடுத்துக்கொண்டான் வடமொழி இலக்கணமும் கூறல்" என்கிறார். இக்குற்றம் செய்யாத சீருரை யாளர் செந்தமிழ் இளம்பூரணர். இக்குற்றம் செய்தார், 'இவர் வடமொழி யறியார்' என்பர். எழுத்து. 42, 45, 75, சொல். 443, பொருள். 30, 151, 656 ஆகிய நூற்பாக்களின் உரைகளைக் காண்போர் இவர் வடமொழி அறியார் எனக் கருதார்.

இளம்பூரணர் சமணர் என்றும் சைவர் என்றும் கூறுவாருளர்.

படிமையோன் என்பதற்குத் 'தவவொழுக்கத்தையுடையோன்' என உரைவரைந்ததையும் (பாயிரம்) படிமை என்பது சமண சமயத் துறவிகளின் தவவொழுக்கத்தைக் குறிக்கும் சொல் என்பதையும் குறித்துச் சமணர் என்பர். படிமை என்பது கட்டமை ஒழுக்கத்தைச் சுட்டுவது என்பதைப் பதிற்றுப்பத்துள் கண்டு கொள்க (74). படிவம் என்பதும் அப்பாடல் ஆட்சியில் உண்டு என்பதும் அறிக.

"னகரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான் பின்வைக்கப்பட்டது" (எழுத்.1) என்று இவர் எழுதுவது கொண்டு சமணர் என்பர். முற்பட வைக்கப்பட்ட அகரத்தின் சிறப்புக் கூறியவர் பிற்பட வைக்கப்பட்ட னகரத்தின் சிறப்புக் கூறுவாராய் இது கூறினர். முற்படக் கூறலும் சிறப்பே; பிற்படக் கூறலும் சிறப்பே என்பது நூன்முறை. அம்முறைக்கேற்ப னகரச் சிறப்பாகக் கூற இதனைக் கூறினாரேயன்றி 'மகளிர் வீடு பேறு எய்தார்' என்னும் குறிப்பு அதில் இல்லை எனக் கொள்க.

இனிச் சமணர் அல்லர் என்பதற்கு, "நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும், கலந்த மயக்கம் உலகம்" எனவரும் தொல்காப்பிய (பொ.635) நூற்பாவில் விசும்பும் ஒரு பூதமெனக் கொண்டதைக் காட்டுவர். நூற்பாவிற் கிடந்தாங்கு உரை விரிக்கும் மரபுடைய இளம்பூரணரை அதனைக் காட்டி ஒரு சார்பிற் கூட்டல் சாலாது.

"குமர கோட்டம் குமரக்கோட்டம், பிரமகோட்டம் பிரமக் கோட்டம்" என்பவர் "அருக கோட்டம் அருகக் கோட்டம்" எனக் காட்டாமையால் சமணச் சார்பினர் அல்லர் என்பர். காட்டாமையால் அச்சார்பினர் அல்லர் என்பது ஏற்காமை போல, காட்டியமையால் அச் சார்பினர் என்பதும் ஆகாதாம். எடுத்துக்கொண்ட பொருளுக்கு எடுத்துக்காட்டுப் பொருந்துவதா என்பதே உரை நோக்கு.

குமரகோட்டம் காட்டியதற்கு முற்றொடரிலேயே 'ஆசீவகப்பள்ளி' என்பதைக் காட்டுகிறாரே; அவர் அருகக் கோட்டம் காட்டாமையால் சமணர் அல்லர் என்று கொண்டால், ஆசீவகப் பள்ளியை முற்படக் காட்டல் கொண்டு சமணர் எனக் கொள்ள வேண்டுமன்றோ! ஆகலின் பொருளில என்க.

இனி, 'இளம்பூரணர்' என்பது முருகன் பெயர்களுள் ஒன்றாகலின் சைவர் என்பர். 'இளையாய்' என்பதிலும் 'இளம்' என்பதிலும் கண்ட சொல்லொப்புமையன்றிப் பொருளொப்புமை காட்ட முடியாக் குறிப்பு ஈதெனல் தெளிவு.

"ஆறு சூடி நீறு பூசி
ஏறும் ஏறும் இறைவனைக்
கூறு நெஞ்சே குறையிலை நினக்கே"

என்பதை 'இவர் திருவுள்ளத் தூறிய பெரும் பொருட் சிறுபாடல் எனக் கூறிச் சைவராக்கினால், அடுத்தாற் போலவே (தொ.பொ. 359),

"போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதர்ச் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே"

என்பது கொண்டு சமணரெனக் கொண்டாடல் தவிர்க்க முடியாததாகி விடும்.

"தன்தோள் நான்கின்" எனவரும் பாடலை இளம்பூரணர் மேற்கோள் காட்டுகிறார் (தொல். பொருள். 50). இதனைச் சேனாவரையர் தம் நூலில் முதற்காப்புப் பாடலாக அமைத்துக் கொள்கிறார். இதனால் இவர் சிவச் சார்பினர் எனின், சேனாவரையர் போலவே தாமும் காப்புச் செய்யுளாக வைத்திருப்பார். **சேனாவரையர் சிவநெறியர் என்பதற்கு இது சான்றாமேயன்றி இளம்பூரணரைச் சாராதாம் என்க.**

“இசை திரிந்திசைப்பினும்” என்னும் பொருளியல் முதல் நூற்பா உரையில் மேற்கோளாகக் “கார்விரிகொன்றை” என்னும் அகநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடலைக் காட்டும் இளம்பூரணர், ‘சிவானுபூதியிற் பேருலகம் தங்கிற்று’ என்று உரையெழுதுவது கொண்டு இவரைச் சிவநெறியர் என உறுதிப்படுத்துவர். அஃதாயின், அப்பாடல் தொடரொடு தொடர்பிலாத அச்செறிப்பும், ‘தாவில்தாள் நிழல்’ என்பதன் பொருள் விடுப்பும் கொண்டு ஐயுறவு கொள்ளற்கு இடமுண்டு! பாடல் தொடரையே இசைத்துத் தொடர்புறுத்தும் அவ்வுரையில் அஃதொன்று மட்டும் ஒட்டா ஒட்டாக இருத்தலும், தாவில்தாள் நிழல் விடுபாடும் பிறிதொருவர் கைச்சரக்கோ என எண்ணவே வைக்கின்றது.

இளம்பூரணர் வள்ளுவர் வாய்மையில் நெஞ்சம் பறிகொடுத்த தோன்றல் என்பது இவர் எடுத்துக்காட்டும் மேற்கோள் விளக்கப் பெருக்கத்தானே நன்கு புலப்படும். அதிகாரங்கள் பலவற்றை அடுக்கிக் கூறுதலாலும் விளங்கும். இத்தகையர் வள்ளுவரைப் போலச் சமயக் கணக்கர் மதிவழிச் செல்லாத சமனிலைச் சால்பினர் என்பதே தெளிவாம். சமயச் சார்பினர் வெளிப்படக் காட்டும் வலிந்த பொருளாட்சி, மேற்கோள் ஆயவை இவரிடத்துக் காணற்கில்லாமல் எச்சமயமும் ஒப்பநினைத்துப் போற்றும் ஒரு பெருந்தகைமையே காணப்படுகின்றது என்க.

தொல்காப்பிய உரையாசிரியர் **இளம்பூரணரும்** திருக்குறள் உரையாசிரியர் **மணக்குடவரும்** ஒருவரே என்பர். ஒருவர் ஒரு நூற்கு ஒரு பெயரும், மற்றொரு நூற்கு ஒரு பெயரும் கொண்டு உரை வரைந்தனர் என்றல் மரபு நிலைப்படாது. ஒருவர், இருவர், மூவர் பெயர் கொண் டெழுதிப் பிழைக்கும் ‘வணிக நோக்கர்’ அச்சடிப்புக் காலத்தே காண லாமே யன்றிப் பயில்வார் பயன்பாடு என்னும் ஒன்றே குறியாக் கொண்ட ஏட்டுக்காலத்துத் தூயரை அக்கூட்டிற் சேர்க்க வேண்டுவதில்லையாம்.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் பல நூல்களுக்கு உரை கண்டவர். அவர் தம் பன்னூல் உரையொப்பைச் சுட்டிச் செல்கிறார். அத்தகு குறிப்பொன்றும் இளம்பூரணர் உரையில் இன்மை, இக்கருத்தின் அகச்சான்றின்மைச் சான்றே. ஒரு தனிப்பாடல் செய்தி கொண்டு இம் முடிவுக்கு வருதல் சாலாது. ‘மணக் குடி புரியான்’ என்பது ‘மணக்குடவர்’ பெயராகலாம். ஆனால் ‘மணக்குடி புரியராம் அவரே இளம்பூரணர்’ என்பதற்கு அப்பாடல் சான்றாகாது. மற்றும் உரையாசிரியராகிய இளம்பூரண அடிகள் எனக் கூறும் அடியார்க்கு நல்லார் மணக்குட வராகிய இளம்பூரண அடிகள் என்று கூறத் தவறார். ஏனெனில் உரையாசிரி யர் என்னும் பொதுப்பெயரினும் அவர் குடிப்பெயர் விளக்கமானதன்றோ!

தொல்காப்பிய இளம்பூரணருரை முற்றாகக் கிடைத்துளது. அதில் அச்சிறப்புப் பாயிரம் இல்லை. திருக்குறள் மணக்குடவருரையும் முற்றாக

வாய்த்துளது. அதிலும் அச்சிறப்புப் பாயிரம் இல்லை. சிதைவுற்ற நூலாயின் தனித்துக் கிடைக்க - பிறர் உரைக்கண் கண்டெடுக்க - முறை யுண்டு. அன்னவகை எதுவும் இல்லாச் சிறப்புப் பாயிரங் கொண்டு முடிவுக்கு வருதல் தகுவது அன்று.

இளம்பூரணர் திருக்குறள் அதிகாரத் தலைப்புக்குத் தரும் பொருளுரை மணக்குடவ ருரையொடும் பொருந்தி நிற்பதைக் காட்டி ஈருரையும் அவருரையே என்பர். ஈருரையும் பொருந்தாவுரையும் உண்மை யால் வேறுரையாம் என்பார்க்கு மறுமொழி இல்லாமை கண்கூடு.

துறவாவது தன்னுடைய பொருளைப் பற்றறத் துறத்தல் என்பது தொல்காப்பியம் (பொ.75).

துறவாவது ஒருவன் தவம் பண்ணாநின்ற காலத்து யாதாயினும் ஒரு தொடர்ப்பாடு உளதாயினும் அதனைப் பற்றறத் துறத்தல் என்பது திருக்குறள் மணக்குடவருரை (அதி.துறவு).

ஒப்பியவுரையை அப்படி அப்படியே ஏற்றுக்கொண்டு போற்றுவ தும், ஒப்பா இடத்து மட்டும் தம் உரையும் விளக்கமும் தருதலும் உரை மரபு ஆகலின் இளம்பூரணத்தைக் கற்ற மணக்குடவர் தம் உரையில் அவ்வுரையைப் போற்றிக் கொண்டார் என்பது பொருந்துவதாம்.

இளம்பூரணர் உரையில் காணும் எடுத்துக்காட்டுகளைத் தொகை யிட்டுக் காண்பவர் திருக்குறள் மணக்குடவர் உரையை இவருரையெனக் கொள்ளார் என்பது தெளிவு.

இளம்பூரணர் உரை வழியே நன்னூலார் பலப்பல நூற்பாக்களை இயற்றியுள்ளார். ஆகுபெயர் என்ற அளவானே குறித்தார் தொல்காப் பியர்(சொ.110). அதனை "ஆகுபெயர் என்ற பொருண்மை என்னையெனின் ஒன்றன்பெயர் ஒன்றற்காய் நிற்றல் என்றவாறு" என்றார் இளம்பூரணர். அதனையே நன்னூலார் "ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத் தொன்முறை யுரைப்பன ஆகு பெயரே" என நூற்பாவாக்கிக் கொண்டார் (பெயர். 33). இவ்வாறு இளம்பூரணக் கொடை மிகக் கொண்டு விளங்கியது நன்னூலாகலின், அந்நூலார் காலத்துக்கு முன்னவர் இளம்பூரணராவர். நன்னூலாரைப் புரந்த சீயகங்கன் காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டு என்பர். எனவே அக்காலத்திற்கு முற்பட்டவர் இளம்பூரணர் என்க. புறப்பொருள் வெண்பா மாலையில் இருந்து இளம்பூரணர் மேற்கோள் காட்டியுள்ளார். ஆகலின் அம்மாலை தோன்றிய 9ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் ஆகிறார் இளம்பூரணர். மேலும் பரணியாற் கொண்டான், (எழுத். 125, 248) என வருவது கொண்டு கூடல் சங்கமத்துப் பரணி கொண்ட வீரராசேந்திரன் காலத்திற்குப் பிற்பட்டவர் எனத் தேர்ந்து 11ஆம் நூற்றாண்டு என்பர்.

இளம்பூரணர் சோணாட்டைச் சேர்ந்தவர் என்றும், வேளாண் குடியினர் என்றும் கூறுவர். இவர் சோணாட்டைச் சொல்வதுடன் மலாடு

*மழநாடு முதலிய நாடுகளையும் சேரமான் மலையமான் பாண்டியன் சேரன் செங்குட்டுவன் முதலிய வேந்தர்களையும் குறிக்கிறார். உறையூரைக் கூறும் இவர் கருவூர், மருவூர், குழிப்பாடி, பொதியில் என்பவற்றையும் குறிக்கிறார். இவர் பார்வை தமிழகப் பார்வையாக இருந்தது மிகத் தெளிவாக உள்ளது.*

*கைவாய்க்கால் என்பது சோணாட்டு வழக்கு; இன்றும் வழங்குவது என்பர். அது பாண்டிநாட்டும் இன்றும் வழக்கில் உள்ளதே. 'கோடின்று செவியின்று' என்பது கொண்டு இந்நாளிலும் அங்கு அவ்வழக் குண்மையைக் குறிப்பர். ஆனால் அதனைக் கூறுமிடத்தேயே (சொல். 216)*

*'கோடின்று செவியின்று'*

*'கோடில செவியில'*

*'கோடுடைய செவியுடைய'*

*'கோடுடைத்து செவியுடைத்து'*

*என உண்மையும் இன்மையும் அடுக்கிக் கூறுவர். இவரை உண்மைப் பாற்படுத்துவதும், இன்மைப்பாற்படுத்துவதும் வேண்டிற்றன்று.* **தமிழ்நாட்டு வழக்கு முழுதுற அறிந்த இவர்க்கு எவ்வெடுத்துக்காட்டு முந்து நிற்கிறதோ அதனைக் கூறுவர் எனக் கொள்ளலாம்.**

*'நும் நாடு யாது என்றால்* **தமிழ்நாடு** *என்றல்' எனச் செப்பும் வினாவும் வழுவாது வருவதற்குக் கூறுவதும் (சொல். 13) 'தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்' என்பதும் (சொல். 33) 'தமிழ்நாட்டு மூவரும் வந்தார்' என்பதும் (சொ. 250) 'புலிவிற் கெண்டை' என்பதும் (சொல். 411) இளம் பூரணரின் தமிழ் நில முழுதுறு பார்வையையே சுட்டுகின்றன. மேலும், "நாயை ஞமலி என்ப பூழி நாட்டார் என்றக்கால் அச்சொல் எல்லா நாட்டாரும் பட்டாங் குணரார்; நாய் என்பதனையாயின் எவ்வெத் திசை நாட்டாரும் உணர்ப என்பது", என்று கூறும் இவர் உரையால் (சொல். 392) நாடு தழுவிப் பட்டாங்குணரச் செய்தலே இவர் பெரும் பார்வை என்க.*

### இளம்பூரணர் உரைநயங்கள்

*அருஞ்சொல்லுக்குப் பொருள் கூறுதல் :*

*'குயின் என்பது மேகம்' (எ. 336), 'மின் என்பது ஓர் தொழிலுமுண்டு பொருளுமுண்டு' (எ. 346), 'அழனென்பது பிணம்' (எ. 355) 'மூங்கா என்பது கீரி' (பொ. 550) நவ்வி என்பது புள்ளிமான் (பொ. 556) 'கராகமென்பது கரடி' (பொ. 56) இவ்வாறு அருஞ்சொற்பொருள் வேண்டுமிடத்துரைக்கின்றார்.*

**கோயில்** *என்பதா?* **கோவில்** *என்பதா? எனின் இரண்டும் சரியே என்பார் உளர். அவற்றுள் 'கோயில்' என்பதே சரியானது என்பதை 'இல்லொடு கிளப்பின் இயற்கையாகும்' என்னும் நூற்பாவில் (எ. 294) தெளிவாக்குகிறார்.*

**'கஃறு' என்பது உருவு. 'சுஃறு' என்பது இசை** என்பதைத் தேர்ந்து சொல்கிறார் (எ.40).

**'தபு'** என்பது படுத்துச் சொல்ல 'நீசா' எனத் தன்வினையாம் எனவும், அதனை எடுத்துச் சொல்ல 'நீ ஒன்றனைச் சாவி' எனப் பிறவினையாம் எனவும் அசையழுத்தம் (accent) காட்டி விளக்குகிறார் (எ.76).

அஃறிணை என்பது அல்திணை. அல்லதும் அதுவே, திணையும் அதுவே எனப் பிரித்துக் காட்டி விளக்குகிறார் (சொ. 2).

**சேரி** என்பது பலர் இருப்பதுமன். ஆயினும் ஆண்டுச் சில பார்ப்பனக்குடி உளவேல் அதனைப் பார்ப்பனச்சேரி என்பது; இஃது உயர்திணைக்கண் தலைமை பற்றி வந்தது என்கிறார் (சொ. 49).

"பல **பொத்தகம்** கிடந்த வழி ஒருவன் ஏவலாளனைப் பார்த்து, பொத்தகங் கொண்டு வா' என்றால், அவன் ஒரு பொத்தகங் கொண்டு வந்த விடத்துத் தான் கருதிய பொத்தகம் அன்றெனில் 'மற்றையது கொணா' என்னும்; என்றக்கால் இக் கொணர்ந்ததனை ஒழிக்கும் சொல் இக் கொணர்ந்த பொத்தகம் சுட்டிற்றாகலான் கொணர்ந்ததனை ஒழிக்குஞ் சுட்டு நிலை அதனை ஒழித்து ஒழிந்ததென்று அவ்வினத் தல்லது பிறிதொன்று குறித்தது கொல்லோ எனிற் குறியா; மற்று அப் பொத்த கத்துள் ஒன்றே பின்னும் குறித்தது எனப்படும்" என்பதன் வழியாக ஓரிலக்கணம் கூறுவதுடன் புத்தகம் என்பதன் செவ்விய வடிவத்தையும் நிலைப்படுத்துகிறார்.

சங்கத்தார் நாளில் 'உளறுதல்' என்பது கூந்தலை உலர்த்துதல் பொருள் தந்தது. அப்பொருளை இளம்பூரணர் காலத்தில் 'உலறுதல்' என்பது தரலாயிற்று என்பதை, "உலற்றத் திறமின்றிப் பயின்றார் ஒரு சான்றார் மயிர் நீட்டி உலறி நின்றாரைக் கண்டு ஒருவன், எம்பெருமான் உலறி நின்றீரால் என்றக்கால் வாளாதே உலறினேன் என்னற்க, இது காரணத்தால் உலறினேன் என்க. இது தனக்கு உற்றதுரைத்தது" என்பதன் வழியாக அறிய வைக்கிறார் (சொ. 56).

பிறரொடு தொடர்பு இல்லானைக் 'கெழீஇயிலி' என்பதும் (சொ. 57) தொழில் செய்யும் ஏவலாட்டியைத் 'தொழீஇ' என்பதும் (சொ.122) அரிய சொல்லாட்சியாம்.

**'அண்ணாத்தேரி'** என்பதை இவர் எடுத்துக்காட்டுவதைத் திருவண்ணாமலையகத்து ஏரி எனக் கருத்துரைத்தார் உளர். அது **'வானம் பார்த்த ஏரி'** என்பதாம். ஆறு, கால் ஆயவற்றின் நீர் வரத்தின்றி வானம் பார்த்து இருக்கும் ஏரியே அப்பெயரியதாம் (எ. 134). 'அண்ணாத்தல்' 'அண்ணாந்து நீர் குடித்தல்' என்னும் வழக்குகளைக் கொண்டு அறிக. "அண்ணாத்தல் செய்யா தளறு" என்றார் வள்ளுவர். **திட்டாத்துக்குளம்** என்று பிறர் கூறுவது **மேடுபட்ட குளம்** என்றாதல் கருதுக.

"*காமப்புணர்ச்சி எனினும், இயற்கைப்புணர்ச்சி எனினும், முன்னுறு புணர்ச்சி எனினும் தெய்வப்புணர்ச்சி எனினும் ஒக்குமென*" ஒரு பொருட் பலபெயரைச் சுட்டி ஐயமகற்றுகிறார் (களவியல் முன்னுரை).

**செங்கடுமொழி** என்பதைக் "*கொடிய கடுமொழியேயன்றி மனத்தினால் இனியளாகிக் கூறும் கடுமொழி*" என நயமுற விளக்குகிறார் (பொ. 112).

ஒத்ததெனப் பொதுவில் தோன்றும் இரண்டன் நுண்ணிய வேறுபாட்டையும் அரிதாக விளக்கிச் செல்கிறார்.

"*மடம் என்பதற்கும் பேதைமை என்பதற்கும் வேறுபாடு என்னை எனின் மடம் என்பது பொருண்மை அறியாது திரியக்கோடல்;* **பேதைமை** *என்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாக் கோடல்*" (பொ. 248).

'*ஐவகை யடியும்*' (செய். 48) என்பது ஆசிரியப்பாவிற்குரிய இலக்கண முடைத்தாயினும் ஓசையின்மையான் ஆசிரியம் எனப்படாது நூலெனப் படும் என்று கொள்க (பொ. 391).

"**கலத்தல**ாவது முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினாற் போறல். **மயக்கம**ாவது பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றாதல் போறல்" என்பவற்றைக் காண்க.

எடுத்துக்கொண்ட ஒன்றை உவமையால் விளக்கும் நயத்தையும் அரிதாக மேற்கொள்கிறார் இளம்பூரணர்.

சிறப்புப் பாயிரத்தில் "*பாயிரமென்பது புறவுரை. அறநூற்குப் புறவுரையேல் அது கேட்டு என்னை பயனெனின் கற்று வல்ல கணவற்குக் கற்புடையாள் போல இன்றியமையாச் சிறப்பிற்றாயும் திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயின் மாடம் போல அலங்காரமாதற் சிறப்பிற்றாயும் வருதலானும் பாயிரம் கேளாதே நூல் கேட்குமேயெனில் குறிச்சி புக்கமான்போல மாணாக்கன் இடர்ப்படுமாகலானும் பாயிரம் கேட்டல் பயனுடைத்தாயிற்று*" என ஓரிடத்தே மூன்றுவமைகள் வைத்து விளக்குகிறார்.

இகர உகரங்களுக்கும் குற்றியலிகர குற்றியலுகரங்களுக்கும் ஒலியளவையால் வேறுபாடு உண்டாயினும் உயிர் என்னும் பெயரீட்டில் வேறுபாடு இல்லை என்பாராய், "*சந்தனக்கோல் குறுகினவிடத்துப் பிரப்பங்கோல் ஆகாது. அதுபோல இகர உகரங்கள் குறுகினவிடத்தும் அவை உயிர் ஆகற்பாலன*" என்கிறார் (எ. 2).

உயிர்மெய் ஒலிக்கும் வகையை விளக்கும்போது "*மெய்யும் உயிரும் முன்னும் பின்னும் பெற நிற்கும் என்றமையால் அக்கூட்டம்* **பாலும் நீரும் போல உடன் கலந்ததன்றி விரல் நுனிகள் தலைப்பெய்தாற்போல வேறு நின்று கலந்தன அல்ல** *என்பது பெறுதும்*" என்கிறார் (எ. 18).

'இதழ் போறலான் வாய் இதழ் எனப்பட்டது' என வாய்க்கு இதழ் எனப் பெயர் வந்த பொருத்தத்தை உவமையால் விளக்குகிறார் (எ.83).

கலிப்பாவிற்குரிய துள்ளலோசை பற்றிக் கூறும்போது, "துள்ளுதலாவது ஒழுகுநடைத்தன்றி இடையிடையுயர்ந்து வருதல்; கன்று துள்ளிற்றென்றாற்போலக் கொள்க" என்கிறார் (பொ.387). இவ்வாறே பிறவும் வரும் உவமைகளும் உள.

உவமையின் பயன், "புலன் அல்லாதன புலனாதலும், அலங்காரமாகிக் கேட்டார்க்கின்பம் பயத்தலும்", என்று உவமையியல் முகப்பில் கூறும் அவர்தம் உவமைகளால் தம் கருத்தை மெய்ப்பிக்கிறார் என்க.

**உரைவளம்**

இளம்பூரணர் உரைவளம், வேண்டுமிடத்து வேண்டுமளவான் விளங்கி நலம் சேர்க்கின்றது.

எழுத்தை எட்டுவகையாலும் எட்டிறந்த பலவகையாலும் உணர்த்தினார் என அவற்றைக் குறிப்பதும் (எ. முகப்பு) செப்புவகை ஆறு என்பதும், வினாவகை ஐந்து என்பதும் (சொ.13) தகுதி, வழக்கு ஆகியவற்றைப் பற்றிப் பகுத்துரைப்பதும் (சொ. 17) முதலியவை நன்னூலார் முதலிய பின்னூலோர்க்கு உதவிய உரைவளங்களாம்.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்னும் நூற்பாவுக்கு (சொ. 152) "பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் ஆகிய எல்லாச் சொல்லும் பொருள் குறியாது நில்லா" என உரை கூறுகின்றார். 'பொருள் குறித்து நிற்கும்' என்னாமல், **பொருள் குறியாது நில்லா** என்று ஈரெதிர் மறைகளால் உடன் பாட்டுக் கருத்தை வலியுறுத்துவது, "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே; அவ்வாறு குறியாதது சொல்லன்று" என்பதை உறுதிபடக் கூறுவதற்கேயாம்.

முக்காலங்களையும் சுட்டும் இளம்பூரணர், "இறப்பாவது தொழிலது கழிவு; நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாத நிலைமை; எதிர்வாவது தொழில் பிறவாமை" என்கிறார். எளிமையும் அருமையும் மிக்க குறிப்புகள் இவை.

கைக்கிளை 'சிறுமை உறவு' என்று கூறவேண்டுமெனக் கருதுகிறார் உரையாசிரியர். அதனை, "கை என்பது சிறுமை பற்றி வரும்; அது தத்தம் குறிப்பிற் பொருள் செய்வதோர் இடைச்சொல்; கிளை என்பது உறவு; பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்றவாறு, கைக்குடை, கையேடு, கைவாள், கைஒலியல், கைவாய்க்கால் எனப் பெருமையில்லாதவற்றை வழங்குபவாகலின்" என விளக்கியமைகிறார் (பொ. 1). கை சிறுமைப் பொருட்டாதலை நிறுவுதற்கு நடைமுறைச் சான்றுகள் பலவற்றை அடுக்குகிறாரே! பொருள் விளக்கம் செய்தலிலும் அவர்க்கிருந்த பற்றுதலின் விளைவு தானே இது!

*பிரிவு என்னும் உரிப்பொருளைக் கூறும் தொல்காப்பியர், ‘கொண்டு தலைக் கழிதலும், பிரிந்தவண் இரங்கலும்’ என இரண்டாகப் பகுத்துக் கூறுகின்றார். இதனை, “கொண்டுதலைக் கழிதலாவது உடன் கொண்டு பெயர்தல். அது, நிலம் பெயர்தலின் புணர்தலின் அடங்காமை யானும், உடன் கொண்டு பெயர்தலின் பிரிதலின் அடங்காமையானும் வேறு ஓதப்பட்டது” என நூலாசிரியர் கருத்தைத் தெளிவு செய்கிறார் (பொ.17).*

*“இளமை தீர் திறம்” என ஆசிரியர் கூறினாராயினும் அதனை, “இளமை தீர் திறமாவது; இளமை நீங்கிய திறத்தின்கண் நிகழ்வது. அது மூவகைப்படும்: தலைமகன் முதியனாகித் தலைமகள் இளையளாதலும், தலைமகள் முதியளாகித் தலைமகன் இளையனாதலும், இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கிய வழி அறத்தின்மேல் மனம் நிகழ்தலின்றிக் காமத்தின் மேல் மனம் நிகழ்தலும் என” என்கிறார். “எண்ணி உரைகாரர் ஈவார்” என்பதை மெய்ப்பிப்பவை இத்தகையவை (பொ.54). “கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்” என்பதன் விளக்கமும் காண்க (பொ.87).*

*‘ஏறிய மடற்றிறம்’ முதலாக ஆசிரியர் சொல்லும் உடன்பாடுகளை ‘ஏறா மடற்றிறம்’ முதலாக எதிர்மறையாக்கிக் கொண்டு இளம்பூரணர் கூறுவது வியப்பு மிக்கது (பொ.55).*

*“மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்” என்பதற்கு, “குற்றமற்ற செயலையுடைய மழையும் பனியும் வெயிலுமாகிய மூவகைக் காலத்தினையும் நெறியினாற் பொறுத்த அறிவன் பக்கமும்” எனப் பொருள் வரைந்து, “இறந்த காலம் முதலாகிய மூன்று காலத்தினையும் நெறியினால் தோற்றிய அறிவன் பக்கம் என்றாலோ எனின், அது முழுதுணர்ந்தோர்க்கல்லது புலப்படாமையின் அது பொருளன் றென்க” என விளக்குகிறார். தாம் சுட்டிய பொருளே பொருளெனப் பன்னிருபடலச் சான்று காட்டுகிறார். “அறிவன் என்றது கணியனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றுதலாவது பகலும் இரவும் இடை விடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளும் தூமமும் மீன் வீழ்வும் கோள் நிலையும் மழை நிலையும் பிறவும் பார்த்துப் பயன்கூறல்” என மேல் விளக்கம் செய்கிறார் (பொ.74). எத்தகு நாகரிகமாக மறுக்கிறார்.* **அவருரை முதலுரையாகலின் மறுப் புரை மிகக் கூறவேண்டும் நிலையில்லை. எனினும் பல்வேறு பாடங் களும் உரைகளும் பற்பலரிடத்துக் கேட்டிருக்கக்கூடும். அவற்றை உட்கொண்டு ஒரு விளக்கம் கூறுகிறார்.**

*“பன்னிரு படலத்துள் கரந்தைக்கண் புண்ணொடு வருதல் முதலாக வேறுபடச் சிலதுறைகள் கூறினாராதலின், புண்படுதல் மாற்றோர் செய்த மறத்துறையாகலின் அஃது இவர்க்கு மாறாகக் கூறலும் மயங்கக் கூறலு மாம்.*

ஏனையவும் இவ்வாறு மயங்கக் கூறலும் குன்றக் கூறலும் மிகைபடக் கூறலும் ஆயவாறு எடுத்துக்காட்டின் பெருகுமாதலின் உய்த்துணர்ந்து கண்டு கொள்க" என அமைதி காட்டுகின்றார். ஆகலின் **மறுப்புக் கூறுதலில் இளம்பூரணர் பெரிதும் மனங் கொண்டிலர்** என்பதும், கற்பார் தம் 'நுண்மாண் நுழைபுலத்தால்' கண்டுகொள்வார் என அமைந்தார் என்பதும் விளங்கும்.

தலைவிக்குக் களவில் கூற்று நிகழுமிடங்கள் என்பது குறிக்கும் துறைகளுள் ஒன்று 'கட்டுரை இன்மை' என்பது. அதற்குச் சான்று வேண்டுமோ? 'கட்டுரை இன்மைக்குக் கூற்று நிகழாது' என்பதும் கூறுகின்றார். எவரேனும் அதற்குச் சான்று இல்லையே என ஐயுறுவரோ என்பதை உன்னித்த குறிப்பு இது (பொ.109).

'சிற்றாறு பாய்ந்தாடும்' எனப் பன்னீரடிப் பஃறொடை வெண்பா ஒன்றைக் காட்டுகிறார் இளம்பூரணர் (பொ.123). அதில், "இது பன்னிரண் டடியான் பெருவல்லத்தைக் கூற வந்த இன்னிசைப் பஃறொடை வெண்பா" என்று குறிப்பு வரைகிறார். 'பெருவல்லம்' என்ற பெயர் இல்லாக்கால் இப் பாடற் பொருள் எவ்வாற்றானும் காணற்கரிது. ஆதலால் 'திறவு' வேண் டுங்கால் தந்து செல்லும் 'திறம்' இளம்பூரணர் உடைமையாக இருந்துளது எனலாம்.

அவரே, 'சூத்திரத்தாற் பொருள் விளங்கும்' எனவும் (பொ. 585) விடுத்துச் செல்கிறார்.

### சில வழக்காறுகள்

இளம்பூரணர் காலத்து வழக்காறுகள் சில அவர் உரை வழியே அறிய வாய்க்கின்றன.

***எட்டி, காவிதி*** என்னும் பட்டங்கள் வழங்குவதுபோல் **'நம்பி'** என்னும் பட்டம் வழங்குதல் (எ.155), மகப்பாலுக்காக ஆடு வளர்த்தல் (எ. 220), புளிச்சோறு ஆக்குதல் (எ. 247), பேயோட்டுதல் (சொ. 312), வெள்ளாடை மகளிர் உடுத்தல் (சொ. 412), தைந்நீராடல் (சொ. 50), குறித்ததொரு நாளில் கறந்தபால் முழுவதையும் அறத்திற்கென ஆக்குதல் (சொ. 50), ஆடு மாடுகள் தினவுதீரத் தேய்த்துக் கொள்ள 'ஆதீண்டு குற்றி' நடுதல் (சொ. 50), சேவற் சண்டை நடத்துதல் (சொ. 61), **ஒற்றிக்கலம்** (ஆவணம்) எழுதுதல் (சொ. 76), நெல்லடித்துத் தூற்றும் களத்திற்குத் **'தட்டுப்புடை'** எனப்பெயர் வழங்குதல் (சொ. 77), வெற்றிலையும் பூஞ்செடியும் நடுதல் (சொ. 110), பொழுதின் ஒரு பகுதியைக் **கூறு** எனக் கூறுதல் (பொ.9) முதலிய வழக்காறுகள் ஆங்காங்கு அறிய வருகின்றன.

### பல்துறைப் புலமை

நிறுத்தளத்தல், பெய்தளத்தல், நீட்டியளத்தல், தெறித்தளத்தல் தேங்கமுகந்தளத்தல், சாத்தியளத்தல், எண்ணியளத்தல் என எழுவகை

*அளவைகளைக் கூறுவதும் (எ. 7), "கடுவும் கைபிழி யெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல ஆயின" என்றும், "எருப்பெய்து இளங்களை கட்டு நீர் கால் யாத்தமையால் பைங்கூழ் நல்ல" என்றும் கூறுவதும் (சொ. 21, 22) "விலங்கும் மரனும் புள்ளும் உள்ள நோய் உற்றாற்கு மனக்குறைக்கு மறுதலை மாற்றம் கூறுவன போலும் குறிப்பின" எனலும் (சொ. 416) வாளானும் தோளானும் வேறலன்றி, "சொல்லான் வேறலும் பாட்டான் வேறலும் கூத்தான் வேறலும் சூதான் வேறலும் தகர்ப்போர் பூழ்ப்போர் என்பனவற்றான் வேறலும்" எனப் போர்வகை அடுக்குதலும் (பொ. 74) (அடியர்) "அகத்திணைக்கு உரியரல்லரோ எனின், அகத்திணை யாவன அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும், இன்பத்தின் வழாமலும், இயலல் வேண்டும்; அவையெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்குச் செய்தல் அரிதாகலானும், அவர் நாணுக் குறைபாடுடைய ராகலானும், குறிப்பறியாது வேட்கை வழியே சாரக்கருதுவராகலானும், இன்பம் இனிது நடத்துவார் பிறரேவல் செய்யாதார்" என்பதனானும் "இவர் புறப் பொருட் குரியராயினார் என்க" என்பதனானும் பிறவற்றாலும் இளம்பூரணர் பல்துறைப் புலமை நன்கறிய வருகின்றது.*

*"சாத்தன் கையெழுதுமாறு வல்லன்; அதனால் தன் ஆசிரியன் உவக்கும்; தந்தை உவக்கும்" என்பதால் உரையாசிரியர்* **கையெழுத்தழகை எவ்வளவு விரும்பினார்** *என்பது விளங்கும் (சொ. 40).*

**"மனைவியைக் காதலிக்கும்; தாயை உவக்கும்"** *என்பவற்றால் வாழ்வியல் நுணுக்கத்தை எவ்வளவு தேர்ந்திருந்தார் இளம்பூரணர் என்பது விளங்கும் (சொ. 72).*

*மணந்தபின்னரும் மனைவியைக் காதலிக்கலாம் எனவும், ஒருத்தியை மணந்த பின்னரும் தன் தாயை உவந்து பாராட்டலாம் எனவும் கூறல் அத்தகைய தூய துறவர் இல்லறம் நல்லறமாகத் திகழ வழிகாட்டவும் வல்லார் என்பதை மெய்ப்பிப்பதாம்.*

**- இரா. இளங்குமரன்**

# சொல்லதிகாரம்

## இளம்பூரணருரை

## 1
## கிளவியாக்கம்

### திணையிரண்டு எனல்

1. உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே

என்பது சூத்திரம்.

இவ்வதிகாரம், சொல்லிலக்கணம் உணர்த்தினமை காரணத்தாற் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து.

சொல் என்பது, எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுத்தும் ஓசை. அதிகாரம் என்பது முறைமை.

மற்று, அச் சொல் எனை வகையான் உணர்த்தினானோ வெனின், எட்டு வகைப்பட்ட இலக்கணத்தான் உணர்த்தினான் என்க. அவையாவன: இரண்டு திணை வகுத்து, அத்திணைக்கண் ஐந்து பால் வகுத்து, எழுவகை வழு வகுத்து, எட்டு வேற்றுமை வகுத்து, அறுவகை ஒட்டு வகுத்து, மூன்று இடம் வகுத்து, மூன்று காலம் வகுத்து, இரண்டு இடத்தான் ஆராய்தல்.

இரண்டு திணையாவன: உயர்திணையும், அஃறிணையும்.

ஐந்து பாலாவன: ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்பன.

எழுவகை வழுவாவன: திணைவழு, பால்வழு, இடவழு, காலவழு, செப்புவழு, வினாவழு, மரபுவழு என்பன.

எட்டு வேற்றுமையாவன: பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என்பன.

அறுவகை ஒட்டாவன: வேற்றுமைத்தொகை, உவமத் தொகை, வினையின்றொகை, பண்பின்றொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை என்பன.

மூன்று இடமாவன - தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன.

மூன்று காலமாவன: இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன.

இரண்டு இடமாவன: வழக்கிடம், செய்யுளிடம் என்பன.

இனி, இவ்வதிகாரத்து முதற்கண்ணோத்து என்ன பெயர்த்தோ வெனின், கிளவிகள் பொருண்மே லாமாறு உணர்த்தினமையின் கிளவி யாக்கம் என்னும் பெயர்த்து; என்னை? ஒருவன் மேலாமாறிது, ஒருத்தி மேலாமாறிது, பலர்மேலாமாறிது, ஒன்றன் மேலாமாறிது, பலவற்றின் மேலாமாறிது, வழுவாமாறிது, வழுவமைதியாமாறிது எனப் பொருள் கண்மேல் ஆமாறு உணர்த்தினமையின் இப்பெயர்த் தாயிற்று.

இவ்வோத்தின் தலைக்கட்கிடந்த சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், சொல்லும் பொருளும் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** ''உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டு என்பது'' - உயர் திணை யென்று சொல்லுவர் ஆசிரியர் மக்களென்று சுட்டப்படும் பொருளை யென்றவாறு; அஃறிணை யென்மனார் அவரல பிற என்பது - அஃறிணை யென்று சொல்லுவர் ஆசிரியர் மக்களல்லாத பிறபொருளை யென்றவாறு; ''ஆயிருதிணையின் இசைக்குமன் சொல்லே'' என்பது அவ்விரு திணையையும் இசைக்குஞ் சொல் என்றவாறு.

எனவே, உயர்திணைச் சொல்லும், உயர்திணைப் பொருளும், அஃறிணைச் சொல்லும், அஃறிணைப் பொருளும் எனச் சொல்லும் பொருளும் அடங்கின.

உலகத்தின் மக்கள் என்ற பொருளை உயர்திணை யென்றது கூறுபாடின்மையின். அஃறிணை கூறுபாடுடைமையின், 'அஃறிணை யென்மனார் அவரல' என்னாது, 'பிற' என்றான்; அவை, உயிருடை யனவும் உயிரில்லனவும் என இரண்டு கூற்றன என்றற்கு அவற்றது கூறுபாடெல்லாம் அறிந்துகொள்க.

மற்று, உயர் என்னுஞ் சொல் முன்னர்த் திணை என்னுஞ் சொல் வந்து இயைந்தவாறியாதோவெனின், ஒரு சொல் முன் ஒரு சொல் வருங்கால், தொகைநிலை வகையான் வருதலும், எண்ணுநிலை வகையான் வருதலும், பயனிலை வகையான் வருதலும் என மூன்று வகையான் அடங்கும். அவற்றுள், தொகைநிலை வகையான் வந்தது யானைக்கோடு என்பது. எண்ணு நிலை வகையான் வந்தது நிலனும் நீரும் என்பது. பயனிலை வகையான் வந்தது சாத்தன் உண்டான் என்பது. அவற்றுள் இஃது உயர்திணையென இறந்தகாலந்தொக்க வினைத்தொகை.

இனி, என்மனார் என்பது, என்ப என்னும் முற்றுச் சொல்லைக் *''குறைக்கும்வழிக் குறைத்தல்'' (தொல். சொல். எச்ச. 7) என்பதனாற் பகரங் குறைத்து, 'விரிக்கும்வழி விரித்தல்' (தொல். சொல். எச்ச. 7) என்பதனான் மன்னும் ஆரும் என்பன இரண்டிடைச்சொற் பெய்து விரித்தான். என்மனார் ஆசிரியர் என்று முடியற்பாற்று, முற்றுச்சொல் எச்சப்பெயர் கொண்டு முடியும் என்பவாகலின். இது செய்யுணோக்கித் தொகுத்துக் கூறினான் என்பது.

இனி, மக்கட் சுட்டே யென்பது, மக்கள் என்று வரைந்து சுட்டு தற்குக் காரணமாகிய தன்மை யென்னும் ஒருவன். இனி, மக்கள் எனினுஞ் சுட்டு எனினும் அவரையே சொல்லியவா றென்ப ஒரு திறத்தார். சுட்டென்பது கருத்து; அக்கருதற்பா டுடைமையிற் சுட்டெனவும்படும் மக்கள் என்பது. இனிச் சுட்டே யென்புழி ஏகாரம் ஈற்றசை ஏகாரம்.

அஃறிணை யென்பது அல்திணை யென்றவாறு. அல்லதும் அதுவே, திணையும் அதுவே. மேற்சொல்லப்பட்ட உயர்திணை யல்லாத திணை அஃறிணை யெனக் கொள்க. ஈண்டும் என்மனார் என்பதற்கு மேற் சொல்லியவாறே சொல்லுக.

இனி, அவர் என்னுஞ் சொல்லின் முன்னர் அல்ல என்னுஞ் சொல் வந்து இயைந்தவா றியாதோவெனின், அவரினல்ல என்பான் அவரல்ல என்றான், ஐந்தாம் வேற்றுமைப் பொருளென்பது. இனி, அல்ல பிற என்பது, அல்லவும் பிறவும் என உம்மைத் தொகை யென்றலும் ஒன்று.

இனி, அவ் வுயர்திணை யல்லன வெல்லாம் அவ் வுயர்திணை போல ஓரினத்த அல்ல; தத்தம் வகையான் வேறுபட்டன உயிருடையன வும் உயிரில்லனவும் என்பது. ஏகாரம் ஈற்றசை யேகாரம்.

ஆயிரு திணையி னிசைக்கும் என்புழி, ஆயிரு திணையையும் என ஐகார வேற்றுமை விரித்துரைக்க. இன் சாரியை. இசைக்கும் என்பது செய்யும் என்னும் பெயரெச்சம். மன் என்பது இடைச்சொல். ஏகாரம் ஈற்றசை யேகாரம். (1)

* **(பாடம்)** குறுக்கும் வழிக் குறுக்கல்.

## உயர்திணைப்பால் மூன்று என்றல்

2. ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் லுயர்திணை யவ்வே.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் திணைகூறு செய்தான் அத்திணையுட் பால்கூறு செய்தல் நுதலிற்று.

**உரை:** ஆடூஉவினை யறியுஞ் சொல்லும், மகடூஉவினை யறியுஞ் சொல்லும் பல்லோரை அறியுஞ் சொல்லொடு பொருந்தி அம் முப் பாலை யறிவிக்குஞ் சொல் உயர்திணை யுடையன எ-று.

ஆடூஉ என்றது ஆண்மகனை; மகடூஉ என்றது பெண்மகளை; பல்லோர் என்றது அவர் தொக்க பன்மையை.

இனி, அப்பொருள் மூன்று கூறுபடவே, அவற்றை யுணர்த்துஞ் சொல் மூன்று கூறுபடும் என்பது. இது தந்திரவுத்தி வகைமை கூறல். (2)

## அஃறிணைப்பால் இரண்டு எனல்

3. ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று
ஆயிரு பாற்சொ லஃறிணை யவ்வே.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் அஃறிணை யென்றான், அதனை யினைத்துப் பால்படும் என்று அது படும் பாலை விரித்துணர்த்து தல் நுதலிற்று.

**உரை:** ஒன்று, பல என்னும் இருபாலையும் உணர்த்துஞ் சொல் அஃறிணையுடையன எ-று. (3)

## பேடியும் தெய்வமும் உயர்திணையுள் அடங்குமாறு

4. பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென வறியுமந் தந்தமக் கிலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஐயமறுத்தல் நுதலிற்று.

**உரை**: பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின் என்பதனை மொழிமாற்றி, உயர்திணை மருங்கின் பெண்மை சுட்டிய எனக் கொள்க. தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும் என்பது - தெய்வத்தைச் சுட்டிய பெயர்ப் பொருளும் என்றவாறு; இனிப் பெயர்நிலைக் கிளவியென்பதற்கு ஒருவன் சொல்லுவது: பெயர் என்பதனை ஆகுபெயராற் பொருளாக்கி, பொருண்மேல் நிலை பெற்ற கிளவி யென்னும்; இவ்வென அறியும் அந்தந் தமக்கிலவே என்பது - தம்மை வேறுபாலறிய நிற்கும் ஈற்றெழுத் தினை யில என்றவாறு; 'உயர்திணை மருங்கிற் பால்பிரிந்து இசைக்கும்' என்பது - உயர்திணை மருங்கின் முப்பாலினையும் புலப்படுக்கும் எழுத் தினைத் தமக்கு ஈறாக இசைக்கும் எ-று.

**(வ-று.)** பேடி வந்தான், பேடி வந்தாள், பேடியர் வந்தார் எனவும்; வாசுதேவன் வந்தான், திருவினாள் வந்தாள், முப்பத்து மூவரும் வந்தார் எனவும் வரும்.

'இவ்வென அறியும் அந்தந் தமக்கிலவே' என்னும் இலேசினான், நரகன் வந்தான், நரகி வந்தாள், நரகர் வந்தார் என்பன கொள்க. (4)

### உயர்திணை ஆண்பால் ஈறு

5. னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்.

*இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஆடூஉ அறிதற்கு ஈற்றெழுத்து உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *னஃகானாகிய யொற்று ஆடூஉவினை யறிவார்க்குக் கருவியாஞ் சொல் எ-று.*

**(வ-று.)** *உண்டான் என்னும் இறந்தகாலத்தானும், உண்ணா நின்றான் என்னும் நிகழ்காலத்தானும், உண்பான் என்னும் எதிர்காலத் தானும்; கரியன், செய்யன் என்னும் வினைக் குறிப்பினானும், இங்ஙனம் னகர விறுதியாய படர்க்கை வினைமுற்றுச் சொல்லான் உயர்திணை யாண்பால் உணர்த்தப்படும்.*

*'படர்க்கையிடம்' என்பது முன்னர் வினையியலுட் பெறுதும். 'வினை'யென்பது, 'இருதிணை மருங்கின் ஐம்பா லறிய' (தொல். சொல். கிளவி. 10) என்னும் சூத்திரத்தாற் பெறுதும். உண்டான் என்ற விடத்து நான்கெழுத்து உளவேயாயினும், னகரத்தை ஆடூஉவறியுஞ் சொல் லென்றார், அதன்கட் டலைமை நோக்கி. ஏகாரம் பிரிநிலை. (5)*

### உயர்திணைப் பெண்பால் ஈறு

6. ளஃகா னொற்றே மகடூஉ வறிசொல்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மகடூஉ அறிதற்கு ஈற்றெழுத்து உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *ளஃகானாகிய வொற்று மகடூஉவினை யறிவார்க்குக் கருவியாஞ் சொல், எ-று.*

**(வ-று.)** *உண்டாள், உண்ணாநின்றாள், உண்பாள் எனவும்; கரியள், செய்யள் எனவும் வரும் வினையாலும் வினைக் குறிப்பாலும் மகடூஉவை விளக்கியவா றறிக. (6)*

### உயர்திணைப் பலர்பால் ஈறு

7. ரஃகா னொற்றும் பகர விறுதியும்
மாரைக் கிளவி யுளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே.

*இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், பல்லோரை யறியுஞ் சொற்கு ஈறாம் எழுத்து உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *ரஃகானும் அதுவே, ஒற்றும் அதுவே; பகரமும் அதுவே, இறுதியும் அதுவே; மாரைக்கிளவி யுளப்பட மூன்றும் என்பது - மார் என்னுஞ் சொல் அகப்பட மூன்றும் என்றவாறு; நேரத்தோன்றும் என்பது - நிரம்பத் தோன்றும் என்றவாறு; பலரறி சொல்லே என்பது - பலரை யறிதற்குக் கருவியாஞ் சொல் எ-று.*

'நேரத் தோன்றும் பலரறி சொற்கு' என்பான், உருபு தொகுத்துச் 'சொல்லே'யென்றான் என்பது. ஏகாரம் ஈற்றசை யேகாரம்.

**(வ-று.)** உண்டார், உண்ணாநின்றார், உண்பார் எனவும்; கரியர், செய்யர் எனவும் ரகர இறுதியாகி நின்ற படர்க்கை வினைமுற்றுச் சொல்லான் உயர்திணைப் பன்மைப்பால் உணர்த்தப்படும்.

இனி, உண்ப, தின்ப என எதிர்காலத்துப் பகரவிறுதி முற்றுச் சொல்லான் உயர்திணைப் பன்மைப்பால் உணர்த்தப்படும்.

'ஆர்த்தார் கொண்மார் வந்தார், பூக்குழா லென்னையர்க ணில்லாத தீது' என மார் இறுதியாக நின்ற எதிர்காலத்துப் படர்க்கை வினைமுற்றுச் சொல்லான் உயர்திணைப் பன்மைப்பால் உணர்த்தப்படும். (7)

### அஃறிணை ஒன்றன்பால் ஈறு

8. ஒன்றறி கிளவி த ற ட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், அஃறிணை யொருமைப் பாற்குரிய எழுத்து உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** ஒன்றனை யறிவிக்குஞ் சொல் த, ற, டக்களை யூர்ந்த குற்றியலுகரத்து ஈறாகும், எ-று.

**(வ-று.)** உண்டது, உண்ணாநின்றது, உண்பது எனவும்; கரியது, செய்யது எனவும் வினையானும் வினைக்குறிப்பானும் தகரமூர்ந்த குற்றுகரத்தான் அஃறிணை யொருமைப்பால் விளங்கும்.

கூயிற்று, தாயிற்று எனவும்; கோடின்று, குளம்பின்று எனவும் வரும் றகரம்.

குண்டுகட்டு, குறுந்தாட்டு என வரும் டகரம். (8)

### அஃறிணைப் பலவின்பால் ஈறு

9. அ ஆ வஎன வரூஉம் இறுதி
அப்பான் மூன்றே பலவறி சொல்லே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின்; அஃறிணைப்பன்மைப் பாற்கு ஈறாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** அ, ஆ, வ என்று சொல்லப்படுகிற இறுதிகளையுடைய அக் கூற்று மூன்று சொல்லும் பலவற்றை யறியுஞ்சொல், எ-று.

**(வ-று.)** அகாரம் - உண்டன, உண்ணாநின்றன, உண்பன எனவும்; கரிய, செய்ய எனவும் வரும்.

ஆகாரம் - உண்ணா, தின்னா எனவரும்; இது மூன்று காலத்தையும் எதிர்மறுக்கும் எதிர்மறைக்கண் அல்லது பால் விளங்கி நில்லா(து).

வகாரம் - உண்குவ, தின்குவ என எதிர்காலம் பற்றி வரும்.

'வரூஉம் இறுதி யப்பால் மூன்று' என்பது இறுதியையுடைய அக்கூற்று மூன்று என்றவாறு. (9)

### மேல் கூறப்பட்ட ஈறுகள் வினைக்கண் வந்து பால் விளக்கும் என்றல்

10. இருதிணை மருங்கின் ஐம்பா லறிய
ஈற்றுநின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் பாலுணர்த்தப்பட்ட எழுத்து இனைய என்பதூஉம், அவை வினைக்கணின்று உணர்த்தும் என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இரு திணையிடத்து ஐந்து பாலையும் அறிய இறுதிக்கண் நின்று உணர்த்தும் பதினோரெழுத்தும் வினையொடு வந்து புலப்படும், எ-று.

'வினையொடு வருமே' என்றார் பெயர்க்கண் திரியவும் நிற்கும், திரியாமையும் நிற்கு மாகலான் என்பது. உண்டான் என்றக்கால் திரிவில்லை. கொற்றன் என்பது இருதிணை யொருமைப் பாற்கும் ஏற்கும் என்பது.

மற்றுப் பதினோரெழுத்தும் என்றது என்னை? னஃகா னொற்றும், ளஃகானொற்றும், ரஃகானொற்றும், குற்றுகரமும், அவ்வும் ஆவும் என அவை ஆறெழுத்தான் அடங்கும் பிறவெனின், அடங்கும்; அடங்குமே யெனினும், ஈண்டுப் பதினொன்றென்று வேண்டினான். என்னை? பளிங்கு செம்பஞ்சி யடுத்தாற் செம்பளிங்கு எனப்படும்; கரும்பஞ்சி யடுத்தாற் கரும்பளிங்கு எனப்படும்; அதுபோலச் சார்ந்து வந்தவற்றது வேற்றுமை பற்றி வேறு பெயர் கொள்ளப்பட்டது என்பது. (10)

### பாலறி கிளவிகள் மயங்கல் கூடா எனல்

11. வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், வழுக்காத்தல் நுதலிற்று. வழுக்காக்குமிடத்து வழுவற்க என்று காத்தலும், வழீஇ யமைக என்று காத்தலும் என இரண்டு: அவற்றுள் இது வழுவற்க என்று காத்தது.

**உரை:** வினையிற் றோன்றும் பாலறி கிளவியும் என்பது - வினையிற் பாலறியப்படும் பொருளும் என்றவாறு; ஈண்டுப் பொருளைக் கிளவி யென்றாரென வுணர்க. பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும் என்பது - பெயரினாற் பாலறியப்படும் பொருளும் என்றவாறு; தம் மரபினவே என்பது - தத்தம் இலக்கணத்தனவே யாகும், எ-று.

அவை தம் மரபினான் வருமாறு: உண்டான் அவன், உண்டாள் அவள், உண்டார் அவர், உண்டது அது, உண்டன அவை என இவை வினை நின்று பெயர்மேல் தத்தம் மரபினான் வந்தன. இனிப் பெயரை முன் நிறீஇ வினையைப் பின்னே கொணர்ந்து காட்டினும் அமையும்.

இனி, 'மயங்கல் கூடா' எனவே, மயக்கமும் உண்டு என்பது சொல்லப்பட்டதாம்.

அம் மயக்கம் எழுவகைப்படும். திணை மயக்கம், பால் மயக்கம், இட மயக்கம், கால மயக்கம், மரபு மயக்கம், செப்பு மயக்கம், வினா மயக்கம் என. மயக்கம் எனினும் வழு எனினும் ஒக்கும்.

அவை வருமாறு: அவன் வந்தன, அவன் வந்தது; அவள் வந்தன, அவள் வந்தது; அவர் வந்தன, அவர் வந்தது. இவை உயர்திணை அஃறிணைமேற் சென்று வழீஇயின.

இனி, அஃறிணை உயர்திணைமேற் சென்று வழீஇயின வருமாறு: அது வந்தான், அது வந்தாள், அது வந்தார் எனவும்; அவை வந்தான், அவை வந்தாள், அவை வந்தார் எனவும் வரும். இவை பன்னிரண்டும் திணைவழூஉ.

இனி, பால் வழூஉ வருமாறு: அவன் வந்தாள், அவன் வந்தார், அவள் வந்தான், அவள் வந்தார் என இவை உயர்திணைப் பால் வழூஉ. அது வந்தன, அவை வந்தது என இவை அஃறிணைப் பால் வழூஉ. இவையெல்லாம் பெயர் நின்று வினைமேல் வழீஇய. இவ்வாறு வினை நின்றுபெயர்மேல் வழீஇயன வினைமுன் நிறீஇப் பெயர் பின்தந்து கூட்டியுரைத்துக் கொள்க.

இச்சூத்திரம் பொருண்மேன் மயங்கற்க என்றானாதலான், அவற்றுக்கட் கிடந்த எல்லா மயக்கமும் வேண்டினமை கூறினானாம் என்பது. அவை திணை பற்றியும் பால் பற்றியுமன்றி வருமாறில்லை.

செப்பு வழூஉ, வினா வழூஉ முன்னர்ச் சொல்லுதும்; ஒழிந்தது ஈண்டுக் காட்டுதும்.

இடவழூஉ வருமாறு: உண்டேன் நீ, உண்டேன் அவன், உண்டாய் யான், உண்டாய் அவன், உண்டான் யான், உண்டான் நீ என இவை.

இனி, கால வழூஉ வருமாறு: செத்தானைச் சாம் என்றலும், குளம் நீர் புகுந்து நிறையும் எனற்பாலதனை நிறைந்தது என்றலுமாம்.

இனி, மரபு வழூஉ வருமாறு: மேய்த்தல் ஒப்புமையான், யானை மேய்ப்பானை இடையன் என்றும், யாடு மேய்ப்பானைப் பாகன் என்றும் சொல்லுதல். (11)

### ஆண்மை விட்டு அல்லது அவாவுவ பெண்பால் எனல்

12. ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை யறிசொற் காகிட னின்றே.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

**உரை:** ஆண்மையிற் றிரிந்து பெண்மை நோக்கி நின்ற பெயர்ப் பொருள் ஆண்மகனை யறிவிக்கும் ஈற்றெழுத்தினாற் சொலற்பாட்டிற்கு ஏலாது என்றவாறு; ஒழிந்த இரண்டு பெயர்க்கும் ஒக்கும் என்பதாம்.

'ஆகிடனின்றே' என்பதனாற் சிறுபான்மை, 'பேடி வந்தான்' என ஆண்பாற்கும் ஏற்கும். *(12)*

## விடையும் வினாவும் அமையும் வகை

13. செப்பும் வினாவும் வழாஅ லோம்பல்.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், செப்பு வழுவும் வினா வழுவும் காத்தல் நுதலிற்று.

**உரை:** செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் என்பது - செப்பினையும் வினாவினையும் இழுக்குதலைப் போற்றுக, எ-று.

*அவை வழுவாது வருமாறு: 'நுந் நாடியாது?' என்றால், 'தமிழ்நாடு' என்றல்.*

இச் செப்புத்தான் ஆறு வகைப்படும். வினாவெதிர் வினாதலும், ஏவுதலும், மறுத்தலும், உற்றது உரைத்தலும், உறுவது கூறலும், உடம் படுதலும் என.

*அவற்றுள் மறுத்தலும், உடம்படுதலுமே ஈண்டுச் செப்பிலக்கண மாவன: ஒழிந்தனவற்றை முன்னமைத்துக் கூறுக என்றவாறு.*

*வினா ஐந்து வகைப்படும்: அறியான் வினாதல், அறிவொப்புக் காண்டல், ஐயமறுத்தல், அவனறிவு தான் கோடல், மெய்யவற்குக் காட்டல் என.*

*அவை வழுவாமற் சொல்லுக எனவே வழுவுதலும் உண்டென்ப தாம்.*

*அவை வருமாறு: 'கருவூர்க்கு வழியாது?' என்றாற்குப், 'பருநூல் பன்னிருதொடி' என்பது செப்பு வழூஉ. ஒரு விரல் காட்டி, 'நெடிதோ? குறிதோ?' என்பது வினா வழூஉ. இதுவும்சொற்றொகை யுணர்த்தியவாறு.* *(13)*

## வினாவெதிர் வினாதலும் செப்பின் பாற்படும் எனல்

14. வினாவுஞ் செப்பே வினாவெதிர் வரினே.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், வினாவும் இறையாகும் ஒரோவழியென்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** வினாவுஞ் செப்பே வினாவெதிர் வரினே என்பது - வினாவும் இறையாகும் அதற்கு இறைபட வரின், எ-று.

அது வினாவெதிர் வினாதல் என்னும் குற்றப்படாது (என்பது) அதன் கருத்து.

**(வ-று.)** சாத்தா வுண்ணாயோ? என்று வினாயினாற்கு உடம்படுதல், மறுத்தல் என்றிரண்டினுள் ஒன்று ஏற்றற்பாலது. உண்ணேனோ? என்று வினாவினான் வினா உண்பலென்னும் பொருள்பட்டமையின் வினாத் தானுஞ் செப்பு ஆயிற்று. (14)

### செப்பு பிறவாறு வழுவி வரினும் அமையும் எனல்

15. செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் அவ்வழியமையு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே என்பது - செப்புத்தான் வழீஇயினவிடத்தும் வரைந்து மாற்றப்படாது என்றவாறு; ஏகாரம் பிரிநிலை யேகாரம். வழீஇயினும் என்ற உம்மை சிறப்பும்மை. எனவே, வினா வழீஇயினவிடத்து அமையாது என்பது. அப் பொருள் புணர்ந்த கிளவியான என்பது - அப் பொருட்கு இயைபுபட வரின், எ-று.

அவ்வாறு வழீஇ யமையுஞ் செப்பாவன: உற்றது உரைத்தலும், உறுவது கூறலும், ஏவுதலும் என இவை.

அவற்றுள், உற்றது உரைத்தல் என்பது: 'சாத்தா, உறையூர்க்குச் செல்லாயோ?' எனின், 'கால் முள் குத்திற்று; தலை நோகின்றது' என்பது. இனி உறுவது கூறல் என்பது: 'சாத்தா, உறையூர்க்குச் செல்லாயோ?' எனின், 'கடமுடையார் வளைப்பர்; பகைவர் எறிவர்' என்பது. இனி, ஏவுதல் என்பது: 'சாத்தா, உறையூருக்குச் செல்லாயோ?' எனின், 'நீ செல்' என்பது.

இவை மூன்றும் வழீஇ யமைவன; வழூஉவேயெனினும் அப் பொருள் பட வந்தமையின் அமைக என்பது. மற்றுள்ளனவும் மேலே யடங்கின. (15)

### சினைமுதற் கிளவிக்கண் செப்பும் வினாவும் அமையுமாறு

16. செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு
அப்பொருள் ஆகும் உறழ்துணைப் பொருளே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், செப்புவானொடு வினாவுவா னிடைக் கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** செப்பினும் வினாவினும் என்பது - செப்புமிடத்தும் வினாவு மிடத்தும் என்றவாறு; சினைமுதற் கிளவிக்கு என்பது - சினைக் கிளவிக்கும் முதற் கிளவிக்கும் என்றவாறு; அப் பொருளாகும் உறழ் துணைப் பொருளே என்பது - முதலொடு முதலே பொரூஉக; சினையொடு சினையே பொரூஉக எ-று.

**(வ-று.)** 'கொற்றன் மயிர் நல்லவோ? சாத்தன் மயிர் நல்லவோ?' என்று வினாவினவிடத்து, 'கொற்றன் மயிரிற் சாத்தன் மயிர் நல்ல; சாத்தன் மயிரிற் கொற்றன் மயிர் நல்ல' என்றிறுக்க. இது சினையொடு சினை பொரீஇயினவாறு.

இனி, 'கொற்றன் நல்லனோ? சாத்தன் நல்லனோ?' என்று கூறிய விடத்து, 'கொற்றனிற் சாத்தன் நல்லன்; சாத்தனிற் கொற்றன் நல்லன்' என்றிறுக்க. இதுமுதலொடு முதல் பொரீஇயினவாறு.

'அப் பொருளாகும்' என்றதனான், அவ்வச் சினைக்கு அவ்வச் சினையே பொரூஉக' என்பது. இது முதற்கும் ஒக்கும்.

இனி, சினை முதற்கூறிய முறையன்றிக் கூற்றினான் முதலுஞ் சினையும் உறழ்ந்து வருவனவும் உள, குண மருங்குபற்றி.

**(வ-று.)** 'இம் மகள் கண் நல்லவோ? இக் கயல் நல்லவோ?' என்பன போல்வன.

இனி, அப் பொருளாகும் உறழ்பொருள் என அமையும். துணை யென்பது மிகையெனில், துணைக்கும் என்பது உவமித்தல்; அவ் வுவமத்துக் கண்ணும் அவ்வினப் பொருளேயாக என்பது.

உவமம் நாலு வகைப்படும்: வினை, பயன், மெய், உரு என. 'புலி பாய்ந்தாங்குப் பாய்ந்தான்' என்பது வினையுவமம். 'மழை போலும் வண்கை' என்பது பயனுவமம். 'துடிபோலும் நடு' என்பது மெய்யுவமம். 'பொன்போலும் மேனி' என்பது உருவுவமம்.

இன்னும், 'துணை'யென்றதனான் எண்ணுமிடத்தும் இனமொத் தனவே யெண்ணுக, முத்தும் மணியும் பொன்னும் என. *(16)*

## தகுதியும் வழக்கும் அமையுமாறு

17. தகுதியும் வழக்குந் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் வழீஇயமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** தகுதிபற்றியும் வழக்குப்பற்றியும் பொருந்தி நடக்கும் இலக்கணத்திற் பக்கச் சொற் கடியப்படா, எ-று.

தகுதியென்பது மூன்று வகைப்படும். மங்கல மரபினாற் கூறுத லும், இடக்கரடக்கிக் கூறுதலும், குழூவின் வந்த குறிநிலை வழக்கும் என.

செத்தாரைத் துஞ்சினார் என்றலும், சுடுகாட்டை நன்காடு என்றலும் மங்கல மரபினாற் கூறுதல்.

இடக்கரடக்கிக் கூறுதல் வருமாறு: கண் கழீஇ வருதும், கண் குறியரா யிருந்தார், பொறை யுயிர்த்தார் எனவும் வரும்.

இனி, குழூவின் வந்த குறிநிலை வழக்கு: பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றும், வண்ணக்கர் காணத்தை நீலம் என்றும் வரும்.

வழக்காறு இரு வகைப்படும்: இலக்கண வழக்கும், இலக்கணத் தொடு பொருந்தின மரூஉ வழக்கும் என.

இல்முன் என்பதனை முன்றில் என்று தலைதடுமாறச் சொல்லுதல் இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ வழக்கு.

இனி, சோழனாடு என்பதனைச் சோணாடு என்பது மரூஉ வழக்கு.

வழக்காறு இத்துணை யென்பதில்லை, சிதைந்தும் சிதையாதும் பொருந்தி நடப்பன வெல்லாம் அவை யெனப்படும் என்றலும் ஒன்று. *(17)*

## இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர் செய்யுட்கே வரும் எனல்

18. இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், செய்யுட்காவதொரு முடிபு கூறுதல் நுதலிற்று.

**உரை:** தமக்கு இனஞ்சுட்டாவாகிப் பண்புகொண்டு நின்ற பெயர்ச் சொற்களவை வழக்கினது நெறியல்லன, செய்யுட்கு நெறி, எ-று.

**(வ-று.)** 'மாக்கடனிவந் தெழுதரு செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ' (புறம். 4) எனவும், 'வெண்கோட்டியானை சோணை படியும்' (குறுந். 75) எனவும் வரும்.

'வழக்காறல்ல' என்ற விதப்பினான், 'வடவேங்கடம் தென்குமரி' என்பன கொள்க. இதுவும் ஒருசார் ஆசிரியன் உரை.

இனி, ஒருவன் சொல்லுவது: 'வழக்கா றல்ல' என்பதனை, 'வழக்காற்றின் அல்ல' என ஐந்தா முருபு விரித்து, 'அல்ல' என்பதனைப் பெயர்ப் படுத்துக் கூறும்; கூறவே, வழக்கிற்கும் இனமில் பண்புகொள் பெயர்கள் உள என்பது போந்ததாம்.

**(வ-று.)** பெருங் கொற்றன், பெருங் கூத்தன் என்பன போல்வன, வழக்கிடைப் பண்புப்பெயர் வருங்கால் குணமின்றி விழுமிதாகச் சொல்லுதற்கு வந்து நிற்கும். *(18)*

## இயற்கைப் பொருட்கண் கூறப்படும் மரபு

19. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், உலகத்துப் பொருளெல்லாம் இரு வகைப்படும், இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் என; அவற்றுள், இயற்கைப் பொருண்மேற் சொல் நிகழற்பாலவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** உலகத்து இயல்பாகி வாராநின்ற பொருளைச் சொல்லு மிடத்து இத் தன்மைய என்று சொல்லுக, எ-று.

**(வ-று.)** நிலம் வலிது; நீர் தண்ணிது என வரும். *(19)*

## செயற்கைப் பொருட்கண் கூறப்படும் மரபு

20. செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், செயற்கைப் பொருண்மேற் சொல் நிகழற்பாலவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** செயற்கையினாகிய பொருள்களையெல்லாம் ஆக்கம் கொடுத்துச் சொல்லுக, எ-று.

**(வ-று.)** மயிர் நல்ல ஆயின; பயிர் நல்ல ஆயின என வரும்.

ஆயின என்பது ஆக்கம். (20)

## மேலதற்கொரு புறனடை

21. ஆக்கந் தானே காரண முதற்றே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேலதற்கொரு புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** அவ் வாக்கந்தனைச் சொல்லுமிடத்துக் காரணம் முன் வைத்துச் சொல்லுக, எ-று.

**(வ-று.)** 'கடுவும் கைபிழி யெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல ஆயின' என வரும். (21)

## எய்தியது விலக்கல்

22. ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

**உரை:** ஆக்கக் கிளவி காரணமின்றியுஞ் சொல்லப்படும் வழக்கி னுள், எ-று.

போக்கு என்பது குற்றம்.

**(வ-று.)** மயிர் நல்ல ஆயின.

உம்மை எதிர்மறை.

மற்று, வாளா தோதுஞ் சூத்திரமெல்லாம் வழக்கே நோக்கும், செய் யுட் காயிற் கிளந்தே யோதும்; அதனான், 'வழக்கினுள்' எனல் வேண்டா; அம் மிகுதியான் ஆக்கமும் காரணமும் இன்றி வருதலும், காரணம் கொடுத்து ஆக்கமின்றி வருதலும் என இரண்டுங் கொள்ளப்படும்.

**(வ-று.)** 'பைங்கூழ் நல்ல' எனவும், 'எருப்பெய்து இளங்களை கட்டு நீர் கால்யாத்தமையாற் பைங்கூழ் நல்ல' எனவும் வரும். (22)

### உயர்திணைப்பால் ஐயத்தின்கண் சொல் நிகழுமாறு

23. பான்மயக் குற்ற வையக் கிளவி
தானறி பொருள்வயிற் பன்மை கூறல்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், உயர்திணைப் பால் ஐயத்துக் கட் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *திணை யறிந்து பால் ஐயந் தோன்றிய வதனை அத்திணைப் பன்மைமேல் வைத்துச் சொல்லுக எ-று.*

**(வ-று.)** *'ஒருவன் கொல்லோ, ஒருத்தி கொல்லோ தோன்றா நின்றார்' என வரும். இதனை உயர்திணைப்பால் ஐயம் என்பதோர் ஒப்பிற் காண்க. (23)*

### திணை ஐயத்தின்கண்ணும் அஃறிணைப்பால் ஐயத்தின்கண்ணும் சொல் நிகழுமாறு

24. உருவென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
இருவீற்று முரித்தே சுட்டுங் காலை.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், திணை ஐயத்துக்கண்ணும், அஃறிணைப் பால் ஐயத்துக்கண்ணும் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *திணையையம் தோன்றினவழி ஒரு வடிவு சொல்லக் கருதினும், அஃறிணையை ஒன்று பல என்று பிரித்துச் சொல்லினும் மேலடுத்த போலப் பொதுவினானே சொல்லுக எ-று.*

**(வ-று.)** *'குற்றிகொல்லோ மகன்கொல்லோ தோன்றுகின்ற உருவு' என வரும்; இது திணை ஐயம்.*

*'ஒன்றுகொல்லோ பலகொல்லோ செய்புக்க பெற்றம்' என வரும்; இஃது அஃறிணைப் பால் ஐயம்.*

*உருவு எனவே திணையையம் என்பதோர் ஒப்பிற் பெற்றாம். பால் ஐயமாயின் தத்தம் பகுதியொடு முடியும் என்பது. (24)*

### ஐயப்பட்ட பொருள் துணிந்தவழிச் சொல் நிகழுமாறு

25. தன்மை சுட்டலு முரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஐயப்பட்ட அப்பொருளைத் துணிந்தவழிச் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *அன்மைத் தன்மையைச் சொல்லுதலும் உரித்து, ஐயத்திற்கு வேறாய்த் துணிபொருளிடத்து எ-று.*

*ஒருத்தி யெனத் துணிந்தவழி, 'ஒருவனல்லள் ஒருத்தி' எனவரும்; ஒருவன் எனத்துணிந்தவழி, 'ஒருத்தியல்லன் ஒருவன்' என வரும். இஃது*

உயர்திணைப் பாலையத்துக்கண் துணிபு தோன்றினவழிச் சொல் நிகழு மாறு. மற்றையனவும் அன்ன.

இனி, ஒருவன், 'வேறிடம்' என்பதனைத் 'துணியப்படும் பொருட்கு வேறாகி நிற்கும் பொருள்' என்னும். அவன் உதாரணங் காட்டுமாறு: 'குற்றி கொல்லோ? மகன் கொல்லோ?' என ஐய முற்றான், மகன் என்று துணியின், 'குற்றியன்று மகன்' எனவும், குற்றி என்று துணியின், 'மகன் அல்லன் குற்றி' எனவும் வரும், என்னும்.

இனி, அல்லாத தன்மையையுடையது துணியப்படும் பொரு ளன்றே, அதனான், அதன்கண்ணே அன்மையை வைத்துச் சொல்லுக என்ப முன்னையுதாரணங் காட்டுவார். 'குற்றியல்லன் மகன்' என்புழிக் 'குற்றியின் அல்லன்' என்று, ஐந்தன் உருபு விரித்து உரைக்க. (25)

### வண்ணச் சினைச் சொல்

26. அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் ஒரு சொல்லுதல் வன்மையுணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** அடை, சினை, முதல் எனப்பட்ட மூன்றும் முறை மயங் காது வருவன வண்ணச் சினைச்சொல் எ-று.

அடை என்பது ஒரு பொருளது குணம்.

சினை என்பது உறுப்பு.

முதல் என்பது அவ்வுறுப்பினை யுடையது.

**(வ-று.)** பெருந்தலைச் சாத்தன், செங்கால் நாரை எனவரும்.

அடை சினை முதல் என வரூஉ மூன்றும் - என்னாது, முறை என்றதனான் இருகுணம் அடுக்கி முதலொடு வருதலும், இருகுணம் அடுக்கிச் சினையொடு வருதலும் கொள்க.

'முதலொடு குணமிரண் டடுக்குதல் வழக்கியல்
சினையொ டடுக்கல் செய்யு ளாறே'

என்பது புறச் சூத்திரம்.

உதாரணம் -இளம் பெருங் கூத்தன் என வரும் வழக்கினுள்.

'சிறுபைந் தூவிச் செங்காற் பேடை' (அகம். 57) என வரும் செய்யுட்கண்.

'இளம் பெருங் கூத்தன்' என்றக்கால், இளமை பெருமையை நோக்கி நின்றதன்று, கூத்தன் என்னும் பெயரையே நோக்கி நின்ற தெனவுணர்க. 'நடைபெற்று இயலும்' எனல் வேண்டா எனின், நடை என்பது வழக்கு, வழக்கினுள் மயங்காது வரும் என்பதாம்; என்னவே, செய்யுளுள் மயங்க வரும் என்பதாம்.

**(வ-று.)** 'பெருந்தோட் சிறுமருங்குற் பேரமர்க்கட் பேதை' எனவரும். *(26)*

## பால் திணை வழுவமைதி

27. ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், வழீஇ யமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** உயர்திணையொருவரைப் பன்மையாற் சொல்லுதலும், அஃறிணை ஒன்றினைப் பன்மையாற் சொல்லுதலும் வழக்கினகத்து உயர்த்துச் சொல்லப்படும்; இலக்கண முறைமையாற் சொல்லு மிடத்து நெறியல்ல எ-று.

ஒருவனையும், 'தாம் வந்தார்' என்ப, ஒன்றனையும், 'தாம் வந்தனர்' என்ப.

மற்று, 'இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல' எனல் வேண்டா வாம். அங்ஙனம் வேண்டாது கூறியவதனான் உயர்திணையை அஃறிணை போலச் சொல்லுதலும் அஃறிணையை உயர்திணை போலச் சொல்லு தலும் கொள்க.

**(வ-று.)** 'என் பாவை வந்தது, போயிற்று' என ஒருத்தியையும், 'என் அன்னை வந்தாள், போயினாள்' என ஓர் ஆவினையும், காதன் மிகுதியான் இவ்வாறு கூறுக எனக் கொள்க.

இனி, 'வழக்கினாகிய' என்றதனான், 'கன்னி யெயில், கன்னி ஞாழல்' என்பன கொள்க. *(27)*

## இடம் உணர்த்தும் சொற்கள்

28. செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்
நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மு விடத்து முரிய வென்ப.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இட வழுக்காத்தல் நுதலிற்று.

**உரை:** செல்லும், வரும், தரும், கொடுக்கும் என நிலைபெற்றுப் புலப்பட்டு நின்ற இந் நான்கு சொல்லும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடத்திற்கும் உரிய எ-று.

அவையாமாறு முன்னர்ச் சொல்லுதும். *(28)*

## தன்மை முன்னிலைக்குரிய சொற்கள்

29. அவற்றுள்,
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

**உரை:** தரும், வரும், என்னுஞ் சொல் தன்மைக்கும், முன்னிலைக்கும் உரியவாம்; படர்க்கைக்கு ஆகா எ-று.

**(வ-று.)** எனக்குத் தருங்காணம், எனக்கு வருங்காணம்; நினக்குத் தருங்காணம், நினக்கு வருங்காணம் என வரும். *(29)*

## படர்க்கைக்குரிய சொற்கள்

30. ஏனை யிரண்டும் ஏனை யிடத்த.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் மேல் எய்தியது விலக்குதல் நுதலிற்று.

**உரை:** செல்லும், கொடுக்கும் என ஒழிந்து நின்ற இரண்டும் படர்க்கைக்காம்; தன்மைக்கும், முன்னிலைக்கும் ஆகா எ-று.

**(வ-று.)** அவற்குச் செல்லுங்காணம், அவற்குக் கொடுக்குங் காணம் என வரும்.

இனிச், செலவும் கொடையும் தரவும் வரவும் என்று சூத்திரம் செய்யற்பாலான். எற்றுக்கு? செல்லுங் காணம், கொடுக்குங் காணம் என்பன இரண்டும் படர்க்கைக்குரிய; தரும், வரும் என்பன இரண்டுந் தன்மைக்கும் முன்னிலைக்கும் உரிய; ஆகலான். அவ்வாறு கூறாது மயக்கங் கூறியவதனான், செல்லும் என்னும் சொல்லாற் சொல்லப்படுவ தனை வரும் என்னும் சொல்லானும் சொல்லுப; கொடுக்கும் என்னுஞ் சொல்லாற் சொல்லப்படுவதனைத் தரும் என்னும் சொல்லினானும் சொல்லுப என்றலைக் குறித்தற்கு, என்க.

**(வ-று.)**

*'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது'* (அகம். 36)

எனவும்,

*'புனறரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு'* (குறுந். 292)

எனவும் வரும்.

இனி, இச்சூத்திரம் கொடுத்தல் கோடற் பொருண்மை மூன்றிடத்துஞ் சொல் நிகழுமாறு கூறியது என்பாரும் உளர். *(30)*

### யாது எவன் என்னும் சொற்கள் அமையும் வகை

31. யாதெவன் என்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயிற் செறியத் தோன்றும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், அறியாத பொருளை அறியுங்காற் சொலற்பாலவாறு இது என்பதுணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** யாது, எவன் என்ற இரண்டு சொல்லும் தன்னால் அறியப் படாத பொருட்கண் வினாவாய்த் தோன்றும் எ-று.

**(வ-று.)** நுந் நாடி யாது? இப் பண்டி யுள்ளது எவன்? என வரும்.

செறிய என்பது யாப்புறுத்தல். இஃது யாப்புறத் தோன்றும் எனப், பிற யாப்புறாமற் றோன்றுவனவும் உள என்பதாகும்.

**(வ-று.)** யாவன், யாவள், யாவர், யாது, யாவை என்பன.

இவை ஐந்து பாலும் அறியலுற்று வாரா: வினா மாத்திரத்திற்கு* வரும். *(31)*

* **(பாடம்)** வினாவு மாத்திரத்திற்கு வந்த சூத்திரம்.

### அவற்றுள் யாது என்னும் சொல்

32. அவற்றுள்,
யாதென வரூஉம் வினாவின் கிளவி
அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத்
தெரிந்த கிளவி யாதலு முரித்தே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இறந்தது காத்தல் நுதலிற்று.

**உரை:** அவற்றுள், யாது என்பது தன்னான் அறியப்பட்ட பொருட்கண் ஐயப்பட்டதனைத் தெளிதற்குச் சொல்லவும் பெறும் எ-று.

**(வ-று.)** நம் எருது ஐந்தனுள் யாது கெட்டது? என வரும்.

உம்மை எதிர்மறை.

மற்று, இதுவும் அறியாப் பொருளாதல் ஒக்கும் பிறவெனின், முன் யாதும் உணராததன்கட் சொல்லினான்; அது முற் சூத்திரத்தோடு இதனிடை வேற்றுமை. முன்னர்ச் சூத்திரம், 'எவன் யாது' என்று கூறற் பாலன், எற்றுக்கு? யாது எவன் எனக் கூறினான் என்னின், 'யாது' என்பதனைப் பின்னரும் இங்குக் கொணர்ந்து ஆராய்தலின் என்க. அவ்வாறு கூறாது குறிப்புக் கொண்டதனான், 'நமருள் யாவர் போயினார்?' 'அவற்றுள் எவ்வெருது கெட்டது?' என்பன கொள்க. *(32)*

### சினை முதற்சொல் அமையும் வகை

33. இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகையி னும்மை வேண்டும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், வரையறைப் பொருட்கண் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று; மரபு வழுக் காத்தது எனினும் அமையும்.

**உரை:** இத்துணை என்று வரையறுக்கப்பட்ட சினைக்கிளவிக்கும் முதற் கிளவிக்கும் வினைப்படுத்துச் சொல்லுமிடத்து இறுதி உம்மை கொடுத்துச் சொல்லுக எ-று.

**(வ-று.)** நம்பி கண்ணிரண்டும் நொந்தன; நங்கை முலையிரண் டும் வீங்கின என வரும்.

சினைக்கிளவி உம்மை கொடாவிடிற் பிறவும் கண்ணும் முலையும் உளவாவன செல்லுமாகலான், உம்மையின்றிக் கூறுதல் மரபன்று.

இனி, முதற்கிளவி வருமாறு: தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார் என வரும்.

'இருதிணை மருங்கின் ஐம்பாலும் அறிய' - என்னாது, 'இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய' (தொல். சொல். கிளவி 10) என்று சூத்திரஞ் செய்தானாலாசிரியனேனும், செய்யுட்கண் உம்மை யின்றி வருதற்கு உடம்பொடு புணர்த்தான் என்றலும் ஒன்று. இனிச் சூத்திரத்திற் சினை முதற் கூறிய முறையன்றிக் கூற்றினான் உம்மை யின்றி வருவனவும் உள என்பது. உம்மையைத் தொகுத்துக் கூறினான் என்பாரும் உளர். *(33)*

## இல்லாமைக்குரிய சொல் அமையும் வகை

34. மன்னாப் பொருளு மன்ன வியற்றே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் மரபுவழுக் காத்தல் நுதலிற்று.

**உரை:** மன்னாப் பொருள் என்பது இல்லாப் பொருள் என்ப; அதனையும் சொல்லுமிடத்து உம்மை கொடுத்துச் சொல்லுக எ-று.

**(வ-று.)** 'பவளக்கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை' எனவரும்.

உம்மை பெறுத லொப்புமை நோக்கியே, முதற் சூத்திரத்தொடு மாட்டெறிந்ததெனக் கொள்க. *(34)*

## இதுவுமது

35. எப்பொரு ளாயினும் அல்ல தில்லெனின்
அப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மறித்துச் சொற் பல்காமைத் தொகுத்திறுக்கும் இலக்கணம் இஃதென்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** எவ்வகைப்பட்ட பொருளாயினும், தன்னுழையுள்ள தல்லதனை இல்லை யெனலுறுமே யெனின், அவன் கூறிய பொரு ளல்லாத பிறிது பொருள்கூறி, இல்லை என்க எ-று.

*தன்னுழை உள்ளதன் உண்மை கூறி, இல்லை என்க என்பது கருத்து.*

**(வ-று.)** *'பயறுளவோ வணிகீர்?' என்றால், 'உழுந்தல்ல தில்லை' என்க; தன்னுழை யவை உளவாயின்.*

*இதன் கருத்து, அவன் வினாவப்பட்ட பொருட்கு இனமாய பிறிது பொருளே கூறுக என்பது.*

*இச் சூத்திரம், 'செப்பும் வினாவும்' (தொல். சொல். கிளவி. 13) என்பதனுள் அடங்காதாயிற்று; அவன் வினாவிற்குச் செவ்வனிறை யாகவன்றிப் பிறிதுமொன்று கொணர்ந்து இறுத்தமையின்.* *(35)*

## மேலதற்கோர் புறனடை

36. அப்பொருள் கூறிற் சுட்டிக் கூறல்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் ஓர் இறுத்தல் வகைமை யுணர்த்துதல் நுதலிற்று: மேலதற்கு ஒரு புறனடையும் என்பது.*

**உரை:** *அவன் வினாயின அப் பொருளையே சொல்லலுறுமே யெனிற் சுட்டிக் கூறுக எ-று.*

**(வ-று.)** இவையல்லது பயறில்லை, இப் பயறல்லது இல்லை என வரும். *(36)*

## பொருளொடு புணராத சுட்டுப் பெயரும் பொருளையே குறிக்கும்

37. பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்
பொருள்வேறு படாஅ தொன்றா கும்மே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இதுவும் ஒரு சொல்லுதல் வகைமை யுணர்த்துதல் நுதலிற்று. மேலதற்கொரு புறனடை எனவு மாம்.*

**உரை:** *பொருளொடு புணராது நின்ற சுட்டுப் பெயராமே யெனினும், அப் பொருட்கு இயைபுபட வருமேயெனின் அமையும் எ-று.*

**(வ-று.)** *'இவை யல்லது பயறில்லை' என்புழிப் 'பயறு' என்னுஞ் சொல்லாற் பொருள் உணரப்பட்டது: 'அல்லது' என்னுஞ் சொல்லே எதிர் மறுத்து நின்றது. 'இல்லை' யென்னும் சொல்லான் இன்மை உணரப் பட்டது.*

*இனி, இவை என்னும் சொல் பொருளின்றால், அஃது என் செய்யும் என்றார்க்கு, அதுவும் பயற்றினையே சுட்டிற்றாகலான், அமைக என்பது கருத்து.*

*இஃது, ஒரு பொருண்மேல் இருபெயர் வழுக்காத்தவாறு.* *(37)*

## இயற்பெயரும் சுட்டுப்பெயரும் ஒருங்கு வருவழி வரும் முறைமை

38. இயற்பெயர்க் கிளவியுஞ் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றின்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய வென்மனார் புலவர்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் ஒரு பொருண்மேல் இரு பெயர் வழுக்காத்தல் நுதலிற்று.

**உரை:** இயற்பெயர் என்பன இரண்டு திணைக்கும் உரிய பெயர்; சுட்டுப்பெயர் - மூன்று சுட்டு முதலாக வரும் பெயர்: அவ்விரண்டும் வினைக்கண் ஒருங்கு நடப்பதொரு காலந்தோன்றுமே யெனின், இயற்பெயர் முன்கூறிச் சுட்டுப் பெயரதனைப் பின் வைத்துக் கூறுக எ-று.

**(வ-று.)** 'கொற்றன் வந்தான், அவற்குச் சோறு கொடுக்க' என வரும்.

மற்றுச் 'சுட்டுப் பெயர்க் கிளவி முற்படக் கிளவார்' எனவே, இயற்பெயர் வழியே கிளப்ப என்பது முடிந்தது.

பின்னை, 'இயற்பெயர் வழிய' எனல் வேண்டா; அதனான், உயர்திணைப் பெயர்வழியும், அஃறிணைப் பெயர்வழியும் வைத்துக் கூறுக அச்சுட்டுப் பெயர்களை என்றதாம்.

**(வ-று.)** 'நம்பி வந்தான், அவற்குச் சோறிடுக' 'எருது வந்தது, அதற்குப் புல்லுக் கொடுக்க' என வரும்.

இனி, 'வினைக்கியலுங் காலந் தோன்றின்' என அமையும், 'ஒருங்கு' என்ற மிகையதனான், அகர, இகரச் சுட்டே கொள்க.

இனி, 'வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றிற் சுட்டே கிளக்க' என்பதனான், பெயர்க்கு யாது முன் கூறினும் அமைக என்பதாம்.

**(வ-று.)** சாத்தன் அவன், அவன் சாத்தன் என வரும்.

இனி, ஒருவன் 'இயற்பெயர்' எனவே, உலகத்து இயன்று வரும் பெயர் எல்லாம் அடங்கும் என்னும். (38)

## அவ்விருபெயரும் செய்யுளில் வருமாறு

39. முற்படக் கிளத்தல் செய்யுளு ளுரித்தே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இஃது எய்தியது விலக்குதல் நுதலிற்று.

**உரை:** செய்யுளகத்தாமே யெனிற் சுட்டுப் பெயர் முன் சொல்லி, இயற்பெயர் பின் வைத்துக் கூறினும் அமையும் எ-று.

**(வ-று.)**

*அவனணங்கு நோய்செய்தா னாயிழாய் வேலன்*
*விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி - முகனமர்ந்*
*தன்னை யலர்கடப்பந் தாரணியி லென்னைகொல்*
*பின்னை யதன்கண் விளைவு*

எனவரும். இதனுள், 'அவன்' என்பது சுட்டு, 'சேந்தன்' என்பது இயற் பெயர். *(39)*

## சுட்டுமுதலாகிய காரணச்சொல்

40. சுட்டுமுத லாகிய காரணக் கிளவியுஞ்
சுட்டுப்பெய ரியற்கையிற் செறியத் தோன்றும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஒரு பொருண்மேல் இருபெயர் வழுக்காத்தல் நுதலிற்று.

**உரை:** மேற் சுட்டுப்பெயர் இயற்பெயரின் வழியே கிளக்க எனப்பட்டது போலச் சுட்டு முதலாகிய காரணப் பெயரையும் இயற் பெயர்க்கு வழியே வைத்துச் சொல்லுக எ-று.

**(வ-று.)** *'சாத்தன் கையெழுதுமாறு வல்லன், அதனான், தன் ஆசிரியன் உவக்கும்; தந்தை யுவக்கும்'* எனவரும்.

அதிகாரத்தான், வழிக்கிளத்தல், 'வினைக்கொருங்கு இயலும்', (தொல். சொல். கிளவி. 38) வழிக் கொள்க.

எழுதுமாறு என்பது வினை. முதற்சூத்திரம் பொருள்வழி வந்தது; இது பொருளது குணத்துவழி வந்தது. *(40)*

## இயற்பெயரும் சிறப்புப்பெயரும் ஒருங்கு வருவழி

41. சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் ஒரு பொருண்மேல் இருபெயர் வழுக்காத்தல் நுதலிற்று.

**உரை:** சிறப்புப் பெயரும் இயற்பெயரும் ஒருவற்கு உளவாயின், அவ்விடத்து அவனைப் பெயர்கொடுக்குங்கால், அவன் சிறப்புப் பெயரை முன்கூறி, இயற்பெயரைப் பின் கூறுக எ-று.

**(வ-று.)** *ஏனாதி நல்லுதடன்; சோழன் நலங்கிள்ளி* என வரும்.

* உம்மையாற் பிறப்பினாகிய பெயர்க்கும், தொழிலினாகிய பெயர்க்கும், கல்வியினாகிய பெயர்க்கும் இயற்பெயர்களை வழியே வைத்துச் சொல்லுக.

**(வ-று.)** *பார்ப்பான் கண்ணன்; வண்ணான் சாத்தன்* என வரும், கல்வியினாகிய காரணம் வந்தவழிக் கண்டு கொள்க.

*சிறப்புப் பெயர் என்பன சிறப்புடைய மன்னராற் பெறுவன.(41)*

* **(பாடம்)** உம்மையான் உறுப்பினாகிய பெயர்க்கும், கல்வியினாகிய பெயர்க்கும் கொள்க.

### ஒருபொருட் பல்பெயர்க்கு உரிய மரபு

42. ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பி னொன்றிட னிலவே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஒரு பொருண்மேற் பல பெயர் வழுக்காத்தல் நுதலிற்று; மரபுவழுக் காத்ததூஉமாம்.*

**உரை:** *ஒருபொருளைக் கருதி வேறு வேறு பெயர் வருமெனின், அப்பெயர் வேறு வேறு தொழில்கோடற்கு வரும் பெயரெல்லாஞ் சொல்லிய பின்னைத் தொழில் கொடுக்க. அங்ஙனம் கொடுப்ப வந்த பெயரெல்லாம் அதற்கு ஒன்றும்; அல்லாக்கால் அதற்கு ஒன்றிடனில எ-று.*

**(வ-று.)** *'ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான்' எனவரும்.*

*மற்று, 'எந்தை வருக, எம்பெருமான் வருக, மைந்தன் வருக' எனவும் ஒருபொருட்கு ஒன்றுமாலெனின், அதனை 'ஞாபகங்கூறல்' (தொல். பொருள். மரபியல் 110) என்னும் உத்திவகையான் உணர்க; என்னை 'தொழில் வேறு கிளப்பின் ஒன்றிட னிலவே' என்றார். அத் தொழில் வேறு கிளத்தல்தான் இருவகைப்படும். பெயர்தொறும் ஒரு தொழில் கிளத்தலும், வேறு கிளத்தலும் ஆம். அதனான் இச் சூத்திரத்துப் பெயர்தொறும் வேறாய்த் தொழில் கிளத்தலைத் 'தொழில் வேறு கிளப்பின் ஒன்றிடனில' என்றது.*

*அங்ஙனம் ஞாபகத்தாற் கொள்வதனையும் ஒரு பொருட்கு ஒன்று மென்று, மற்று வரும் பெயரெல்லாஞ் சொல்லிப் பின்னைத் தொழில் கிளப்பதனை எடுத்தோத்தினாற் கூறி, அவ்வப் பெயர் தொறும் ஒரு தொழில் கிளப்பதனை உத்திவகையாற் கொண்டது என்னையெனின், - 'எந்தை வருக, எம்பெருமான் வருக, மைந்தன் வருக' என்றவிடத்து, ஒரு பொருண்மேலும் நிற்கும்; மற்றையதாயின் ஒரு பொருட்கே திரிபுபடாது ஒன்றும். அதனான், அதனை எடுத்தோத்தினானும், இதனை யுத்திவகை யானும் கொண்டான் என்பது. (42)*

### எண்ணின்கண் வரும் திணை வழுவமைதி

43. தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவியென்று
எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது திணை வழுவாமை யுணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** தன்மைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் அவை எண்ணுமிடத்து விராஅய் வரப் பெறும் எனக் கொள்க எ-று.

'தன்மைச் சொல்' எனவே, உயர்திணைச் சொல் எனப்பெறும்.

**(வ-று.)** 'யானும் என் எஃகமுஞ் சாறும்' என வரும்.

'மருங்கு' என்ற மிகையான், 'நீயும் நின் படைக்கலமுஞ் சாறீர்' 'அவனும் தன் படைக்கலமுஞ் சாலும்' எனவும் வருதல் கொள்க. (43)

### ஒருவர் என்னும் சொல்லின் மரபு

44. ஒருமை யெண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக் கல்ல தெண்ணுமுறை நில்லாது.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மரபுவழுக்காத்தல் நுதலிற்று.*

**உரை:** ஒருமை எண்ணின் பொதுப் பிரிபாற் சொல் என்பது ஓர் எண்ணாய், இரண்டு பாற்கும் பொதுவாய், ஒருவன் ஒருத்தி எனப் பிரிந்து நின்று, பால் வேறுபடுவதாயிற்று; அஃது யாதோவெனின், ஒருவர் என்பது. அஃது இருபாற்கும் பொதுவாய் நிற்பினும், ஒருவர் இருவர் என்று எண்ணும்பொழுதாயின் ஒரு பாற்கே உரித்தாம் எ-று.

அப் பொதுமையிற் பிரிந்த பாற் சொல் ஒருவன் ஒருத்தி என்பது; அவை தத்தம் ஒருமை விளங்கி நிற்குந் துணை யல்லது அப்பால்மேல் எண்ணுமுறை யோடா என்பது.

இனி, எண்ணுதல் களைந்து, ஒருவர் என்றக்கால் இருபாலையும் தழீஇ நிற்கும்; இதுவும் ஒருசார் ஆசிரியர் உரைப்ப.

இனி, ஒருமை எண்ணின் பொது என்ப ஒருவர் என்பது. (44)

* **(பாடம்)** அமைதியாமாயிற்றுமென்க.

### வியங்கோள் அமையும் வகை

45. வியங்கோ ளெண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் திணைவழுக் காத்தல் நுதலிற்று.

**உரை:** வியங்கோளுடைய எண்ணுப்பெயர் திணை விரவுதல் கடியப்படா எ-று.

**(வ-று.)** 'ஆவும் ஆயனும் செல்க' என வரும். இஃது இனமல் லதனோடு எண்ணினமையின் வழுவாயிற்று. இனி, 'ஆவும் ஆயனும் செல்க' என்றவிடத்துச் 'செல்க' என்னும் வியங்கோள்வினை இரு திணைக்கும் முடிபு ஏற்றமையின் திணைவழுவமைதியாம்.

மற்று, இன்ன எண் என்பது சூத்திரத்துப் பெற்றிலாமையின் 'உய்த்துணரவைத்தல்' என்னும் உத்திவகையான், உம்மை யெண்ணும் எனவென் னெண்ணும் எனக் கொள்க. என்னை, இவ்விரண் டெண் ணும்

தொகை பெற்றும் பெறாதும் முடியும்; மற்றை யெண்ணுக்க ளெல்லாம் தொகை பெற்றே முடியும்; ஈண்டுத் தொகை பெறும் எண்ணினாற் கூறிற்றிலர், திணைவழூஉம் ஆகலான் என்பது. *(45)*

## வேறு வினைப் பொதுச்சொல்

46. வேறுவினைப் பொதுச்சொ லொருவினை கிளவார்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் மரபு வழுக்காத்தல் நுதலிற்று.

**உரை:** வேறு வேறு வினையையுடையவாய் நின்ற சொற்களை ஒரு வினையாற் சொல்லற்க என்பது; எனவே, பொது வினையாற் கிளக்க என்பதாம்.

இனி, ஒருவும் வினை என்பது ஒரூஉ வினை என்றாயிற்று என்றலும் ஒன்று; ஒரூஉதல் என்பது நீங்குதல்.

*அவை; அடிசில், அணிகலம், இயமரம் என்பன; அவற்றைப் பொது வினையாற் கூறுமாறு:*

*அடிசில் அயின்றார், அணிகலம் அணிந்தார், இயமரம் இயம்பினார் என்னுந் தொடக்கத்தன கொள்க.*

*மற்று,*

*'ஊன்றுவை கறிசோ றுண்டு வருந்தும்' (புறம். 14)* என வந்ததால் எனின், அது பாட மறிந்து திருத்திக்கொள்க. *(46)*

## இதுவுமது

47. எண்ணுங் காலு மதுவதன் மரபே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் மரபு வழுக் காத்தலை நுதலிற்று.

**உரை:** வேறு வேறு வினையையுடைய சொற்களை யெண்ணுங் காலும் பொதுவினையாற் சொல்லுக எ-று.

**(வ-று.)** *'யாழுங் குழலும் பறையும் இயம்பினார்'* என வரும்.

*(47)*

## இரட்டைக் கிளவி அமையும் வகை

48. இரட்டைக் கிளவி யிரட்டுப்பிரிந் திசையா.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் மரபு வழுக்காத்தல் நுதலிற்று.

**உரை:** இரட்டித்துச் சொல்லும் சொற்கள் அவ்விரட்டுதலிற் பிரித்துச் சொல்லப்படா எ-று.

**(வ-று.)** சுருசுருத்தது, சுறுசுறுத்தது, கறுகறுத்தது என, இசையுங் குறிப்பும் பண்பும் பற்றி வரும். *(48)*

## ஒருபெயர்ப் பொதுச்சொல் அமையும் வகை

49. ஒருபெயர்ப் பொதுச்சொ லுள்பொரு ளொழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினு மஃறிணை மருங்கினும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் மரபு வழுக்காத்தல் நுதலிற்று.*

**உரை:** *ஒரு பெயர்ப்பட நின்ற பொதுச் சொற்களைச் சொல்லுங்கால் ஆண்டுள்ள பொருள் எல்லாம் எடுத்துச் சொல்லாது, தெரிபு வேறுகிளந்து தலைமையானும் பன்மையானும் கூறுக, இரு திணைக் கண்ணும் எ-று.*

**(வ-று.)** *சேரி என்பது பலர் இருப்பதுமன்; ஆயினும், ஆண்டுச் சில பார்ப்பனக் குடி உளவேல், அதனைப் பார்ப்பனச் சேரி என்பது; இஃது உயர்திணைக்கண் தலைமை பற்றி வந்தது.*

*அத் திணைக்கண் பன்மைபற்றி வருமாறு:*

*எயின நாடு, குற்றிளை நாடு என வரும்.*

*இனி, அஃறிணைக்கண் தலைமைபற்றி வருமாறு:*

*கமுகந்தோட்டம் என வரும்; மற்றைய பொருள் பயின்று, கமுகு ஒன்றிரண்டு உண்மை நோக்கிச் சொன்னாரேல் தலைமையாம். இனிக் கமுகு ஆண்டு நெருங்கி மற்றைய சிலவாதல் கண்டு சொன்னாரேல், அதுவே பன்மையாற் பெற்ற பெயர்.*

*ஒடுவங்காடு, காரைக்காடு என்பன பன்மையாற் பெற்ற பெயர். (49)*

## ஒன்றொழி பொதுச்சொல்

50. பெயரினுந் தொழிலினும் பிரிபவை யெல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் மரபு வழுக்காத்தல் நுதலிற்று.*

**உரை:** *மேனின்ற அதிகாரத்தான் உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் பெயரினானும் தொழிலினானும் பிரிந்து வருமவை யெல்லாம் மயங்குதற்குச் செல்லா; வழக்கு வழிப்பட்டன ஆகலான் என்பது, எ-று.*

*அவைதாம் பெண்ணொழி மிகுசொல்லும், ஆணொழி மிகுசொல்லும் என இருவகைப்படும்.*

**(வ-று.)** *உயர்திணைக்கண் பெயரிற் பிரிந்த பெண்ணொழி மிகு சொல் வருமாறு: 'வடுகரசர் ஆயிரவர் மக்களை யுடையர்' என வரும்.*

அத் திணைக்கண் பெயரிற் பிரிந்த ஆணொழி மிகுசொல் வருமாறு; 'பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கண் நால்வர் மக்கள் உளர்' என வரும்.

இனி, அத் திணைக்கண் தொழிலிற் பிரிந்த பெண்ணொழி மிகு சொல் வருமாறு: 'அரசர் ஆயிர மக்களொடு தாவடி போயினார்' என வரும்.

அத் திணைக்கண் தொழிலிற் பிரிந்த ஆணொழி மிகுசொல் வருமாறு: 'இன்று இவ்வூரெல்லாம் தைநீர் ஆடுப' என வரும்.

இனி, அஃறிணைக்கண் வருமாறு: 'நம்மரசன் ஆயிரம் யானை யுடையன்' என வரும்.

இஃது அத் திணையிற் பெயரிற் பிரிந்த பெண்ணொழி மிகு சொல்:

'நம்பி நூறு எருமை யுடையன்' என வரும்; இஃது அத் திணையிற் பெயரிற் பிரிந்த ஆணொழி மிகு சொல்.

இனி, அத் திணைக்கண் தொழிலிற் பிரிந்து வருமாறு: 'இன்று இவ்வூர்ப் பெற்ற மெல்லாம் உழவொழிந்தன' என வரும்; இஃது அத் திணைக்கண் தொழிலிற் பிரிந்த பெண்ணொழி மிகுசொல்.

'இன்று இவ்வூர்ப் பெற்றமெல்லாம் அறங் கறக்கும்' எனவரும்; இஃது அத் திணைக்கண் தொழிலிற் பிரிந்த ஆணொழி மிகுசொல்.

இனி, 'எல்லாம்' என்றதனான், ஆணொழி மிகுசொல்லும், பெண் ணொழி மிகுசொல்லும் அன்றிச் சிறப்புப் பற்றி நிற்பனவும், பொதுவாய் நிற்பனவும், மிகுதி வகையான் நிற்பனவும் கொள்க. அவை வருமாறு:

'அரசர் பெருந் தெரு' என்பது சிறப்புப்பற்றி வந்தது.

'ஆ தீண்டு குற்றி', 'ஆனதர்' என்பன பொதுவாய் நிற்பன.

இனி, மிகுதி வகையாற் சொல்லுவன வருமாறு: 'இவர் பெரிதுங் கால்கொண் டோடுப', 'இவர் பெரிதுஞ் சோறுண்ப' எனவரும் உயர் திணைக்கண்.

இனி, அஃறிணைக்கண், 'இவ்வெருது புற்றின்னும்' எனவரும்.

இவையெல்லாம் மிகுதி வகையான் விளக்கினவாறு. (50)

## திணைவிராய் எண்ணப்பட்ட பெயர்கள் முடிபுகொள்ளுமாறு

51. பலவயி னானு மெண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது திணைவழு அமையு மாறு கூறுதல் நுதலிற்று.

**உரை:** பலவிடத்தினானும் உயர்திணையும் அஃறிணையும் விரவி எண்ணப்படும் பொருள் அஃறிணை முடிபினவாம் செய்யு ளகத்து எ-று.

**(வ-று.)**

*''வடுக ரருவாளர் வான்கரு நாடர்*
*சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறும்*
*குறுகா ரறிவுடை யார்''*

என வரும்.

இனிப் 'பலவயினானும் அஃறிணை முடிபின செய்யுளுள்ளே' எனவே, சிலவயினான் அஃறிணை விரவாது உயர்திணையான் எண்ணி, அஃறிணை முடிபிற்றாகலும் உண்டு செய்யுளகத்து என்றவாறாம்.

அது வருமாறு:

*''பாணன் பறையன் துடியன் கடம்பனென்*
*றந்நான் கல்லது குடியு மில்லை''* (புறம். 335)

எனவரும். *(51)*

## பலபொரு ளொருசொல் இருவகைய எனல்

52. வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொலென்று
ஆயிரு வகைய பலபொரு ளொருசொல்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், பல பொருள் ஒரு சொல்லின் வகைமை உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** வினையான் வேறுபடும் பலபொருள் ஒரு சொல்லும், வினையான் வேறுபடாத பல பொருள் ஒரு சொல்லும் என அவ்விரண்டு வகைப்படும் பல பொருள் ஒரு சொல் எ-று.

## மற்றொரு படியிற் கண்ட உரை:

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஒரு சொல்லான் வரும் பலபொருள் வகை கூறுதல் நுதலிற்று.

**உரை:** பலபொருள் குறிக்கும் ஒரு சொல், வினை வேறுபடுகின்ற பலபொருள் ஒரு சொல் என, வினை வேறுபடாஅப் பலபொருள் ஒரு சொல் என இருவகைப்படும் எ-று.

பலபொருள் குறிக்கும் ஒரு சொல்லினைப் பிறவகைப்படுத்திப் பகுத்தல் ஒல்லுமெனினும் வேறுபடுத்திக் கோடற்கண் வினையே சிறப்புடைமையின் இங்ஙனம் வகுத்தோதினார். *(52)*

## வினை வேறுபடும் பலபொரு ளொருசொல்

53. அவற்றுள்
வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினுந்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், வினை வேறுபடூஉம் பலபொருளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** முற்படப் பகுத்தோதியவற்றுள், வினை வேறுபடூஉம் பலபொரு ளொருசொல்லை அறியுமிடத்து, வேறுபடு வினையினா னும் இனத்தினானும் சார்பினானும் அறியப்படும் எ-று.

வேறுபடு வினையான் அறிய வருமாறு.

*மா தளிர்த்தது, மா பூத்தது, மா காய்த்தது* எனவரும்; இவ்வினை மரமாவிற் கல்லது வாராது. பிறவும் அன்ன.

*'மாவும் மருதும் ஓங்கின'* என்பது, இனத்தான் மாமரம் என விளங்கும்.

*'மாவும் மரையும் புலம்படர்ந்தன'* என்றால், விலங்கு மா என்பது அறியப்படும்.

இனிச் சார்பினான் அறியவருமாறு: விற்பற்றி நின்று, *'கோல் தா'* என்றால், கணைக்கோலின்மேல் நிற்கும், அதற்குச் சார்பு அதுவாகலான். குதிரைமேலிருந்து, *'கோல் தா'* என்றால் மத்திகைக் கோலாம் ஆகலானும், சுள்ளற்கோலாம் ஆகலானும் செல்லும்; அதற்குச் சார்பு அதுவாகலான். பிறவும் அன்ன. *(53)*

## மேலதற்கோர் புறனடை

54. ஒன்றுவினை மருங்கி னொன்றித் தோன்றும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், அம்மூன்று வகையான் உணர்ந்தவாறு போலாது, உணராமை நிற்குமாறுடைத்து இச்சொல் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** ஒன்று வினை என்பது - பொது வினை; பொது வினையா யிற் பகுதியுணராமற் றோன்றும் எ-று.

அது வருமாறு: *'மா வீழ்ந்தது'* என்றவிடத்து, இன்ன மா என்பது உணர்த்தல் ஆகாது; பொதுவாய் நிற்கும். *(54)*

## வினை வேறுபடாப் பலபொருள் ஒருசொல்

55. வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், வினை வேறுபடாஅப் பல் பொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** வினை வேறுபடாஅப் பல பொருள் ஒரு சொல்லை ஆராயுமிடத்து இன்னதென்று அறியக் கிளந்தே சொல்லுக எ-று.

**(வ-று.)** *'ஆன் கன்று நீரூட்டுக'* என வரும்.

*நினைதல் என்பது ஆராய்தல்.*

ஆராயுமிடத்துக் கிளந்து கூறுக எனவே, ஆராய்ச்சியில்லாத இடைத்தாயிற் கிளவாதே கூற அமையும் என்பதே அமையும். ஆராய்ச்சி யுடைய நிலம் என்பது எருநிலம்; யாதோவெனின்,

'கன்று நீரூட்டுக' என்றவிடத்து, ஆன் கன்றும், எருமைக் கன்றும், பூங்கன்றும் எனப் பலவும் ஆங்கு உளவாயின், அவன் சொன்ன கன்று நிற்பப், பிறிதொரு கன்று நீரூட்டல் வழூவாம். அதனான், இன்னுழி இன்ன கன்று என்று கிளந்து சொல்லுக; அல்லாக்கால், இன்ன கன்று என்று கிளவாதே சொல்ல அமையும். மேற்சூத்திரத்தின் துணிபும் இதுவே.

வேறுபடு வினையும் இனமும் சார்பும் வேண்டாமை உணர்புழி யாயின் அவையின்றியும் அமையும் என்பது. *(55)*

## பொருள் கூறுதற்கண் வரும் மரபு

56. குறித்தோன் கூற்றந் தெரித்துமொழி கிளவி.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மரபு வழுக்காத்தல் நுதலிற்று.

**உரை:** தான் ஒரு பொருளைச் சொல்லக்கருதுமேல், அதனை இற்றென்று தெரித்துச் சொல்லுக எ-று.

**(வ-று.)** உலற்றற் நிறமின்றிப் பயின்றார் ஒரு சான்றார் மயிர் நீட்டி உலறிநின்றாரைக் கண்டு, ஒருவன், எம்பெருமான் உலறிநின்றீரால் என்றக்கால், வாளாதே உலறினேன் என்னற்க, இது காரணத்தான் உலறினேன் என்க; இது தனக்கு உற்றதுரைத்தது. பிறவும் அன்ன.

இது செப்பு வழுவற்க என்று காத்தவாறு என்ப ஒரு திறத்தார்.

இனித் தெரித்துச் சொல்லாக்கால் வழுவேயாயினும் அமைக எனக் காத்தவாறு.

இனி, ஒரு கருத்து: உலகினுள் ஒப்பமுடிந்த பொருளை ஒருவன் ஒவ்வாமை சொல்லுமே எனின், இது காரணத்தின் ஒவ்வாமை நோக்கிச் சொல்லினன் என்று தெரித்துச் சொல்லுக என்றவாறு.

*''பல்லோர்தோ டோய்ந்து வருதலாற் *பூம்பொய்கை*
*நல்வய லூரநின் றார்புலாஅல் - புல்லெருக்கம்*
*மாசின் மணிப்பூணெம் மைந்தன் மலைந்தமையாற்*
*காதற்றாய் நாறு மெமக்கு.''*

என வரும். *(56)*

* **(பாடம்)** பாய்புனல்.

## உயர்திணைப் பெயர்களிற் சில அஃறிணை முடிபுகோடல்

57. குடிமை யாண்மை யிளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை யரசே மகவே குழவி

தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென்று
ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தி னுணருங் கிளவி யெல்லாம்
உயர்திணை மருங்கின் நிலையின வாயினும்
அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், திணை வழுக்காத்தல் நுதலிற்று.*

**உரை:** குடிமை யாண்மை தொடக்கத்தனவும், பிறவும் அந் நிகரன எல்லாம் உயர்திணையல்லவும், உயர்திணைப் பொருளைச் சார்ந்து நிகழுங்குணங்களும், உயர்திணைப் பொருளைப் பற்றுக் கோடாக நிகழ் தலின், உயர்திணையைப் போல வழங்கல் வேண்டுமே யெனினும், அஃறிணையைச் சொல்லியாங்குச் சொல்லுக எ-று.

**(வ-று.)**

| | | |
|---|---|---|
| *அவர்க்குக் குடிமை நன்று:* | ... ... | *குடிமை,* |
| *அவர்க்கு ஆண்மை நன்று:* | ... ... | *ஆண்மை,* |
| *அவர்க்கு இளமை நன்று:* | ... ... | *இளமை,* |
| *அவர்க்கு மூப்பு நன்று:* | ... ... | *மூப்பு,* |
| *அவர்க்கு அடிமை நன்று:* | ... ... | *அடிமை,* |
| *அரசு வன்மை நன்று:* | ... ... | *வன்மை,* |
| *விருந்து வந்தது:* | ... ... | *விருந்து,* |
| *அக்குழு நன்று:* | ... ... | *குழூஉ,* |
| *பெண்மை அடங்கிற்று:* | ... ... | *பெண்மை,* |
| *அரசு நிலைத்தது:* | ... ... | *அரசு,* |
| *மகவு நலிந்தது:* | ... ... | *மகவு,* |
| *குழவி யழுதது:* | ... ... | *குழவி* |

*என வரும்.*

*அலி வந்தது* - இது தன்மை திரிபெயர்.

*குருடு வந்தது* - இஃது உறுப்பின் கிளவி.

‘என் காதல் பொலிவாயிற்று’

‘என் யானை வந்தது’

*இவை முறையே காதலும் சிறப்பும் கெழீஇ வந்தன. காதல் கிள்ளை யினையும், யானை மகவினையும் பற்றி வந்தன.*

*கெழீஇயிலி வந்தது* - இது செறற்சொல்.

விறற்சொல் விறலை யுணர்த்துதல்; அது,

'பெருவிறல் வந்தது'

என வரும்.

பேடி வந்தது, குரிசில் வந்தது

என்னுந் தொடக்கத்தனவும் அறிந்துகொள்க.

இதுவும் ஒருசார் ஆசிரியன் உரைப்பது:

இனிக் குடிமை யாண்மை என்றித்தொடக்கத்தன ஒருவன், ஒருத்தி, பலர் என்னும் மூன்று பாற்கும் பொதுவாய்ப் பின் முடியுங்கால் அஃறிணை முடிபிற்றாக என்பது. வன்மை என்பது மூன்று பாற்கும் பொதுவாய் நிற்பது யாண்டுப் பெறுதுமோ எனின், வழக்குப் பெற்றுழிக் கொள்க. (57)

## இதுவுமது

58. காலம் உலக முயிரே யுடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவு மன்ன
ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா யுயர்திணை மேன.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் உயர்திணையான் முடியாது, அஃறிணையான் முடியும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** காலம், உலகம் என்றித் தொடக்கத்தனவும் உயர்திணை யெனினும் உயர்திணைப் பால் பிரிந்து இசையா; அஃறிணையான் இசைக்கும் எ-று.

**(வ-று.)**

| | | |
|---|---|---|
| இவற்குக் காலம் ஆயிற்று: | ... ... | காலம், |
| உலகம் பசித்தது: | ... ... | உலகம், |
| உயிர் போயிற்று: | ... ... | உயிர், |
| உடம்பு நன்று: | ... ... | உடம்பு, |
| இவற்குத் தெய்வம் ஆயிற்று: | ... ... | தெய்வம், |
| இவ் வினை நன்று: | ... ... | வினை, |
| இவனைப் பூதம் புடைத்தது: | ... ... | பூதம், |
| ஞாயிறு எழுந்தது: | ... ... | ஞாயிறு, |
| திங்கள் எழுந்தது: | ... ... | திங்கள், |
| சொல் நன்று: | | ... ... சொல் |

என வரும்.

'பிறவும்' என்றதனான், 'வெள்ளி எழுந்தது, செவ்வாய் எழுந்தது' என்பன கொள்க.

*இச் சூத்திரந் தெய்வஞ் சுட்டிய பொருள் அஃறிணையான் முடிபேற்றல் கூறினார் என்ப ஒரு திறத்தார். அற்றன்று, ஈண்டுத் தெய்வ மும் உள, மக்களும் உளர்.*

*இனி, மேற் சூத்திரம், 'முன்னத்தான் உணரப்படும்' என்றவாறு கூறினார், இச்சூத்திரம் உயர்திணைப் பொருளே அஃறிணை முடிபு ஏற்பனவற்றிற்குக் கூறினார் என்பது.*

*உலகம் என்பது உலகத்தார் மேற்று; உடம்பு என்பது உடம் புடையார் மேற்று என்பது. (58)*

### குடிமை ஆண்மை என்பனவற்றிற்குப் புறனடை

59. நின்றாங் கிசைத்த லிவணியல் பின்றே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், 'குடிமையாண்மை' (கிளவி. 57) என்பதற்குப் புறனடை கூறுதல் நுதலிற்று.*

**உரை:** *இச் சொல்லப்பட்டவையிற்றுக்கு நின்றாங்கு இசைத்தல் இயல்பின்று என்பது.*

*எனவே, மேற் சூத்திரத்திற் சொல்லப்பட்டவையிற்றுக்கு நின் றாங்கு இசைத்தல் இயல்புமாம் என்பது.*

**(வ-று.)** *குடிமை நல்லன், வேந்து செங்கோலன் எனவரும். (59)*

### 'காலம் உலகம்' என்பனவற்றிற்குப் புறனடை

60. இசைத்தலும் உரிய வேறிடத் தான.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது, 'காலம் உலகம்' (கிளவி. 58) என்பதற்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *வேறிடம் என்பது வேறு வாய்பாடு; வேறு வாய்பாட்டாற் சொல்ல இசைக்கும்; ஓதிய வாய்பாட்டாற் சொல்ல இசையாது என்பது.*

**(வ-று.)** *காலன் கொண்டான், உலகத்தார் பசித்தார் எனவரும். (60)*

### எடுத்த மொழி இனம் செப்பும் என்றல்

61. எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், 'இனச் சுட்டில்லாப் பண்பு கொள் பெயர்க்கொடை' (கிளவி. 18) என்னும் சூத்திரத்திற்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *மேற் 'பண்புகொள் பெயர்க் கொடை' (கிளவி. 18) வழக்கினுள் இனம்பெற்றே நிற்க என்றான், இனி இனமின்றியும் நிற்கும் வழக்கினுள் என்றவாறு.*

**(வ-று.)** *பெருங்கொற்றன், பெருஞ்சாத்தன் எனவரும்.*

அற்றன்று, அவையும் ஆண்டே யடங்கும்; மற்றென்னை கருதியது எனின், இஃது அருத்தாபத்தி பெற்றது என்ப.

*''விதந்த மொழியினம் வேறுஞ் செப்பும்''*

என்பது பரிமாண சூத்திரம். இதுவும் அப்பொருட்டு.

**(வ-று.)** 'மேலைச்சேரிக் கோழி அலைத்தது' என, 'கீழைச்சேரிக் கோழி அலைப்புண்டமை' சொல்லாமையே முடிந்ததாம்; 'குடங் கொண்டான் வீழ்ந்தான்' என்றவழிக் குடம் வீழ்ந்தமை சொல்லாமையே முடிந்ததாம். இந்நிகரன இனஞ் செப்பின.

'செப்பலும் உரித்து' எனவே செப்பாதன, 'ஆ வாழ்க, அந்தணர் வாழ்க' என்றவழி, ஒழிந்தனவும், ஒழிந்தாரும் சாக என்றவாறு அன்று என்பதாம். *(61)*

### பன்மை சுட்டிய பெயர்கள் முடியுமாறு

62. கண்ணுந் தோளு முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறுங் கடப்பா டிலவே
தம்வினைக் கியலு மெழுத்தலங் கடையே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், திணைவழுக் காத்தல் நுதலிற்று.

**உரை:** கண்ணும் தோளும் முலையும் பிறவும் பன்மைப் பாலாற் கூறுதல் கடப்பாடில; தம் வினைக்கியலும் எழுத்தல்லாத விடத்து எ-று.

**(வ-று.)** கண் நல்லள், தோள் நல்லள், முலை நல்லள் எனவரும்.

'பிறவும்' என்றதனான், புருவம் நல்லள், காது நல்லள் என்பன போல்வன கொள்க.

இனி, ஒருமை சுட்டிய சினைக்கிளவி ஒருமை கூறும் கடப்பா டில்லன. அவற்றிற்கு ஒத்து என்னை பிறவெனின், மேற் 'கால முலகம்' (கிளவி. 58) என்று திணைவழுக்காத்து வாராநின்ற அதிகாரத் திடையே 'எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே' (கிளவி. 61) என்னும் சூத்திரத்தை இடனன்றி வைத்தார்; அது நிலமாகத் தந்து உரைத்தவற்றை யும் கொள்க என்பது.

**(வ-று.)** மூக்கு நல்லள், கொப்பூழ் நல்லள் எனவரும். *(62)*

### முதலாவது கிளவியாக்கம் முற்றிற்று.

# 2
# வேற்றுமையியல்

### வேற்றுமை இத்தனை என்பது

63. வேற்றுமை தாமே ஏழென மொழிப

என்பது சூத்திரம்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், வேற்றுமை எனப்பட்ட சிலபொருள் உணர்த்தினமையின், வேற்றுமையியல் என்னும் பெயர்த்து. மேல் ஓத்தினுள் நால்வகைப்பட்ட சொற்களையும் பொருள்கள் மேலாமாறு கூறிப் போந்தான்; அவற்றுள் முதலது பெயர்ச்சொல்; அதனது இலக்கணம் உணர்த்திய எடுத்துக் கொண்டான். இது மேலோத்தினோடு இயைபு. எங்ஙனம் உணர்த்தினானோ எனின், பயனிலை செப்பலும், உருபேற்றலும், காலந்தோன்றாமையும் பெயரது இலக்கணம் என உணர்த்தினான் என்பது.

மற்று, இத்தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், தன்னான் உணர்த்தப்படும் பொருளை இனைத்து என்று வரையறுத்தல் நுதலிற்று.

**உரை:** வேற்றுமை என்று சொல்லப்படுவன எழுவகைய எ-று.

இவ்வேற்றுமைகள் பொருள்களை வேற்றுமை செய்யுமாறு, அவற்றவற்றுச் சிறப்புச் சூத்திரத்தான் அறிக. (1)

### வேற்றுமை எட்டெனப்பது

64. விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோவெனின், ஒழிந்த வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** விளிகொள்வதன்கண் விளியோடு எட்டு வகைப்படும் எ-று.

வேற்றுமை விளிகொள்வது என்பது பெயரதன்கண் விளி என்றவாறு. விளித்தல் என்பது கூவுதல்.

இது(வும்) மேலவற்றோடு ஒத்த சிறப்பின்றாகலான் வேறு போந்து கூறினான் என்பது. என்னை ஒவ்வாவாறு எனின், இதனை ஏற்கும் பெயரும் ஏலாப்பெயரும் உள என்க. அஃதாமாறு விளிமரபினிற் கூறுதும். (2)

## வேற்றுமையின் பெயரும் முறையும்

65. அவைதாம்
பெயர் ஐ ஒடு கு
இன் அது கண் விளி என்னும் ஈற்ற.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், வேற்றுமைகளின் பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** அப்பெயரே பெயர், அம்முறையே முறை; ஈற்ற என்பது இவ் விளிவேற்றுமை ஈறாகவுடைய என்றவாறு. அவைதாம் என்பது மேற் சொல்லப்பட்டன எ-று. *(3)*

## எழுவாய் வேற்றுமை

66. அவற்றுள்,
எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நிறுத்த முறையானே முதற்கண் நின்ற பெயர் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** எழுவாய் வேற்றுமைப்பெயர் முதல்வேற்றுமைப் பெயர் என்றவாறு. இனித் 'தோன்றுநிலை' என்றதனான், மேற் சூத்திரத்துக் கூறப்படும் அறுவகைப் பயனிலையும் தோன்ற நிற்கும் பெயர் எழுவாய் வேற்றுமையாவது என்றவாறாம்.

என்னை, 'ஆயன் சாத்தன் வந்தான்' என்புழி, ஆயன் என்பதூஉம் பெயர், சாத்தன் என்பதூஉம் பெயர்; ஆயினும், இரண்டற்கும் இரண்டு பயனிலை தோன்ற நில்லாமையாற் சாத்தன் என்பதூஉம் வந்தான் என்பதூஉம் ஆயன் என்பதற்கே பயனிலை; அதனால் சாத்தன் என்பது ஆண்டு எழுவாய் வேற்றுமையாயிற்று என்பது.

இனி, பெயரை எழுவாய் வேற்றுமை யென்றும் விளிவேற் றுமை யென்றும் உரைத்தீரால், இரண்டனுக்கும் தம்முள் வேற்றுமை யென் னெனில், ஈறு திரியாது உருபேற்றல் எழுவாய் வேற்றுமையது இலக் கணம்; ஈறு திரிந்து உருபேற்றல் விளிவேற்றுமைய திலக்கணம் என்பது அறிக. *(4)*

## எழுவாய் பயனிலை ஏற்குமாறு

67. பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை உரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்று
அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேற்சொல்லப்பட்ட எழுவாய் வேற்றுமை என்பது இவ் வறுவகைப்பட்ட பயனிலையும் ஏற்பது என்பது உணர்த்துதல் நுதலிற்று.

'ஆ உண்டு' என்பது பொருண்மை சுட்டல்.

'ஆ செல்க' என்பது வியங்கொள வருதல்.

'ஆ கிடந்தது' என்பது வினைநிலை யுரைத்தல்.

'ஆ எவன்?' என்பது வினாவிற் கேற்றல்.

'ஆ கரிது' என்பது பண்புகொள வருதல்.

'ஆ பல' என்பது பெயர்கொள வருதல்.

இவை எல்லாம் பெயர்வேற்றுமைப் பொருள் என்பது.

'அன்றி அனைத்தும்' என்பது அத்துணைப் பொருள் எல்லாம் என்றவாறு. *(5)*

## தொகைப் பெயரும் பயனிலை கொள்ளுமாறு

68. பெயரின் ஆகிய தொகையுமா ருளவே
அவ்வும் உரிய அப்பா லான.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், தொகைச்சொல்லும் பயனிலை ஏற்கும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** *அறுவகைத் தொகைச் சொல்லும் எழுவாய் வேற்றுமைப் பயனிலைப்பாடு பிழையாது வரும் எ-று.*

**(வ-று.)**

*யானைக் கோடு உண்டு,*

*யானைக் கோடு செல்க,*

*யானைக் கோடு வீழ்ந்தது,*

*யானைக் கோடு யாது,*

*யானைக் கோடு வெளிது,*

*யானைக் கோடு பத்து*

எனவரும். பிறவுமன்ன.

இனி ஒரு கருத்து - 'பெயரினாகிய தொகையுமா ருளவே' என்பது, பெயரும் பெயருந் தொக்க தொகையும் என்றவாறு. உம்மையான் வினையும் பெயருந் தொக்க தொகையும் எழுவாய் வேற்றுமைப் பயனிலைப் பாடு பிழையாது வரும் என்று கொள்க.

அது, 'கொல் யானை' என்பது. *(6)*

## பெயர்கள் அனைத்தும் பயனிலைகொண்டுவரும் என்றல்

69. எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் எழுவாய் வேற்றுமைக் காவதொரு திறமுணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** எல்லாப் பெயரும் பயனிலைப்பட நிற்றற்றன்மையின் திரியாமை அதற்குச் செவ்விது என்ப; பிறிது அதற்குச் செவ்விய தாகாமையும் உடையது எ-று.

யாதோ எனின், உருபேற்றலும் பெயரதிலக்கணம். அவ்வுரு பேற்றலை ஒரோ பெயர் உடையதாகாது எனலுமாம்.

ஒரோ பெயரென்பது என்னை? நீயிர் என்பது பெயர்; பெயராயினும், நீயிரை என்று உருபேலாது. பிறவும் அன்ன. (7)

## உருபு நிற்கும் இடம்

70. கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகும் இயற்கைய என்ப.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், உருபேற்றலும் பெயரதிலக்கணம் என உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** மேல் அவைதாம், ஐ ஒடு கு இன் அது கண் என்றோதிய முறையாற் கிடந்த உருபு, முறைமையின் திரியாதே பெயரது ஈற்றுக்கண் வந்து * நிற்கும் இயல்பினையுடைய எ-று.

**(வ-று.)** சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் எனவரும்.

'நிலைதிரியாது' என்றது, இவை இடைச்சொல்லாகலான், தம்மீறு திரிதல் என்னும் இலக்கணமுடைய கொல்லோ எனின், அவை இல என்றற்குக் கூறினான் என்பது. அன்றியும் முன்னர் வேற்றுமை மயங்கியலுள்,

*''கு ஐ ஆன் என வரூஉம் இறுதி*
*அவ்வொடு சிவணும்''* (வேற். மயங். 25)

என்று செய்யுட்கண் திரிபு கூறுப வாகலானும் அது சொல்லினான் என்பது. (8)

* **(பாடம்)** நிற்றல் இயல்பு

## பெயர்க்கோர் இலக்கணம்

71. பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவுமது, பெயர்க் கண்ணே கிடந்ததோர் இலக்கணம் நுதலிற்றாகலின்.

**உரை:** பெயர்ச் சொல் காலந்தோன்றா; தொழிற் பெயராயிற் காலம் தோன்றும் எ-று.

**(வ-று.)** சாத்தன் என்பது காலந்தோன்றாது, உண்டான் என்பது காலந்தோன்றிற்று. மற்றுத் தொழிற்பெயரெல்லாங் காலந்தோன்றும் எனின் அற்றன்று, பெயர்ச்சொல் காலந் தோன்றா எனவே, தொழிற் பெயர் காலந் தோன்றுதலும் தோன்றாமையும் உடைய என்பதாம்.

*இனி ஒரு கருத்து: தொழில் நிலைப் பெயர்ச்சொல் காலந் தோன்றா, காலம் ஒட்டுந் தொழிற்பெயர் அல்லாதவிடத்து என்றவாறு.*

*காலந்தோன்றாதன: உண்டல், தின்றல் என்பன; இவை அத் தொழின்மேல் நின்ற பெயர். இனிக் காலம் ஒட்டும் தொழிற் பெயராவன: உண்டான், தின்றான் என்பன; இவை அத்தொழில் செய்வான்மேல் நின்ற பெயர். (9)*

## இரண்டாவது இப் பொருட்கண் வரும் என்பதும் பொருள் வேறுபாடும்

72. இரண்டா குவதே
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு
அவ்விரு முதலின் தோன்றும் அதுவே
காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பின் புகழின் பழியின் என்றா
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்றா
அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்
நிறுத்தலின் அளவின் எண்ணின் என்றா
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா
அன்ன பிறவும் அம்முதற் பொருள
என்ன கிளவியும் அதன்பால என்மனார்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இஃது இரண்டாம் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இரண்டாம் எண்ணு முறைமைக்கண்ணது ஐ என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல்; அது யாண்டு வரினும் வினையும் வினைக்குறிப்பும் என அவ் விரண்டையும் தனக்குத் தோற்று நிலமாக உடைத்து எ-று.

*அவ்விரண்டும் நிமித்தமாகத் தோன்றும் எனினும் அமையும்.*

*'மரத்தைக் குறைத்தான்' என்பது வினைபற்றி வந்தது.*

*'குழையை யுடையன்' என்பது வினைக்குறிப்புப் பற்றி வந்தது.*

*'அதுவே' என்பது அவ்விரண்டாம் வேற்றுமை தானே என்று தெரித்தவாறு.*

*இனி, அவ் வினையும் வினைக்குறிப்பும் பற்றி, அது வருமாற்றுக்கு உதாரணப் பகுதி காட்டுதும்:*

*ஊரைக் காக்கும், கிளியை ஓப்பும், யானையை யூரும், எயிலை யிழைக்கும், தாயை ஒக்கும், ஊரைப் புகழும், நாட்டைப் பழிக்கும்.*

*என்றா என்பது எண் இடைச்சொல்.*

*ஊரைப் பெறும், ஊரை யிழக்கும், மனைவியைக் காதலிக்கும், படையை வெகுளும், ஊரைச் செறும், தாயை உவக்கும், நூலைக் கற்கும். ஞாணை யறுக்கும், மரத்தைக் குறைக்கும், நெல்லைத் தொகுக்கும், வேலியைப் பிரிக்கும், பொன்னை நிறுக்கும், அரிசியை அளக்கும், அடைக் காயை எண்ணும், ஊரை யாக்கும், வாய்க்காலைச் சாரும், நெறியைச் செல்லும், சூதினைக் கன்றும், செய்யை நோக்கும், கள்ளரை யஞ்சும், நாட்டைச் சிதைக்கும் எனவரும்.*

*என்றா என்பன எண் இடைச் சொற்கள்.*

*ஈண்டு நின்ற 'இன்'களெல்லாஞ் சாரியை ஆயின.*

*'பிறவும்' என்றது இவையல்ல பிறவும் என்றவாறு.*

வினையும் வினைக்குறிப்பும் பற்றி வருவனவெல்லாம் இரண் டாம் வேற்றுமைப் பொருள.

*அவை: விரலை முடக்கும், நாவினை வளைக்கும் என்பன* போல்வன வினை.

*ஊரை யின்புடையான் என்பது* போல்வன வினைக்குறிப்பு.

*'அம் முதற்பொருள என்ன கிளவியும் அதன்பால என்மனார்' என்பது - அவ் வினையும் வினைக்குறிப்பும் பற்றி வருவனவெல்லாம் முதலாய் வரூஉம் எவ்வகைப்பட்ட சொல்லும் இவ்விரண்டாம் வேற்றுமைக் கூற்றன என்ப என்றவாறு.* *(10)*

## மூன்றாவது இப் பொருட்கண் வருமென்பதும் அதனை முடிக்கவரும் பொருள் வேறுபாடும்

73. மூன்றா குவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே
அதனின் இயற லதற்றகு கிளவி
அதன்வினைப் படுத லதனின் ஆதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனோ டியைந்த ஒருவினைக் கிளவி
அதனோ டியைந்த வேறுவினைக் கிளவி
அதனோ டியைந்த ஒப்ப லொப்புரை
இன்னான் ஏது ஈங்கென வரூஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், முறையானே மூன்றாம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** மூன்றாம் எண்ணு முறைமைக்கண்ணது ஒடு என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல்; அது வினை முதலும் கருவியும் என இரண்டனையும் தனக்குப் பொருளாக உடையது எ-று.

**(வ-று.)** 'நாயாற் கோட்பட்டான்' என்பது வினை முதல்பற்றி வந்தது. 'வேலான் எறிந்தான்' என்பது கருவிபற்றி வந்தது.

இனி, அவ் வினைமுதலும் கருவியும் பற்றி வருமாற்றை விரிக்கின்றார்: அதனினியறல்,

*''தச்சன் செய்த சிறுமா வையம்''* (குறுந். 41)

இது தச்சனாற் செய்யப்பட்டது என்பதாம்.

*அதற்றகு கிளவி:*

''வாயாற்றக்கது வாய்ச்சி'' என்பது.

*அதன் வினைப்படுதல்:*

''நாயாற் கோட்பட்டான்'' என்பது.

*அதனினாதல்:*

''வாணிகத்தானாயினான்'' என்பது.

*அதனிற் கோடல்:*

''காணத்தாற் கொண்ட அரிசி'' என்பது.

*அதனொடு மயங்கல்:*

''எள்ளொடு விராஅய அரிசி'' என்பது.

*அதனோடு இயைந்த ஒருவினைக் கிளவி:*

''சாத்தனொடு வந்தான் கொற்றன்'' என்பது.

*அதனோடியைந்த வேறுவினைக் கிளவி:*

''மலையொடு பொருத மாஅல் யானை'' என்பது.

*அதனொடியைந்த வொப்பல் ஒப்புரை:*

''முத்தொடு முழாக் கோத்து'' என்பது.

ஒவ்வாததனை ஒப்பித்தல் ஒப்பலொப்புரை.

இன்னான் என்புழியும் ஏதுவின்கண்ணும் வரும் மூன்றாம் வேற்றுமை. இன்னான் என்பது, 'கண்ணாற் கொத்தை, காலான் முடவன்' என்பன.

ஏது என்பது, 'முயற்சியாற் பிறத்தலான் சொல்லு நிலையாது' என்பது.

*அன்ன பிறவும் என்றதனான், பிறவும் வருவன எல்லாம் கொள்க. (11)*

## நான்காவது இப்பொருட்கு வருமென்பதும் அதனை முடிக்கும் பொருள் வேறுபாடும்

74. நான்கா குவதே
குவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொரு ளாயினுங் கொள்ளும் அதுவே
அதற்குவினை யுடைமையின் அதற்குடம் படுதலின்
அதற்குப்படு பொருளி னதுவாகு கிளவியின்
அதற்கியாப் புடைமையின் அதற்பொருட் டாதலின்
நட்பிற் பகையிற் காதலிற் சிறப்பினென்று
அப்பொருட் கிளவியு மதன்பால என்மனார்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், முறையானே நான்காம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *நான்காம் எண்ணுமுறைமைக்கண்ணது கு என்னும் பெயரை யுடைய வேற்றுமைக் கிளவி; ஈவதொரு பொருளை ஏற்க நிற்கும் அதுவே என்பது.*

**(வ-று.)** *'சாத்தற்குச் சோறு' என வரும்.*

*'எப்பொரு ளாயினும்' என்றார், மூன்றிடத்துப் பன்மையும் நோக்கி.*

*அதற்கு வினையுடைமை:*

*''கரும்பிற்கு வேலி'' என்பது.*

*அதற்குடம்படுதல்:*

*''சாத்தற்கு மகளுடம்பட்டார் சான்றோர்'' என்பது.*

*அதற்குப் படுபொருள்:*

*''சாத்தற்குப் படுபொருள் கொற்றன்'' என்பது.*

*அதுவாகு கிளவி:*

*''கடி சூத்திரத்திற்குப் பொன்'' என்பது.*

*அதற்கியாப்புடைமை:*

*''கைக்குயாப் புடையது கடகம்'' என்பது.*

*அதற் பொருட்டாதல்:*

*''கூழுக்குக் குற்றேவல் செய்யும்'' என்பது.*

*நட்பு:*

*''நாய்க்கு நட்புடையன்'' என்பது.*

*பகை:*

*''மக்கட்குப் பகை பாம்பு'' என்பது.*

காதல்:

''தாய்க்குக் காதலன்'' என்பது.

சிறப்பு:

''வடுகரசர்க்குச் சிறந்தார் சோழியவரசர்'' என்பது.

'அப்பொருட் கிளவி' என்பது, ஈண்டு ஏற்ற பொருளல்லனவும் வேற்றுமைக்கு உரிமை காட்டுவான் சொல்லினான் என்பது. ஏற்ற பொருண்மை விதந்து கூறினான் என்பது சிறப்பு நோக்கி.

பிறவும் அதன்பால ஆவன:

'பண்ணுக்குத் தக்கது பாடல்' 'பூவிற்குத் தக்கது வண்டு' என்பன போல்வன.

இன்னெல்லாஞ் சாரியை. (12)

**ஐந்தாவது இப்பொருட்கண் வரும் என்பதும் அதனை முடிக்கும் பொருள் வேறுபாடும்**

75. ஐந்தா குவதே
இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனின் இற்றிது என்னும் அதுவே
வண்ணம் வடிவே அளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்றா
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை என்றா
முதுமை இளமை சிறத்தல் இழித்தல்
புதுமை பழமை ஆக்கம் என்றா
இன்மை உடைமை நாற்றந் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதலென்று
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், முறையானே ஐந்தாம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** ஐந்தாம் எண்ணு முறைமைக்கண்ணது இன் என்னும் பெயரையுடைய வேற்றுமைக் கிளவி; இப்பொருளின் இத் தன்மைத்து இப்பொருள் என்பதனைப் பயப்ப வரும் அது எ-று.

**(வ-று.)** 'காக்கையிற் கரிது களம்பழம்' என வரும்.

இதனின் என்பது காக்கையின் என்பது; இற்று என்பது கரிது என்பது; இது என்பது களம்பழம் என்பது. எனவே, பொரூஉப் பொருளைத் தனக்குப் பொருளாக உடைத்து என்றவாறு.

ஐந்தாம் வேற்றுமை நான்கு பொருள் உடைத்து; பொரூஉப் பொருளும் நீக்கமும் எல்லையும் ஏதுவும் என.

அவற்றுள், பொரூஉப் பொருளை எடுத்துக் கூறினான் சிறப்புடைமையின்; ஒழிந்தனவற்றைப் போக்கிச் சொல்லும்.

வண்ணம்:

''காக்கையிற் கரிது களம்பழம்'' என்பது.

வடிவு:

''இதனின் வட்டம் இது'' என்பது.

அளவு:

''இதனின் நெடிது இது'' என்பது.

சுவை:

''இதனின் தீவிது இது'' என்பது.

தண்மை:

''இதனின் தண்ணிது இது'' என்பது.

வெம்மை:

''இதனின் வெய்யது இது'' என்பது.

அச்சம்:

''கள்ளரின் அஞ்சும்'' என்பது. (இஃது ஏது)

'என்றா' என்பது எண் இடைச் சொல்.

நன்மை:

''இதனின் நன்று இது'' என்பது.

தீமை:

''இதனின் தீது இது'' என்பது.

சிறுமை:

''இதனிற் சிறிது இது'' என்பது.

பெருமை:

''இதனிற் பெரிது இது'' என்பது.

வன்மை:

''இதனின் வலிது இது'' என்பது.

மென்மை:

''இதனின் மெலிது இது'' என்பது.

கடுமை:

''இதனின் கடிது இது'' என்பது.

'என்றா' என்பது எண் இடைச் சொல்.

*முதுமை:*

''இவனின் மூத்தான் இவன்'' என்பது.

*இளமை:*

''இவனின் இளையான் இவன்'' என்பது.

*சிறத்தல்:*

''இவனின் சிறந்தான் இவன்'' என்பது.

*இழித்தல்:*

''இவனின் இழிந்தான் இவன்'' என்பது.

*புதுமை:*

''இவனின் புதியன் இவன்'' என்பது.

*பழமை:*

''இவனின் பழையன் இவன்'' என்பது.

*ஆக்கம்:*

''இவனின் ஆயினான் இவன்'' என்பது. (இஃது ஏது)

'என்றா' என்பது எண் இடைச் சொல்.

*இன்மை:*

''இவனின் இலன் இவன்'' என்பது.

*உடைமை:*

''இவனின் உடையன் இவன்'' என்பது.

*நாற்றம்:*

''இதனின் நாறும் இது'' என்பது.

இவையெல்லாம் பொரூஉப் பொருள.

*தீர்தல்:*

''ஊரின் தீர்ந்தான்'' என்பது; இது நீக்கம்.

*பன்மை:*

''இவரின் பலர் இவர்'' என்பது.

*சின்மை:*

''இவரின் சிலர் இவர்'' என்பது.

இவையும் பொரூஉப் பொருள.

*பற்றுவிடுதல்:*

'ஊரின் பற்றுவிட்டான்'. இதுவும் நீக்கம் என்பது.

'அன்ன பிறவும்' என்றதனான் எல்லைப் பொருளும், ஏதுவும், கொள்க.

எல்லை:

'கருவூரின் கிழக்கு'

'மருவூரின் மேற்கு' என்பன.

ஏது:

'முயற்சியிற் பிறத்தலின் ஒலி நிலையாது' என்பது. (13)

## ஆறாவது இப்பொருட்கண்வரும் என்பதும், அதனை முடிக்கும் பொருள் வேறுபாடும்

76. ஆறா குவதே
அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினும் இதன திதுவெனும்
அன்ன கிளவிக் கிழமைத் ததுவே
இயற்கையின் உடைமையின் முறைமையிற் கிழமையிற்
செயற்கையின் முதுமையின் வினையின் என்றா
கருவியின் துணையிற் கலத்தின் முதலின்
ஒருவழி யுறுப்பிற் குழூஉவின் என்றா
தெரிந்துமொழிச் செய்தியி னிலையின் வாழ்ச்சியின்
திரிந்து வேறுபடூஉம் பிறவு மன்ன
கூறிய மருங்கின் தோன்றுங் கிளவி
யாறன் பால என்மனார் புலவர்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், முறையானே ஆறாம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** ஆறாம் எண்ணுமுறைமைக்கண்ணது அது என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல்; தன்னொடு தொடர்ந்ததொரு பொருளையும் தன்னின் வேறாயதொரு பொருளையும் இதனது இது என்று கிழமை செப்பிநிற்றல் ஆறாம் வேற்றுமையது இலக்கணம் எ-று.

அதுவே என்பது அப்பொருளை விரிப்பான் தெரித்தவாறு.

'இதனது இது' என்னுங் கிளவிக்கிழமைத்து என்னாது, 'அன்ன' என்றதனான், இதற்குப் பிறிதுமோர் உருபு உண்டு என்க. அஃது யாதோ வெனின், அவன அவள என்னும் ஈற்றகரம். தன்னினும் என்புழித் தற்கிழமை ஐந்து வகைப்படும். ஒன்று பல குழீஇய தற்கிழமையும், வேறு பல குழீஇய தற்கிழமையும், ஒன்றியற் கிழமையும், உறுப்பின் கிழமையும், மெய்திரிந்தாய கிழமையும் என.

ஒன்று பலகுழீஇய தற்கிழமையது:

''எட்குப்பை'' என்பது.

வேறு பலகுழீஇய தற்கிழமையது:

''படையது குழாம்'' என்பது.

ஒன்றியற் கிழமையது:

''நிலத்தினது அகலம்'' என்பது.

உறுப்பின் கிழமையது:

''யானையது கோடு'' என்பது.

மெய்திரிந்தாகிய கிழமையது:

''எள்ளினது சாந்து'' என்பது.

பிறிதின் கிழமை இது போலப் பகுதிப்படாது.

இனி, அவ்விரண்டு கிழமையும் ஒட்டுமாறு காட்டுதும்.

இயற்கை:

''சாத்தன தியற்கை'' என்பது.

உடைமை:

''சாத்தன துடைமை'' என்பது.

முறைமை:

''ஆவினது கன்று'' என்பது.

கிழமை:

''சாத்தனது கிழமை'' என்பது.

செயற்கை:

''சாத்தனது செயற்கை'' என்பது.

முதுமை:

''அவனது முதுமை'' என்பது.

வினை:

''அவனது வினை'' என்பது.

கருவி:

''சாத்தனது வாள்'' என்பது.

துணை:

''அவனது துணை'' என்பது.

கலம்:

''சாத்தனது கலம்'' என்பது.

கலம் என்பது ஒற்றிக் கலத்தை.

முதல்:

''சாத்தனது முதல்'' என்பது.

ஒருவழியுறுப்பு:

''யானையது கோடு'' என்பது.

*குழூஉ:*

*''படையது குழூஉ''* என்பது.

*தெரிந்து மொழிச்செய்தி:*

*''கபிலரது பாட்டு''* என்பது.

*நிலை:*

*''சாத்தனது நிலை''* என்பது.

*வாழ்ச்சி:*

*''சாத்தனது வாழ்ச்சி''* என்பது.

*திரிந்து வேறுபட்டது:*

*''எள்ளினது சாந்து''* என்பது.

*''சாத்தனது சொல்''* என்பதும் அது.

*பிறவும் என்பது புறனடை.*

*கூறிய மருங்கிற் றோன்றும் கிளவி ஆறன்பால என்பது இரு கிழமையும் பற்றி வருவனவும் பிறவும் அதன்பால என்றவாறு.* *(14)*

## ஏழாவது இப் பொருட்கண் வரும் என்பதும் அதனுருபின் பாகுபாடும்

77. ஏழாகுவதே
கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே
கண்கால் புறமகம் உள்ளுழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை எனாஅ
முன்இடை கடைதலை வலம்இடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், முறையானே ஏழாம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *ஏழாம் எண்ணு முறைமைக்கண்ணது கண் என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல்; வினைசெய் இடமும் நிலமும் காலமும் என்ற மூன்று பொருட்கண்ணும் வரும் அது எ-று.*

*வினை செய்யிடம்:*

*''தட்டுப்புடைக்கண் வந்தான்''* என்பது.

*நிலம்:*

*''மாடத்துக்கண் இருந்தான்''* என்பது.

காலம்:

''மாரியுள் வந்தான்'' என்பது.

இனி, அவ் வேற்றுமையுருபு பலவாகலின். அவற்றை விரிக் கின்றார். அவை வருமாறு:

ஊர்க்கண்ணிருந்தான், ஊர்க்காலிருந்தான், ஊர்ப்புறத்திருந்தான், ஊரகத்திருந்தான், ஊருளிருந்தான், சான்றோருழைச் சென்றான், மாடத்தின் கீழிருந்தான், மாடத்தின் மேலிருந்தான், ஏர்ப்பின் சென்றான், 'காட்டுச்சா ரோடும்', ஊரய லிருந்தான், ஊர்ப்புடை யிருந்தான்.

தேவகை என்பது திசைக்கூறு: அது, 'வடக்கண் வேங்கடம், தெற்கண் குமரி' என வரும்.

எனாஅ என்பது இடைச்சொல்.

தேர்முன் சென்றான், சான்றோரிடை யிருந்தான், கோயிற்கடைச் சென்றான், தந்தைதலைச் சென்றான், கைவலத்து உள்ளது கொடுக்கும், கையிடத்திருந்தான் எனவும் வரும்.

'அன்ன பிறவும்' என்றதனான் 'கிழவோ டேஎத்து' (இறை.கள. 8) என்னுந் தொடக்கத்தன கொள்க. (15)

## வேற்றுமையுருபுகள் தொக்கும் வரும் என்றல்

78. வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
ஈற்றுநின் றியலுந் தொகைவயின் பிரிந்தே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், வேற்றுமைக்கெல்லாம் கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** அக் கூறிய வேற்றுமைகள் தொக்கு முடியவும் வேண்டும்; அத் தொக்க வேற்றுமையுருபு விரியுங்கால் யாண்டு நின்று புலப்படுமோ வெனின், மொழியீற்றுக்கண்ணே புலப்படும் எ-று.

மற்று, 'ஈறு பெயர்க்காகும்' (வேற்றுமை 8) என்புழி விளங்காதோ வெனின், விளங்காது; ஆண்டு, உருபு பெயரதிறுதி வந்து நிற்கும் என்றார்; அங்ஙனம் நின்ற உருபு தொகும். தொகுத்தல் என்பது புலப்படாமை யன்றே; மற்று அது பின்பு புலப்படுங்கால் தான் நின்ற ஈற்றே புலப்படும் என்பது சொல்ல வேண்டும் என்பது. (16)

## அவ்வுருபு விரியுங்கால் படும் வேறுபாடு

79. பல்லா றாகப் பொருள்புணர்ந் திசைக்கும்
எல்லாச் சொல்லும் உரிய என்ப.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் வேற்றுமைக் கண்ணே கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** உருபு தொக்கும் விரிந்தும் நிற்கும் என்றார், அவ்வுருபே அன்றி, ஆண்டுப் பிற சொற்களும் உள, அவ்வுருபே போல வந்து ஒட்ட நிற்பன; அவையெல்லாம் அவ் வுருபேபோல ஆண்டே தொகுத்தலும் விரித்தலும் உடையன எ-று.

குதிரைத் தேர் என்பது, குதிரையாற் பூட்டப்பட்ட தேர்; ஆன் என்பது ஆண்டு உருபு; பூட்டப்பட்டது என ஆண்டு உருபல்லது. அஃது ஆண்டு உருபு தொக்கு நின்றாங்கே நிற்கவும் அமையும், விரித்துக் காட்டவும் அமையும் என்பது.

'பல் ஆறாகப் பொருள் புணர்ந்து இசைக்கும்' என்பது, பலவாற்றானும் பொருள் ஏற்ப வந்து ஒட்டுவன என்றவாறு. *(17)*

**இரண்டாவது வேற்றுமையியல் முற்றிற்று.**

# 3
# வேற்றுமை மயங்கியல்

### இரண்டாவது ஏழாவதொடு மயங்குதல்

80. கரும மல்லாச் சார்பென் கிளவிக்
குரிமையு முடைத்தே கண்ணென் வேற்றுமை

என்பது சூத்திரம்.

இவ் வோத்து என்ன பெயர்த்தோ எனின், வேற்றுமை தம்மின் மயங்கினமை உணர்த்தினமையின், வேற்றுமை மயங்கியல் என்னும் பெயர்த்து.

இத் தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இரண்டாவத னொடு ஏழாவது மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இரண்டாவது கருமச்சார்பும் கருமமல்லாச் சார்பும் என இரு பொருள் உடைத்து: தூணைச் சார்ந்தான் என்பது, கருமச் சார்பாவது; அதனையுறச் சாருமாதலான். இனி, அரசரைச் சார்ந்தான் என்பது கருமமில் சார்பு. அக் கருமமில் சார்ச்சிப் பொருண்மைக்கண் ஏழாவது வருதல் உரிமை யுடைத்து என்பது.

*வரலாறு: அரசரைச் சார்ந்தான் என்புழி அரசர்கட் சார்ந்தான் என்பதும் ஆக என்பது.* *(1)*

### இதுவுமது

81. சினை நிலைக்கிளவிக் கையும் கண்ணும்
வினைநிலை ஒக்கும் என்மனார் புலவர்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் இரண்டாவத னோடு ஏழாவதன் மயக்கமே கூறுதல் நுதலிற்று.

**உரை:** சினைப்பொருட்கு இரண்டாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் ஒத்த கிழமையவாம் எ-று.

**(வ-று.)** கண்ணைக்குத்தினார், கண்ணுட்குத்தினார் என வரும். *(2)*

### இதுவுமது

82. கன்றலுஞ் செலவும் ஒன்றுமார் வினையே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் அவ் விரண்டன் மயக்கமே யுணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** கன்றல் செலவு என்னும் பொருட்கு இரண்டாவதும் ஏழாவதும் தொழிலான் ஒக்கும் எ-று.

**(வ-று.)** சூதினைக் கன்றினான், சூதின்கட் கன்றினான்; நெறியைச் சென்றான், நெறிக்கட் சென்றான் எனவரும். (3)

### முதல்சினைப் பெயர்களில் வரும் உருபுகள்

83. முதற்சினைக் கிளவிக் கதுவென் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கை வருமே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், 'சினைநிலைக் கிளவிக் கையுங் கண்ணும்' (சூ. 2) என்னும் சூத்திரத்திற்குப் புறனடை யுணர்த்து தல் நுதலிற்று.

**உரை:** முதலும் சினையும் தொடருங்கால் முதற்பொருட்கண் ஆறாவது வருமேயெனின், சினைப்பொருட்கு இரண்டாவது வருக எ-று.

**(வ-று.)** 'யானையது கோட்டைக் குறைத்தான்' என வரும். (4)

### இதுவுமது

84. முதன்முன் ஐவரின் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளி தென்ப.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் அதற்கே புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** முதற்பொருட்கு இரண்டாவது வருமேயெனின், சினைப் பொருட்கண் ஏழாவது வருதல் தெளிவுடைத்து எ-று.

**(வ-று.)** 'யானையைக் கோட்டுக்கட் குறைத்தான்' என வரும்.

'தெள்ளிது' என்றதனான், 'யானையைக் கோட்டைக் குறைத்தான்' எனலுமாம். (5)

### முதலும் சினையும் சொல்லுவான் குறிப்பினவாதல்

85. முதலும் சினையும் பொருள்வேறு படாஅ
நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஐயமறுத்தல் நுதலிற்று.

**உரை:** இதுதான் சொல்லுவான் குறிப்பொடு படுத்த இடத்துச் சினைதான் முதலுமாம் எ-று.

**(வ-று.)** கோட்டது நுனியைக் குறைத்தான்; கோட்டை நுனிக்கண் குறைத்தான்; கோட்டை நுனியைக் குறைத்தான் எனச் சொல்லுவான்

குறிப்பொடு படுத்த இடத்துச் சினைதான் முதலு மாயிற்று. முதல் சினையாவது வந்தவழிக் கண்டுகொள்க. (6)

### பிண்டப்பொருளும் அவ்விலக்கணம் பெறல்

86. பிண்டப் பெயரும் ஆயியல் திரியா
பண்டியல் மருங்கின் மரீஇய மரபே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் ஐயமறுத்தல் நுதலிற்று.*

**உரை:** *பிண்டப் பெயரும் அதுவே; தெரியில் அப்பொருளின் வேறு பிண்டம் ஒன்றில்லை என விலக்கப்பட்டுக் கிடந்தது. வழங்கு மாற்றான் உண்டு போலுமாம் என்பது பிண்டப் பெயர் எ-று.*

*உறுப்பின் கிழமை ஒழித்து ஒழிந்த தற்கிழமையி னாயிற்று.*

**(வ-று.)** *எட்குப்பை(எள்ளது தொகுதி), நெற்குப்பை என்றால், எள்ளின் வேறு குப்பை, நெல்லின் வேறு குப்பை என்பதொன்றில்லை. எட்சாந்து(எள் துவையல்), கோட்டுநூறு (சங்குசுட்ட சுண்ணாம்பு) என்பனவும் அவை.* (7)

### ஒடு உருபு உயர்பொருளுணர்த்தும் பெயர்வழி வருதல்

87. ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது மூன்றாம் வேற்றுமைப் பொருட்கண்ணதொரு சொல்வன்மை யுணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *மூன்றாம் வேற்றுமைப் பொருள் விரிப்புழி, 'அதனோ டியைந்த ஒருவினைக் கிளவி' (வேற்றுமை 11) என்றான். அஃதாவது, ஒருவினையினுழை ஒடுக்கொடுத்துச் சொல்லுக என்றவாறு; ஆகலான் இவ்வாறு இச்சொல்லினான் இயைபுடைத்தாய் ஒருவினை கொண்டு வருங்கால் அவ்வொடு உயர்வுபற்றி வரும் எ-று.*

**(வ-று.)** *''அரசனொடு வந்தார் சேவகர்'' எனவரும்.*

*மற்று, 'நாயொடு நம்பி வந்தான்' என இழிவுபற்றி வருமால் எனின், உயர்வுதாம் பல: குலத்தான் உயர்தலும், தவத்தான் உயர்தலும், நிலையான் உயர்தலும், உபகாரத்தான் உயர்தலும் என; அவ்விழிந்தவழி ஒடு வைத்துச் சொல்லியது அந்நிலைக்கண் அது சிறப்புடைத்தாகலின் என்பது.* (8)

### மூன்றனும் ஐந்தனும் ஏதுப்பொருள் வருமெனல்

88. மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய
ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி
நோக்கோர் அனைய என்மனார் புலவர்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மூன்றாவதும் ஐந்தாவதும் ஏதுப் பொருட்கு ஒத்த கிழமைய என்பது உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *மூன்றாம் வேற்றுமையானும், ஐந்தாம் வேற்றுமையா னும் எடுத்தோதப்பட்ட ஆக்கமொடு புணர்ந்த ஏதுப் பொருண்மை ஆராயுங் கால் ஒருதன்மைய எ-று.*

**(வ-று.)** *வாணிகத்தான் ஆயினான்; வாணிகத்தின் ஆயினான் என வரும்.* *(9)*

## நோக்கல் நோக்கத்திற்கு ஏதுப்பொருளும், செயப்படு பொருளும் உரிமை ஆதல்

89. இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கமவ்
விரண்டன் மருங்கின் ஏதுவு மாகும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் மேற் சூத்திரத் திற்குரிய முடிவே சார்ந்தது என்றவாறு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *இரண்டாம் வேற்றுமை, நோக்கிய நோக்கமும், நோக்கல் நோக்கமும் என இரண்டு பொருளும் உடைத்து. மேல்தான், 'நோக்கலின்' (வேற்றுமை. 10) என்றான்; என்புழி, 'நோக்கலின்' எனவே அவ்விரண்டு நோக்கமும் அடங்கின எ-று.*

*நோக்கிய நோக்கம் என்பது பொறியான் நோக்குதல்: அது பூணை நோக்கினான் எனவரும்.*

*''நோக்கல் நோக்கம்'' என்பது,*

*''வானோக்கி வாழும்''* (குறள். 542)

*என்பது. இது கண்ணான் நோக்கியது அன்மையின் நோக்கு அல்நோக்கம் ஆயிற்று. அப் பொருண்மைக்கண்ணாயின் முன்னர்ச் சொல்லிய இரண்டு வேற்றுமைப் பொருளும் ஆம் என்றவாறு.*

**(வ-று.)**

*''வானோக்கி வாழும்''* (குறள். 542)

*என்றக்கால், வானை நோக்கி வாழும் என்பது; இனி, வானானாய உபகாரம் நோக்கி வாழும் என்பது; வானினாய உபகாரம் நோக்கி வாழும் என்பதூஉமாம்.* *(10)*

## ஆறாவதன் பொருளில் வரும் உயர்திணைத் தொகையில் நான்கன் உருபு விரிதல்

90. அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஆறாவது நான்காவதனொடு மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *மேல், 'இயற்கையின் உடைமையின் முறைமையின் (வேற்றுமை. 14) என, ஆறாவதனை முறைமைப் பொருட்கு உரித்தென்று*

ஓதினான்; அம் முறைமைப் பொருள் உயர்திணைக்காயின் அது என் உருபு கெடக் குகரம் வரும் எ-று.

**(வ-று.)** நம்பிக்கு மகன் எனவரும். நம்பியது மகன் என்புழி இழுக்குள்ளது கண்டு, அது காத்தவாறு. *(11)*

## தடுமாறு பொருளில் இரண்டாவதும் மூன்றாவதும் மயங்குமாறு

91. தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டும் மூன்றும்
கடிவரை இலவே பொருள்வயி னான.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இரண்டாவதும் மூன்றாவதும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டாம் வேற்றுமைப் பொருளும் மூன்றாம் வேற்றுமைப் பொருளும் ஒக்கும் எ-று.

**(வ-று.)** புலி கொல் யானை என்பது. அது விரிப்புழிப், புலியைக் கொன்ற யானை - புலி கொல் யானை; புலியாற் கொல்லப்பட்ட யானை - புலி கொல் யானை; என இரண்டற்கும் ஒக்கும்.

தடுமாறுதல் என்பது இரண்டற்கு உரித்தாய்ச் சென்று வருதல். ஈண்டுக் கோறல் தொழில் இரண்டற்கும் ஒக்கும். *(12)*

## மேலதற்கொரு புறனடை

92. ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப உணரு மோரே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் எடுத்தோதப்பட்ட தடுமாறு தொழிற்பெயரை உணரும் ஆறு இது என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** புலி கொல் யானை என்பது; அத் தொகைக்கு யானை என்பது ஈற்றது. அவ் விற்றுப் பெயர் முன்னர்ப் பொருளறிய வருஞ் சொல், 'மெய்யறி பனுவல்' என்பதனான், அவ் விரண்டன் வேற்றுமையும் தெரியப்படும் எ-று.

**(வ-று.)** புலி கொல் யானைக்கோடு வந்தது எனின், புலியாற் கொல்லப்பட்டது யானை என விளங்கும்.

இனிப் புலிகொல் யானை ஓடுகின்றது எனின், புலியைக் கொன்றது யானை என விளங்கும்.

இனி, ஈற்றுப் பெயர் முன்னர்ப் பொருளறிய வந்த சொல்லான் அவ்வேற்றுமை தெரிப எனவே, பொருளறிய வாராத சொல்லான் அவ் வேற்றுமை தெரியலாகாது என்பதாம்.

**(வ-று.)** புலி கொல் யானை கிடந்தது, தோன்றும் என்பது. *(13)*

**ஓம்படைப் பொருளில் இரண்டாவதும் மூன்றாவதும் மயங்கல்**

93. ஒம்படைக் கிளவிக் கையும் ஆனும்
தாம்பிரி விலவே தொகைவரு காலை.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் அவற்றுக்கண்ணே ஆவதொரு முறைமை உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** ஓம்படைப் பொருட்கு ஐயும் ஆனும் ஒத்த கிழமைய எ-று.

ஓம்படுத்தல் என்பது போற்றுதல். 'தொகைவரு காலை' என்பது, தொகையி னிலைக்கண்ணே இம் மயக்கம் ஆவது என்றவாறு.

**(வ-று.)** 'புலி போற்றிவா வாழியைய' என்புழிப் புலியைப் போற்றிவா என்றும், புலியினான் ஆய ஏதம் போற்றிவா என்றும் ஆக என்பது.

'தொகைவரு காலை' என்பதனை யாண்டும் ஒட்டிக் கொள்க என்பது. *(14)*

**வாழ்ச்சிக் கிழமையில் ஆறாவதும் ஏழாவதும் மயங்கல்**

94. ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்கு
ஏழும் ஆகும் உறைநிலத் தான.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஆறாவதனோடு ஏழாவதன் மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** ஆறாவதனோடு எடுத்தோதப்பட்ட வாழ்ச்சிப் பொருட்கு ஏழாவதும் ஆம், உறையும் நிலமாகலான் எ-று.

**(வ-று.)** காட்டது யானை என்புழிக் காட்டுள் யானை என்றுமாக என்பது. *(15)*

**கொடைப்பொருளில் நான்காவதும் ஆறாவதும் மயங்கல்**

95. குத்தொக வரூஉங் கொடையெதிர் கிளவி
அப்பொருள் ஆறற் குரித்தும் ஆகும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நான்காவதன் பொருள் ஆறாவதற்குச் செல்லுமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** நான்காம் வேற்றுமை தொக்குக் கொடை யெதிர்ந்து நின்றவழி ஆறாவது சொல்லவும் அமையும் எ-று.

**(வ-று.)** நாகர்பலி என்பது ஆண்டு நாகர்க்குப் பலி என நான்காவது தொக்கு நின்றது; அந் நிலைக்கண் நாகரது பலி என ஆறாவதும் ஆக என்றவாறு.

கொடை எதிர்தல் என்பது - விழுப்ப முடையாரை நுதலியக்காற் கொண்டுவைத்து விரும்பிக் கொடுத்தல். நாகர்பலி என்பது அவர்க்குத் திரிபில்லாமையினான் நாகரது பலி என உடைமைக்கிழமை செப்ப லாயிற்று என்பது கருத்து. *(16)*

### அச்சப்பொருளில் ஐந்தாவதும் இரண்டாவதும் மயங்கல்

96. அச்சக் கிளவிக் கைந்தும் இரண்டும்
எச்சம் இலவே பொருள்வயி னான.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஐந்தாவதனோடு இரண்டாவதன் மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** அச்சப் பொருண்மைக்கு ஐந்தாம் வேற்றுமையும் இரண்டாம் வேற்றுமையும் ஒத்த கிழமைய எ-று.

**(வ-று.)** புலியின் அஞ்சும், புலியை அஞ்சும் என வரும்.

புலியை அஞ்சும் என்புழிப் புலி காரணமாக அஞ்சும் எனு மாறுகொள்க. *(17)*

### வேற்றுமை மயக்கம் மரபிற் பிழையாமை

97. அன்ன பிறவுந் தொன்னெறி பிழையாது
உருபினும் பொருளினும் மெய்தடு மாறி
இருவயின் நிலையும் வேற்றுமை எல்லாந்
திரிபிடன் இலவே தெரியு மோர்க்கே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், சொல்லப்பட்ட மயக்கத்திற் குப் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** அவை போல்வனவும் பிறவும் மேற்கொண்டு அடிப்பட வழங்கும் வழக்கொடு மலையாது உருபும் பொருளும் தம்முள் ஒன்ற னோடொன்று தடுமாறி அவ் விரண்டிடத்தும் நிலைபெற்ற வேறுபாடு வழு என்று களையப்படா ஆராயுமிடத்து எ-று.

'உருபினும் பொருளினும் மெய்தடுமாறி' என்பது, யாண்டு உருபு சென்றது ஆண்டுப் பொருள் சென்றது எனப்படும்; யாண்டுப் பொருள் சென்றது ஆண்டு உருபு சென்றது எனப்படும் என்பது. 'பிறவும்' என்றதனால், முறைக் குத்தினார் என்புழி, முறையிற் குத்தினார் என்றும், முறையாற் குத்தினார் என்றும். 'கடலொடு காடொட்டாது' என்புழிக் 'கடலைக் காடொட்டாது' என்றும் வருவன கொள்க. *(18)*

### பல உருபு தொடர்ந்து அடுக்கியவழிப் படுவதோர் இலக்கணம்

98. உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
ஒருசொல் நடைய பொருள்செல் மருங்கே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், பல உருபு தொடர்ந்து அடுக்கி நின்றவழிப் படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** பல உருபு தொடர்ந்து அடுக்கி நின்ற இடத்து இறுதி யுருபு முடிந்த முடிவே ஒழிந்தனவற்றிற்கும் முடிபாக எ-று.

**(வ-று.)** *யானையது கோட்டை நுனிக்கண் குறைத்தான் என வரும்.*

*இரண்டாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் குறைத்தான் என்னும் ஒரு வினையானே முடிந்தவாறறிக.*

*'தினையில் கிளியைக் கடியும்' என்பதும் அது.* *(19)*

### வேற்றுமையுருபு விரிந்து நிற்கும் இடம்

99. இறுதியும் இடையும் எல்லா உருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், உருபு நிற்கும் இடவேறு பாடு உணர்த்துதல் நுதலிற்று.*

*இறுதி: கடந்தான் நிலத்தை; வந்தான் சாத்தனொடு; கொடுத்தான் சாத்தற்கு; வலியான் சாத்தனின்; ஆடை சாத்தனது; இருந்தான் குன்றத்துக் கண்; என வரும்.*

*இனி, இடை வருமாறு: நிலத்தைக் கடந்தான்; சாத்தனொடு வந்தான்; சாத்ததற்குக் கொடுக்கும்; சாத்தனின் வலியன்; சாத்தனது ஆடை; குன்றத்துக்கண் இருந்தான் என வரும்.*

*இனி, நெறிபடுத்துதல் என்பது வழக்குப்படுத்துதல்; வழக்குப் படு வழியே அவை நிலையுடைத்தாவது; அல்லாத வழி அவை நில்லா என்பது. அவ்வழிக் கொண்டான் என்புழி அவ்வழிக்கட் கொண்டான் என வேண்டுவது என்றவாறு. பிறவும் அன்ன.* *(20)*

### ஆறனுருபிலக்கணமும் எல்லா உருபிற்கும் பொது இலக்கணமும்

100. பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் அவ் வேற்றுமை மயக்கத்துட் புறத்துப்படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *ஓர் உருபு ஓர் உருபினை யேற்றலும், உருபுகள் புலப்படாது நிற்றலும் இலக்கணத்துப் பட்டன எ-று.*

*பிறிதுபிறிதேற்றல் என்பது, ஆறாம் வேற்றுமை உருபு தானல்லாத உருபுகளை ஏற்பது.*

*அது வருமாறு: சாத்தனதனை, சாத்தனதனொடு என ஆறாவது ஒழித்து, ஏழாவதன்காறும் ஒட்டுக.*

*இனி, உருபு தொக வருதல்: நிலத்தைக் கடந்தான் என்புழி, வேற்றுமை யுருபு தொக்கு, நிலங்கடந்தான் என வரும்.*

*இறுதிக்கண், 'கடந்தான் நிலத்தை' என்புழிக் 'கடந்தான் நிலம்' என வரும். மற்றையனவும் அவ்வாறே தொகும் என்பது.* *(21)*

### எய்தியது விலக்கியது

101. ஐயும் கண்ணும் அல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ இறுதி யான.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் உருபுகள் தொக வருவன என்றான், அத் தொக வருவனவற்றது நிலைமை ஒவ்வாதது கண்டு அஃது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இரண்டாம் வேற்றுமைப் பொருளும், ஏழாம் வேற் றுமைப் பொருளும் அல்லாதவழி இறுதிக்கண் தொகவாரா எ-று.

அது சொல்லவே, மற்றைய உருபெல்லாம் இறுதிக்கண் விரிந்தே வருகுவ என்பதாம்.

**(வ-று.)** கடந்தான் நிலம், கடந்தான் நிலத்தை; இருந்தான் குன்றத்து, இருந்தான் குன்றத்துக்கண் எனத் தொக்கும் விரிந்தும் வந்தவாறு.

வந்தான் சாத்தனொடு என்பது வந்தான் சாத்தன் என ஒடு தொகு நிலைப்படுங்கொலோ எனிற் படாது என்பது. மற்றையனவும் அன்ன. *(22)*

### உருபுகள் தம் பொருள் அன்றி மயங்குமாறு

102. யாதன் உருபின் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், உருபுகள் ஒரோவழித் தத்தம் பொருண்மை யின்றியும் மயங்குதற்குரிய என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** யாதானும் ஓர் உருபிற் கூறப்பட்டதே ஒரு சொல்லெனி னும், கூறிய அவ் வுருபின் பொருள் படுங்கொல்லோ எனின், படாது என்பது. அக் கூறப்படாத பிற உருபு உளவன்றே; அவற்றதுமாகும், அச் சொல் அவற்றுப் பொருள்படச் சொல்லின் எ-று.

வரலாறு:

*''கிளையரில் நாணற் கிழங்குமணற் கீன்ற*
*முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்''* (அகம். 212)

என்னும் பாட்டினுள், 'மணற்கீன்ற' என நான்காவதன் உருபு வந்ததேனும், மணலுள் ஈன்ற என ஏழாவதன் உருபே கொள்க, அதற்கேற்ற பொருட் டாகலின்.

இது, வழக்கினுள் ஒன்றன் பொருண்மைக்கட் பிறிதோர் உருபு பொருளொடுபடாது சென்று நிற்ப வழங்குதலும் உண்மை கண்டு அது காத்தவாறு. *(23)*

### எதிர்மறைக்கண்ணும் வேற்றுமைப் பொருள் திரியாமை

103. எதிர்மறுத்து மொழியினும் தத்த மரபின்
பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், வேற்றுமை யுருபுகள் தம்பொருள் மாறுபட நின்றுழியும் தம்பொருள என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** *வேற்றுமை உருபுகள் எதிர் மறுத்துச் சொல்லிற்றுழியும் தம் பொருண்மை மரபு திரியா எ-று.*

**(வ-று.)** *மரத்தைக் குறையான் என்புழி, இரண்டாவதன் பின் அப் பொருள் இல்லைமன்; இல்லையெனினும் அப் பொருட்டாக என்பது.*

*பிற வேற்றுமைப் பொருள்களையும் அவ்வாறே எதிர்மறுத்து ஒட்டிக் கொள்க.* *(24)*

## உருபுகளுட் சில செய்யுளுள் திரியும் எனல்

104. கு ஐ ஆன்என வரூஉம் இறுதி
அவ்வொடுஞ் சிவணுஞ் செய்யு ளுள்ளே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், அவ்வுருபுகளுள் ஒருசார் செய்யுளுள் திரிபுபட நிற்றல் கண்டு, அஃது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** *கு ஐ ஆன் என வரூஉம் மூன்றுருபின் இறுதியுஞ் செய்யுளுள் அகர ஈறாகி நிற்கும் எ-று.*

*வரலாறு முன்னர்ச் சூத்திரத்துட் காட்டுதும்.* *(25)*

## எய்தியது விலக்கல்

105. அவற்றுள்,
அஎனப் பிறத்தல் அஃறிணை மருங்கின்
குவ்வும் ஐயும் இல்லென மொழிப.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

**உரை:** *அவற்றுள் குவ்வும் ஐயும் அஃறிணைக்கண் அகர வீறாகல் எய்தா எ-று.*

*மற்றை ஆன் உருபாயின் அஃறிணைக்கண்ணும் உயர்திணைக் கண்ணும் எய்தும் என்பது.*

*இனி, உயர்திணைக்கண் குவ்வும் ஐயும் வருமாறு:*

*'கடிநிலை யின்றே யாசிரியர்க்கு' எனற்பாலது, 'ஆசிரியர்க்க' (தொல். எழுத்து. புள்ளிமயங். 94) என்றாயிற்று.*

*'காவ லோனைக் களிறஞ் சும்மே' எனற்பாலது, 'காவலோனக் களிறஞ் சும்மே' என்றாயிற்று.*

*இனி, ஆன் இருதிணைக்கண்ணும் வருமாறு:*

‘புள்ளினான’

‘புலவரான’

என இருவழியுங் கண்டுகொள்க. (26)

### நான்காவது ஏனையுருபுகளின் பொருளொடு மயங்கல்

106. இதன திதுவிற் றென்னுங் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்
அதனாற் செயற்படற் கொத்த கிளவியும்
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பின் ஆக்கமுங்
காலத்தி னறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்துமொழிக் கிளவியும்
அன்ன பிறவும் நான்க னுருபின்
தொன்னெறி மரபின தோன்ற லாறே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நான்காம் வேற்றுமை ஏனைய வேற்றுமைக்கண் எல்லாஞ் சென்று மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இதனது இதுவிற்று என்பது - யானையது கோடு கூரிது என்புழி, ஆண்டு நான்காவது சென்று, யானைக்குக் கோடு கூரிது என்றாக என்பது எ-று.

அதனைக் கொள்ளும் பொருள் என்பது - இவளைக் கொள்ளும் இவ்வணி என்புழி, இவட்குக் கொள்ளும் இவ்வணி என்றாக என்பது;

அதனாற் செயற்படற்கொத்த கிளவி என்பது - வாயான் தக்கது வாய்ச்சி என்புழி, வாய்க்குத் தக்கது வாய்ச்சி என்றாக என்பது;

முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவி என்பது - ஆவினது கன்று என்புழி, ஆவிற்குக் கன்று என்றாக என்பது;

பால்வரை கிளவி என்பது - கருவூரின் கிழக்கு என்புழிக் கருவூர்க்குக் கிழக்கு என்றாக என்பது;

பண்பின் ஆக்கம் என்பது - சாத்தனின் நெடியன் என்புழிச் சாத்தற்கு நெடியன் என்றாக என்பது;

காலத்தின் அறியுங் கிளவி என்பது - மாரியுள் வந்தான் என்புழி, மாரிக்கு வந்தான் என்றாக என்பது;

பற்றுவிடு கிளவி என்பது - ஊரிற் பற்றுவிட்டான் என்புழி, ஊர்க்குப் பற்றுவிட்டான் என்றாக என்பது;

தீர்ந்து மொழிக் கிளவி என்பது - ஊரிற் றீர்ந்தான் என்புழி, ஊர்க்குத் தீர்ந்தான் என்றாக என்பது;

அன்ன பிறவும் என்றதனான் - ஊரிற் சேயன், ஊர்க்குச் சேயன் என்றாக என்பதும், உறையூரிற் பெரிது கருவூர் என்புழி, உறையூர்க்குப் பெரிது கருவூர் என்றாக என்பதும் பிறவும் இவ்வாறாக வருவன கொள்க.

இவையெல்லாம் நான்கனுருபின் தோன்றுதல் மேற்கொண்டு அடிப்பட்டு வந்த வழக்கு என்றவாறு. *(27)*

## மற்றை உருபுகளும் தம்முள் மயங்குமாறு

107. ஏனை யுருபும் அன்ன மரபின
மானம் இலவே சொல்முறை யான.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் மயக்கமே உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** நான்காம் வேற்றுமை உருபல்லன பிறவும் ஒன்றன் பொருண்மைக்கண் அது சென்றாங்குச் செல்வன உளவேல் குற்ற மில்லை எ-று.

**(வ-று.)** வழக்குப் பெற்றவழிக் கண்டுகொள்க. *(28)*

## வினைச்சொல் இலக்கணம்

108. வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற் கிதுபய னாக என்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழில்முத னிலையே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், வினைச்சொல் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இவ் வெட்டொடுந் தோன்றநிற்கும் வினைச்சொல் எ-று.

**(வ-று.)** வனைந்தான் என்ற சொல்லாலே அவ்வெட்டும் பெறும் என்பது.

பெறுமாறு: வனைந்தான் என்ற வினை விளங்கிற்று; அதனான் வனைதற்றொழின்மை விளங்கும்.

செய்வது என்பது - செய்தான் ஒருவன் என்பது விளங்கும்.

செயப்படு பொருள் என்பது - குடந் தொடக்கத்தன என்பது விளங்கும்.

நிலம் என்பது - ஓரிடத்திருந்த தென்பது விளங்கும்.

காலம் என்பது - இரவானும் பகலானும் என்பது விளங்கும்.

கருவி என்பது - கோலும் திரிகையும் என இத்தொடக்கத்தன விளங்கும்.

இன்னதற்கு என்பது - ஒருவற்கு என்பது விளங்கும்.

இது பயன் என்பது - அறமானும் பொருளானும் ஒரோவொன்று பயக்கும் என்பது விளங்கும்.

இஃது அவ் வெட்டிலக்கணமும் தோன்ற நிற்குமாறு; பிறவும் அன்ன. (29)

## மேலதற்கொரு புறனடை

109. அவைதாம்,
வழக்கியல் மருங்கின் குன்றுவ குன்றும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேற்சொல்லப்பட்ட வினைத்திறம் படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** மேற் சொல்லப்பட்ட எட்டும் உடன் விளங்காது குறைய நிற்பனவும் உள வழக்கினுள் வினைச்சொற்கள் எ-று.

**(வ-று.)** கொடியாடிற்று என்புழிச் செயப்படு பொருளும் இன்னார்க்கு என்பதும் இன்னது பயக்கும் என்பதும் இல்லை. பிறவும் அன்ன. (30)

## ஆகுபெயரின் இயல்பு

110. முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்
சினையிற் கூறு முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுதல் உரைக்குங் கிளவியொடு தொகைஇ
அனையமர பினவே ஆகுபெயர்க் கிளவி.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஆகுபெயர் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** முதலிற் கூறுஞ் சினையறி கிளவித் தொடக்கத்தன ஏழ் கூறிய பின்னை அனைய மரபினவே என்றார், அவ்விலக்கணத்தன அவை எ-று.

முதலிற் கூறுஞ் சினையறி கிளவி என்பது - முதலாற் சினையைச் சொல்லுதல் என்றவாறு.

அது, தெங்கு தின்றான்; கடுத் தின்றான் என வரும்.

சினையிற் கூறும் முதலறி கிளவி என்பது - சினையின் பெயர்கூற முதல் விளங்குவது என்றவாறு.

அது, இலைநட்டு வாழும்; பூநட்டு வாழும் என வரும்.

பிறந்தவழிக் கூறல் என்பது - ஓரிடங் கூற அவ்விடத்தாயின பொருண்மையி னிற்றல் என்றவாறு.

அது, குழிப்பாடி என வரும்.

*பண்புகொள் பெயர் என்பது - ஒருகுணங்கூற அக்குணமடைந்த பொருள் விளங்கி நிற்றல்;*

*அது வருமாறு: நீலம் என்பதொரு பண்பு; அப்பண்புச் சொல் கூற அப்பண்பினை யடைந்த ஆடையானும் பிறவானும் விளங்கும் என்பது.*

*இயன்றது மொழிதல் என்பது - இயன்றது என்பது செய்கை; அச் செய்கை சொல்ல அச் செய்கை நிகழ்ச்சியினாய வேறுபாடும் அப் பெயர்த்தாய் விளங்கும். அது வருமாறு: ஏறு, குத்து என, எறியவும் குத்தவுமாயின அத் தொடக்கத்தன விளங்கி நிற்கும் என்பது.*

*இருபெய ரொட்டு என்பது - இரண்டு பெயர் ஒட்டி நிற்பது: அது சொல்லப் பிறிதுபொருள் விளங்கும். அது வருமாறு: பொற்றொடி என்பது, இருபெயர் நின்று ஒட்டிற்று; அது சொல்லப் பொற்றொடி தொட்டாளை விளக்கும் என்பது.*

*வினைமுதலுரைக்குங் கிளவி என்பது - வினைசெய்தான் பெயர் சொல்ல, அவன் செய்பொருளை யறிய நிற்றல் என்றவாறு. அது, தொல்காப்பியம், கபிலம் என்பன.*

*ஆகுபெயர் என்ற பொருண்மை யென்னையெனின், ஒன்றன் பெயர் ஒன்றற்காய் நிற்றல் என்றவாறு. (31)*

### ஆகுபெயர் இலக்கணம் இருவகைய எனல்

111. அவைதாம்,
தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலுங் காலை.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் ஆகுபெயர்க் கண்ணே யாவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *அவ் வாகுபெயர்கள் முதற்கண் ஆங்காலம், அம் முதற்கே யன்றி அம் முதலொடு தொடர்ந்த பொருள்மேல் நிற்றலும், முதற்கே எவ்வியைபு மில்லாதனமேல் நிற்றலும் என இரண்டிலக்கணம் உடைய எ-று.*

*தத்தம் பொருண்மையிற் றம்மொடு சிவணல் - தெங்கு, கடு என்னுந் தொடக்கத்தன; தெங்கு என்றவிடத்து தெங்கின்காய் எனல் கொள்க; கடுவும் அன்னதே.*

*ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டல் - நீலம் என்றது நீலமுண்ட ஆடையெனின், அவ்விடத்து நீலத்திற்கு எவ் வியைபுமின்றி நின்றது ஆடை என்க. பிறவும் அன்ன.*

*இங்ஙனம் தத்தம் பொருட்கு இயைந்தனவற்று மேலனவும், இயையாதவற்று மேலனவும் என இருவகையவாய் நிற்கும் அவ் வாகுபெயர்கள் எ-று. (32)*

### ஆகுபெயரும் வேற்றுமை ஏற்கும் எனல்

112. வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் ஆகுபெயர்க் கண்ணே கிடந்ததொரு பகுதி யுணர்த்துதல் நுதலிற்று.

ஆகுபெயர்க்கு ஆவதொரு வேறுபாடு தெரிந்துணர்க. ஆவதொரு வேறுபாடு என்னெனின், தொல்காப்பியனாற் சொல்லப்பட்டது தொல்காப்பியம் என ஈறு திரிந்தது. அன்றியும், 'வேற்றுமை மருங்கின் போற்றல் வேண்டும்' என்றல் அவ் வாகுபெய ரெல்லாம் வேற்றுமை யொடு தொடர்ந்த மருங்கினைப் போற்றியறிக என்றவாறு.

யாதோ எனின், தெங்கினதுகாய் தெங்கு என ஆறாவது தொடர்ந்தது. நீலத்தையுடைய ஆடை நீலம் என இரண்டாவது தொடர்ந்தது. பிறவும் இவ்வாறே தொடர்ந்தவாறு போற்றியறிக என்றவாறு.

இனி, அல்லதூஉம் ஆகுபெயர்கள் தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணின என்றும், ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டின என்றும் போற்றி உணர்க என்றவாறு. *(33)*

### அளவும் நிறையும் ஆகுபெயர் எனல்

113. அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னோரே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், அளவும் நிறையும் ஆகுபெயராவன உள என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** அளவும் நிறையும் ஆகுபெயர் ஆயினவளவு மேற்கூறிய போல உள எ-று.

**(வ-று.)** நாழி, உழக்கு என அளக்கப்படும் பொருளையும்; தொடி, துலாம் என நிறுக்கப்படும் பொருளையும் உணர்த்தும் என்பது. பிறவும் அன்ன. *(34)*

### ஆகுபெயர்க்குப் புறனடை

114. கிளந்த அல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இஃது ஆகுபெயர்க்குப் புறனடை கூறுதல் நுதலிற்று.

**உரை:** மேற் சொல்லப்பட்டனவன்றி வரும் ஆகுபெயரும் உள; அவற்றையும் சொல்லப்பட்ட இலக்கணத்தான் உணர்ந்து கொள்க எ-று.

அவை வருமாறு: யாழ் கேட்டான்; குழல் கேட்டான் என்ப, அவற்றினாகிய ஓசை கேட்டாரை.

*பசுப் போல்வானைப் பசு என்ப; பாவை போல்வாளைப் பாவை என்ப.*

*இனி, எண்ணிற் கேதுவாகிய இடங்களையும் ஒன்று, பத்து, நூறு என்ப. இனி, 'எழுத்து' (தொல். எழுத்து. நூன்மரபு 1) என்பதும் அது. பிறவும் அன்ன.*

இனிக் *'கிளந்தவல்ல பிற'* என்னாது, 'வேறு' என்றதனான், ஆகு பெயர்கள் ஈறு திரியும் என்பது காட்டுக. *(35)*

**மூன்றாவது வேற்றுமை மயங்கியல் முற்றிற்று.**

# 4
# விளிமரபு

### விளியின் பொது இலக்கணம்

115. விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப

என்பது சூத்திரம்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், விளி வேற்றுமையது இலக்கணம் உணர்த்தினமையின், விளிமரபு என்னும் பெயர்த்து.

இனி, இத் தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், விளி வேற்றுமையது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** *விளி என்பன தம்மை ஏற்கும் பொருளோடு யாப்புறத் தோன்றும் தன்மைய எ-று.*

*தன்மைய என்றதனான், விளி பெயரொடு கொள்ளும் என்பதூஉம், கொள்ளுங்கால் ஏற்கும் என்பதூஉம் சொல்லப்பட்டவாம்.*

*'தெளியத் தோன்றும்' என்றது, விளியை வேற்றுமை அன்றென் பாரும் உளர்; அது மறுத்து வேற்றுமையே எனற்கு என்பது.*

*'எனப்படுப' என்று பன்மை கூறினார், ஈறு திரிதல், ஈற்றயல் நீடல், பிறிது வந்தடைதல், இயல்பாதல் என நான்கு பகுதியவாகலான் என்பது. (1)*

### இஃது அப்பெயர்களைக் கூறுவல் எனல்

116. அவ்வே
இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேற்சொல்லப் பட்டனவற்றை இனிச் சொல்லுப என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** *அவை, இவையென அறிதற்கு வழக்குப்பெற இனிச் சொல்லப்படும், எ-று. (2)*

### உயர்திணையில் விளியேற்கும் உயிரீற்றுப் பெயர்கள்

117. அவைதாம்,
இ உ ஐ ஓ என்னு மிறுதி

அப்பால் நான்கே உயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், விளி என்பன தாம் இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *உயிரெழுத்தினுள் உயர்திணைப் பெயர்க்கு விளியேற்கும் எழுத்தாவன இவை எ-று.*

*'உயர்திணை மருங்கின் மெய்ப்பொருள் சுட்டிய' - எனவே, மற்றைத் திணைக்கண்ணும் உள, சிறு வரவின எனக் கொள்க.*

*அவை வருமாறு: 'குறையறப் பூத்த கொடி முல்லாய்' என்புழி, முல்லை - முல்லாய் எனவும்,*

*'செங்கால் நாராய்' என்புழி, செங்கால் நாரை செங்கால் நாராய் எனவும் வரும். பிறவும் அன்ன. (3)*

### இகர ஐகார ஈற்றுப் பெயர்கள் விளி ஏற்குமாறு

118. அவற்றுள்,
இ ஈ யாகும் ஐ ஆய் ஆகும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின்; இகர ஐகாரங்கள் விளியேற் குமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

*நம்பி - நம்பீ என, இ - ஈயாய் விளியேற்றது.*

*நங்கை - நங்காய் என, ஐ - ஆயாய் விளியேற்றது. இங்ஙனமா தல், 'ஈறு திரிதல்'. (4)*

### ஓவும் உவ்வும் ஆகிய ஈற்றுப் பெயர் விளியேற்குமாறு

119. ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஓகார ஈறும் உகர ஈறும் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

*கோ - கோவே என, ஓகார ஈறு ஏகாரமொடு சிவணிற்று.*

*வேந்து - வேந்தே என, உகரம் ஏயோடு சிவணிற்று.*

*இம் முடிபு, 'பிறிது வந்தடைதல்' ஆம். (5)*

### மேற்கூறிய உகரம் குற்றியலுகரம் எனல்

120. உகரந் தானே குற்றிய லுகரம்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஐயமறுத்தல் நுதலிற்று: மேலதற்கொரு புறனடையெனினும் அமையும்.*

**உரை:** *கூறப்பட்ட நான்கனுள், உகரம் குற்றியலுகரம் என்பது அறி யாது நின்றவழி, முற்றுகரம் அன்று; குற்றுகரம் என்பது கருத்து எ-று. (6)*

### ஏனை உயிர் ஈற்றுப் பெயர்கள் உயர்திணையில் விளி ஏலாமை

121. ஏனை உயிரே உயர்திணை மருங்கின்
தாம்விளி கொள்ளா என்மனார் புலவர்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று; ஐயமறுத்தது எனினும் அமையும்.*

**உரை:** *சொல்லப்பட்ட நான்கு உயிரெழுத்துமல்லால் மற்றையன உயர்திணைக்கண் விளியேலா எ-று.*

*மற்று, கொள்வன இவை யெனவே, ஒழிந்தன கொள்ளா என்பது யானே உணரேனோ, இது சொல்லவேண்டியது என்னையெனின், ஏனை உயிர் உயர்திணைக்கண் விளிகொள்ளா என, இன்னும் மேற்சொல்லப் பட்டன மேல் ஓதியவாறன்றிப் பிறவாற்றானும் விளி யேற்கும் என்றற்குச் சொல்லப்பட்டது என்றவாறு.*

*கணி - கணியே என, இகர ஈறு ஈகாரப் பேறன்றி ஏகாரமும் பெற்று விளியேற்கும் என்பது.* *(7)*

### இகர ஈற்று அளபெடைப் பெயர் விளி ஏற்குமாறு

122. அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்
இயற்கைய ஆகுஞ் செயற்கைய என்ப.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தியது விலக்கல் நுதலிற்று.*

**உரை:** *அளபெடை இகரம் ஈறாயின் இயல்பாயே விளி ஏற்கும் எ-று.*

**(வ-று.)** *தொழீஇ என வரும். பெயர்நிலையும் விளிநிலையும் அதுவே நிற்குமாறு.*

*'இனிச் செயற்கைய' என்றதனான், இரண்டு மூன்று மாத்திரைபெற எழுதுவாரும், ஐந்து மாத்திரைபெற எழுதுவாரும் என இருதிறத்தார் ஆசிரியர் என உணர்க.* *(8)*

### முறைப் பெயரில் ஐயீறு ஆவாகவும் வருதல்

123. முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி
ஆவொடு வருதற் குரியவும் உளவே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இஃது இறந்தது காத்தல் நுதலிற்று.*

**உரை:** *மேல் ஐ ஆய் ஆகும் என்றார்; இனி, முறைப் பெயர்க் கண்ணாயின் ஐ ஈறு ஆவொடு வருவனவும் உள எ-று.*

**(வ-று.)** *அன்னை - அன்னா என்றும், அத்தை - அத்தா என்றும் ஆக என்பது.* *(9)*

### அண்மை விளி இயல்பாதல்

124. அண்மைச் சொல்லே இயற்கை ஆகும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் இறந்தது காத்தல் நுதலிற்று.*

**உரை:** *அணியாரைக் கூவுமிடத்து அவை இயல்பேயாய் விளியேற்கும் எ-று.*

**(வ-று.)** *நம்பி வாழி, நங்கை வாழி, கோ வாழி வேந்து வாழி என வரும்.* *(10)*

### உயர்திணையில் விளியேற்கும் புள்ளியீற்றுப் பெயர்கள்

125. னரலள என்னும் அந்நான் கென்ப
புள்ளி இறுதி விளிகொள் பெயரே.

*இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், உயர்திணைக்கட் புள்ளியீறு விளியேற்பன இவை யென உணர்த்துதல் நுதலிற்று.*

*வரலாறு முன்னர்க் காட்டுதும்.* *(11)*

### புள்ளி ஈற்றுப் பெயர்களுள் விளி ஏலாதன

126. ஏனைப் புள்ளி ஈறுவிளி கொள்ளா.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று; ஐயமறுத்தது எனினும் அமையும்.*

**உரை:** *மேற் சொல்லப்பட்ட நான்கல்லாப் புள்ளியீறு விளி யேலா உயர்திணைக்கண் எ-று.*

*மற்று, ஆவன கூற அமையாதோ வெனின், 'ஏனைப் புள்ளியீறு விளி கொள்ளா' என, இன்னும் மேற்கூறிய புள்ளியீறு அவ்வாறன்றிப் பிறவாறு விளியேற்றலுமுடைய என்றற்குக் கூறினார் என்பது.*

**(வ-று.)** *பெண்டிர் - பெண்டிரே எனவும், தம்முன் - தம்முனே எனவும் வரும். பிறவும் அன்ன. ஏனைப் புள்ளியும் ஆவதுண்டு.*

*'விளங்குமணிக் கொடும்பூண் ஆய்' என்பதும் (புறம். 130) பிறவும் இவ்வாறு வருவன கொள்க.* *(12)*

### அன் ஈற்றுப் பெயர் விளி ஏற்குமாறு

127. அவற்றுள்,
அன்னென் இறுதி ஆவா கும்மே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நிறுத்த முறையானே னகரவீறு விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *அன் என்னும் பெயரிறுதி ஆவாய் விளியேற்கும் எ-று.*

**(வ-று.)** *சோழன் - சோழா, சேர்ப்பன் - சேர்ப்பா எனவரும்.* *(13)*

### அன் ஈற்றுப் பெயர் அண்மை விளியில் அகரம் ஆதல்

128. அண்மைச் சொல்லிற் ககரமும் ஆகும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

**உரை:** *அணியாரைக் கூவுமிடத்து அன் ஈறு திரிந்து அகரமாயும் விளியேற்கும் எ-று.*

**(வ-று.)** *ஊரன் - ஊர, சேர்ப்பன் - சேர்ப்ப என வரும்.* *(14)*

### ஆன் இறுதிப் பெயர் இயல்பாதல்

129. ஆனென் இறுதி இயற்கை ஆகும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் னகரவீறு விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** *ஆன் என் னகரவீறு இயல்பாய் விளியேற்கும் எ-று.*

**(வ-று.)** *சேரமான், மலையமான் என இருநிலைமைக்கண்ணும் அதுவே நிற்குமாறு என்பது.* *(15)*

### ஆன் ஈற்று வினையாலணையும் பெயர் விளி ஏற்குமாறு

130. தொழிலிற் கூறும் ஆனென் இறுதி
ஆயா கும்மே விளிவயி னான.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

**உரை:** *ஆன் என் இறுதி தொழிற் பெயராயின் ஆயாய் விளியேற்கும் எ-று.*

**(வ-று.)** *உண்டான் - உண்டாய் என வரும்.*

இனி, 'விளிவயினான' என்றதனான், வாயிலான் - வாயிலாய், பூயிலான் - பூயிலாய் என, இவ்வாறு பெயரினாகிய பெயரும் ஆயாய் விளியேற்கும் என்பாரும் உளர். *(16)*

### ஆன் ஈற்றுப் பண்புப் பெயர் விளி ஏற்குமாறு

131. பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

**உரை:** *அவ்வான் இறுதி பண்புகொள் பெயராயின் ஆயாய் விளி யேற்கும் எ-று.*

**(வ-று.)** *கரியான் - கரியாய், செய்யான் - செய்யாய் என வரும்.* *(17)*

### ஆன் ஈற்று அளபெடைப்பெயர் விளி ஏற்குமாறு

132. அளபெடைப் பெயரே அளபெடை இயல.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், னகரவீற்று அளபெடைக் குரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *னகரவிறுதி அளபெடைப்பெயரும் மேல் இகரவீற்று அளபெடை யேற்றவாறு ஏற்க எ-று.*

**(வ-று.)** *அழாஅன், புழாஅன் என வரும்.* *(18)*

### னகார ஈற்று முறைப்பெயர் விளி ஏற்குமாறு

133. முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இறந்தது காத்தல் நுதலிற்று.*

**உரை:** *னகாரவீற்று முறைப் பெயராமே யெனின் ஏகாரம் பெற்று விளியேற்க எ-று.*

**(வ-று.)** *மகன் - மகனே, மருமகன் - மருமகனே என வரும்.*

*மற்று இவை இருதிணைக்கும் உரியவாம் பிறவெனின், உரிய வாயினும் முன்னர், 'விளம்பிய நெறிய விளிக்குங் காலை' (விளி. 33) என்னும் மாட்டேறு செல்லாமையான் னகரவீற்று ஒற்றுமை பற்றி வைத்துணர்த்தினான் என்பது.* *(19)*

### னகார ஈற்றுப் பெயருள் விளி ஏலாதன

134. தானென் பெயருஞ் சுட்டுமுதற் பெயரும்
யானென் பெயரும் வினாவின் பெயரும்
அன்றி அனைத்தும் விளிகோள் இலவே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், னகரவீற்றுள் விளியேலாதன இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *அவைதாம், தான் அவன் இவன் உவன் யான் யாவன் என்பன இவ்வாறு பெயரும் மேல் எவ் விளியும் ஏலா எ-று.* *(20)*

### ரகார ஈற்றுப் பெயர் விளி ஏற்குமாறு

135. ஆரும் அருவும் ஈரொடு சிவணும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நிறுத்த முறையானே ரகரவீறு விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *ஆர் என்னும் ஈறும் அர் என்னும் ஈறும் திரிந்து ஈர் ஆகும் எ-று.*

**(வ-று.)** *பார்ப்பார் - பார்ப்பீர், கூத்தர் - கூத்தீர் எனவரும்.* *(21)*

### ரகார ஈற்று வினையாலணையும் பெயர் விளி ஏற்குமாறு

136. தொழிற்பெயர் ஆயின் ஏகாரம் வருதலும்
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *ரகரவீறு தொழிற்பெயராமே யெனின் மேல் எய்திய ஈறே யன்றி, அதனோடு ஏகாரம்பற்றி யேற்க எ-று.*

**(வ-று.)** *உண்டார் - உண்டீரே, சான்றார் - சான்றீரே எனவரும்.*

*'வழுக்கின்று' என்பதனான், நம்பியார் - நம்பியீரே, கணியார் - கணியீரே என்பன போல்வன கொள்க.* *(22)*

### ரகார ஈற்றுப் பண்புகொள் பெயர் விளி ஏற்குமாறு

137. பண்புகொள் பெயரும் அதனோர் அற்றே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.*

**உரை:** *பண்புகொள வந்த ஆர் ஈற்றுப் பெயர் ஈர் ஆதலோடு ஏகாரம் பெற்று விளியேற்கும் எ-று.*

**(வ-று.)** *செய்யார்- செய்யீரே எனவரும்.* *(23)*

### ரகார ஈற்று அளபெடைப் பெயர் விளி ஏற்குமாறு

138. அளபெடைப் பெயரே அளபெடை இயல.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ரகரவீற்று அளபெடைக் குரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *ரகரவீற்று அளபெடைப் பெயர் இகரவீற்று அளபெடைப் பெயர்போல் விளி யேற்கும், இயல்பாய் எ-று.*

**(வ-று.)** *மகாஅர், சிறாஅர் எனவரும்.* *(24)*

### ரகார ஈற்றுப் பெயருள் விளி ஏலாத பெயர்கள்

139. சுட்டுமுதற் பெயரே முற்கிளந் தன்ன.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.*

**உரை:** *மேல் னகரவீற்றுச் சுட்டுப் பெயர் விளி யேலா என்றான்; அவையேபோல ரகரவீற்றுச் சுட்டுப் பெயரும் விளியேலா என மாட்டெறிந்தவாறு.*

*அவையாவன: அவர், இவர், உவர் என்பன.* *(25)*

### இதுவுமது

140. நும்மின் திரிபெயர் வினாவின் பெயரென்று
அம்முறை இரண்டும் அவற்றியல் பியலும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் எய்தியது விலக்கல் நுதலிற்று.*

**உரை:** *நும்மின் திரிபெயர் - நீயிர் என்பது; வினாவின் திரிபெயர் - யாவர் என்பது; இவையிரண்டு பெயரும் விளியேலா எ-று.*

*மற்று, இர் ஈறு விளியேற்கும் என்றதின்மையின், நும்மின் றிரிபெயர் விளியேலாது என்றுவிலக்கியது என்னை யெனின், அற்றன்று; பெண்டிர் - பெண்டீரே என, இர் ஈறும் விளியேற்கும் என்று மேல் (சூ. 126) இலேசி னான் எய்துவித்துப் போந்தானாகலின் விலக்க வேண்டும் என்பது. (26)*

### லகார ளகார ஈற்றுப் பெயர்கள் விளி ஏற்குமாறு

141. எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே
நின்ற ஈற்றயல் நீட்டம் வேண்டும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் நிறுத்த முறையானே ஒழிந்த இரண்டு புள்ளியீறும் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *ஒழிந்துநின்ற புள்ளிகளை யீறாகவுடைய பெயர்கள் தம் இறுதி யெழுத்தின் அயலெழுத்து நீண்டு விளியேற்க எ-று.*

**(வ-று.)** *குரிசில் - குரிசீல்; தோன்றல் - தோன்றால்; மக்கள் - மக்காள் எனவரும். (27)*

### இதுவுமது

142. அயல்நெடி தாயின் இயற்கை யாகும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.*

**உரை:** *அவ்விரண்டு ஈறும், ஈற்றெழுத்தின் அயலெழுத்து நீண்டு நிற்பின், இயற்கையாய் விளியேற்கும் எ-று.*

**(வ-று.)** *பெண்பால், ஆண்பால்; ஏமாள், கோமாள், கடியாள், பெரியாள் என வரும். (28)*

### னகார ஈற்று வினைப்பெயரும் பண்புகொள் பெயரும் ஆய்ஆதல்

143. வினையினும் பண்பினும்
நினையத் தோன்றும் ஆளென் இறுதி
ஆயா கும்மே விளிவயி னான.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

**உரை:** ஆள் என்னிறுதி வினைப்பெயரும் பண்புப் பெயரும் ஆயின், ஆயாய் விளியேற்கும் எ-று.

**(வ-று.)** உண்டாள் - உண்டாய் எனவும்; கரியாள் - கரியாய் எனவும் வரும். *(29)*

### ளகார ஈற்று முறைப்பெயர் விளி ஏற்குமாறு

144. முறைப்பெயர்க் கிளவி முறைப்பெயர் இயல.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

**உரை:** மேல் னகரவீற்று முறைப்பெயர் ஏகாரம் பெற்று விளியேற்றது; இதுவும் ஏகாரம் பெற்று விளியேற்க எ-று.

மகள் - மகளே, மருமகள் - மருமகளே எனவரும்.

மற்று, இவை இருதிணைக்கும் உரிய பெயர் பிறவெனின், முன்னர் (சூ. *19*) விடுத்தாங்கே விடுக்க. *(30)*

### ளகார ஈற்றுப் பெயருள் விளி ஏலாதன

145. சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தியது விலக்கல் நுதலிற்று.

**உரை:** மேல் னகரவீற்றுச் சுட்டுப்பெயரும் வினாவின் பெயரும் விளியேலா என்றார்; அவைபோல இவையும் விளியேலா என்பது உணர்த்துதல் ஆயிற்று.

அவையாவன: அவள், இவள், உவள்; யாவள் என்பன. *(31)*

### லள ஈற்று அளபெடைப் பெயர் விளி ஏற்குமாறு

146. அளபெடைப் பெயரே அளபெடை இயல.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், லகர ளகர ஈற்று அளபெடைக்கு உரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** மாட்டேற்றுவகையான், உயர்திணை னகர ஈற்று அளபெடை விளியேற்றவாறே இவையும் விளியேற்க என்பது உணர்த்தியவாறு.

வரலாறு:

> *''மாஅனின் னிறம்போன் மழையிருளிற் பட்டதே*
> *கோஒள் குளக்கோடு கொண்டு''*

என்பதனுள், மாஅல், கோஒள் என விளிநிலைக் கண்ணும் நின்றாங்கே நிற்கும் என்பது. *(32)*

## விரவுப்பெயர் விளி ஏற்குமாறு

147. கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங் காலை.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், அஃறிணை விரவுப் பெயர்க் குரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *கிளந்த இறுதியாவன - உயிரீறு நான்கும் புள்ளியீறு நான்குமாயவற்றை யிறுதியாகவுடைய அஃறிணைக்கண் வரும் விரவுப் பெயர், மேற்கூறிய நெறியான் விளியேற்கும், எ-று.*

**(வ-று.)** *சாத்தி - சாத்தீ, பூண்டு - பூண்டே, தந்தை - தந்தாய் எனவும்; சாத்தன் - சாத்தா, கூந்தல் - கூந்தால், மகள் - மகளே எனவும் வரும்.*

*ஓகார ஈறும், ரகார ஈறுமாய் வருவன விரவுப் பெயர் உளவேற் கண்டுகொள்க. பிறவும் அன்ன.* *(33)*

## அஃறிணைப்பெயர் விளி ஏற்குமாறு

148. புள்ளியும் உயிரும் இறுதி யாகிய
அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்
விளிநிலை பெறூஉங் காலந் தோன்றின்
தெளிநிலை யுடைய ஏகாரம் வரலே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், புள்ளியீறும் உயிரீறுமாகிய அஃறிணைப் பெயர்க்கு உரிய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *புள்ளியீறும் உயிரீறும் ஆகிய அஃறிணைப் பெயரெல்லாம் விளிகொள்ளுங் காலந்தோன்றின் ஏகாரம் பெறுதலைத் தெற்றென வுடைய, எ-று.*

**(வ-று.)** *மரம் - மரமே, அணில் - அணிலே, நரி - நரியே, புலி - புலியே என வரும்.*

*'தெளிநிலையுடைய' என்று விதந்து ஓதினமையான், ஏகாரம் ஒழியச் சிறுபான்மை இயல்பாயும், பிறவாயும் விளியேற்பனவும் உள.*

**(வ-று.)** *'வருந்தினை வாழியென் நெஞ்சம்' ( அகம். 19) எனவும், 'கருங்கால் வெண்குருகு' (நற். 54) எனவும், 'நெடுவெண்மதி' எனவும், 'காட்டுச்சா ரோடுங் குறுமுயால்' எனவும், 'ஒண்டூவி நாராய்' எனவும் வரும்.* *(34)*

## விளியேற்கும் பெயர்கள் சேய்மையில் அளபிறந்தொலித்தல்

149. உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்
அளபிறந் தனவே விளிக்குங் காலைச்
சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான.

**இச் சூத்திரம், உயர்திணைக் கண்ணும் அஃறிணைக் கண்ணும் விளி யேற்பனவாகச் சொல்லப்பட்டன எல்லாப் பெயரும் விளிக்கு*

மிடத்துத் தத்தம் மாத்திரையின் இறந்து இசைத்தனவாம், சேய்மைக் கண் ஒலிக்கும் வழக்கத்தின்கண் என்றவாறு.

**(வ-று.)** நம்பீஇ, சாத்தாஅ என வரும்.

*'அளபெடை மிகூஉம்' (சூ. 8)* என்றமையின், அளபெடைப் பெயர் ஒழித்துக் கொள்க. *(35)*

* **(பாடம்)** இச்சூத்திரமுதல் மேல்வருஞ் சூத்திரங்கள் சிலவற்றிற் குக் கருத்துரை காணப்படவில்லை

### அம்ம என்னும் இடைச்சொல் விளி ஏற்குமாறு

150. அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே.

இச் சூத்திரம், அம்ம என்னும் அசைச் சொல்லினது நீட்டம் விளி கொள்ளும் பெயரொடு தோன்றாது, இடைச் சொல்லொடு தோன்றிற் றாயினும் விளியாகக் கொள்வர் தெளிவோர் என்றவாறு.

**(வ-று.)** அம்மா சாத்தா என்பது.

சாத்தா என்பதே எதிர்முகமாக்குமாயினும், அம்ம என்பதும் அவ்வெதிர்முகமே குறித்து நிற்றலின் விளியாகக் கொள்ளப்படும் என்பார், 'விளியொடு கொள்ப' என்றார். *(36)*

### உயர்திணைப் பெயருள் விளி ஏலாதன

151. தநநு எயென அவைமுத லாகித்
தன்மை குறித்த னளரவென் இறுதியும்
அன்ன பிறவும் பெயர்நிலை வரினே
இன்மை வேண்டும் விளியொடு கொளலே.

இச் சூத்திரம், த, ந, நு என்னும் உயிர்மெய்யையும், எ என்னும் உயிரையும் முதலாகவுடையவாய் ஒருவனது கிளைமைப் பொருண் மையைக் குறித்து நின்ற, ன, ள, ர என்னும் மூன்று புள்ளியையும் இறுதி யாகவுடைய சொல்லும், அவை போல்வன பிறவுமாகிய பெயர்ச் சொல்லும் வருமாயின் விளியொடு பொருந்துதல் இல என்றவாறு.

**(வ-று.)** தமன் - தமள் - தமர்; நமன் - நமள், நமர்; நுமன் - நுமள் - நுமர்; எமன் - எமள் - எமர்; தம்மான் - தம்மாள் - தம்மார்; நம்மான் - நம்மாள் - நம்மார்; நும்மான் - நும்மாள் - நும்மார்; எம்மான் - எம்மாள் - எம்மார் என வரும்.

'அன்ன பிறவும்' என்றதனான், மற்றையான் - மற்றையாள் - மற்றையார் எனவும் வருவன கொள்க. *(37)*

**நான்காவது விளிமரபு முற்றிற்று.**

# 5
# பெயரியல்

### நால்வகைச் சொற்கும் பொது இலக்கணம்

152. எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே

என்பது சூத்திரம்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், பெயர்ச்சொல் உணர்த்து கின்றாராகலின் இது பெயரியல் என்னும் பெயர்த்தாயிற்று.

**உரை:** எல்லாச் சொல்லும் - பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் ஆகிய எல்லாச் சொல்லும், பொருள் குறித்தனவே - பொருள் குறியாது நில்லா, எ-று. *(1)*

### சொல் தன்னையும் பொருளையும் உணர்த்தல்

153. பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகும் என்மனார் புலவர்.

**உரை:** தன்னின் வேறாகிய பொருள் தெரியப்படுதலும், பொருள் அறியப்படாது சொல் தன்னையறியப்படுதலும் ஆகிய இரண்டும் சொல்லான் ஆம் என்று சொல்லுவர் புலவர், எ-று.

**(வ-று.)** சாத்தன்; வந்தான்; பண்டு காடுமன்; உறுகால் (நற்றிணை - 300) என்பனவற்றாற் பொருள் உணர்த்தப்பட்டவாறு.

*''நீயென்கிளவி''* (தொல். சொல். பெயர். 35)
*''செய்தெ னெச்சம்''* (தொல். சொல். வினை. 42)
*''தஞ்சக் கிளவி''* (தொல். சொல். இடை. 18)
*''கடியென் கிளவி''* (தொல். சொல். உரி. 85)

என்பனவற்றான் பொருள் உணரப்படாது, அச் சொற்றாமே உணரப்பட்ட வாறு கண்டுகொள்க. *(2)*

### சொல் இருவகையான் பொருளுணர்த்தல்

154. தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே.

**உரை:** மேற் கூறப்பட்ட பொருண்மை தெரிதல், சொன் மாத்திரத் தான் விளங்கி நிற்றலும், சொன்மாத்திரத்தாற் றோன்றாது சொல்லொடு கூடிய குறிப்பாற் றோன்றலும் என இரண்டு கூற்றையுடையது, எ-று.

**(வ-று.)** அவன், இவன், உவன் - வந்தான், சென்றான் என்புழிப் பொருள்தெரிபு வேறுநின்றன.

'ஒருவர் வந்தார்' என்புழி, ஆண்பால் பெண்பால் என்பதூஉம், உண்ணாநின்றான் கற்கறித்து, 'நன்கட்டாய்' என்புழித் 'தீங்கட்டாய்' என்பதூஉம் குறிப்பிற்றோன்றின. பிறவும் அன்ன. *(3)*

## சொற்கள் இத்துணைய என்றல்

155. சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே.

**உரை:** சொல்லாவன, பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் என இரண்டென்று சொல்லுவர் அறிவோர், எ-று.

பெயர்ச்சொற்கு இலக்கணம் வேற்றுமை ஓத்தினுட் கூறினான்; வினைச் சொற்கு இலக்கணம் வினையியலுட் கூறும்; பிறசொல்லும் உளவாயினும், இவற்றது சிறப்பு நோக்கிப் 'பெயரே வினையென் றாயிரண்டு' என்றான். *(4)*

## இடைச்சொல்லும் உரிச்சொல்லும்

156. இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கின் தோன்று மென்ப.

**உரை:** இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையை யும் சார்ந்து தோன்றும் எ-று.

சார்ந்து தோன்றும் எனவே, அவற்றது சிறப்பின்மை பெறப்படும். வழக்குப் பயிற்சி நோக்கி இடைச்சொல் முற்கூறினான். *(5)*

## பெயர்ச்சொற்கள்

157. அவற்றுள்,
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கு மோரன்ன உரிமையும்
அம்மூ உருபின தோன்றல் ஆறே.

**உரை:** மேற்கூறப்பட்ட நான்கனுள், பெயரென்று சொல்லப் படுவன, உயர்திணைக்கு உரிமையவாய் வருவனவும், அஃறிணைக்கு உரிமையவாய் வருவனவும், இரண்டு திணைக்கும் ஒத்த உரிமையவாய் வருவனவும் என மூன்று வேறு வாய்பாட்டன வகுத்துத் தோன்றும் நெறிக்கண், எ-று. *(6)*

### பெயர்கள், வினைகள் போல ஈற்றினைக்கொண்டு பால் உணர்தல் ஆகா எனல்

158. இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
உரியவை உரிய பெயர்வயி னான.

**உரை:** *இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவியாதற்குப் பெயருள் உரியன உரியவாம், எ-று.*

**(வ-று.)** *அவன், பெண்மகன், சாத்தன் என னகார ஈறு ஆடூஉ விற்கும் மகடூஉவிற்கும், அஃறிணை யாண்பாற்கும் உரித்தாய் வருத லானும், அவள், மக்கள், மகள் என ளகார ஈறு மகடூஉவிற்கும் பல்லோர்க் கும், அஃறிணைப் பெண்பாற்கும் உரித்தாய் வருதலானும், பெண்டாட்டி, நம்பி எனவும், ஆடூ, மகடூ எனவும் வரும் இகாரவீறும் ஊகாரவீறும் இருபாற்கும் உரியவாய் வருதலானும், வினைச்சொற்போல இன்ன ஈறு இன்ன பாற்கு உரித்து என்னப் பெயர்ச்சொல் ஈறுபற்றியுணர்த்தலாகாமை யின், 'உரியவை யுரிய' என்றார். பிறவும் அன்ன.* *(7)*

### உயர்திணைப் பெயர்கள்

159. அவ்வழி
அவனிவன் உவனென வரூஉம் பெயரும்
அவளிவள் உவளென வரூஉம் பெயரும்
அவரிவர் உவரென வரூஉம் பெயரும்
யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே.

**உரை:** *மூவீற்றதாக மேற்சொல்லப்பட்ட பெயருள், அவன் என்பது முதலாக யாவர் என்பது ஈறாகச் சொல்லப்பட்ட பதினைந்தும் பால் விளங்கநிற்கும் உயர்திணைப்பெயர், எ-று.* *(8)*

### உயர்திணைப் பெயர்கள்

160. ஆண்மை அடுத்த மகனென் கிளவியும்
பெண்மை அடுத்த மகளென் கிளவியும்
பெண்மை அடுத்த இகர இறுதியும்
நம்மூர்ந்து வரூஉம் இகரவை காரமும்
முறைமை சுட்டா மகனும் மகளும்
மாந்தர் மக்கள் என்னும் பெயரும்
ஆடூ மகடூ ஆயிரு கிளவியும்
சுட்டுமுத லாகிய அன்னும் ஆனும்

அவைமுத லாகிய பெண்டென் கிளவியும்
ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ
அப்பதி னைந்தும் அவற்றோ ரன்ன.

**உரை:** *இப்பெயர் பதினைந்தும் மேற் கூறப்பட்டன போலப் பாலறியவந்த உயர்திணைப் பெயராம், எ-று.*

*ஆண்மகன் என்பதும் பெண்மகள் என்பதும், பெண்டாட்டி என்பதும் நம்பி என்பதும் நங்கை என்பதும், முறைமைப் பெயரல்லாத மகன் மகள் என்பனவும், மாந்தர் மக்கள் என்பனவும், ஆடூ மகடூ என்பனவும், சுட்டு முதலாகிய அவ்வாளன் இவ்வாளன் உவ்வாளன் என்பனவும், அம்மாட்டான் இம்மாட்டான் உம்மாட்டான் என்பனவும், சுட்டு முதலாகிய அப்பெண்டு இப்பெண்டு உப்பெண்டு என்பனவும், பொன்னன்னான், பொன்னன்னாள், பொன்னன்னார் என வரும் உவமக் கிளவியும் உயர்திணைப் பெயராம் என்றவாறு. (9)*

### இதுவுமது

161. எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை அடுத்த மகனென் கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்.

**உரை:** *எல்லாரும் எனவும் எல்லீரும் எனவும் பெண்மகன் எனவும் வரும் மூன்றும் மேற்கூறப்பட்டன போலப் பாலறியவந்த உயர்திணைப் பெயராம், எ-று.*

*புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண் பாலாரைப் 'பெண்மகன்' என்று வழங்குப. பிறவும் அன்ன. (10)*

### இதுவுமது

162. நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே
இன்றிவ ரென்னும் எண்ணியற் பெயரோடு
அன்றி அனைத்தும் அவற்றியல் பினவே.

**உரை:** *நிலப்பெயர் முதலாகச் சொல்லப்பட்டனவும் மேலன போலப் பாலறியவந்த உயர்திணைப் பெயராம், எ-று.*

நிலப்பெயர் - அருவாளன், சோழியன் என்பன.

குடிப்பெயர் - மலையமான், சேரமான் என்பன.

குழுவின் பெயர் - அவையத்தார், அத்திகோசத்தார் என்பன.

வினைப்பெயர் - தச்சன், கொல்லன் என்பன.

உடைப்பெயர் - அம்பர் கிழான், பேரூர் கிழான் என்பன; வெற்பன், சேர்ப்பன் என்பனவும் அவை.

பண்புகொள் பெயர் - கரியான், செய்யான் என்பன.

பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயர் - தந்தையர், தாயர் என்பன.

பல்லோர்க் குறித்த சினைநிலைப்பெயர் - பெருங்காலர், பெருந்தோளர் என்பன.

பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயர் - பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர் என்பன.

'பல்லோர்க் குறித்த' என்று விசேடித்தலான், இம் மூவகைப் பெயருள் ஒருமைப் பெயர் இரண்டு திணைக்கும் உரியவாம்.

கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர் - பட்டி புத்திரர், சங்கிராமத்தார் என்பன.

இன்றிவர் என்னும் எண்ணியற் பெயர் - ஒருவர், இருவர், மூவர், முப்பத்து மூவர் என்பன.

'இன்றிவர்' என்பது, 'இத்துணையர்' என்னும் பொருட்டுப் போலும். *(11)*

### உயர்திணைப் பெயர்க்குப் புறனடை

163. அன்ன பிறவும் உயர்திணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே.

**உரை:** மேற் சொல்லப்பட்ட பெயர் போல்வன பிறவும் உயர்திணைக்கட் பன்மையும் ஒருமையுமாகிய பாலறியவந்த எல்லாப் பெயரும் உயர்திணைப் பெயராம், எ-று.

அன்ன பிறவும் ஆவன: ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான், பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார் என்னுந் தொடக்கத்தன. *(12)*

### அஃறிணைப் பெயர்கள்

164. அது இதுஉதுவென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்
அவையிவை உவையென வரூஉம் பெயரும்

அவைமுத லாகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை என்னும் பெயரும்
ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த அஃறிணைப் பெயரே.

*நிறுத்த முறையானே உயர்திணைப் பெயர் உணர்த்தி, அஃறிணைப் பெயர் உணர்த்துகின்றார்.*

**உரை:** *அது, இது, உது என வருஞ் சுட்டுமுதற்பெயரும், அச்சுட்டுப் பெயர்க்கு முதலாகிய சுட்டு முதலாக ஆய்தத்தொடு கூடி அஃது, இஃது, உஃது என வரும் பெயரும், அவை, இவை, உவை என வரும் பெயரும், சுட்டு முதலாக அவ், இவ், உவ் என வரும் வகர ஈற்றுப் பெயரும், யாது, யா, யாவை என்னும் வினாப்பெயரும் என அப் பதினைந்தும் பால் விளங்க வரும் அஃறிணைப் பெயராம் என்றவாறு.*

*சுட்டு முதலாகிய ஆய்தப் பெயரும், அவை முதலாகிய வகர ஈற்றுப்பெயரும் அவையல்லது இன்மையின் இவ்வாறு கூறினார். (13)*

### இதுவுமது

165. பல்ல பலசில என்னும் பெயரும்
உள்ள இல்ல என்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்
இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்
ஒப்பி னாகிய பெயர்நிலை உளப்பட
அப்பால் ஒன்பதும் அவற்றோ ரன்ன.

**உரை:** *பல்ல என்பது முதலாகக் கூறப்பட்ட ஒன்பது பெயரும் மேற்கூறிய அஃறிணைப் பெயர்போலப் பாலுணர்த்தி நிற்கும், எ-று.*

*பல்ல, பல, சில, உள்ள, இல்ல என்னும் ஐந்தும் தம்மை யுணர்த்தி நின்றன.*

*வினைப்பெயர்க் கிளவி யாவது: வருவ, செல்வ என்பன.*

*பண்புகொள் பெயர்: கரியது, கரிய என்பன.*

*எண்ணுக்குறிப் பெயர்: ஒன்று, பத்து என்பன.*

*ஒப்பினாகிய பெயர்: பொன்னன்னது, பொன்னன்ன என்பன. (14)*

### அஃறிணை இயற்பெயர்

166. கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி உடைய பலஅறி சொற்கே.

**உரை:** *கள் என்னும் ஈற்றொடு பொருந்தும் அஃறிணை இயற்பெயராவன: ஆ, நாய், குதிரை, கழுதை, தெங்கு, பலா, மலை, கடல் என்னுந்*

தொடக்கத்தன. இச் சாதிப்பெயர் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்றலின், இயற்பெயர் என்றார். இவை, கள் என்னும் ஈற்றவாய் ஆக்கள், குதிரைகள் என நின்றவழிப் பன்மை விளக்கலின் பலவறி சொல்லாயின வாறு கண்டுகொள்க எ-று. *(15)*

### அஃறிணைப் பெயர்க்குப் புறனடை

167. அன்ன பிறவும் அஃறிணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே.

**உரை:** *மேற்கூறப்பட்ட பெயர் போல்வன பிறவும் அஃறிணைக் கட் பன்மையும் ஒருமையும் ஆகிய பால் விளங்க வந்த எல்லாப் பெயரும் அத்திணைக்கு உரிய, எ-று.*

*'அன்ன பிறவும்' என்றதனாற் பெறுவன: பிறிது, பிற, மற்றையது, மற்றையவை, பல்லவை, சில்லவை, உள்ளது, இல்லது, உள்ளன, இல்லன என்னுந் தொடக்கத்தன.* *(16)*

### அஃறிணை இயற்பெயர் பால் உணர்த்துமாறு

168. தெரிநிலை யுடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே.

**உரை:** *கள்ளொடு சிவணாத அஃறிணை யியற்பெயர் ஒருமையும் பன்மையும் விளங்குநிலையுடைய, அதற்கேற்ற வினையொடு தொடர்ந்த வழி எ-று.*

*ஆ வந்தது -ஆ வந்தன; குதிரை வந்தது - குதிரை வந்தன என, ஏற்ற வினையாற் பால் விளங்கியவாறு கண்டுகொள்க.* *(17)*

### விரவுப்பெயர் பால் தெரிய நிற்குமாறு

169. இருதிணைச் சொற்கு மோரன்ன உரிமையின்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்த மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே.

**உரை:** *இருதிணைச் சொல்லாதற்கும் ஒத்த உரிமைய வாகலின் உயர்திணைக்கட் சென்றுழி உயர்திணைப் பெயராயும், அஃறிணைக்கட் சென்றுழி அஃறிணைப் பெயராயும் வேறுபடு பெயரெல்லாம் ஆராயுங் கால் தத்தம் மரபின் வினையோடு இயைந்தல்லது திணை விளங்கி நில்லா எ-று.*

**(வ-று.)** *சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது; முடவன் வந்தான், முடவன் வந்தது எனக்கொள்க.* *(18)*

## விரவுப்பெயர் விரவுவினையானும் திணையறியப்படல்

170. நிகழூஉ நின்ற பால்வரை கிளவியின்
உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே
அன்ன மரபின் வினைவயி னான.

**உரை:** *நிகழ்காலம் பற்றிவரும் பால்வரை கிளவியான் உயர்திணை ஒருமைப்பால் தோன்றுதலும் உரித்து, அவ் வொருமைப்பால் தோன்றுதற் கேற்ற வினையிடத்து எ-று.*

*'பால்வரை கிளவி' என்பது, செய்யும் என்னும் முற்றுச் சொல்லை.*

*சாத்தன் யாழ் எழூஉம், சாத்தி சாந்து அரைக்கும் என்றவழி, யாழ் எழூஉதலும், சாந்து அரைத்தலும் அஃறிணைக்கு ஏலாது, ஒருவற்கும் ஒருத்திக்கும் ஏற்றலின், உயர்திணை ஒருமைப்பால் விளங்கியவாறு கண்டுகொள்க. 'நிகழூஉநின்ற' என்பது, நிகழாநின்ற என்றவாறு. (19)*

## விரவுப்பெயர்க்குப் பெயரும், முறையும், தொகையும்

171. இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லாம் நீயிர் நீயெனக் கிளந்து
சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்கு
அன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே.

*இதுகாறும் விரவுப் பெயர் பால்தெரிய நிற்குமாறு உணர்த்தி, இனி, அவைதம்மை யுணர்த்துவான் எடுத்துக் கொண்டான்.*

**உரை:** இயற்பெயர் முதலாக நீ என்பது ஈறாக எடுத்துச் சொல்லப் பட்டனவும் அன்னபிறவும் ஆண்டுவருமாயிற் சொல்லப் பட்டவற்றொடு கூட்டுக, எ-று.

**(வ-று.)** இயற்பெய ராவன - சாத்தன், கொற்றன் என்னும் இடு பெயர்.

*சினைப்பெய ராவன - பெருங்காலன், முடவன் என்பன.*

*சினைமுதற்பெய ராவன - சீத்தலைச் சாத்தன், கொடும்புறமருதி எனச் சினைப்பெயரொடு தொடர்ந்து வரும் முதற்பெயர்.*

*முறைப்பெய ராவன - தந்தை, தாய் என முறை பற்றி முறையுடைய பொருண்மேல் வருவன.*

*அல்லன ஐந்தும் தம்மை உணர்த்தி நின்றன வாதலின் தாம் என்பது முதலாகிய சொல்லேயாம்.*

*அன்ன பிறவும் என்பதனான் மக, குழவி என்பனவுங் கொள்க.*

*''குழவியு மகவு மாயிரண் டல்லன
கிழவ வல்ல மக்கட் கண்ணே''* (தொல். மரபியல் 23)

*என்று உயர்திணைக்கும் எய்துவித்தான். (20)*

### விரவுப்பெயரின் பாகுபாடு

172. அவற்றுள்,
நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி இரண்டா கும்மே
ஏனைப் பெயரே தத்தம் மரபின.

**உரை:** *மேற்கூறிய விரவுப்பெயருள் இயற்பெயரும் சினைப் பெயரும் சினைமுதற் பெயரும் ஒரோவொன்று நன்னான்காம்; முறைப் பெயர் இரண்டாம்; ஒழிந்த ஐந்து பெயரும் தத்தம் இலக்கணத்தனவாம், எ-று.*

*தத்தம் இலக்கணம் என்றது, அவை ஒரொன்றாகி நிற்கும் என்ற வாறாம். தனிப்பெயர் ஐந்தும் விரவுப்பெயர் பதினான்கும் ஆக விரவுப்பெயர் பத்தொன்பது என்றவாறாம். (21)*

### இயற்பெயர் நான்கன் பெயரும் முறையும்

173. அவைதாம்,
பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்
பன்மை இயற்பெயர் ஒருமைஇயற் பெயரென்று
அந்நான் கென்ப இயற்பெயர் நிலையே. (22)

### சினைப்பெயர் நான்கன் பெயரும் முறையும்

174. பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெயர் ஒருமைச்சினைப் பெயரென்று
அந்நான் கென்ப சினைப்பெயர் நிலையே. (23)

### சினைமுதற் பெயர் நான்கன் பெயரும் முறையும்

175. பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரென்று
அந்நான் கென்ப சினைமுதற் பெயரே. (24)

### முறைப்பெயர் இரண்டன் பெயரும் முறையும்

176. பெண்மை முறைப்பெயர் ஆண்மைமுறைப் பெயரென்று
ஆயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே.

*இவை இயற்பெயர் முதலாகிய நான்கன் விரி பதினான்கும் இது என உணர்த்தியவாறு.*

*இவற்றுக்கு உதாரணம் முன்னர்க் காட்டுதும். (25)*

## பெண்மை சுட்டிய பெயர்

177. பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே.

*மேற் கூறிய பதினான்கு பெயரும் இருதிணையும் பற்றிப் பால் உணர்த்துமாறு உணர்த்திய எடுத்துக் கொண்டான்.*

*அவை பெண்மைப்பெயர் நான்கும், ஆண்மைப்பெயர் நான்கும், பன்மைப்பெயர் மூன்றும் ஒருமைப்பெயர் மூன்றும் ஆகும்.*

**உரை:** *பெண்மைபற்றி வரும் நான்கு பெயரும், அஃறிணை ஒன்றற்கும் உயர்திணை ஒருத்திக்கும் உரிய என்றவாறு.*

*அந் நான்கும் ஆவன: பெண்மை இயற்பெயரும், பெண்மைச் சினைப்பெயரும், பெண்மைச் சினைமுதற்பெயரும், பெண்மை முறைப்பெயரும் என்பன.*

**(வ-று.)** *சாத்தி வந்தது, சாத்தி வந்தாள் எனவும்; முடத்தி வந்தது, முடத்தி வந்தாள் எனவும்; முடக்கொற்றி வந்தது, முடக்கொற்றி வந்தாள் எனவும்; தாய் வந்தது, தாய் வந்தாள் எனவும் அவ்வம் முறையானே அஃறிணைப் பெண் ஒன்றற்கும், உயர்திணை ஒருத்திக்கும் வந்தவாறு கண்டு கொள்க. பிறவும் அன்ன. (26)*

## ஆண்மை சுட்டிய பெயர்

178. ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே.

*இதுவும் மேற் சூத்திரத்தோடு இயைபு.*

**உரை:** *ஆண்மைபற்றி வரும் நான்கு பெயரும், அஃறிணை ஆண் ஒன்றற்கும், உயர்திணை ஒருவனுக்கும் உரிய, எ-று.*

*ஆண்மை பற்றி வரும் நான்கு பெயராவன: ஆண்மை இயற் பெயரும், ஆண்மைச் சினைப்பெயரும், ஆண்மைச் சினைமுதற் பெயரும், ஆண்மை முறைப் பெயரும் என்பன.*

**(வ-று.)** *சாத்தன் வந்தது, சாத்தன் வந்தான் எனவும்; முடவன் வந்தது, முடவன் வந்தான் எனவும்; முடக்கொற்றன் வந்தது, முடக் கொற்றன் வந்தான் எனவும்; தந்தை வந்தது, தந்தை வந்தான் எனவும் அவை முறையானே அஃறிணை ஒன்றற்கும், உயர்திணை ஆண்பாற்கும் உரியவாய் வந்தவாறு கண்டுகொள்க. பிறவும் அன்ன. (27)*

## பன்மை சுட்டிய பெயர்

179. பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவர் என்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே.

**உரை:** *பன்மை சுட்டிய மூன்று பெயரும், அஃறிணை ஒருமையும், அத்திணைப் பன்மையும், உயர்திணை ஒருமையும் எனச் சொல்லப்பட்ட அம்மூன்று பாற்கும் உரிய, எ-று.*

*அவையாவன: பன்மை யியற்பெயர், பன்மைச் சினைப்பெயர், பன்மைச்சினைமுதற் பெயர் என்பனவாம்.*

**(வ-று.)** *யானைவந்தது - யானை வந்தன, யானை வந்தான் - யானை வந்தாள் எனவும்; நெடுங்கழுத்தல் வந்தது - நெடுங்கழுத்தல் வந்தன, நெடுங்கழுத்தல் வந்தான் - நெடுங்கழுத்தல் வந்தாள் எனவும்; பெருங்கால் யானை வந்தது - பெருங்கால் யானை வந்தன, பெருங்கால் யானை வந்தான், பெருங்கால் யானை வந்தாள் எனவும் முறையானே அஃறிணை ஒருமைக்கும், அத்திணைப் பன்மைக்கும், உயர்திணை ஒருமைக்கும் உரியவாய் வந்தவாறு கண்டுகொள்க. (28)*

### ஒருமை சுட்டிய பெயர்

180. ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே.

**உரை:** *ஒருமை சுட்டி வரும் மூன்று பெயரும் அஃறிணை ஒருமைக்கும், உயர்திணை ஒருமைக்கும் உரிய, எ-று.*

*அம் மூன்றுமாவன: ஒருமையியற்பெயர், ஒருமைச்சினைப் பெயர், ஒருமைச் சினைமுதற் பெயருமாம்.*

**(வ-று.)** கோதை வந்தது, கோதை வந்தான், கோதை வந்தாள் எனவும்; செவியிலி வந்தது, செவியிலி வந்தான், செவியிலி வந்தாள் எனவும்; கொடும்புற மருது வந்தது, கொடும்புற மருது வந்தான், கொடும்புற மருது வந்தாள் எனவும்; *முறையே அஃறிணை ஒருமைக்கும், உயர்திணை ஒருமைக்கும் உரியவாய் வந்தவாறு கண்டுகொள்க. (29)*

### தாம் என்னும் விரவுப் பெயர்

181. தாம்என் கிளவி பன்மைக் குரித்தே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், 'தத்தம் மரபின' (தொல். பெயர். 21) எனப்பட்ட பெயர் இருபாற்கும் உரியவாய் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *தாம் என்னும் பெயர் இரு திணைக்கும் பன்மைப்பாற்கு உரித்து, எ-று.*

*தாம் வந்தார், தாம் வந்தன என வரும். (30)*

### தான் என்னும் விரவுப்பெயர்

182. தான்என் கிளவி ஒருமைக் குரித்தே.

**உரை:** *தான் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் ஒருமைப் பாற்கு உரித்து, எ-று.*

**(வ-று.)** *தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது என வரும். (31)*

### எல்லாம் என்னும் விரவுப்பெயர்

183. எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே.

**உரை:** *எல்லாம் என்னும் பெயர் இரண்டு திணைக்கண்ணும் பன்மை குறித்து வரும், எ-று.*

*வழி என்பது இடம்.*

**(வ-று.)** *எல்லாம் வந்தேம், எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தார், எல்லாம் வந்தன என வரும்.* *(32)*

### எல்லாம் என்பது உயர்திணையில் பெரும்பான்மை தன்மைப் பன்மையில் வரும்

184. தன்னுள் உறுத்த பன்மைக் கல்லது
உயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை.

**உரை:** *எல்லாம் என்னும் சொல் உயர்திணைக்கு ஆங்கால் தன்மைப்பன்மைக்கல்லது முன்னிலைப் பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் ஆகாது, எ-று.*

*'ஆக்கமில்லை' எனவே சிறுபான்மை வரப்பெறும்.* *(33)*

### நீயிர், நீ என்பன திணை உணர்த்தாமை

185. நீயிர் நீயென வரூஉங் கிளவி
பால்தெரி பிலவே உடன்மொழிப் பொருள.

**உரை:** *நீயிர் நீ என்னும் இரண்டு பெயர்ச்சொல்லும் திணைப் பகுதி தெரிய நில்லா; இரு திணையும் உடன்றோன்றும் பொருள, எ-று.*

*நீயிர் வந்தீர், நீ வந்தாய் என இரு திணைக்கும் பொதுவாய் நின்ற வாறு கண்டுகொள்க.* *(34)*

### நீ என்பது ஒருமைக்குரியது

186. அவற்றுள்,
நீயென் கிளவி ஒருமைக் குரித்தே.

**உரை:** *மேற்சொல்லப்பட்ட இரண்டு பெயருள் நீ என்னும் பெயர் ஒருமைக்கு உரித்து, எ-று.*

*ஒருமையாவது: ஒருவன், ஒருத்தி, ஒன்று என்பனவற்றிற் கெல்லாம் பொதுவாகிய ஒருமை.*

*நீ வந்தாய் எனக் கண்டு கொள்க.* *(35)*

### நீயிர் என்பது பன்மைக்குரியது

187. ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே.

**உரை:** *நீயிர் என்னும் பெயர் பன்மைக்கு உரித்து, எ-று.*

*பன்மையாவது: பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொதுவாகிய பன்மை. நீயிர் வந்தீர் எனக் கண்டு கொள்க.* *(36)*

## ஒருவர் என்பது உயரிரு பாற்கும் பொது

188. ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி
இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை.

**உரை:** *ஒருவர் என்னும் பெயர்ச்சொல் உயர்திணைப் பாலுள் ஒருபால் விளக்காது; ஒருவன், ஒருத்தி என்னும் இருபாற்கும் பொதுவாய் நிற்கும், எ-று.*

**(வ-று.)** ஒருவர் வந்தார் என்பது, பொதுவாய் நின்றவாறு கண்டு கொள்க.

இருபாற்கும் உரித்து என்னும் உம்மை முற்றும்மை. *(37)*

## ஒருவர் என்பது பன்மை வினை கொள்ளல்

189. தன்மை சுட்டின் பன்மைக் கேற்கும்.

**உரை:** *ஒருவர் என்னும் பெயரது இயல்பு கருதின் அஃது ஒருமைப் பெயராயினும் பல்லோரறியுஞ் சொல்லொடு தொடர்தற்கு ஏற்கும், எ-று.*

**(வ-று.)** ஒருவர் வந்தார், ஒருவர் அவர் என வரும். *(38)*

## மேற்கூறிய மூன்றன் பால் தெரியுமாறு

190. இன்ன பெயரே இவையெனல் வேண்டின்
முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல்.

**உரை:** *நீயிர் நீ ஒருவர் என்பனவற்றை இன்னபாற் பெயரென்று அறியலுறின் சொல்லுவான் குறிப்பொடுங் கூட்டி முறையான் உணர்க, எ-று.*

**(வ-று.)** ஒரு சாத்தன், ஒருவனானும் ஒருத்தியானும் பலரானும் ஒன்றானும் பலவானும் தன்னுழைச் சென்றவழி, 'நீ வந்தாய், நீயிர் வந்தீர்' என்னுமன்றே; ஆண்டு அது கேட்டான், இவன் இன்னபால் கருதிக் கூறினான் என்பது உணரும். இனி,

''*ஒருவ ரொருவரைச் சார்ந்தொழுக லாற்றின்*'' (நாலடி. 309)

என்பது சொல்லுவான் ஆடூஉ ஒருமை குறித்தான் என்பது விளங்கும்.

ஏகாரம் தேற்றேகாரம். 'முறையி னுணர்தல்' என்பது பாதுகாவல். *(39)*

## பெண்மகன் என்னும் பெயர் பெண்பாற்குரிய வினைகொளல்

191. மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி
மகடூஉ இயற்கை தொழில்வயி னான.

இனி ஒருசார் உயர்திணைப் பெயர்க்கும் விரவுப் பெயர்க்கும் எஞ்சி நின்ற இலக்கணங் கூறுகின்றார்.

**உரை:** மகடூஉப் பொருண்மைக்கண் பால்திரிந்து வரும் பெண்மகன் என்னும் பெயர் வினைகொள்ளுமிடத்து மகடூஉவிற்குரிய வினைகொள்ளும், எ-று.

**(வ-று.)** பெண்மகன் வந்தாள் என வரும்.

பொருண்மைபற்றி மகடூஉ வினை கொள்ளுமோ, ஈறுபற்றி ஆடூஉ வினை கொள்ளுமோ என்று ஐயுற்றார்க்கு ஐயம் அகற்றியது. *(40)*

### பெயருள் ஆகார ஈறு செய்யுளில் ஓகாரம் ஆதல்

192. ஆஓ ஆகும் பெயருமா ருளவே
ஆயிடன் அறிதல் செய்யுள் உள்ளே.

**உரை:** ஆகாரம் ஓகாரமாய்த் திரியும் பெயருமுள, அத்திரியும் இடமறிக செய்யுளுள்ளே, எ-று.

*வரலாறு:*

*''வில்லோன் காலன கழலே தொடியோள்*
*மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்*
*யார்கொல் லளியர் தாமே''* (குறுந். 7)

*என வரும்.* *(41)*

### விரவுப்பெயர் செய்யுளுள் வருமுறைமை

193. இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கின் தோன்ற லான.

**உரை:** செய்யுளுள் கருப்பொருண்மேற் கிளக்கப்படும் இரு திணைக்குமுரிய விரவுப்பெயர்கள், உயர்திணை யுணர்த்தா; அவ்வந் நிலத்துவழி அஃறிணைப் பொருளாய் வழங்கப்பட்டு வருதலான், எ-று.

*வரலாறு:*

*''கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு*
*வதுவை அயர்ந்த வன்பறழ்க் குமரி''*

*என்புழிக் கடுவன் முதுமகன் குமரி என, அஃறிணைப் பொருளவா யல்லது நிலத்துவழிமருங்கின் தோன்றாமையின் உயர்திணை சுட்டாதவாறு கண்டுகொள்க. நிலமாவன, முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்பன.* *(42)*

### எய்தியது விலக்கல்

194. திணையொடு பழகிய பெயரலங் கடையே.

**உரை:** *கருப்பொருள் உணர்த்தும் விரவுப்பெயர் உயர்திணை சுட்டாது, அஃறிணை சுட்டுவது அவ்வத் திணைக்குரியவாய் வழங்கப் பட்டுவரும் பெயரல்லாத விடத்து, எ-று.*

*எனவே, திணைக்குரியவாய் வழங்கப்பட்டு வரும் பெயர் இரு திணையுஞ் சுட்டி வரும் என்பதாம்.*

**(வ-று.)** *காளை விடலை என்பன உயர்திணையினும் அஃறிணை யினும் வருமாதலின் விரவுப்பெயராயின. பிறவுமன்ன.* *(43)*

**ஐந்தாவது பெயரியல் முற்றிற்று.**

# 6
# வினையியல்

### வினைச்சொற்குப் பொது இலக்கணம்

195. வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்

என்பது சூத்திரம்.

என் நுதலிற்றோவெனின், நிறுத்த முறையானே வினைச்சொல் ஆமாறு உணர்த்திய எடுத்துக்கொண்டான், அதனால் இவ் வோத்து வினையியல் என்னும் பெயர்த்தாயிற்று.

**உரை:** வினையென்று சொல்லப்படுவது வேற்றுமையொடு பொருந்தாது, ஆராயிற் காலத்தொடு புலப்படும், எ-று.

ஈண்டு வேற்றுமை என்பது உருபை.

**(வ-று.)** உண்டான், கரியன் என வேற்றுமை கொள்ளாது கால மொடு தோன்றியவாறு கண்டுகொள்க. *(1)*

### காலம் மூன்று

196. காலந் தாமே மூன்றென மொழிப.

**உரை:** மேல் தோற்றுவாய் செய்யப்பட்ட காலம் மூன்று என்று சொல்லுவர் புலவர், எ-று. *(2)*

### காலத்தின் பெயரும், முறையும், தொகையும்

197. இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமும் குறிப்பொடும் கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே.

**உரை:** இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்று சொல்லப்படும் மூன்று காலமும் குறிப்புவினையொடும் பொருந்தும் மெய்ந்நிலை யுடைய, வினைச்சொல்லானவை தோன்றுநெறிக்கண், எ-று.

எனவே, காலம் மூன்றாவன இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்பதூ உம், வெளிப்படக் காலம் விளங்காதன குறிப்புவினை யென்பதூஉம் பெற்றாம்.

**(வ-று.)** *உண்டான், உண்ணா நின்றான், உண்பான் எனவரும்.*

*இறப்பாவது, தொழிலது கழிவு; நிகழ்வாவது, தொழில் தொடங்கப் பட்டு முற்றுப் பெறாத நிலைமை; எதிர்வாவது தொழில் பிறவாமை.* *(3)*

## வினைச்சொற்களின் பாகுபாடு

198. குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே.

**உரை:** *குறிப்புப் பொருண்மைக்கண்ணும் தொழிற் பொருண்மைக் கண்ணும் தோன்றிக் காலத்தொடு வரூஉம் எல்லாச் சொல்லும் உயர் திணைக்குரியனவும், அஃறிணைக்குரியனவும், இரண்டு திணைக்கும் ஒப்ப உரியனவும் என மூன்று கூற்றனவாம் தோன்று நெறிக்கண் எ-று.(4)*

## உயர்திணைத் தன்மைப் பன்மை வினைமுற்று

199. அவைதாம்,
அம்ஆம் எம்ஏம் என்னும் கிளவியும்
உம்மொடு வரூஉம் கடதற என்னும்
அந்நாற் கிளவியோ டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், நிறுத்த முறையானே உயர்திணை வினையுணர்த்துகின்றார்; அவைதாம் இருவகைய, தன்மை வினையும் படர்க்கை வினையும் என. தன்மை வினையும் இருவகைத்து, பன்மைத் தன்மையும், ஒருமைத் தன்மையுமென; இச் சூத்திரத்தாற் பன்மைத் தன்மை உணர்த்துகின்றான்.*

**உரை:** *மேல் மூன்றுவகை எனப்பட்ட வினைச்சொற்றாம், அம் - ஆம், எம்- ஏம் என்னும் ஈற்றவாகிய சொல்லும், உம்மொடு வரூஉம் க-ட-த-ற வாகிய கும்மும், டும்மும், தும்மும், றும்மும் என்னும் ஈற்றவாகிய சொல்லும் என அவ்வெட்டும் பன்மையுணர்த்துந் தன்மைச் சொல்லாம், எ-று.*

*(அம், ஆம் என்பன முன்னின்றாரை யுளப்படுக்கும்; தமராய வழி படர்க்கையாரையும் உளப்படுக்கும். எம், ஏம் என்பன படர்க்கையாரை உளப்படுக்கும். உம்மொடு வரூஉங் க-ட-த-ற அவ்விருவரையும் ஒருங்கு உளப்படுத்தலும் தனித்து உளப்படுத்தலும் உரிய.)*

*அம் - ஆம், எம் - ஏம் என்பன மூன்று காலமும் பற்றி வரும்.*

*உம்மொடு வரூஉங் க-ட-த-ற எதிர்காலம் பற்றி வரும்.*

வரலாறு:

அம் - உண்டனம், உண்ணாநின்றனம், உண்குவம் எனவும்;

ஆம் - உண்டாம், உண்ணாநின்றாம், உண்பாம் எனவும்;

எம் - உண்டனெம், உண்ணாநின்றனெம், உண்குவெம் எனவும்;

ஏம் - உண்டேம், உண்ணாநின்றேம், உண்பேம் எனவும் வரும்.

உம்மொடு வரூஉங் கடதற -உண்கும், உண்டும், வருதும், சேறும் எனவும்; உரினுதும், திருமுதும் என ஏற்றவழி உகரம் பெற்றும் வரும். இவை நான்கும் எதிர்காலம் பற்றி வரும்.

உம்மை யடைந்து வந்த க-ட-த-றக்கள், 'உம்மொடு வரூஉம் க-ட-த-ற' ஆயின. இக் காட்டிய எட்டு வினைச்சொல்லும் உயர்திணைப் பன்மை வினைச்சொல்லை யுணர்த்துந் தன்மைச் சொல் என்றவாறு.

இவை தன்னொடு முன்னின்றானையும் உளப்படுக்கும், படர்க்கையானையும் உளப்படுக்கும், அவ்விருவரையும் உளப்படுக்கு மென்பது,

''அவற்றுள், பன்மை யுரைக்கும் தன்மைக் கிளவி''

(தொல்.சொல். வினை. 12)

என்னுஞ் சூத்திரத்துட் சொல்லுதும். *(5)*

## தன்மை ஒருமை வினைமுற்று

200. கடதற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோடு
என்ஏன் அல்லென வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்குந் தன்மைச் சொல்லே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், மேல் உளப்பாட்டுத் தன்மை கூறினான்; இது தனித்தன்மை வினைச்சொல் இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** க, ட, த, ற ஊர்ந்த குன்றியலுகரமாகிய கு, டு, து, று என்னும் நான்கு ஈற்றவாகிய சொல்லும்; என், ஏன், அல் என்னும் ஈற்றவாகிய சொல்லும் என அவ்வேழும் ஒருமையுணர்த்தும் தன்மைச் சொல்லாம், எ-று.

க-ட-த-ற என்னும் அந் நான்கு ஊர்ந்த குற்றியலுகரம் என்றான் அவையிற்றின் ஈறு பற்றி. அவை வருமாறு: உண்கு, உண்டு, வருது, சேறு என வரும்.

என், ஏன் என்பன மூன்று காலமும் பற்றி வரும். அவை உண்ட னென், உண்ணாநின்றனென், உண்குவென் எனவும்; உண் டேன், உண்ணா நின்றேன், உண்குவேன் எனவும் வரும்.

*அல் - உண்பல், தின்பல் என எதிர்காலம் பற்றி வரும். இப் பொழுது அதனை உண்பன், தின்பன் என அன் ஈறாக வழங்குப என்ப.* *(6)*

## 'செய்கு' என்னும் வாய்பாட்டுவினை முற்றுவினை கொண்டு முடிதல்

201. அவற்றுள்
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா வென்மனார் புலவர்.

**உரை:** *அவ்வேழனுட் செய்கு என்னும் சொல் வினைகொண்டு முடியினும் அமையும், எ-று.*

**(வ-று.)** *உண்கு வந்தேன் என வரும்.*

*செய்கென் கிளவி வினையொடு முடியினும் அமைக எனவே செய்கும் என்னும் கிளவியும் வினையொடு முடியினும் அமைக என்பது போந்ததாம்.*

**(வ-று.)** *உண்கும் வந்தேம் என வரும்.*

*இனி அவை வினையொடு முடியினும் அமையும் எனவே,* பெயர்கொண்டு முடிதலே வலியுடைத்து என்பது போந்ததாம்.

*அவை: உண்கு யான், உண்கும் யாம் என வரும்.*

*'அவ்வியல் திரியா' என்பது அவையும் முற்றுச்சொல் இயல் பிற்றிரியா என்றவாறு.* *(7)*

## உயர்திணைப் படர்க்கை ஒருமை வினைமுற்று

202. அன்ஆன் அள்ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கின் படர்க்கைச் சொல்லே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், உயர்திணைத் தன்மைச் சொல் உணர்த்தி, அத்திணைப் படர்க்கை வினைச்சொல் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** *அன் என்பதனைத் தொடக்கமாக வுடைய நான்கு ஈற்றுச் சொல்லும் உயர்திணைக்கண் ஒருமைப்பாலை உணர்த்தும் படர்க்கை வினைச்சொல், எ-று.*

*அவை வருமாறு:*

*அன் - உண்டனன், உண்ணாநின்றனன், உண்குவன் எனவரும்.*

*ஆன் - உண்டான், உண்ணாநின்றான், உண்பான் எனவரும்.*

*அள் - உண்டனள், உண்ணாநின்றனள், உண்குவள் எனவரும்.*

*ஆள் - உண்டாள், உண்ணாநின்றாள், உண்பாள் எனவரும்.* *(8)*

## உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று

203. அர்ஆர் பஎன வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைச்சொல் இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** *அம் மூவகைச் சொல்லும் பலராய புறத்தாரை யுணர்த்துஞ் சொல், எ-று.*

*வரலாறு:*

*அர் - உண்டனர், உண்ணாநின்றனர், உண்குவர் எனவரும்.*

*ஆர் - உண்டார், உண்ணாநின்றார், உண்பார் எனவரும்.*

*ப - உண்ப, தின்ப என எதிர்காலங்கொண்டு வரும்.* *(9)*

## மார் என்பது வினையொடு முடிதல்

204. மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப.

**உரை:** *மார் என்பதூஉம் உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைக்கு உரித்து; அது பின்னை முடியுங்காலை வினைச்சொல்லொடு முடிதல் உடைத்து, எ-று.*

**(வ-று.)** ஆர்த்தார் கொண்மார் வந்தார் எனவரும்.

இது முற்றுச்சொல் லாகலான் வினைச்சொல்லொடு முடிதல் வேற்றுமை கண்டு அஃதுணர்த்தியவா றென்பது. *(10)*

## உயர்திணை வினைமுற்றின் தொகை

205. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அந்நா லைந்தும் மூன்றுதலை யிட்ட
முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், மேல் விரித்தவற்றை யெல்லாம் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் தோன்ற நின்ற இருபத்து மூன்றுமே உயர்திணை மூன்றுபாற்கும் உரிய என வரை யறுத்தவாறு.

இது, 'விரித்தது தொகுத்தல்' என்னும் நூற்புணர்ப்புப்பட வைத்தவாறு. *(11)*

## உளப்பாட்டுத்தன்மை வினைமுற்றின் திரிபு

206. அவற்றுள்,
பன்மை உரைக்குந் தன்மைக் கிளவி
எண்ணியல் மருங்கின் திரிபவை உளவே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், அத்தொகுக்கப் பட்டன வற்றுள் ஒருசா ரவற்றது வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** *பன்மைத் தன்மைச் சொற்கள் ஆராயுமிடத்து அவை திரிபுடைய, எ-று.*

யாதோ திரிபு எனின், அம் ஆம் என்னும் இரண்டும் தன்னொடு முன்னின்றானை உளப்படுக்கும்.

எம் ஏம் என்பன இரண்டும் தன்னொடு படர்க்கையானை உளப்படுக்கும்.

உம்மொடு வரூஉம் கடதறக்கள் முன்னின்றானையும் படர்க்கை யானையும் உளப்படுக்கும் என்பது.

இவ்வுளப்படுத்தற்குத் திரியுந் திரிபு அவையுடைய; வழூஉத் திரிபன்று ஈண்டுக் கருதியது என்பது. *(12)*

### யார் என்னும் குறிப்புமுற்று உயர்திணை முப்பாற்கும் உரித்தாதல்

207. யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், உயர்திணை மூன்றுபாற் கும் பொதுவாகியதொரு வினைக்குறிப்புச்சொல் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** *யார் என்னும் வினாவின்பாற்றாய் வருகின்ற சொல் உயர்திணை மூன்றுபாற்கும் உரித்து, எ-று.*

**(வ-று.)** *யார் அவன், யார் அவள், யார் அவர் எனவரும்.*

மற்றிது வினைக்குறிப்பே யெனின், முன்னர்,

*''அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானும்''* (தொல். சொல். 210)

என்று உயர்திணைக்குறிப்பு ஓதும்வழியே வைக்க எனின், உயர் திணை முப்பாற்கும் தன் ஈறு திரியாது நிற்றற் சிறப்புநோக்கி ஈண்டு வைத் துணர்த்தினான் என்பது. *(13)*

### ஆன், ஆள், ஆர் ஈற்று ஆ செய்யுளுள் ஓ ஆதல்

208. பாலறி மரபின் அம்மூ வீற்றும்
ஆஓ ஆகுஞ் செய்யு ளுள்ளே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், உயர்திணைப்பாற்குப் படுவதொரு செய்யுண்முடிபு கூறுதல் நுதலிற்று.

**உரை:** *பாலறி மரபின் அம்மூவீற்றும் என்பன - மேல் உணர்த்திப் போந்த னஃகான் ஒற்றும், ளஃகான் ஒற்றும், ரஃகான் ஒற்றும் ஆயின அவை மூன்று ஈற்றுக்கண்ணும்; ஆஓஆகும் செய்யுளுள்ளே என்பன - நின்ற ஆகாரம் ஓகாரமாம் செய்யுளுள், எ-று.*

**(வ-று.)** 'வினவி நிற்றந்தான்' என்பது, 'வினவி நிற்றந்தோன்' (அகம். 48) எனவும்,

'நகூஉப் பெயர்ந்தாள்' என்பது, 'நகூஉப் பெயர்ந்தோள் (அகம். 248) எனவும்,

'சென்றா ரன்பிலர்' என்பது, 'சென்றோ ரன்பிலர்' (அகம். 31) எனவும் வரும்.

செய்யுளுள் எங்கும் ஆ ஓவாகாது. ஆவாகக் கொள்ளாதவிடத் தாயின் ஓவாகத் திரிவது; அல்லாக்கால் வேண்டா என்பது. (14)

## ஆய் என்னும் ஈற்று ஆவும் செய்யுளுள் ஓ ஆதல்

209. ஆய்என் கிளவியும் அவற்றொடு கொள்ளும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இதுவும் ஆ ஓவாகல் ஒப்புமை கண்டு விரவுவினைச்சொல் ஈறும் செய்யுளுட் டிரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** ஆய் என்னும் சொல்லின் ஆகாரமும் ஓவாகும் செய்யுளுள், எ-று.

**(வ-று.)** 'வந்தாய் மன்ற தண்கடற் சேர்ப்ப' என்பது, 'வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப' (அகம். 80) எனவரும். (15)

## உயர்திணைக் குறிப்பு வினைமுற்று

210. அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பி னானுமென்று
அப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும்
அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்
அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்
என்ன கிளவியுங் குறிப்பே காலம்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், நிறுத்த முறையானே உயர்திணைக்குரிய வினைக்குறிப்புச் சொல் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இங்குக் கூறப்பட்ட எட்டுப் பொருண்மையும் பற்றித் தோன்றுங்கால் வினைக்குறிப்புச் சொல்லொடு தோன்றும் என்றவாறு.

அதுச்சொல் வேற்றுமை - ஆறாம் வேற்றுமை. அதன் பொருள் பல; அவற்றுள் அவ்வுடைமைப் பொருள்பற்றி உயர்திணை வினைக் குறிப்புச்சொல் பிறக்கும், எ-று.

**(வ-று.)** உடையன், உடையள், உடையர் எனவரும்.

கண்ணென் வேற்றுமை நிலத்தினானும் பற்றிப் பிறந்தன:

*நிலத்தன், நிலத்தள், நிலத்தர் என்பன.*

*உவமைப் பொருள் பற்றிப் பிறந்தன:*

*பொன்னன்னன், பொன்னன்னள், பொன்னன்னர் என்பன.*

*பண்புபற்றிப் பிறந்தன:*

*கரியன், கரியள், கரியர் என்பன.*

அப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும் என்பது - அக்கூறப்பட்ட சொல் குறிப்பாய்த் தோன்றும் என்றவாறு.

*அன்மை: அல்லன், அல்லள், அல்லர் என்பன.*

*இன்மை: இல்லன், இல்லள், இல்லர் என்பன.*

*உண்மை: உளன், உளள், உளர் என்பன.*

*வன்மை: வல்லன், வல்லள், வல்லர் என்பன.*

இனிப், 'பிறவும்' என்றதனான்,

*நல்லன் நல்லள் நல்லர் எனவும்,*

*தீயன் தீயள் தீயர் எனவும்,*

*மூவாட்டையான், நாலாட்டையான், ஏழாட்டையான் எனவும்,* பிறவும் இவ்வாறு வருவனவெல்லாங் கொள்க.

ஈண்டுக் காட்டினவெல்லாம் படர்க்கை வினைக்குறிப்புச் சொல்லே. இனி, ஈண்டு எடுத்தோத்தினானுங் கூறிய பொருளைப்பற்றித் தன்மை வினைக்குறிப்புச் சொல் வருமாறு ஒட்டிக்கொள்க.

தன்மை வினைக்குறிப்புச் சொல் உடையென், உடையேம், உடையாம் என வரும். பிறவும் அன்ன. *(16)*

### உயர்திணைக் குறிப்பு வினைமுற்று ஈறு

211. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபின் குறிப்பொடு வரூஉங்
காலக் கிளவி உயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

**உரை:** பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் ஆகிய பெண் ஆண் என்று வேறுபாடு தோன்ற வந்த வினைக்குறிப்புச் சொற்களெல்லாம் மேற்சொல்லிப்போந்த இருபத்து மூன்று வினைச்சொற்கு ஈறாய எழுத்துக்களிலுள்ளனவே தமக்கும் ஈறாவன, பிறிதில்லை எ-று.

'அன்ன மரபின்' என்றதனான், ஈண்டு உயர்திணைக்கு ஓதிய பொருள் பற்றி அஃறிணை வினைக்குறிப்புந் தோன்றும் என்று கொள்க.

**(வ-று.)** 'வடாது வேங்கடம் தெனாது குமரி' என்புழி, வடாது தெனாது என்பன; இது வினைக்குறிப்புப் பெயர். பிறவும் அன்ன. *(17)*

## அஃறிணைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்று

212. அஆ வஎன வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை.

*இச்சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், அஃறிணைப் பன்மைப் பாற்கு உரிய வினைச்சொல் உணர்த்துதல் நுதலிற்று.*

*அ - உண்டன, உண்ணாநின்றன, உண்பன என வரும்.*

*ஆ - உண்ணா, தின்னா என வரும்.*

*வ - உண்குவ, தின்குவ என வரும்.*

*வரூஉம் இறுதி அப்பான் மூன்று என்பது - இறுதி இயைபுடைய அப்பான் மூன்று என்றவாறு.*

*இவை மூன்றுமே அஃறிணைப் பன்மைப்படர்க்கை வினைச் சொற்கு ஈறாம் எழுத்துக்கள் எ-று. (18)*

## அஃறிணை ஒருமைத் தெரிநிலை வினைமுற்று

213. ஒன்றன் படர்க்கை தடற ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், அஃறிணை ஒருமைப் பாற்கு உரிய வினைச்சொல் உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *ஒன்றனை யறியும் படர்க்கை வினைச்சொல்லாவன த-ட-றக்களை ஊர்ந்த குன்றியலுகர ஈற்றுச்சொல், எ-று.*

**(வ-று.)** *உண்டது, உண்ணாநின்றது, உண்பது எனவும்;*

*கூயிற்று, தாயிற்று எனவும்;*

*குண்டுகட்டு, குறுந்தாட்டு எனவும் வரும்.*

*இனிக் கிளவியாக்கத்துப் பாலுணர்த்தும் எழுத்துக்களைப் படர்க்கை வினைச்சொல் ஈற்றவாகக் காட்டியது இவ்வோத்தினுட் கூறப் பட்ட இலக்கணம் வலித்தாயிற்று என்பது. (19)*

## அஃறிணை வினைமுற்றின் தொகை

214. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அம்மூ விரண்டும் அஃறிணை யவ்வே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், விரித்தது தொகுத்தவாறு நுதலிற்று.*

**உரை:** *பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் அறிய வந்த அவ்வாறு ஈற்றுச் சொற்களும் அஃறிணைக்கு உரிய வினைச் சொல் எ-று. (20)*

## எவன் என்பது அஃறிணை இருபாற்கும் உரித்தெனல்

215. அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவன்என் வினாவே.

**உரை:** *அஃறிணை இருபாற்கும் பொதுவேயாகி நிற்கும், எவன் என்னும் வினாவினை யுணர நின்ற வினைக்குறிப்புச்சொல் எ-று.*

**(வ-று.)** *எவன் அது, எவன் அவை என வரும்; பெயருமாம் படுத்துச் சொல்லின்.* *(21)*

## அஃறிணைக் குறிப்பு வினைமுற்று

216. இன்றில உடைய என்னுங் கிளவியும்
அன்றுடைத் தல்ல என்னுங் கிளவியும்
பண்புகொள் கிளவியும் உளஎன் கிளவியும்
பண்பின் ஆகிய சினைமுதற் கிளவியும்
ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
அப்பாற் பத்துங் குறிப்பொடு கொள்ளும்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபின் குறிப்பொடு வரூஉங்
காலக் கிளவி அஃறிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், அஃறிணை வினைக் குறிப்பு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *சொல்லப்பட்ட பத்துப் பொருண்மைக்கண்ணும் அஃறிணை வினைக்குறிப்புப் பிறக்கும் எ-று.*

*இன்று என்பது - கோடின்று, செவியின்று என வரும்.*

*இல என்பது - கோடில, செவியில என வரும்.*

*உடைய என்பது - கோடுடைய, செவியுடைய என வரும்.*

*அன்று என்பது - நாயன்று, நரியன்று என வரும்.*

*உடைத்து என்பது - கோடுடைத்து, செவியுடைத்து என வரும்.*

*அல்ல என்பது - உழுந்தல்ல, பயறல்ல என வரும்.*

*பண்புகொள் கிளவி - கரியது, கரிய என வரும்.*

*உளவென் கிளவி - உழுந்துள, பயறுள என வரும்.*

*பண்பினாகிய சினைமுதற் கிளவி - குறுங்கோட்டது, குறுங் கோட்டன என வரும்.*

*ஒப்பொடு வரூஉங் கிளவி - பொன்னன்னது, பொன்னன்னன என வரும்.*

*இக் கூறப்பட்ட பத்துப் பொருண்மைக்கண்ணும் வினைக்குறிப் புச் சொற்கள் கொள்ளப்படும் என்றவாறு.*

*பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் தோன்றிநிற்கும் இலக்கண முடைய வினைக்குறிப்புச் சொற்கள் மேற்கூறப்பட்ட அஃறிணை வினைச்*

*சொற்கு ஈறாய்நின்று பாலுணர்த்தும் எழுத்துக்களின் உள்ளனவே தமக்கும் ஈறாவன, பிறிதில எ-று.* *(22)*

## விரவுவினையின் பெயரும் முறையும் தொகையும்

217. முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யுஞ் செய்த என்னும்
அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்
பிரிபுவேறு படூஉஞ் செய்திய வாகி
இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமைய.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இருதிணைக்கும் உரிய வினைச் சொற்களைப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *முன்னிலை என்பது - முன்னின்றான் தொழின்மை கூறுவது; வியங்கோள் என்பது - ஏவநிற்பது; வினையெஞ்சு கிளவி என்பது - வினைச்சொல்லை ஒழிபாகி நிற்பது; இன்மை செப்பல் என்பது - இல்லையென்பது; ஒழிந்தன அவ்வாய்பாடே.*

*அவற்றுள், செய்ம்மன என்பது இப்பொழுது வழக்கரிது.*

*பிரிவு வேறுபடூஉஞ் செய்தியவாய் என்பது - உயர்திணைக்கண் வரின் உயர்திணைக்கே உரிய என்றும், அஃறிணைக்கண்வரின் அஃறிணைக்கே உரிய என்றும் பிரித்துச் செய்யப்படும் எ-று.* *(23)*

## முன்னிலை ஒருமை வினைமுற்று

218. அவற்றுள்,
முன்னிலைக் கிளவி
இஐ ஆயென வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், முன்னிலை யொருமைச் சொற்கள் இருதிணைக்கும் உரியவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *முன்னிலைக் கிளவிகளில் இ, ஐ, ஆய் என்னும் மூன்று திறத் தனவும் இரண்டுதிணை யொருமைப்பான் மூன்றற்கும் ஒப்ப வுரியவாம், எ-று.*

*ஒருவர்க்கும் ஒன்றற்கும் - உயர்திணை ஆண்பாற்கும் பெண்பாற் கும், அஃறிணை யொருமைப்பாற்கும் என்பது.*

**(வ-று.)** *உண்டி, தின்றி என இறந்த காலத்திற்கே பொருத்த முடைத்தாய் இகரம் வரும்.*

*இனி, ஐ வருமாறு - உண்டனை, உண்ணாநின்றனை, உண்குவை என மூன்று காலமும் வரும்.*

*ஆய் - உண்டாய், உண்ணாநின்றாய், உண்பாய் என மூன்று காலமும் வரும்.*

*இனி, ஒரு காலத்திற்கே யேற்கும் இகரம் முற்கூறினமையின் உண், தின், கிட, நட, வா, போ என்னுந் தொடக்கத்தனவும் கொள்க. (24)*

## முன்னிலைப் பன்மை வினைமுற்று

219. இர்ஈர் மின்னென வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோ ரனைய என்மனார் புலவர்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், முன்னிலைப் பன்மை வினைச்சொல் இவையென்று உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இக்கூறப்பட்ட மூன்றும் பல்லோர்க்கும் பலவற்றிற்கும் ஒப்ப வுரியவாஞ் சொல் எ-று.

*இர் - உண்டனிர், உண்ணாநின்றனிர், உண்குவிர் எனவும்;*

*ஈர் - உண்டீர், உண்ணாநின்றீர், உண்பீர் எனவும் வரும். இவை மூன்று காலமும் பற்றி வரும்.*

*மின் - உண்மின், தின்மின் என எதிர்காலம் பற்றி வரும். (25)*

## முன்னிலை ஒழிந்த ஏனை வினைகள்

220. எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், ஒழிந்து நின்றவற்றைத் தொகுத்து உரியவாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** *அவற்றுள், முன்னிலைக்கு உரியவாகக் கூறப்பட்டவற்றை ஒழித்து ஒழிந்தவெல்லாம் மூன்றிடத்தும் நின்று இருதிணை ஐம்பாற்கும் உரிய, எ-று.*

*அவை வருமாறு:*

*இன்மை செப்பல்: யானில்லை, நீயில்லை, அவனில்லை, அவளில்லை, அவரில்லை, அதுவில்லை, அவையில்லை என வரும்.*

*வேறு என் கிளவி: யான்வேறு, நீவேறு, அவன்வேறு, அவள் வேறு, அவர்வேறு, அதுவேறு, அவைவேறு என வரும்.*

*செய்ம்மன: யான் செய்ம்மன, நீ செய்ம்மன, அவன் செய்ம்மன, அவள் செய்ம்மன, அவர் செய்ம்மன, அது செய்ம்மன, அவை செய்ம்மன எனவரும். (26)*

## வியங்கோள் முற்று, தன்மை முன்னிலையில் வாராது என்பது

221. அவற்றுள்,
முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடும்
மன்னா தாகும் வியங்கோட் கிளவி.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

**உரை:** முன்னிலை, தன்மை இரண்டிடத்துஞ் செல்வனவாகிய வியங்கோள் வினைச்சொல் சிறு வரவின, எ-று.

**(வ-று.)** நீயிர் செல்க, நீ செல்க, யான் செல்க என வரும்.

இனி, அவன் செல்க, அவள் செல்க, அவர் செல்க, அது செல்க, அவை செல்க என்பன பெருவரவினவாம். *(27)*

### செய்யும் என்னும் முற்று, பொருந்தாத இடம்

222. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
யவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இதுவும் எய்தியது விலக்குதல் நுதலிற்று.

**உரை:** செய்யும் என்னுஞ் சொல், உயர்திணைப் பல்லோர் படர்க்கையும் முன்னிலையும் தன்மையுங்கொண்டு முடிதல் இல்லை, எ-று.

எனவே, ஒருவன் படர்க்கை, ஒருத்தி படர்க்கை, ஒன்றன் படர்க்கை, பலவற்றுப் படர்க்கை என நான்கற்குமே அஃது உரித்தாவது எ-று.

**(வ-று.)** அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும்.

இவ்வாறு விலக்கப்பட்ட வியங்கோட் சொல்லும், செய்யும் என்னும் முற்றுச் சொல்லும் ஒழித்தொழிந்தனவெல்லாம் இருதிணை ஐம்பாற்கும் மூன்றிடத்திற்கும் உரிய; அன்னவாதல் வழக்கினகத்துக் கண்டு கொள்க. *(28)*

### வினையெச்சங்களின் வாய்பாடு

223. செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி.

### இதுவுமது

224. பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்
அன்ன மரபிற் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், வினையெச்சங்களைப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று. இவ் விரண்டு சூத்திரமும் உடன் எழுதப்பட்டன உரையியைபு நோக்கி.

**உரை:** செய்து, செய்யூ என்பன முதலாக ஒன்பதும், பின் முன் என்னுந் தொடக்கத்தன ஆறும், ஆக இவை பதினைந்தும் வினையெச்ச வினைச்சொல், எ-று.

வினையை ஒழிபாக நிற்றலின் வினையெச்சம் எனப்பட்டது.

இனி, 'என்ன கிளவியும்' என்றதனான், உண்பான் வந்தான், உண்பாக்கு வந்தான் எனப் பிறவும் இவ்வாறு வருவன கொள்க.

செய்தெனெச்சம் முன்வைத்தார் இறந்த காலத்ததாதலானும் பல வீற்றதாகலானும் என்பது. *(29, 30)*

### வினைமுதல் வினை கொண்டு முடியும் வினையெச்சம்

225. அவற்றுள்,
முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், முதற்கணின்ற மூன்றெச் சத்திற்கும் முடிபு கூறுதல் நுதலிற்று.

**உரை:** அம்முதற்கண் நின்ற மூன்றும் அவ்வினை யாக்கிய அம் முதல்கொண்டு முடியும், எ-று.

**(வ-று.)** உழுது வந்தான், உண்ணூ வந்தான், நகுபு வந்தான் எனத் தத்தம் வினைமுதல்கொண்டு முடிந்தவாறு.

உண்ணூ வந்தான் என்பது இப்பொழுது வழக்கினுள் உண்ணா வந்தான் என நடக்கும். *(31)*

### மேலே கூறிய மூன்றுக்கும் முடிபு வேற்றுமை

226. அம்முக் கிளவியும் சினைவினை தோன்றின்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய வென்மனார் புலவர்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், அம் மூன்றன் றிறத்துப் படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** அவை மூன்றும் ஏற்ற வினைமுதலானே முடியுமெனப் பட்டன; சினைப்பொருளது வினையெச்சமாயக்கால் அச்சினைச்சொற் பொருணிற்ப, அச்சினைப் பொருளது முதல்கொண்டு முடியினும் அமையும், எ-று.

**(வ-று.)** கையிற்று வீழ்ந்தான், கையிறூ வீழ்ந்தான், கையிறுபு வீழ்ந்தான் எனவரும்.

'முதலொடு முடியினும்' என்ற உம்மை சிறப்பும்மை; அதனான், சினையொடு முடிதலே வலியுடைத்து என்பதூஉமாம்.

அது, கையிற்று வீழ்ந்தது, கையிறூ வீழ்ந்தது, கையிறுபு வீழ்ந்தது என வரும். *(32)*

## ஒழிந்த வினையெச்சங்கள் இருவினையும் கொண்டு முடியும் என்பது

227. ஏனை எச்சம் வினைமுத லானும்
ஆன்வந் தியையும் வினைநிலை யானுந்
தாமியல் மருங்கின் முடியும் என்ப.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், ஒழிந்து நின்ற வினை யெச்சத்திற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** அக்கூறப்பட்ட மூன்றுமன்றி, ஒழிந்து நின்ற வினையெச் சமாயின வெல்லாம், அம்மூன்று போலத் தம்தம் வினைமுதல் (வினை) கொண்டு முடிதலும் அவ்விடத்தின் வந்து பொருந்திய பிறவினையான் முடிதலும் உடைய, எ-று.

இனி, அவை வினைமுதலானே முடியுமாறு; மழை பெய்தெனப் புகழ் பெற்றது; மழை பெய்ய எழுந்தது எனவரும். பிறவும் அன்ன.

இனி ஆன்வந்து இயையும் வினைநிலையான் முடிவன வருமாறு: மழை பெய்தென வுலக மார்ந்தது, மரங் குழைத்தது என வரும். பிறவும் அன்ன.

இனித் 'தாமியன் மருங்கின்' என்றதனான், உழுது வருதல், உழுது வந்தவன் என வினையெச்சம் தொழிற்பெயரொடு முடிதலும் முடிக்க என்று கொள்க.

மற்று, ஏனை யெச்சங் கொடாதே ஈண்டு இலேசு காட்டுவ தென்னெனின், 'தானியன் மருங்கின்' என்னாது, 'தாமியன் மருங்கின்' என்றதனான், அது முதனிலை மூன்றெச்சங்களும் தொழிற் பெயரொடு முடிதலும் முடிக்க என்றற்குச் சொல்லப்பட்டது. *(33)*

## வினையெச்சங்கள் அடுக்கியபோது முடியுமாறு

228. பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியாது அடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இன்னும் அவ்வெச்சங்கள் திறத்தே படுவதொரு முடிபுகூறுதல் நுதலிற்று.

**உரை:** பல எச்சம் உடனடுக்கிவந்து பின் இறுதிக்கண் ஒன்றற் கேற்ற முடிபு ஏற்றக்கால் அதனான் அவ்வெச்சமெல்லாம் முடிந்த பொருளவாகி முடிபுகொள்ளும் எ-று.

**(வ-று.)** உழுது உண்டு தின்றோடிப் பாடி வந்தான் என வரும். இஃது ஓரினத்து எச்சம் பல அடுக்கி வந்தது. அவற்றுள், பாடி என்பது வந்தான் என்னும் முடிபுகொண்டு முடிந்தது; அம்முடிபே அவ் வடுக்கி நின்ற பிறவெச்சங்கட்கும் முடிபாயிற்று என்றவாறு.

எனவே, அது முடியாக்கால் ஒழிந்த எச்சங்கள் முடியா என்பதாம்.

இனிப் பல இனத்து எச்சம் அடுக்கிவருமாறு வழக்கினகத்துக் கண்டு கொள்க. (34)

## பெயரெச்சம் கொண்டு முடியுஞ் சொற்கள்

229. நிலனும் பொருளும் காலமும் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்குமோ ரன்ன உரிமைய
செய்யுஞ் செய்த என்னுஞ் சொல்லே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், செய்யும் செய்த எனப்பட்ட இரண்டு பெயரெச்சத்திற்கும் முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** சொல்லப்பட்ட ஆறு சொல்லொடு முடியும் அவ் விரண் டெச்சம் எ-று.

அவற்றுள் செய்யும் என்பது பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மை யொழித்தொழிந்த நான்குபாற்கண் வருமாறு ஈண்டுக் காட்டுதும். ஒழிந்தனவும் மேல்வருகின்ற சூத்திரத்தாற் பெறுதும்.

நிலன்: அவன் உண்ணும் இல்லம், அவள் உண்ணும் இல்லம், அது உண்ணும் இல்லம், அவை உண்ணும் இல்லம் என வரும்.

பொருள்: அவன் செய்யும் பொருள், அவள் செய்யும் பொருள், அது செய்யும் பொருள், அவை செய்யும் பொருள் என வரும்.

காலம்: அவன் ஓதுங் காலை, அவள் ஓதுங் காலை, அது ஓதுங் காலை, அவை ஓதுங் காலை என வரும்.

கருவி: அவன் எறியுங் கல், அவள் எறியுங் கல், அது எறியுங் கல், அவை எறியுங் கல் என வரும்.

வினைமுதற்கிளவி: உண்ணும் அவன், உண்ணும் அவள், உண்ணும் அது, உண்ணும் அவை என வரும்.

வினை: அவன் உண்ணும் ஊண், அவள் உண்ணும் ஊண், அது உண்ணும் ஊண், அவை உண்ணும் ஊண் என வரும்.

இனிச் செய்த என்பது மூன்றிடத்தொடுஞ் சிவணி, ஐந்து பாற்கும் உரித்து.

அது வருமாறு: அவன் உண்ட இல்லம், அவள் உண்ட இல்லம், அவர் உண்ட இல்லம், அது உண்ட இல்லம், அவை உண்ட இல்லம் என வரும்.

ஒழிந்த பொருளும் காலமும் கருவியும் வினைமுதற் கிளவியும் வினையும் இவ்வாறு ஒட்டிக் கொள்க.

மற்று, மேற்செய்த என்பது முடிபு கூறப்படாமையின், அதற்கே கூறுக; செய்யும் என்பதற்கு முடிபு ஈண்டுக் கூறியது என்னை யெனின்,

செய்யும் என்பது மேல் முற்றுச் சொல்லாய் நின்ற நிலைமை நோக்கிக் கூறி னான்; ஈண்டு எச்சமாய் நின்ற நிலைமை நோக்கிக் கூறுகின்றான் என்பது.

மற்று, முற்றுச் சொல்லாய் நின்ற நிலைமையும், எச்சமாய் நின்ற நிலைமையும் தம்முள் வேற்றுமை யறியுமாறு என்னை? இரு நிலைமைக் கண்ணும் பெயர்கொண்டு முடிதல் ஒக்கும் பிறவெனின், செய்யும் என்பது முற்றாய நிலைமைக்கண், பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மை ஒழித்தொழிந்த நான்கு பாலையும் தன் ஈற்றகத்துக்கண் ஒருவாற்றாற் கொண்ட அப் பெயரானே யமைந்து முடிபு மாறும்; அஃது எச்சமாய நிலைமைக்கண் முடிபாய் வரும் பெயர்க்கு அடையாய் நிற்கும். எனவே, எச்சமாய நிலைமைக்கண் முடிபாக வரும் பெயர் பயனிலை கோடலும் உருபேற்றலும் உடையவாயிற்று. *(35)*

## செய்யும் என்பதற்கொரு முடிபு வேற்றுமை

230. அவற்றொடு வருவழிச் செய்யும்என் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்தே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், செய்யும் என நின்றதற்கு வேறொரு முடிபு தெரிந்து உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** செய்யும் என்னுஞ்சொல் மேற்சொல்லப்பட்ட நிலந் தொடக்கத்து ஆறனொடு வருவழி மேல்வரைந் தோதப்பட்ட பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மைகளையுங் கொண்டு முடியும் எ-று.

மேல் முற்றாய் நின்ற நிலை விலக்கினான் ஆண்டு; ஈண்டு எச்சமாய் நின்ற நிலைமைக்கண்ணாயின் அவ்விடங்கட்கு உரித் தென்றே யெய்து வித்தான் என்பது.

**(வ-று.)** நிலம் - யான் உண்ணும் இல்லம், யாம் உண்ணும் இல்லம், நீ யுண்ணும் இல்லம், நீயிர் உண்ணும் இல்லம், அவர் உண்ணும் இல்லம் என வரும். ஒழிந்த பொருள் முதலாயின ஐந்தையும் இவ்வாறே ஒட்டிக் கொள்க. *(36)*

## இருவகை எச்சங்கட்கும் எய்தியதன்மேற் சிறப்பு விதி

231. பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருள்நிலை திரியா.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், எய்தியதன்மேல் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** பெயரெச்சம் வினையெச்சம் என்று கூறப்பட்ட இரு திறத்த வும் எதிர்மறுத்துச் சொல்லினும் தம் பொருணிலைமையிற் றிரியா எ-று.

**(வ-று.)** உண்ணுஞ் சாத்தன் என்பது; உண்ணாச் சாத்தன் என்பதற்கும் அதுவே; பிறிதில்லை.

இனி வினையெச்சம்: உண்டுவந்தான் என்பது, உண்ணாது வந்தான் என வரும். பிறவும் இவ்வாறே எதிர் மறுப்பன ஒட்டிக் கொள்க.

மற்று, முற்றுச்சொல், உண்பன் சாத்தன் என்புழி, உண்ணான் சாத்தன் என எதிர்மறுப்பினும், முற்றுச்சொல் லியல்பிற் றிரியா தாகலின், அதற்கும் கூறுக எனின், அற்றன்று, முற்றுச் சொற்களை யெல்லாம் ஈறுபற்றி ஓதினாராகலின் எதிர்மறையும் ஆண்டே யடங்கும்.

பெயரெச்ச வினையெச்சங்களையாயின் செய்து செய்யூ எனவும், செய்யும் செய்த எனவும் அவை தம்மை யெடுத்தோதினான். அவற்று மறை பிறவா கொல்லோ என்று கருதினுங் கருதற்க என்றற்கு இது கூறப்பட்டது என்பது. *(37)*

### எச்சங்களின் இடை நிகழும் முடிபு வேற்றுமை

232. தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இன்னும் அவ்வெச்சங்கட்கு முடிபு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இவ்விருவகை யெச்சத்திடையும் பிறசொற்களும் புகுதப் பெறும், அவ்வெச்சத்திற்குப் பொருத்தமுடையனதாம் எ-று.

**(வ-று.)** ‘உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே’ என்புழி, இன்றி என்னும் வினையெச்சத்திற்கு முடிபு உண்க என்னும் வியங்கோட் சொல்; இனிப் புற்கை யென்பது இடைநிலை.

இனிப் பெயரெச்சத்திற்கு உதாரணம்: அடுஞ் செந்நெற் சோறு, அட்ட செந்நெற்சோறு என்புழி, செந்நெல் என்பது இடைநிலை. பிறவும் அன்ன.

‘சிவணுங் குறிப்பின் எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்’ எனவே, சிவணாக் குறிப்பின வரையப்படும் என்பதாம். *(38)*

### செய்யும் என்னும் பெயரெச்ச ஈற்றயல் கெடுமாறு

233. அவற்றுள்,
செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே ஈற்றுமிசை உகரம்
அவ்விடன் அறிதல் என்மனார் புலவர்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், அவ் வெச்சங்களுள் செய்யும் என்னும் பெயரெச்சத்திற்குப் படுவதொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** செய்யும் என்னும் பெயரெச்சத்திற்கு ஈற்று மிசை உகரம் மெய்யொடுங் கெடுமிடம் அறிக வழக்கினகத்து, எ-று.

**(வ-று.)** ‘வாவும் புரவி’ என்பது ‘வாம் புரவி’ என்றாயிற்று.

'அவ்விடனறிதல்' என்றதனான், 'அம்ப லூரு மவனொடு மொழிமே' (குறுந். 51) என்புழி, மொழியும் என்பது மொழிம் என்றா யிற்று. மெய்யொழிந்து கெடுதலும் உடைத்து; அது, 'சாரனாட வென் றோழியுங் கலுழ்மே' - என்புழிக் கலுழும் என்பது கலுழ்ம் என்றாயிற்று. பிறவும் அன்ன. (39)

### இறந்தகால வினையெச்சம் ஏனைக் காலச் சொல்லொடும் இயைதல்

234. செய்தென் எச்சத் திறந்த காலம்
எய்திடன் உடைத்தே வாராக் காலம்.

இச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், காலவழுக் காத்தல் நுதலிற்று.

**உரை:** இறந்த காலத்துச் செய்தெனெச்சம் ஒழிந்த நிகழ் காலமும் எதிர் காலமும் கொள்வழியுடைத்து, எ-று.

**(வ-று.)** செய்தெனெச்சம் நிகழ்காலத்திற்கு ஏற்றது, கொடியாடித் தோன்றும் என்பது; என்னை? தோற்றமும் ஆட்டமும் உடனிகழு மாகலின் என்பது.

இனி, உழுதுவருஞ் சாத்தன், உண்டுவருஞ் சாத்தன் என்புழிச் செய்தெனெச்சம் எதிர்காலத்திற்கு ஏற்றது. பிறவும் அன்ன. (40)

### நிகழ்காலச் சொல் ஏனைக் காலங்களையும் உணர்த்தல்

235. முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், ஒருசார் வினைச் சொற்கெல்லாம் பொதுவாயதொரு காலமுடிபு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** மூன்று காலமும் புலப்படச் சொல்லும் வாய்ப்பாட்டு இயல் பினவாகிய எவ்வகைப் பொருள்களையும் நிகழுங்காலத்துப் பயின்று மூன்று காலத்திற்கும் பொதுவாகிய செய்யும் என்னுஞ் சொல்லாற் சொல்லுக, எ-று.

**(வ-று.)** மலை நிற்கும், யாறொழுகும் எனவரும். (41)

### விரைவுப்பொருளில் காலம் மயங்குதல்

236. வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இதுவும் வினைச்சொற்குப் பொதுவாயதொரு முடிபுணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *எதிர்காலத்துப் பொருளையும் நிகழ்காலத்துப் பொருளை யும் இறந்தகாலத்துப் பொருளாகச் சொல்லுக; விரைவு நிலைமைக்கண், எ-று.*

**(வ-று.)** சோறு வேவவிருந்து பாணியா நின்றுழிப் புறத்தா னொருவன் போகல்வேண்டுங் குறைப்பொருட்டாக, 'இன்னும் உண்டி லையோ? போதாயோ?' என்றக்கால், 'உண்டேன், போந்தேன்' என்னும் உண்ணாதிருந்தானே யெனினும்; 'உண்டேன், போந்தேன்' என்னும் உண்ணா நின்றானே யெனினும். பிறவும் அன்ன. *(42)*

### சிறப்பின் கண்ணும் காலம் மயங்கல்

237. மிக்கதன் மருங்கின் வினைச்சொல் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இதுவும் காலவழூஉக் காத்தல் நுதலிற்று.*

**உரை:** *மிக்கதன் மருங்கின் என்பது - உலகத்தாராற் சிறந்த தென்று மதிக்கப்பட்டதன்கண் என்றவாறு: வினைச்சொற் சுட்டி என்பது - வினையாகிய சொல்லைச் சுட்டி என்றவாறு; அப்பண்பு குறித்த என்பது - ஆண்டை வினையது பயனாகிய குணத்தைக் குறித்த என்றவாறு; வினைமுதற் கிளவி என்பது - அச் செய்கை செய்தானை நுதலின சொல் என்றவாறு; செய்வதில்வழி என்பது - செய்கை முடியாத நிலைமைக்கண் என்றவாறு; நிகழுங் காலத்து மெய்பெறத் தோன்றும் பொருட்டாகும்மே என்பது - அது நிகழுங் காலத்துச் சொல்லுஞ் சொற் பிழையாது, எ-று.*

**(வ-று.)** *அறஞ்செய்தான் சுவர்க்கம் புகும்; தாயைக் கொன்றான் நிரயம் புகும் எனவரும். அறம் என்பது மிக்கதொன்று; அதனை யாக்கி னான் அவ்வுழிச் சேறல் ஒருதலையாகலாற் புகுகின்றானைக் கண்டான் போலப் 'புகும்' என்று நிகழுங்காலத்தாற் சொல்ல அமையும் என்பது. (43)*

### இது செயல் வேண்டும் என்பது ஈரிடத்தும் பொருள் தரல்

238. இதுசெயல் வேண்டும் என்னுங் கிளவி
இருவயின் நிலையும் பொருட்டா கும்மே
தன்பா லானும் பிறன்பா லானும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், முற்றுச்சொல் பொருள் படும் முறைமை யுணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** இது செயல் என்னும் வாய்பாட்டுச் சொல், சொல்லப்படும் ஒருவன்மேல் நிற்கற்பாலது; அது பிறவயின் நோக்கியும் நிற்கும், எ-று.

**(வ-று.)** சாத்தன் ஓதல்வேண்டும் என்றக்கால், ஓதற்றொழில் வேண்டுவான் சாத்தன் என்றுமன் ஆகற்பாலது. அவ்வாறன்றிச் சாத்தன் ஓதல்வேண்டும்; யார்? தந்தை தாய் எனவும் நிற்கும் என்பது. *(44)*

### வற்புறுத்தலில் வரும் வினா எதிர்மறைப் பொருள் தரல்

239. வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்
எதிர்மறுத் துணர்த்தற் குரிமையும் உடைத்தே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இதுவும் வினைச் சொல்படும் பகுதி வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** வன்புற வரூஉம் என்பது - திட்பஞ் செய்தற்கு வரூஉம் என்றவாறு; வினாவுடை வினைச்சொல் என்பது - ஆ, ஏ, ஓ என்னும் வினாவினை யுடைத்தாய் வருஞ் செய்கைச்சொல் என்றவாறு; எதிர்மறுத்து உணர்த்தற்கு உரிமையும் உடைத்தே என்பது - மறுதலைப்பட உணர்த்து தற்கு உரிமையும் உடைத்து எ-று.

**(வ-று.)** ஒருவனை ஒருவன், 'வைதேனோ?' என்று வையாமையை வலியுறுத்தற்கு வினாயக்கால், அது, 'வைதேன்' என்றும் நேர்வுபடும் எ-று.

உம்மை யெதிர்மறை யாகலான், வைதிலேன் என்றும் நேர்வுபடும் சிறுபான்மை. *(45)*

### இயற்கையிலும் தெளிவிலும் காலம் மயங்கல்

240. வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையும் தெளிவும் கிளக்குங் காலை.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இதுவும் காலவழூஉக் காத்தல் நுதலிற்று.

**உரை:** எதிர்காலத்துச் செயற்சொல் இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையுங் கொள்ளும், இயற்கைக் கண்ணும் தெளிவின் கண்ணும் சொல்லுமிடத்து எ-று.

இயற்கை என்பது அதன் பெற்றிமை. தெளிவு என்பது ஒரு நூன் முடிபானும் பிறிதானும் கண்டு தெளிதல்.

**(வ-று.)** இக்காடு போகிற் கூறைகோட்பட்டான்; கூறை கோட்படும். இஃது இயற்கை.

இனித் தெளிவு: எறும்பு முட்டை கொண்டு தெற்றியேறின் மழை பெய்தது; மழை பெய்யும் என்பது.

'சிறப்பத் தோன்றும்' என்பது, அவ்விரு காலத்தானுஞ் சொல்லப் பிழையாது, யாப்புற்றுப் புலப்படும் என்றவாறு. *(46)*

### செயப்படுபொருள் வினைமுதல்போல வருதல்

241. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இதுவும் ஒருவகை வழூஉச் சொல் அமைந்தமை நுதலிற்று.

**உரை:** *வினைக்கட் செய்கையீறாய் அச்செய்யப்பட்ட பொருளைத் தான் செய்கை செய்ததுபோல அதற்குத் தொழிற் கூறலும் உண்டு, வழக்கப்பட்ட மரபிலக்கணம் எ-று.*

**(வ-று.)** இல்லம் மெழுகிற்று, சோறு அட்டது என வரும். *(47)*

### வேறு இடத்தும் காலம் மயங்கல்

242. இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இதுவும் காலவழுக் காத்தல் நுதலிற்று.

**உரை:** இறந்த காலமும் எதிர்காலமும் தம்முள் மயங்கி வரப்பெறும் எ-று.

**(வ-று.)** யாம் பண்டு விளையாடுவது இக்கா; பண்டு என்பது இறந்த காலம், விளையாடுவது என்பது எதிர்காலம். விளையாடிற் றென்றுமன் ஆகற்பாலது; அஃது எதிர்காலமும் கொண்டது, விளை யாடுவது என்று. முன்னும் இறந்தகாலமும் எதிர்காலமும் நிகழ்காலமும் எல்லாம் மயங்குமாறு சொல்லி வைத்தான், இனி உடன் றொகையாக வுணர்த்தியவாறு. 'சிறப்பத் தோன்றும்' என்பது சாலவுள்ள வழக்கென்பது. *(48)*

### நிகழ்வு ஏனையவற்றோடு மயங்கல்

243. ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இனி ஒழிந்த காலமும் இறப்பினொடு மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** *ஏனைக்காலமும் என்பது - ஒழிந்த காலமும் என்றவாறு; மயங்குதல் வரையார் என்பது - மயங்கிவரு மரபினை வரையார் இவ்விறப்புக் காலத்தொடு, எ-று.*

**(வ-று.)** யாம் பண்டு விளையாடுங்கா; பண்டு என்பது இறந்த காலம், விளையாடும் என்பது செய்யும் என்னும் நிகழ்காலச் சொல். இது இறப்பில் வந்து முடிந்தது. 'வரையார்' என்பது மற்றாசிரியர் என்றவாறு.

மூன்று காலமும் தம்முள் மயங்கும் என்பது நேர்ந்தானாம் ஆசிரியன். அஃதே யெனின், மூன்று காலமும் அல்லது காலமில்லை; அவை மூன்றும் தம்முண் மயங்குமென்றக்கால், வழூஉவென்ற தில்லையாம் பிற வெனின், அற்றன்று, எவ்வாற்றானும் மயங்கா மூன்று காலமும்; மேற்காட்டின உதாரண முடிபுபோல்வன படுவழி வழக்கிற்கு ஏற்றவாறு மயங்கும்; அன்ன வழக்கு உள்வழி என்பது. *(49)*

**ஆறாவது வினையியல் முற்றிற்று.**

# 7
# இடையியல்

### இடைச்சொற்குப் பொது இலக்கணம்

244. இடைஎனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே

*என்பது சூத்திரம்.*

*இவ் வோத்து என்ன பெயர்த்தோ எனின், இடையியல் என்னும் பெயர்த்து.*

*இச் சூத்திரம் இடைச் சொற்கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.*

*'அது மன்' (புறம். 147) என்பது பெயரொடு நடைபெற்றது.*

*'வருகதில் அம்ம எம் சேரி சேர' (அகம். 276) என்பது வினையொடு நடைபெற்றது.*

*'தமக்கியல்பிலவே' என்றதனான், இடைச் சொற்கள் பகவின்றியே நின்றிசைப்பனவும் உள எ-று.*

**(வ-று.)** *உண்டான் என்னுந் தொடக்கத்தன.* *(1)*

### இடைச் சொற்களின் பாகுபாடு

245. அவைதாம்,
புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதவுநவும்
வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பின் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்று
அப்பண் பினவே நுவலுங் காலை.

**(வ-று.)**

*புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதவுவன:*

*''இன்னே வற்றே'' (எழுத்து. புணரி. 17) என்னுந் தொடக்கத்தன.*

*வினைசெயல் மருங்கின் காலமொடு வருவன:*

*'அன் ஆன்' - 'அம் ஆம்' - (சொல். வினை. 8, 5) என்னுந் தொடக்கத்தன.*

*வேற்றுமைப் பொருள்வயின் உருபாவன:*

*ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி (சொல். வேற்றுமை. 3) என்னுந் தொடக்கத்தன.*

*அசை நிலைக் கிளவி:*

*'கேண்மியா', 'கண்டிகும்' (புறம். 251) என்னுந் தொடக்கத்தன; மற்றையன முன்னே விரிக்கின்றார்.* *(2)*

### இடைச்சொல் நிலைபெறும் இடமும் வேறுபாடும்

246. அவைதாம்,
முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்
தம்ஈறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
அன்னவை எல்லாம் உரிய என்ப.

**(வ-று.)**

*பெயரை முன்னும் பின்னும் அடுத்து வருவன:*

*'அதுமன்' - 'கொன்னூர்' (குறுந். 138) என்பன.*

*வினையை முன்னும் பின்னும் அடுக்குமாறு:*

*''வருகதில் லம்மவெஞ் சேரி சேர''* (அகம். 276)

*''ஓ தந்தார், ஓ கொண்டார்'' என்பன.*

*தம்மீறு திரிந்தவை:*

*'கொன்னை', 'மன்னை' (சொல். இடை. 6, 4) என்பன.*

*பிறிதவணிலையிற்று:*

*'மகவினை' என்பது.* *(3)*

### மன் என்னும் இடைச்சொல்லின் பொருள்

247. கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்று
அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இடைச்சொற்களை எழு வகையென விரித்தான்; அவற்றுள் மூன்று வகை மேலே யுணர்த்தி, ஒழிந்த நான்கு வகையுள் தத்தங் குறிப்பிற் பொருள் செய்குநவற்றை விரிப்பான் றொடங்கினான்; அது கருத்து.*

**(வ-று.)**

*''சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே''* (புறம். 235)

எனக் கழிவின்கண் வந்தது.

'பண்டு காடுமன், இனிக் கயல் பிறழும் வயலாயிற்று' என ஆக்கத்தின்கண் வந்தது.

'கூரியதோர் வாண்மன்' - இனி 'இற்று' என்னும் ஒரு சொல்லை ஒழிவுபட வந்தமையின் ஒழியிசை என்பது. *(4)*

## 'தில்' என்னும் இடைச்சொல்லின் பொருள்

248. விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்று
அம்மூன் றென்ப தில்லைச் சொல்லே.

**(வ-று.)**

*''வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப்*
*பெறுகதில் லம்ம யானே''* (குறுந். 14)

இது விழைவின்கண் வந்தது.

*''பெற்றாங் கறிகதில் லம்மவிவ் வூரே''* (குறுந். 14)

இது காலம்பற்றி வந்தது.

*''வருகதில் லம்மவெஞ் சேரி சேர''* (அகம். 276)

என்பது, வந்தக்கால் இன்னதொன்று செய்வல் என்னும் சொல் ஒழிந்து நின்றமையான் ஒழியிசைக்கண் வந்தது.

யாதானும் ஒருசொல் ஒழிவுபட வரின் அஃது ஒழியிசை எனப் படும் என்றவாறு. *(5)*

## 'கொன்' என்னும் இடைச்சொல்லின் பொருள்

249. அச்சம் பயமிலி காலம் பெருமையென்று
அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே.

**(வ-று.)**

*''கொன்முனை யிரவூர் போலச்*
*சிலவா குகநீ துஞ்சு நாளே''* (குறுந். 91)

என்பது அச்சத்தின்கண் வந்தது.

*''கொன்னே வந்து,*
*கொன்னே போயினார்''*

என்பன பயமின்றி வந்தன.

*''கொன்வரல் வாடை நினதெனக் கொண்டேனோ''*

என்று, நலியுங்காலை யறிந்து வந்த வாடை என்றவாறு; இது காலத்தின்கண் வந்தது.

*''கொன்னூர் துஞ்சினு மியாந்துஞ் சலமே''* (குறுந். 138)

என்பது பெருமைக்கண் வந்தது. *(6)*

## 'உம்' என்னும் இடைச்சொல்லின் பொருள்

250. எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்று
அப்பா லெட்டே உம்மைச் சொல்லே.

**(வ-று.)** *'சாத்தனும் வந்தான்'* என்றால், அவனை யன்றிப் பிறரையும் வரவு விளக்குமாகலின், அஃது எச்சவும்மை.

*''தேவரே தின்னினும் வேம்பு கைக்கும்''* (நாலடி. மெய்ம்மை. 2)

என்பது சிறப்பும்மை.

*''குறவரும் மருளுங் குன்றத்துப் படினே''* (மலைபடு. 275)

என்பதும் அது.

*'பத்தானும் எட்டானும்'* என்பது துணியாமைமேல் நின்றமை யான், ஐயத்தின்கண் வந்தது.

'கொற்றன் வருவதற்கும் உரியன்' என்பது, வாராமையும் செப்பி நிற்குமாகலின் எதிர்மறையும்மையாயிற்று.

'தமிழ்நாட்டு மூவரும் வந்தார்' என்பது முற்றும்மை.

'நிலனும் நீரும் தீயும் வளியும்' என்பது எண்ணும்மை.

'நன்றும் அன்று, தீதும் அன்று, இடைநிகர்த்தாயிற்று' என்பது தெரி நிலையும்மை.

இடைநிகர்த்தாயினமை தெரிந்தொழிந்தனம்; அவ்விரண்டும் அத்துணைத்து ஒழிய நின்றிலாமையின்.

'நெடியனும், வலியனும்' என்பது ஆயினான் என்னும் ஆக்கத்துக் கண் வந்தது ஆக்கவும்மை. *(7)*

## 'ஓ' என்னும் இடைச்சொல்லின் பொருள்

251. பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
இருமூன் றென்ப ஓகா ரம்மே.

**(வ-று.)**

*பிரிநிலை:* இவருள் அவனோ கொண்டான் என்பது.

*வினா:* அவன் அலனோ என்பது.

*எதிர்மறை:* யானோ கொண்டேன் என்பது.

*ஒழியிசை:* கொளலோ கொண்டான் என்பது.

கோடற்குத் தகுமாயினுங் கொண்டுய்யப் போயினானல்லன் என ஒழிவு பட வந்தமையின் ஒழியிசையாயிற்று.

*தெரிநிலை:* 'நன்றோ? அன்று; தீதோ? அன்று. இடை நிகர்த்த தாயிற்று' என்பது.

*சிறப்பு:*

*'ஓஒ பெரியன்'*

என்பது. *(8)*

## 'ஏ' என்னும் இடைச்சொல்லின் பொருள்

252. தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ்வைந் தேகா ரம்மே.

**(வ-று.)** *தேற்றம்:* 'அவனேஎ கொண்டான்' என்பது.

*வினா:* 'நீயே கொண்டாய்?' என, வினாவிச் சொல்வது.

*பிரிநிலை:* 'அவனே கொண்டான்' என்பது; பலருள் ஒருவனைப் பிரித்துச் சொல்வது.

*எண்:* 'நிலனே, நீரே, தீயே, வளியே, ஆகாயமே' எனவரும்.

*ஈற்றசை:*

*"கடல்போற் றோன்றல காடிறந் தோரே"* (அகம். 1)

எனவரும் ஈற்றின்கண் எ-று. *(9)*

## 'என' என்னும் இடைச்சொல்லின் பொருள்

253. வினையே குறிப்பே இசையே பண்பே
எண்ணே பெயரோ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே எனவென் கிளவி.

**(வ-று.)**

*வினை:* 'கொள்ளெனக் கொண்டான்' என்பது.

*குறிப்பு:* 'விண்ணென விசைத்தது' என்பது.

'துண்ணெனத் துடித்தது' என்பதும் அது.

*இசை:* 'ஒல்லென ஒலித்தது' என்பது.

*பண்பு:* 'வெள்ளென விளர்த்தது' என்பது.

*எண்:* 'நிலனென வளியென' எனவரும்.

*பெயர்:* 'ஊரெனப்படுவது உறையூர்' எனவரும்;

'நாடெனப்படுவது சோணாடு' என்பதும் அது. *(10)*

**'என்று' என்னும் இடைச்சொல்லின் பொருள்**

254. என்றென் கிளவியும் அதனோ ரற்றே.

**(வ-று.)**

*வினை: 'கொள்ளென்று கொண்டான்' என்பது.*

*குறிப்பு: 'விண்ணென்று விசைத்தது' என்பது;*

*'துண்ணென்று துடித்தது' என்பதும் அது.*

*இசை:*

*''ஒல்லென்று ஒலிக்கும்''* *(ஐந். 28)*

என்பது.

*பண்பு: 'வெள்ளென்று விளர்த்தது' என்பது.*

*எண் : 'நிலனென்று வளியென்று' எனவரும்.*

*பெயர்: 'ஊரென்று சொல்லப்படுவது உறையூர்' என்பது.* *(11)*

**'தில்' என்பதற்குப் புறனடை**

255. விழைவின் தில்லை தன்னிடத் தியலும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் தில் என்னும் இடைச் சொல் மூன்றன் பொருட்கும் உரித்தென்று போந்தார்; அவற்றுள் விழை வின் றில்லை தன்மை யிடத்திற்கே ஆவது.

**(வ-று.)**

*''பெறுகதில் லம்ம யானே''* (குறுந். 14)

எனவரும்.

எனவே, மற்றைய இரண்டும் எல்லாவிடத்துக்கும் உரிய என்றவாறாம். *(12)*

**ஏ, ஓ, என்பவற்றிற்குப் புறனடை**

256. தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்
அளபின் எடுத்த இசைய என்ப.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேற் கூறிப் போந்த ஏகார ஓகாரங்களின் வேறுபாடு கண்டு, ஈண்டு உணர்த்துதல் நுதலிற்று.

**(வ-று.)**

*'நீயேஎ கொண்டாய்' 'ஓஒ பெரியன்' எனவரும்.* *(13)*

**'மற்று' என்னும் இடைச்சொல்லின் பொருள்**

257. மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
அப்பால் இரண்டென மொழிமனார் புலவர்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் தத்தங் குறிப்பிற் பொருள் செய்குவன உணர்த்தினார்; இனி மற்று என்பதோர் இடைச்சொல் வினை மாற்றும் அசைநிலையுமாய் வரும் என்பது உணர்த்துகின்றார்.

**(வ-று.)** 'இஃது உண்' என்றாற்கு, 'மற்று உண்பல்' என வினைமாற்று ஆயிற்று.

யாவரோடாயினுஞ் சொல்லாடா நின்று 'மற்றோமற்று' என்னும் இடையே; அஃது அசைநிலைக் கட்டுரை. *(14)*

### 'எற்று' என்னும் இடைச்சொல்லின் பொருள்

258. எற்றென் கிளவி இறந்த பொருட்டே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் தத்தங் குறிப்பிற் பொருள் செய்குவனவற்றின்மேல் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** எற்று என்பது இறந்தபொருள் விளக்கி நிற்கும், எ-று.

**(வ-று.)**

*''எற்றென் னுடம்பி னெழினலம்''*

என வரும்.

*''எற்றேற்ற மில்லாருள் யானேற்ற மில்லாதேன்''*

என்பதும் அது. இஃது இரக்கப் பொருள் மேற்று என்பது. *(15)*

### 'மற்றை' என்னும் இடைச்சொல்லின் பொருள்

259. மற்றைய தென்னுங் கிளவி தானே
சுட்டுநிலை ஒழிய இனங்குறித் தன்றே.

பல பொத்தகம் கிடந்தவழி, ஒருவன் ஏவலாளனைப் பார்த்துப் 'பொத்தகங் கொண்டுவா' என்றால், அவன் ஒரு பொத்தகங் கொண்டுவந்த விடத்துத் தான் கருதிய பொத்தகம் அன்றெனில், 'மற்றையது கொணா' என்னும்; என்றக்கால், இக்கொணர்ந்ததனை யொழிக்குஞ் சொல் இக் கொணர்ந்த பொத்தகம் சுட்டிற்றாகலான், கொணர்ந்ததனை ஒழிக்குஞ் சுட்டுநிலை அதனை யொழித்து ஒழிந்த தென்று அவ்வினத்தல்லது பிறி தொன்று குறித்தது கொல்லோ எனிற் குறியாது; மற்று அப் பொத்தகத்துள் ஒன்றே பின்னுங் குறித்தது எனப்படும். *(16)*

### 'மன்ற' என்னும் இடைச்சொல்லின் பொருள்

260. மன்றன் கிளவி தேற்றம் செய்யும்

**(வ-று.)**

*''கார்மன்ற என்பவள் கண்ணுள்ளே காதலர்
தேர்மன்றத் தோன்றியது''*

என்றக்கால், தெளிந்தாள் அவள் எ-று. *(17)*

### 'தஞ்சம்' என்னும் இடைச்சொல்லின் பொருள்

261. தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே.

**(வ-று.)**

*''ஏனோரோ தஞ்சம் இருபிறப்பி னோர் வெகுளின்*
*வானோர்க்கும் வாழ்தல் அரிது''* (18)

### 'அந்தில்' என்னும் இடைச்சொல்லின் பொருள்

262. அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென்று
ஆயிரண் டாகும் இயற்கைய என்ப.

இதுவும் தத்தங் குறிப்பிற் பொருள் செய்குவனவற்றையும் அசை நிலையையும் உணர்த்துதல் நுதலிற்று.

**(வ-று.)**

இடஞ்சுட்டி வந்தது:

*''வருமே சேயிழை யந்திற், கொழுநற் காணிய''* (குறுந். 293)

எனவரும்.

*அசைநிலை:*

*''அந்தில் கச்சினன் கழலினன்''* (அகம்.76)

என வரும். ***(19)***

### 'கொல்' என்னும் இடைச்சொல்லின் பொருள்

263. கொல்லே ஐயம்

**(வ-று.)** இது, 'குற்றி கொல்லோ, மகன் கொல்லோ; நாய் கொல்லோ, நரி கொல்லோ' என வரும். ***(20)***

### 'எல்' என்னும் இடைச்சொல்லின் பொருள்

264. எல்லே விளக்கம்

**(வ-று.)** இது,

*''எல்வளை''* (புறம். 24)

என வரும். ***(21)***

### 'ஆர்' என்னும் இடைச்சொல்லின் முடிபு

265. இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி
பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே.

**உரை:** இது, ஆர் என்னும் இடைச்சொல் பெயர்முன் அல்லது வாரா என்பது.

**(வ-று.)** 'அரசனார் வந்தார்; பார்ப்பார் வந்தார்' என வரும்.

*இனி விலங்கின் மேலும், 'யானையார் வந்தார்; நாயார் வந்தார்' என வரும்.*

*'பெயர்முன்னர் ஆரைக்கிளவி பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடித்தல் இயல்' என எல்லாப் பெயரும் அடங்க மொழி மாற்றி உரைக்க.*
*(22)*

## 'ஆர்' என்பதற்குப் புறனடை

266. அசைநிலைக் கிளவி ஆகுவழி அறிதல்.

**(வ-று.)** *இது, 'செல்ல மன்னார் நெடுந்தகை' எனவரும்.* *(23)*

## ஏ, குரை என்னும் இடைச்சொற்களின் பொருள்

267. ஏவுங் குரையு மிசைநிறை யசைநிலை
ஆயிரண் டாகும் இயற்கைய என்ப.

**உரை:** *ஏ - இசைநிறை; குரை - அசைநிலை என நிரனிறையாகக் கொள்க, எ-று.*

**(வ-று.)**

*''ஏஎ வம்பல் மொழிந்தனள் யாயே''*

*ஏ - இசைநிறை யாயினவாறு.*

*''பல்குரைத் துன்பங்கள் சென்று படும்''* (குறள். நல்குரவு. 5)

*எனக் குரை அசைநிலை.* *(24)*

## 'மா' என்னும் இடைச்சொல் வருமாறு

268. மாஎன் கிளவி வியங்கோள் அசைச்சொல்.

**(வ-று.)** *இது,*

*''மாயக் கடவுட் குயர்கமா வலனே''*

*உயர்க என்னும் வியங்கோட்கண் மா என்னுஞ் சொல் அசைநிலையாய் வந்தது.* *(25)*

## முன்னிலை அசைச் சொற்கள்

269. மியாயிக மோமதி இகுஞ்சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை யசைச்சொல்.

**உரை:** *முன்னிலைக்கண் அசைச் சொல்லாய் வருவன இவை, எ-று.*

**(வ-று.)**

*மியா : ''கேண்மியா''*
*இக : ''தண்டுறை யூரயாங் கண்டிக''*
*மோ : ''காமஞ் செப்பாது கண்டது மொழிமோ''* (குறுந். 2)

*மதி : ''சென்மதி பெரும''*
*இகும் : ''மெல்லம் புலம்ப கண்டிகும் யாமே''*
*சின் : ''காப்பும் பூண்டிசிற் கடையும் போகலை''* (அகம். 7) (26)

### 'இகும்' 'சின்' என்பவற்றிற்குப் புறனடை

270. அவற்றுள்,
இகுமும் சின்னும் ஏனை இடத்தொடுந்
தகுநிலை உடைய என்மனார் புலவர்.

**(வ-று.)** இகும், *தன்மைக்கண் வருமாறு:*

*''கண்டிகு மல்லமோ கொண்க''* (ஐங்குறு. 121)

என வரும்.

*படர்க்கை:*

*'புகழ்ந்திகு மல்லரோ பெரிதே'*

என வரும்.

*சின், தன்மைக்கண் வருமாறு:*

*''கண்ணும் படுமோ வென்றிசின் யானே''* (நற். 61)

என வரும்.

*படர்க்கைக்கண் வருமாறு:*

*''யாரஃ தறிந்திசி னோரே''* (குறுந். 18)

என வரும். *(27)*

### 'அம்ம' என்னும் இடைச்சொல்லின் பொருள்

271. அம்ம கேட்பிக்கும்.

**(வ-று.)**

*''அம்ம வாழி தோழி''* (ஐங்குறு. 31)

என்றவழி, அது கேளாய் வாழி தோழி என்றவாறாம். *(28)*

### 'ஆங்க' உரையசை என்பது

272. ஆங்க உரையசை.

**உரை:** ஆங்க என்னும் இடைச் சொல் கட்டுரைத் தொடர்பினிடை அசைப்பொருள் படவரும், எ-று.

**(வ-று.)**

*''ஆங்கக்*
*குயிலு மயிலுங் காட்டிக்*
*கேள்வனை விடுத்துப் போக்கி யோளே''*

என வரும். *(29)*

## ஒப்பில் போலி

273. ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் இடைச் சொல் எழுவகைய என்று நிறுத்தவற்றுள் ஒப்பில்போலி என்னும் இடைச் சொல் உணர்த்துதல் நுதலிற்று.

ஒப்பில்போலி யாவது, ஒப்பில்லாதவழி ஒப்பித்த வாசகம் பட வருவது என்பது.

**(வ-று.)** 'மங்கலம் என்பதோர் ஊருண்டுபோலும் மழநாட்டுள்' என ஒப்பில்லாதவழிப் போலும் என்னும் இடைச் சொல் வந்தவாறு. *(30)*

## அசைநிலைச் சொற்கள்

274. யாகா
பிறபிறக்கு அரோபோ மாதென வரூஉம்
ஆயேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், அசைக்கும் இடைச் சொற் களைத் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

**(வ-று.)**

*'யா பன்னிருவர் உளர்போலும் மாணாக்கர் அகத்தியனார்க்கு'* என, யா வந்தவாறு காண்க.

கா: *'உதுகா'* என வரும்.

பிற; *'அதுபிற, இதுபிற, உதுபிற'* எனப் பிற வந்தவாறு.

*'அது பிறக்கு'*

எனப் பிறக்கு வந்தவாறு.

*'கொடியுவணத்தவரரோ'*

என அரோ வந்தவாறு.

*'பிரியின் வாழாது என்போ தெய்ய'*

எனப் போ வந்தவாறு;

*'நீர்போ நேரிகை புகன்'*

என்பதும் அது.

*''விளிந்தன்று மாதவத் தெளிந்தவென் னெஞ்சே''* (நற். 178)

என மாது வந்தவாறு. *(31)*

## பிரிவில் அசைநிலைச் சொற்கள்

275. ஆக ஆகல் என்ப தென்னும்
ஆவயின் மூன்றும் பிரிவில் அசைநிலை.

**(வ-று.)** 'நீ இன்னை, இனையை' என்று ஒருவனை யொருவன் ஒன்று சொல்லுமிடத்து, அமையும் அமையும், 'ஆக ஆக' என்னும்; அவ்விடத்து, ஆக என்னும் இடைச்சொல் பிரிவின்றி இரட்டித்து நின்றவாறு கண்டு கொள்க.

'யான் உனக்கியாதும் ஆகேனோ?' 'என்றக்கால்' 'ஆகல் ஆகல்' என்னும் அவ்விடத்து, ஆகல் என்னும் இடைச்சொல் பிரிவின்றி வந்த வாறு காண்க:

ஒருவனை யொருவன் ஒன்று சொன்னால், கேட்டு நின்றான் ஒருவன், 'என்பது என்பது' என்னும்; அது புகழ்ச்சி யிடத்துப் பயிற்சி உடைத்து; அறிந்து கொள்க. *(32)*

## 'ஔ' என்பதன் பொருள் வேறுபாடு

276. ஈரள பிசைக்கும் இறுதியி லுயிரே
ஆயியல் நிலையுங் காலத் தானும்
அளபெடை நிலையுங் காலத் தானும்
அளபெடை யின்றித் தான்வருங் காலையும்
உளவென மொழிப பொருள்வேறு படுதல்
குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஔ என்னும் இடைச்சொல் மூன்று வகையாற் பொருள்படும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**(வ-று.)** ஆயியல் நிலையுங் காலத்தால் வருதலாவது, மேற்கூறிய மூன்றும் போல் வருதல்.

ஒன்று உரைக்குங்கால் இரட்டித்து, 'ஔ, ஔ' என வரும்.

அளபெடை நிலையுங்காலத்தில் வந்து, அது பொருள் படுமாறு:

'ஔஉ' என வரும்.

யாதானும் ஒரு துன்புறவின்கண் அளபெடையின்றித் தான் வருமாறு:

'ஔ' என ஒரு குறிப்புப் பொருட்கண் வருவது என்றவாறு.

இம் மூன்றுபொருட் பகுதியும் குறிப்பினான் வேறுபடுத்து அறிந்து கொள்க. *(33)*

## சொல்லுவான் குறிப்பாற் பொருளுணர்த்துவன

277. நன்றீற் றேயும் அன்றீற் றேயும்
அந்தீற் றோவும் அன்னீற் றோவும்
அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின் இதுவும் சொல்லுதற் குறிப்பினான் பொருள் வேறுபடும் இடைச்சொற்களை உணர்த்துதல் நுதலிற்று.

**(வ-று.)**

*நன்றீற்று ஏ : 'நன்றே நன்றே' என வரும்.*

*அன்றீற்று ஏ : 'அன்றே அன்றே' என வரும்.*

*அந்தீற்று ஓ : 'அந்தோ அந்தோ' என வரும்.*

*அன்னீற்று ஓ : 'அன்னோ அன்னோ' என வரும். (34)*

**உம்மைகள் மயங்குமாறு**

278. எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையும்
தத்தமுள் மயங்கும் உடனிலை யிலவே.

**உரை:** *எச்ச வும்மையும் எதிர்மறை யும்மையும்; தத்தமுள் மயங்கும் உடனிலையிலவே என்பது - இவை தம்முள் மயங்கி உடனிற்குந் தன்மையில, எ-று.*

**(வ-று.)** *'சாத்தனும் வந்தான், கொற்றனும் வரும்' என்பது எச்சவும்மை; அதனைச் சாத்தனும் வந்தான். கொற்றனும் வரலுமுரியன் என எதிர்மறை யும்மையொடு கூட்டிச் சொல்லப்படாது எ-று. (35)*

**எச்ச உம்மை நிற்றற்குரிய இடம்**

279. எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயின்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்.

**உரை:** எஞ்சுபொருட் கிளவி என்பது - எச்சவும்மை என்றவாறு; செஞ்சொல் ஆயின் என்பது - செவ்வெண்ணாயின் என்றவாறு; பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல் என்பது - கால முன்னாகச் சொல்லார்; இடமுன்னாகச் சொல்லுவார், எ-று.

**(வ-று.)**

*''அடகுபுலால் பாகு பாளிதமு முண்ணான்*
*கடல்போலுங் கல்வி யவன்''*

என்பதனுள், அடகு புலால் பாகு என்று செவ்வெண்ணாலே எண்ணிப் பின்னைப் பாளிதமும் என்று எச்சவும்மையை இடமுன்னாக்கி வைத்து எண்ணினவாறு கண்டுகொள்க. *(36)*

**முற்றும்மை எச்ச உம்மையுமாதல்**

280. முற்றிய உம்மைத் தொகைச்சொல் மருங்கின்
எச்சக் கிளவி உரித்தும் ஆகும்.

**(வ-று.)** 'பத்தும் கொடான்' என்றக்கால், எல்லாம் கொடான் என்றுமாம்.

'தொகைச்சொல்' என்றதனான், எல்லாங்கொண்டாம், கொண் டார் என்றும்; எல்லாரும் வாரார் (என்றும்,) வருவர் என்றும் கொள்ளப்படும்.

எச்சவும்மை ஒழிவுப்பொருளை உடைத்தானதுபோல, முற் றும்மையும் ஒழிவுப் பொருள்பட வரும் என்று கொள்க. *(37)*

### ஈற்றசை ஏகாரத்திற்கு அளவு ஒன்று எனல்

281. ஈற்றுநின் றிசைக்கும் ஏயெ னிறுதி
கூற்றுவயின் ஓரள பாகலும் உரித்தே.

**உரை:** மேற்சொல்லப்பட்ட ஐந்து ஏகாரத்துள்ளும் ஈற்றசை ஏகாரம், ஓரளபாம், எ-று.

**(வ-று.)**

*'கடல்போற் றோன்றல காடிறந் தோரே'* (அகம். 1)

என வரும்.

உம்மை எதிர்மறையாகலின் குறையாது நிற்றலே பெரும் பான்மை. *(38)*

### எண்ணின்கண் வரும் உம், என என்பன

282. உம்மை எண்ணும் எனவென் எண்ணுந்
தம்வயின் தொகுதி கடப்பா டிலவே.

**(வ-று.)**

*'நிலனும் நீரும் தீயும் வளியும் வெளியும் நல்ல'*

எனினும் அமையும்; தொகை கொடுத்து எண்ணினும் ஆம்.

எனவென் எண்ணிற்கும் தொகை கொடுத்தும் கொடாதும் சொல்லி உம்மையெண்போல ஒட்டிக் கொள்க. *(39)*

### எண் ஏகாரம் இடையிட்டும் வரும்

283. எண்ஏ காரம் இடையிட்டுக் கொளினும்
எண்ணுக்குறித் தியலும் என்மனார் புலவர்.

**உரை:** எண்ணேகாரம் இடை நின்று ஒழிந்த எண்ணான் வந்தன வற்றையும், ஏகாரவெண்ணான், எண்ணினவே, எ-று.

ஏகாரம் எண்ணிடையே நின்றது எனினும், எண்ணி வருகின்ற எண்ணேயாம் என்றுமாம் எனக் கொள்க.

**(வ-று.)**

*''தோற்ற மிசையே நாற்றஞ் சுவையே
உறலோ டாங்கைம் புலனென மொழிப''*

இதனுள், செவ்வெண் ஓடாநின்றே ஏகாரவெண் இடையே புகுந்த வாறு கண்டுகொள்க. *(40)*

### 'எனா' 'என்றா' இரண்டும் எண்ணில் வருதல்

284. உம்மை தொக்க எனாவென் கிளவியும்
ஆவீ றாகிய என்றென் கிளவியும்
ஆயிரு கிளவியும் எண்ணுவழிப் பட்டன.

**(வ-று.)** *உம்மைதொக்க எனா என் கிளவி வருமாறு:*

*'நிலனெனா, நீரெனா, தீயெனா, காலெனா' என வரும்.*

*ஆவீறாகிய என்றென் கிளவி:*

*'நிலனென்றா, நீரென்றா, தீயென்றா, வளியென்றா' என வரும். (41)*

## எண்ணிடைச் சொற்களுக்கு முடிபு வேற்றுமை

285. அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்
பெயர்க்குரி மரபின் செவ்வெண் இறுதியும்
ஏயி னாகிய எண்ணின் இறுதியும்
யாவயின் வரினுந் தொகையின் றியலா.

**(வ-று.)** *எனா: 'சாத்தனெனா, கொற்றனெனா, பூதனெனா, அம் மூவரும் வந்தார்' என, எனா என்னும் எண்ணினிறுதிக்கண் மூவரும் எனத் தொகை கொடுத்து எண்ணினவாறு கண்டுகொள்க.*

*'சாத்தன், கொற்றன், பூதன் என மூவரும் வந்தார்' என வரும் செவ்வெண்.*

*'சாத்தன் என்றா, கொற்றன் என்றா, பூதன் என்றா என மூவரும் வந்தார்' என வரும் என்றா எண்.*

*'சாத்தனே, கொற்றனே, பூதனே என மூவரும் வந்தார்' என வரும் ஏகார எண்.*

*இவை தொகைபெற்று முடிந்தவாறு கண்டுகொள்க. (42)*

## உம்மை எண்ணின் உருபு தொகுதல்

286. உம்மை எண்ணின் உருபுதொகல் வரையார்.

**(வ-று.)** *'யானையும் தேரும் ஆளும் எறிந்தார்' என்பது, யானையையும் தேரையும் ஆளையும் எறிந்தார் என்றவாறு; உம்மை யெண்ணின் கண் உருபு தொக்கவா றாயிற்று. (43)*

## உம் என்பது 'உந்து' எனத் திரிதல்

287. உம்உந் தாகும் இடனுமா ருண்டே.

**(வ-று.)**

*'நீர்க்கோழி கூய்ப் பெயர்க் குந்து'* (புறம். 395)

*என்பது.*

*எட்டு வகைப்பட்ட உம்மையுள் ஒரும்மை எனப்படாது, வினை செயல் மருங்கிற் காலமொடு வந்தது. (44)*

### எண்ணிடைச் சொற்கள் வினைச் சொற்களொடும் வருதல்

288. வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா
நினையல் வேண்டும் அவற்றவற் றியல்பே.

என்பது, மேலே யெண்களைக் காட்டின வழியெல்லாம் பெய ரொடு படுத்தே காட்டினான்; இனி, வினையொடு அவ்வெண்களைக் காட்டுகின்றான்:

**(வ-று.)** ‘அறுத்துக் குறைத்துச் சுகிர்ந்து வகிர்ந்து இட்டான்’ எனச் செவ்வெண் வினையான் எண்ணினவாறு, அறுத்தும் குறைத்தும் சுகிர்ந்தும் வகிர்ந்தும் இட்டான் என உம்மையெண் வினையொடு கூட்டி எண்ணினவாறு.

பலவெண்ணும் வினைக்கு வாரா; வருமிடத்து இத் தொடக்கத் தனவே வருவன கொள்க.

*‘‘மண்டில மழுங்க மலைநிறங் கிளர*
*வண்டின மலர்பாய்ந் தூத மீமிசைக்*
*கண்டற் கானற் குருகின மொலிப்ப’’* (அகம். 260)

என, வினையொடுகூடிச் செவ்வெண் வந்தவாறு.

‘நினையல் வேண்டும்’ என்பது, அவ்வெண்களெல்லாம் தொகை பெற்றே நடக்கும் என்றவாறு.

‘சாத்தன் வந்தான், கொற்றன் வந்தான், வேடன் வந்தான், அம் மூவரும் வந்தார்; அம்மூவரும் வந்தமையாற் கலியாணம் பொலிந்தது’ எனத் தொகைபெற்று வந்தவாறு. *(45)*

### எண்ணிடைச் சொற்கள் பிரிந்து சென்று ஒன்றுதல்

289. என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி
யொன்றுவழி உடைய எண்ணினுட் பிரிந்தே.

**(வ-று.)**

*‘‘உயர்திணைப் பெயரே யஃறிணைப் பெயரென்*
*றாயிரண் டென்ப’’* (தொல். எழுத். புணரியல். 15)

என்புழி என்று என்பதனை முன்னுங் கூட்டி யுரைக்க.

*‘‘கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை’’*(தொல். எழுத்து. நூன்மரபு.7)

என்புழி, என என்பதனை முன்னுங் கூட்டி யுரைக்க.

*‘‘நிலனே நீரே தீயே வளியே*
*யாகா யத்தோ டைந்தே பூதம்’’*

என்புழி, ஒடுவினை எங்கும் கூட்டி யுரைக்க. *(46)*

## இடைச் சொற்களுக்குப் பொருள் கொள்ளுமாறு

290. அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த இயல வாயினும்
வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்
திரிந்துவேறு வரினுந் தெரிந்தனர் கொளலே.

மேல் ஓதப்பட்ட சொற்கள் கூறப்பட்ட இலக்கணத்தவன்றிப் பிற பொருள்பட்டு வருப வுளவேனும் கொள்க.

**(வ-று.)**

*''சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ''* (அகம். 46)

என்புழி, ஓகாரம் ஈற்றசையும் ஆயிற்று.

*''கலங்கொண்டன கள்ளென்கோ*
*காழ்க்கொண்டன சூடென்கோ''*★

என, ஓகாரம் எண்ணோகாரம் ஆயிற்று.

*''ஓர்கமா தோழியவர் தேர்மணிக் குரலே''* (அகம். 273)

மா முன்னிலை அசைச்சொல் ஆயிற்று, வியங்கோட்கு ஓதிய அசைச்சொல்.

*''அதுமற் கொண்கன் றேரே''*

என்புழி, மன் அசைச்சொல் ஆயிற்று. *(47)*

★ 'கலக்கொண்டனன் கள்ளென்கோ
காழ்க்கொண்டனன் சூடென்கோ' என்பது பாடம்.

*(யாப். விருத்தியுரை - 93ஆம் நூற்பா)*

## இடைச்சொற்களுக்குப் புறனடை

291. கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இவ்வோத்திற்கெல்லாம் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இது மேற் சொல்லப்பட்டன அன்றி வரும் இடைச் சொல்லும் கொள்ளப்படும், எ-று.

*அவை: காரம், கரம், கான், ஆனம், ஏனம், ஓனம் எனவும்;*

*மாள, ஆம், மார், ஆல், தெய்ய எனவும் வரும்.*

புறனடை என்பது நூலுள்ளே தொகாதவற்றைப் பாதுகாத்து நூற்கு முட்டாகாமை உணர்தற்பொருட்டாக வைத்து உரைப்பது. *(48)*

## ஏழாவது இடையியல் முற்றிற்று.

# 8
# உரியியல்

### உரிச்சொற்குப் பொது இலக்கணம்

292. உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினு மெய்தடு மாறி
ஒருசொல் பல்பொருட் குரிமை தோன்றினும்
பலசொல் லொருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மரபின் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்

என்பது சூத்திரம்.

இவ் வோத்து என்ன பெயர்த்தோ எனின் உரிச்சொல் உணர்த்தி னமையின் உரிச்சொல் ஓத்து என்னும் பெயர்த்து.

இத் தலைச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், உரிச்சொற் கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** உரிச்சொற்கள் தோன்றுமிடத்து இசையும் குறிப்பும் பண்பும் பற்றிப் பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் சென்று பொருள்களை விளக்கும், எ-று.

மெய் என்பது பொருள்; தடுமாறுதல் என்பது பெயர் பற்றியும் வினை பற்றியும் வரும் வரவினை நோக்கி; அவ்வாறு தடுமாறுங்கால் ஒரு சொல் பல்பொருட்கு உரிமைப்பட்டுத் தடுமாறுதலும், பல சொல் ஒரு பொருட்கு உரிமைப்பட்டுத் தடுமாறுதலும் உடைய. அவை அவ்வாறு தடுமாறித் தோன்றுதல் அவற்றிற்கு இலக்கணம்; அவ்வாறு தோன்றுங் கால் பயிலாத உரிச்சொற்களைப் பயின்ற உரிச்சொல்லொடு சார்த்தி உணரப்படும். அவ்வாறு சார்த்திச் சொல்லவே எவ்வகைப்பட்ட சொல்லாயினும் பொருள் விளங்கும்.

'உறுகால்' (நற். 300) என்றக்கால், உறு என்பதனை வழக்கி னுள்ளார் பயிலாமையின், 'மிகுகால்' என்று சொல்லுப. மிகு என்பதூஉம் உரிச்

சொல், அதனை நடையுள்ளார் பயின்றாராதலான், அந்நிகரனவற்றாற் பொருத்திச் சொல்ல அவை விளங்கித்தோன்றும் என்பது.

இசைபற்றி நிற்பனவற்றிற்கு, 'இசை சென்று நிலைமருங்கு' எனவும், குறிப்புப்பற்றித் தோன்றுவனவற்றிற்குத் 'தத்தங் குறிப்புச் சென்று நிலைமருங்கு' எனவும் படும் என்பது.

இசை பற்றித் தோன்றின,

*''துவைத்தலும் சிலைத்தலும்''* (தொல். உரியியல். 61)

என்னுந் தொடக்கத்தன.

குறிப்புப்பற்றி வந்தன,

*''கறுப்புஞ் சிவப்பும்''* (தொல். உரியியல். 75)

என்னுந் தொடக்கத்தன.

*''நிறத்துரு வுரைத்தற்கு முரிய''* (உரியியல். 76)

என்றானாகலின், ஆண்டுப் பண்பெனவும் வரும்.

ஒரு சொல்லாகப் பல பொருட்கு உரியன,

*''கடியென் கிளவி''* (உரியியல். 86)

என்னுந் தொடக்கத்தன.

பல சொல் ஒரு பொருட்கு உரியன,

*''உறு தவ நனி''* (உரியியல். 3)

என்னுந் தொடக்கத்தன.

முன்,

*''இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு*
*மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப''* (பெயரியல். 5)

என்புழி, நிரனிறை வாய்பாட்டதாகலான், அது நீக்குதற்குப் 'பெயரினும் வினையினும் மெய்தடு மாறி' என்றான் என்பது. *(1)*

## வெளிப்படையல்லா உரிச்சொற்கே பொருள் கூறல்

293. வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இருவகைய உரிச்சொல், வெளிப்படுவனவும் வெளிப்படாதனவும் என, அவற்றுள் வெளிப்பட்ட உரிச்சொற்களது பொருள் சொல்ல வேண்டா; அறிந்த பொருட் பெற்றியான் பொருட் செல்லுதலின் என்பது உணர்த்தியவாறு.

அவ்வாறு வெளிப்பட்ட உரிச்சொற்களாவன: கலித்தது, குழைத்தது என்னுந் தொடக்கத்தன.

இனி வெளிப்பட வாராதனவற்றை விரிக்கின்றார். *(2)*

### உறு, தவ, நனி என்பனவற்றின் பொருள்

294. அவைதாம்,
உறுதவ நனிஎன வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், குறிப்புப்பற்றித் தோன்றும் உரிச் சொற்கள் பலவாகலான் அவற்றுப் பகுதி முற்கூறிய தொடங்கினான்.

**உரை:** இக் கூறப்பட்ட மூன்று உரிச் சொல்லும் மிகுதிப் பொருண்மையை விளக்கும், எ-று.

**(வ-று.)**

*''உறுகா லொற்ற வொல்கி''* (நற். 300)

என்பது, மிகுகாலொற்ற வொல்கி என்பதாம்.

*''தவச்சேய் நாட்டா ராயினும்''* (நற். 115)

என்பது, மிகச்சேய நாட்டார் என்பதாம்.

*''நனிசேய்த் தன்றவன் பழவிறன் மூதூர்''* (மலைபடு. 487)

என்பது, மிகச்சேய்த் தன்றவன் பழவிறன் மூதூர் என்பதாம். *(3)*

### உரு, புரை என்பவற்றின் பொருள்

295. உருஉட் காகும் புரைஉயர் பாகும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் குறிப்பு.

(வ-று.)

*''உருவக் குதிரை''* (அகம். 1)

என்றக்கால், உட்கத்தக்க குதிரை என்பதாம்.

*''புரைய மன்ற புரையோர் கேண்மை''* (நற்றிணை. 1)

என்பது, உயர உயர்ந்தோர் கேண்மை என்பதாம். *(4)*

### குரு, கெழு என்பவற்றின் பொருள்

296. குருவுங் கெழுவும் நிறன்ஆ கும்மே.

**(வ-று.)**

*''குருத்துளி பொழிந்தது''*

*''கேழ்கிள ரகலத்து''* (மதுரைக்காஞ்சி. 493)

என்றக்கால், அவையிரண்டினும் நிறம் சொன்னவாறு. *(5)*

### செல்லல், இன்னல் என்பவற்றின் பொருள்

297. செல்லல் இன்னல் இன்னா மையே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் குறிப்பு.

**உரை:** இவை இரண்டும் நோய்ப் பொருண்மைய ஆகும், எ-று.

**(வ-று.)**

*''மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்''* (அகம். 22)

என்புழி, நோய் என்பதாம்;

*''வெயில்புறந் தரூஉ மின்ன லியக்கம்''* (மலைபடு. 374)

என்றவிடத்தும் அதுவாம். *(6)*

### மல்லல், ஏ என்பவற்றின் பொருள்

298. மல்லல் வளனே ஏபெற் றாகும்.

**(வ-று.)**

*''மல்லன் மாமலை''*

என்றக்கால், வளனுடைய மாமலை என்பதாம்.

*''ஏகல டுக்கம்''* (அகம். 52)

என்றக்கால், பெற்றிய கல்லடுக்கம் என்பதாம். *(7)*

### உகப்பு, உவப்பு என்பவற்றின் பொருள்

299. உகப்பே உயர்தல் உவப்பே உவகை.

**(வ-று.)**

*''நாடுகாண மேன்மே லுகமின்''*

என்பது நாடு காணக் கன்மே லேறினால் மேன்மேல் உயர்மின் என்பதாம்.

*''உவக்குந ளாயினும் உடலின ளாயினும்''* (அகம். 203)

என்புழி, உவந்தனளாயினும் என்பதாம். *(8)*

### பயப்பு என்பதன் பொருள்

300. பயப்பே பயனாம்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இவை யெல்லாங் குறிப்பு.

**(வ-று.)**

*''ஆன்பயமுந் தூக்கினென்''*

என்புழிப் பயன் கூறியவாறு. *(9)*

### பசப்பு என்பதன் பொருள்

301. பசப்பு நிறனாகும்

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது பண்புபற்றி வந்தது.

**(வ-று.)**

*''பசப்பித்துச் சென்றார்''*

என்புழி, நிறம் கூறியவாறு. *(10)*

## இயைபு என்பதன் பொருள்

302. இயைபே புணர்ச்சி

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவுங் குறிப்பு.

**(வ-று.)**

*''இயைந்தொழுகும்''*

என்றக்கால், பொருந்தி யொழுகும் என்பதாம். *(11)*

## இசைப்பு என்பதன் பொருள்

303. இசைப்பிசை ஆகும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இஃது இசைபற்றி வந்தது.

**(வ-று.)**

*''இசைந்தொழுகும்''*

என்றக்கால், இசையத் தோன்றிவிடும் என்பதாம். *(12)*

## அலமரல் தெருமரல் என்பவற்றின் பொருள்

304. அலமரல் தெருமரல் ஆயிரண்டுஞ் சுழற்சி

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவுங் குறிப்பு.

**(வ-று.)**

*''அலமர லாயம்''* (ஐங்குறு. 64)

என்றக்கால், சுழன்றுவரல் ஆயம் என்பதாம்.

*''தெருமர லுள்ளம்''*

என்பது, சுழன்று வரும் உள்ளம் என்பதாம். *(13)*

## மழ, குழ என்பவற்றின் பொருள்

305. மழவுங் குழவும் இளமைப் பொருள.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவுங் குறிப்பு.

**(வ-று.)**

*''குழக்கன்று கடிதியாத்தாள்''*

என்றக்கால், இளங்கன்று கடிதியாத்தாள் என்றதாம்.

*''மழகளிறு''* (புறம். 38)

என்றக்கால், இளங்களிறு என்றவாறாம். *(14)*

### சீர்த்தி என்பதன் பொருள்

306. சீர்த்தி மிகுபுகழ்.

**(வ-று.)**

*''வயக்கஞ்சால் சீர்த்தி''*

*என்றக்கால், மிக்கபுகழ் என்பதாம்.* *(15)*

### மாலை என்பதன் பொருள்

307. மாலை இயல்பே.

**(வ-று.)**

*''இரவரன் மாலையன்''* (குறிஞ்சிப். 239)

*என்றவழி, இரவின் வரும் இயல்பினன் என்றதாம்.* *(16)*

### கூர்ப்பு, கழிவு என்பவற்றின் பொருள்

308. கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்.

**(வ-று.)**

*''உப்புக் கூர்ந்தது''*

*''உப்புக் கழிந்தது''*

*என்பன, சிறப்புச் சொல்லாய வாறாம்.* *(17)*

### கதழ்வு, துனைவு என்பவற்றின் பொருள்

309. கதழ்வும் *துனைவும் விரைவின் பொருள.

**(வ-று.)**

*''அண்டர்,*
*கயிறரி யெருத்திற் கதழுந் துறைவன்''* (குறுந். 117)

*என்றக்கால், விரையுந் துறைவன் என்பதாம்.*

*''துனைபறை நிவக்கும் புள்ளினம் மான''* (மலைபடு. 55)

*என்றக்கால், விரைந்து பறக்கும் என்றவாறாம்.* *(18)*

* **(பாடம்)** துனையும்

### அதிர்வு, விதிர்ப்பு என்பவற்றின் பொருள்

310. அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இவை யெல்லாங் குறிப்பு.*

**(வ-று.)**

*''அதிர்கண் முரசம்''*

*என்றக்கால், நடுங்குகண் முரசம் என்பதாம்.*

*''விதிர்ப்புற்றுக் கண்ணிமையார்''*

என்றக்கால், நடுக்குற்று என்பதாம். *(19)*

### வார்தல், போகல், ஒழுகல் என்பவற்றின் பொருள்

311. வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்

நேர்பும் நெடுமையுஞ் செய்யும் பொருள.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது பண்புபற்றி வந்தது.

**(வ-று.)**

*''வார் கயிற் றொழுகை''* (அகம். 173)

என்றக்கால், நேர் கயிற்றொழுகை என்பதூஉம், நெடுங்கயிற் றொழுகை என்பதூஉமாம்.

*''போகு கொடி''*

*''ஒழுகு கொடி''*

என்புழியும், அவ்விரு பொருளும் படும். *(20)*

### தீர்தல், தீர்த்தல் என்பவற்றின் பொருள்

312. தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவுங் குறிப்பு.

**(வ-று.)**

*''ஊரின் தீர்ந்தான்''*

என்றக்கால், ஊரிற் பற்றுவிட்டான் என்பதாம்.

*''பேய் தீர்த்தான்''*

என்றக்கால், பேய் விடுவித்தான் என்பதாம். *(21)*

### கெடவரல், பண்ணை என்பவற்றின் பொருள்

313. கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு

**(வ-று.)**

*''கெடவர லாயம்''*

என்றக்கால், விளையாட் டாயம் என்பதாம்.

*''பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளும்''* (தொல். மெய்ப். 1)

என்றக்கால், விளையாட்டுள் தோன்றிய பொருள் என்பதாம். *(22)*

### தட, கய, நளி என்பவற்றின் பொருள்

314. தடவும் கயவும் நளியும் பெருமை.

**(வ-று.)**

*''தடந்தோள்''*

*''கயவெள் ளருவி''* (அகம். 38)

*''நளிமலை நாடன்''* (புறம். 150)

எனவரும். *(23)*

### தட என்பது வளைவையும் உணர்த்தல்

315. அவற்றுள்,

தடஎன் கிளவி கோட்டமும் செய்யும்.

**உரை:** தட என்பது பெருமையே யன்றிக் கோட்டப் பொருளினை யும் விளக்கும், எ-று.

**(வ-று.)**

*''தடமருப் பெருமை''* (நற். 120)

என வரும். *(24)*

### கய என்பது மென்மையையும் உணர்த்தல்

316. கயஎன் கிளவி மென்மையும் செய்யும்.

**உரை:** கயவென்னும் சொல் பெருமையேயன்றி மென்மைப் பொருளும் படும், எ-று.

**(வ-று.)**

*''கயந்தலை மடப்பிடி''* (நற். 137)

என வரும். *(25)*

### நளி என்பது செறிவையும் உணர்த்தல்

317. நளிஎன் கிளவி செறிவும் ஆகும்.

**உரை:** நளி என்னும் சொல் பெருமையே யன்றிச் செறிவுப் பொருளும் படும், எ-று.

**(வ-று.)**

*''நளியிருள்''*

என்றக்கால், செறியிருள் என்பதாம்.

மூன்றிடத்து உம்மையும் இறந்தது தழீஇயின. *(26)*

### பழுது என்பதன் பொருள்

318. பழுதுபயம் இன்றே.

**(வ-று.)**

*''பழுதே வந்தார்''*

என்றக்கால் பயமின்றியே வந்தார் என்பதாம். *(27)*

### சாயல் என்பதன் பொருள்

319. சாயல் மென்மை.

**(வ-று.)**

*"சார னாடன் சாயன் மார்பு"* (பதிற்றுப். 16)

*என்றக்கால், மெல்லிய மார்பு என்பதாம்.* *(28)*

### முழுது என்பதன் பொருள்

320. முழுதென் கிளவி எஞ்சாப் பொருட்டே.

**(வ-று.)**

*"முழுக்கறை பெய்தான்"*

*என்றக்கால் எஞ்சாமை பெய்தான் என்பதாம்.* *(29)*

### வம்பு என்பதன் பொருள்

321. வம்பு நிலை இன்மை

**(வ-று.)**

*"வம்ப வடுகர்"* (அகம். 375)

*"வம்ப நாரை"* (அகம். 190)

*என்றக்கால், நிலையில்லாமை கூறியவாறாம்.* *(30)*

### மாதர் என்பதன் பொருள்

322. மாதர் காதல்.

**(வ-று.)**

*"மாதர் வண்டொடு சுரும்பிசைத்தது"*

*என்றக்கால், காதல் வண்டு என்பதாம்.* *(31)*

### நம்பு, மே என்பவற்றின் பொருள்

323. நம்பு மேவு நசையா கும்மே.

**(வ-று.)**

*"நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி"* (அகம். 198)

*என்றக்கால், நச்சி என்பதாம்.*

*"பேரிசை நவிர மேஎ யுறையும்"* (மலைபடு. 82)

*என்றக்கால், நயந்து உறையும் என்பதாம்.* *(32)*

### ஓய்தல் முதலியவற்றின் பொருள்

324. ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்.

**(வ-று.)**

*''ஓய்கலை யொருத்தல்''*

என்றக்கால், நுணுகிய கலை யொருத்தல் என்பதாம்.

*''கையு மெய்யு மாய்ந் திருந்தார்''*

என்றக்கால், சுருங்கியிருந்தார் என்பதாம்.

*''நிழத்த யானை மேய்புலம் படர''* (மதுரைக். 303)

என்றக்கால், மெலிந்து நுணுகிய என்பதாம்.

*''கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்''* (நெடுநல். 18)

என்றக்கால், சுருங்கி என்பதாம். *(33)*

## புலம்பு என்பதன் பொருள்

325. புலம்பே தனிமை.

**(வ-று.)**

*''புலம்புவிட் டிருந்தார்''* (மலைபடு. 49)

என்றக்கால், தனிமை துறந்திருந்தார் என்பதாம். *(34)*

## துவன்று என்பதன் பொருள்

326. துவன்று நிறைவாகும்.

**(வ-று.)**

*''ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்''* (பதிற்றுப். 11)

என்றக்கால், நிறைந்த இமயம் என்பதாம். *(35)*

## முரஞ்சல் என்பதன் பொருள்

327. முரஞ்சல் முதிர்வே.

**(வ-று.)**

*''கோடுபல முரஞ்சிய கோளி யாலம்''* (மலைபடு. 268)

என்றக்கால், முதிர்ந்த ஆலம் என்பதாம். *(36)*

## வெம்மை என்பதன் பொருள்

328. வெம்மை வேண்டல்.

**(வ-று.)**

*''நீ வெம்மையள்''*

என்றக்கால், நீ வேண்டப்படுவாள் என்பதாம். *(37)*

## பொற்பு என்பதன் பொருள்

329. பொற்பே பொலிவு.

**(வ-று.)**

*“அணிகலம் பொற்ப”*

என்றக்கால், பொலிய என்பதாம். *(38)*

### வறிது என்பதன் பொருள்

330. வறிதுசிறி தாகும்.

**(வ-று.)**

*“வறிது நெறியொரீஇ”*

என்றக்கால், சிறிது நெறி ஒரீஇ என்பதாம். *(39)*

### ஏற்றம் என்பதன் பொருள்

331. ஏற்றம் நினைவும் துணிவும் ஆகும்.

**(வ-று.)**

*“ஏற்றத் திருந்தார்”*

என்றக்கால், நினைத்திருந்தார் என்பதூஉம், துணிந்திருந்தார் என்பதூஉம் ஆம். *(40)*

### பிணை, பேண் என்பவற்றின் பொருள்

332. பிணையும் பேணும் பெட்பின் பொருள.

**(வ-று.)**

*“அரும்பிணை யகற்றி வேட்ட ஞாட்பினும்”*

என்றக்கால், அரும்புறந்தரு வாரகற்றி வேட்டஞாட்பினும் என்பதாம்.

*“பேணினே னல்லனோ மகிழ்ந”* (அகம். 16)

என்றக்கால், பெட்டேனல்லனோ மகிழ்ந என்பதாம். *(41)*

பெட்டல் என்பது புறந்தருதல்.

### பணை என்பதன் பொருள்

333. பணையே பிழைத்தல் பெருப்பும் ஆகும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இவையெல்லாங் குறிப்புச் சொல்.

**(வ-று.)**

*“பணைத்துப்போய் வீழ்ந்தது”*

என்றக்கால், பிழைத்துப் போய் வீழ்ந்தது என்பதாம்.

*“பணைத்தோள்”* (அகம். 1)

என்றக்கால், பெருந்தோள் என்பதாம். *(42)*

### படர் என்பதன் பொருள்

334. படரே உள்ளல் செலவும் ஆகும்.

**(வ-று.)**

*''படர்மலி வெற்பர்''*

என்றக்கால், உள்ளல்மலி வெற்பர் என்பதாம். *(43)*

''ஆறுபடர்ந்தார்'' என்றக்கால், சென்றார் என்பதாம்.

### பையுள், சிறுமை என்பவற்றின் பொருள்

335. பையுளும் சிறுமையும் நோயின் பொருள.

**(வ-று.)**

*''பையு ணல்யாழ்''* (அகம். 216)

என்றக்கால், நோய் செய்யும் நல்யாழ் என்பதாம்.

*''சிறுமை யுறுப செய்பறி யலரே''* (நற்றிணை. 1)

என்றக்கால், நோயுறுப செய்யார் என்பதாம். *(44)*

### எய்யாமை என்பதன் பொருள்

336. எய்யாமை அறியாமை.

**(வ-று.)**

*''எய்யா மையலை''* (குறிஞ்சிப். 8)

என்றக்கால், அறியா மையலை என்றவாறாம். *(45)*

### நன்று என்பதன் பொருள்

337. நன்று பெரிதாகும்.

### தெவு என்பதன் பொருள்

338. தெவுக்கொளற் பொருட்டே.

இரண்டு சூத்திரமும் உரைநோக்கி ஒன்றா யெழுதப்பட்டன.

**(வ-று.)**

*''நன்றும் அரிதுதுற் றனையாற் பெரும''* (அகம். 10)

என்றக்கால், பெரிதுற்றனையால் என்பதாம்.

*''நீர்த்தெவு நிரைத்தொழுவர்''* (மதுரைக்காஞ்சி. 89)

என்றக்கால், நீர்கொள்ளும் நிரைத்தொழுவர் என்பதாம். *(46, 47)*

### தா என்பதன் பொருள்

339. தாவே வலியும் வருத்தமும் ஆகும்.

**(வ-று.)**

*''கருங்கட் டாக்கலை''* (குறுந். 69)

என்றவழி, வருந்திய கலை என்பதாம்.

*''தாவி னன்பொன்''* (அகம். 212)

என்றக்கால், வலியி னன்பொன் என்பதாம்; பொன்னுக்குப் போக் குடைமை வலியது. *(48)*

## தெவ்வு என்பதன் பொருள்

340. தெவ்வுப் பகை ஆகும்.

**(வ-று.)**

*''தெவ்வர் தேயத்து''* (புறம். 6)

என்றக்கால், பகைவர் தேயத்து என்பதாம். *(49)*

## விறப்பு முதலியவற்றின் பொருள்

341. விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இவையெல்லாங் குறிப்பு.

**(வ-று.)**

*''விறந்த காப்பொடு''*

என்றக்கால், செறிந்த காப்பொடு என்பதாம்.

*''உறந்த விஞ்சி யுயர்நிலை மாடம்''*

என்புழி, செறிந்த இஞ்சி என்பதாம்.

*''வெறுத்தார்''* (புறம். 53)

என்றக்கால், செறிந்தார் என்பதாம். *(50)*

## விறப்பு என்பது அச்சமும் உணர்த்தல்

342. அவற்றுள்,
விறப்பே வெரூஉப் பொருட்டும் ஆகும்.

**(வ-று.)**

*''கோடுமுற்றி யளந்த காரொடு விறந்தே''*

என்றக்கால், வெரீஇ என்பதாம். *(51)*

## கம்பலை முதலியவற்றின் பொருள்

343. கம்பலை சும்மை கலியே அழுங்கல்
என்றிவை நான்கும் அரவப் பொருள.

இவை இசைபற்றி வந்தன.

**(வ-று.)**

*''ஊர் கம்பலை யுடைத்து''*

என்றக்கால், அரவமுடைத்து என்பதாம்;

*''ஊர் சும்மை யுடைத்து''*

என்பதும் அது;

*''கலிகெழு மூதூர்''* (அகம். 11)

*''அழுங்கன் மூதூர்''* (நற். 203)

என்பனவும் ஒக்கும். *(52)*

## அழுங்கல், இரக்கமும் கேடும் உணர்த்தல்

344. அவற்றுள்,

அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்.

**(வ-று.)**

*''மகனையிழந் தழுங்கினார்''*

என்றக்கால், இரங்கினார் என்பதாம்.

*''செலவ முங்கினார்''*

என்றக்கால், செலவு கெடுத்தார் என்பதாம்.

இவை குறிப்புப்பற்றி வந்தன. *(53)*

## கழுமு என்பதன் பொருள்

345. கழுமென் கிளவி மயக்கம் செய்யும்.

**(வ-று.)**

*''கழுமிய ஞாட்பினுள் மைந்திழந்தார் இட்ட''* (களவழி. 11)

என்றக்கால், மயங்கிய ஞாட்பு என்பதாம். *(54)*

## செழுமை என்பதன் பொருள்

346. செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்.

**(வ-று.)**

*''செழுஞ் செந்நெல்''*

என்றக்கால், வளஞ் செந்நெல் என்பதாம். வளம் என்பது ஆக்கம்.

*''செழுந்தடி தின்ற செந்நா யேற்றை''*

என்பது, கொழுந்தடி தின்ற என்பதாம்; கொழுப்பு என்பது ஊன்பற்றிய நிணம். *(55)*

## விழுமம் என்பதன் பொருள்

347. விழுமம் சீர்மையும் இடும்பையும் செய்யும்.

**(வ-று.)**

*''விழுமியர்''*

என்றக்கால், சீரியர் என்பதாம்.

*''விழுமமுற் றிருந்தார்''*

என்றக்கால், இடும்பையுற் றிருந்தார் என்பதாம். *(56)*

## கருவி என்பதன் பொருள்

348. கருவி தொகுதி.

**(வ-று.)**

*''கருவி வானம் கதழுறை சிதறி''* (அகம். 4)

என்றக்கால், ஈண்டு, மின்னும் முழக்கும் காற்றும் என இத்தொடக் கத்தனவாயிற்று. *(57)*

## கமம் என்பதன் பொருள்

349. கமம்நிறைந் தியலும்.

**(வ-று.)**

*''கமஞ்சூன் மாமழை''* (முருகு. 7)

என்றக்கால், நிறைந்த சூன் மாமழை என்பதாம். *(58)*

## அரி என்பதன் பொருள்

350. அரியே ஐம்மை.

**(வ-று.)**

*''அரிமயிர்த் திரண்முன்கை''* (புறம். 11)

என்றக்கால், ஐம்மயிர்த் திரண் முன்கை என்றவாறாம். *(59)*

## கவவு என்பதன் பொருள்

351. கவவகத் திடுமே.

இவையெல்லாங் குறிப்பு.

**(வ-று.)**

*''கொடும்பூண் கவைஇய கோல மார்பு''*

என்றக்கால், கொடும் பூண் அகத்திட்ட கோல மார்பு என்பதாம். *(60)*

### துவைத்தல் முதலியவற்றின் பொருள்

352. துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்
இசைப்பொருட் கிளவி என்மனார் புலவர்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இவை நான்கும் இசைபற்றி வந்தன.

**(வ-று.)**

*''வரிவளை துவைப்ப''* (புறம். 158)

என்றக்கால், சங்கு இசைப்ப என்பதாம்.

*''கலையினிரலை சிலைப்ப''*

என்றக்கால், அதனது குரலிசைப்பைச் சொல்லிற்றாம்:

*''ஏறு சிலைக்கும்''*

என்பதும் அது.

*''இயமர மியம்பும்''*

எனவே, ஒலிக்கும் என்பதாம்.

*''முரசிரங்கு முற்றம்''*

என்றக்கால், இசைக்கும் என்பதாம். *(61)*

### இரங்கல், கழிவுப் பொருளுமுணர்த்தல்

353. அவற்றுள்
இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும்.

உம்மை இறந்தது தழீஇயிற்று.

*''உடையதிழந் துயிரிரங்கி யிருந்தார்''*

என்றக்கால், கழிவினை விளக்கும், ஈண்டு இரக்கம். *(62)*

### இலம்பாடு, ஒற்கம் என்பவற்றின் பொருள்

354. இலம்பா டொற்கம் ஆயிரண்டும் வறுமை.

**(வ-று.)**

*''இலம்படு புலவர்''* (மலைபடு. 576)

என்றக்கால், வறுமைப்படும் என்பதாம்.

*''ஊரை யொற்கந் தீர்க்கும்''*

என்றக்கால், வறுமை தீர்க்கும் புலவர் என்பதாம். *(63)*

### ஞெமிர்தல், பாய்தல் என்பவற்றின் பொருள்

355. ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள.

**(வ-று.)**

*''தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரிய''* (நற். 143)

**என்றக்கால், பரப்பிய என்பதாம்.**

*''புண்ணுமிழ் குருதிப் புனல் பாய்ந்து''* (குறிஞ்சிப். 172)

**என்றக்கால், பரந்து என்பதாம்.** *(64)*

### கவர்வு என்பதன் பொருள்

356. கவர்வுவிருப் பாகும்.

**(வ-று.)**

*''கொள்ளை மாந்தரி னானாது கவரும்''* (அகம். 3)

**என்றக்கால், விரும்பும் என்பதாம்.** *(65)*

### சேர் என்பதன் பொருள்

357. சேரே திரட்சி.

**(வ-று.)**

*''சேர்ந்துசெறி குறங்கு''* (நற். 170)

**என்றக்கால், திரண்டு செறி குறங்கு என்பதாம்.** *(66)*

### வியல் என்பதன் பொருள்

358. வியலென் கிளவி அகலப் பொருட்டே.

**(வ-று.)**

*''வியலிரு வானம்''*

**என்றக்கால், அகலிரு வானம் என்பதாம்.** *(67)*

### பேம், நாம், உரும் என்பவற்றின் பொருள்

359. பேநாம் உரும்என வரூஉங் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள.

**(வ-று.)**

*''மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்''* (குறுந். 87)

**என்பது, அச்சமுதிர் கடவுள் என்பதாம்.**

*''நாமவருந் துறைபோந்து''* (அகம். 18)

**என்பது, அச்சமுடைய துறை போந்து என்பதாம்.**

*''உருமில் சுற்றமோ டிருந்தோற் குறுகி''* (பெரும். 447)

**என்பது, அச்சமில் சுற்றம் என்பதாம்.**

**இவையெல்லாங் குறிப்பு.** *(68)*

### வய என்பதன் பொருள்

360. வயவலி ஆகும்.

**(வ-று.)**

*''வாள்வரி வேங்கை வயப்புலி''*

என்பது, வலியுள்ள புலி என்பதாம். *(69)*

### வாள் என்பதன் பொருள்

361. வாள் ஒளி ஆகும்.

**(வ-று.)**

*''கண்ணே,*
*நோக்கி நோக்கி வாளிழந் தனவே''* (குறுந். 44)

என்பது, ஒளி யிழந்தன என்பதாம். *(70)*

### துயவு என்பதன் பொருள்

362. துயஎன் கிளவி அறிவின் திரிவே.

**(வ-று.)**

*''அறிவு துயவுறுத்தார்''*

என்பது, அறிவு திரிவுறுத்தார் என்பதாம். *(71)*

### உயா என்பதன் பொருள்

363. உயாவே உயங்கல்.

**(வ-று.)**

*''பருந்திருந், துயாவிளி பயிற்று மியாவுயர் நனந்தலை''* (அகம். 19)

என்றக்கால், உயங்கு விளி பயிற்றி என்பதாம். *(72)*

### உசா என்பதன் பொருள்

364. உசாவே சூழ்ச்சி.

**(வ-று.)**

*''நாமுசாக் கொள்ளாமோ''*

என்பது, நாம் சூழ்ந்துகொள்ளாமோ என்பதாம். இவை குறிப்பு. *(73)*

### வயா என்பதன் பொருள்

365. வயாஎன் கிளவி வேட்கைப் பெருக்கம்.

**(வ-று.)**

*''கூழ்கண்டு வயாவினார்''*

என்றவழி, வேட்கை யாயினார் என்பதாம். *(74)*

### கறுப்பு, சிவப்பு என்பவற்றின் பொருள்

366. கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள.

**(வ-று.)**

*''கறுத்து வந்தார்''*

என்பது, வெகுண்டு வந்தார் என்பதாம்.

*''சிவந்து நோக்கினார்''*

என்பது, வெகுண்டு நோக்கினார் என்பதாம். *(75)*

### மேற்கூறியன நிறப்பண்பும் உணர்த்தல்

367. நிறத்துரு வுணர்த்தற்கும் உரிய என்ப.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், அதுவே யன்றிப் பண்புப் பொருளும் படும் என்றவாறு.

*''உடம்பு கறுத்தது''*

*''கண் சிவந்தன''*

என்பன, நிறத்தின் மேலும் செல்லும். *(76)*

### நொசிவு முதலியவற்றின் பொருள்

368. நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இவை பண்புபற்றி வந்தன.

*''நொசி மருங்குல்''*

என்பது, நுண்மருங்குல் என்பதாம்;

*''நுழை மருங்குல்''*

என்பதும் அது;

*''நுணங்கு மருங்குல்''*

என்பதும் அது. *(77)*

### புனிறு என்பதன் பொருள்

369. புனிறென் கிளவிஈன் றணிமைப் பொருட்டே.

**(வ-று.)**

*''புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி''* (அகம். 56)

என்பது, ஈன்றணியவாயப் பாய்ந்தென என்பதாம். *(78)*

### 'நனவு' என்பதன் பொருள்

370. நனவே களனும் அகலமும் செய்யும்.

**(வ-று.)**

*''நனவுப்புகு விறலியிற் றோன்று நாடன்''* (அகம். 82)

**என்றால், களம்புகு விறலியிற் றோன்று நாடன் என்பதாம்.**

*''நனந்தலை யுலகு''* (குறுந். 6)

**என்றக்கால், அகன்றலை யுலகு என்பதாம்.** *(79)*

## மத என்பதன் பொருள்

371. மதவே மடனும் வலியும் ஆகும்.

**(வ-று.)**

*''மாதர் வாண்முக மதைஇய நோக்கே''* (அகம். 130)

**என்பது, மடம்பட்ட நோக்கு என்பதாம்.**

*''மதகளிறு''*

**என்றக்கால், வலியகளிறு என்பதாம்.** *(80)*

## மத என்பதன் வேறு பொருள்கள்

372. மிகுதியும் வனப்பும் ஆகலு முரித்தே.

**இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், அவையேயன்றி இவ்விரு பொருளும் படும் எ-று.**

*''மதகளிறு''*

**என்றக்கால், மிகுகளிறு என்பதாம்.**

*''இளம்பாண்டில்,*
*தேரூரச் செம்மாந் ததுபோல் மதைஇனள்''* (கலி. 109)

**என்பது, வனப்புடையள் ஆயினள் என்பதாம்.** *(81)*

## யாணர் என்பதன் பொருள்

373. புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி.

**(வ-று.)**

*''அறாஅ யாண ரகன்றலை நன்னாடு''* (அகம். 44)

**என்றக்கால், அறாத புது வருவாயை யுடைய நாடு என்பதாம்.** *(82)*

## அமர்தல் என்பதன் பொருள்

374. அமர்தல் மேவல்.

**(வ-று.)**

*''கூழமர்ந் துண்டாள்''*

**என்பது, கூழைமேவி யுண்டாள் என்பதாம்.** *(83)*

### யாண் என்பதன் பொருள்

375. யாணுக் கவினாம்.

**(வ-று.)**

*"யாணது பசலை என்றனன்"* (நற். 50)

என்றக்கால், வனப்பின்கண்ணது பசலை என்பதாம். *(84)*

### பரவு, பழிச்சு என்பவற்றின் பொருள்

376. பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள.

**(வ-று.)**

*"கடவுட் பரவினார்"*

என்றக்கால், வழுத்தினார் என்பதாம்.

*"கைதொழூஉப் பழிச்சி"* (மதுரைக். 694)

என்றக்கால், வழுத்தி என்பதாம். *(85)*

### கடி என்பதன் பொருள்

377. கடிஎன் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்ச முன்தேற் றாயீ ரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் குறிப்பு.

**உரை:** கடி என்பது இப் பத்துப் பொருளும் படும், எ-று.

**(வ-று.)**

*"வாள்வாய் கடிது"*

என்றக்கால், வாள்வாய் கூரிது என்பதாம்.

*"ஊர் கடிந்தார்"*

என்றக்கால், ஊரை வரைந்தார் என்பதாம்.

*"கடி கா"* (களவழி. 29)

என்பது, காப்புடைய கா என்பதாம்.

*"கடித் தளிர்"*

என்பது, புதுத் தளிர் என்பதாம்.

*"கடிது வந்தார்"*

என்றக்கால், விரைந்து வந்தார் என்பதாம்.

*"கடும் பகல்"* (கலி. நெய். 28)

என்றக்கால், விளங்கு பகல் என்பதாம்.

*''கடும் புனல்''* (குறுந். 103)

என்றக்கால், மிக்க புனல் என்பதாம்; அது சிறந்த புனல் என்பதூஉ மாம்.

*''கடுங்கண் யானை''* (அகம். 63)

என்றக்கால், அஞ்சத்தக்க யானை என்பதாம்.

*''கடுஞ்சூ டருகுவன்''* (அகம். 110)

என்றக்கால், முன்னின்று தேற்றந்தருவன் என்பதாம். *(86)*

## கடி என்பது வேறு பொருளும் உணர்த்தல்

378. ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இவ்விரு பொருளும் படுதற்கும் உரித்து என்றவாறு.

**(வ-று.)**

*''கடுத்தன எல்லளோ வன்னை''*

என்றக்கால், ஐயுற்றனள் என்பதாம்.

*''கடிமிளகு தின்ற கல்லா மந்தி''*

என்றக்கால், கரிப்புஆர் மிளகு தின்ற என்பதாம். *(87)*

## ஐ என்பதன் பொருள்

379. ஐவியப் பாகும்.

**(வ-று.)**

*''ஐதே காமம் யானே''* (நற். 143)

என்றக்கால், வியக்கத்தக்கது என்பதாம். *( 88)*

## முனைவு என்பதன் பொருள்

380. *முனைவு முனிவு ஆகும்.

**(வ-று.)**

*''சேற்றுநிலை முனைஇய''* (அகம். 46)

என்றக்கால், சேற்றுநிலை முனிந்த என்பதாம். *(89)*

* **(பாடம்)** '*முனை*' என்று.

## 'வை' என்பதன் பொருள்

381. வையே கூர்மை.

**(வ-று.)**

*''வையிலை நெடுவேல்''*

என்றக்கால், கூரிலைவேல் என்பதாம். *(90)*

### எறுழ் என்பதன் பொருள்

382. எறுழ்வலி ஆகும்.

**(வ-று.)**

*''வாளுடை யெறுழ்த்தோள்''* (அகம். 24)

என்றக்கால், வலியுடைய தோள் என்பதாம். *(91)*

### உரிச்சொற்களுக்குப் புறனடை

383. மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்
முன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியான் புணர்த்தனர் உணர்த்தல்
தத்த மரபின் தோன்றுமன் பொருளே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது புறனடை.

**உரை:** பொருண்மேற் சொல்லப்பட்ட உரிச்சொல் எல்லாவற்றையும் முன்னைச்சொல் பின்னைச் சொல் நோக்கி, அதற்கு இயைந்த மொழி நாடி, அவற்றொடு புணர்த்து உணர்த்துக. அவ்வாறு உணர்த்தவே தத்தம் மரபிற் றிரியாப் பொருளவாய்த் தோன்றும்; அவ்வாறு தெரிந்து உணராக்கால் கொள்ளாதாம் கருதிய பொருள் என்பது.

யாதோ கொள்ளாத வாறெனின்,

*''கடியுடை வியனகர்''* (புறம். 95)

என்றக்கால், கடியென்பது கூர்மையும் விரைவும் படுமால் என்று, நகரத்துக்கண் அவை யேற்றற்க; காப்புடை நகர் என்று கொள்க, அதற்கு ஒத்த மொழியாகலின் என்பது. *(92)*

### உரிச்சொல் கூறப்பட்ட பொருளேயன்றிப் பிறபொருளும் உணர்த்தல்

384. கூறிய கிளவிப் பொருள்நிலை அல்லது
வேறுபிற தோன்றினும் அவற்றொடு கொளலே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் புறனடை.

**உரை:** சொல்லிப் போந்த உரிச்சொற்கள் அவ்வுரியவெனப்பட்ட பொருளின ஆகாது வேறுவேறுபட்ட பொருளினவாய்த் தோன்றினும் அச் சொல்லப்பட்ட பொருளொடு படுத்துப் பொருள்படுமாறு அறிந்து கொள்க என்பதாம்.

*''புரைப்பட்ட''*

என்புழிப் புரை என்பது ஈண்டுப் பிளவுப் பொருண்மையை விளக்கிற்றாகலின், இதனையும் உயர்வுப் பொருண்மையொடு புணர்த்து இருபொருளும் அச்சொற்குப் பொருள் என்று கொள்க என்பதாம். இனிக்

*''கண்கதழ வெழுதினார்''*

என்புழி, ஆண்டு விரைந்து எழுதினார் என்று விரைவிற் பொருள் கொள்ளற்க; சிறப்ப எழுதினார் என்று கொள்க. பிறவும் அன்ன. *(93)*

### பொருட்குப் பொருள் தெரியற்க என்பது

385. பொருட்குப்பொருள் தெரியின் அதுவரம் பின்றே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் புறனடை.

**உரை:** மேற்கூறப்பட்ட உரிச்சொல்லுள் உளவன்றே; அப் பொருட்கும் இப்பொருட்கும் உரியவென்று ஓதப்பட்டன; அவை,

*''உறு தவ நனி''* (தொல். உரிச். 3)

என்னுந் தொடக்கத்தன.

மற்று, அவற்றை மிகுதிப் பொருள் என்றான். அதுபற்றி மிகுதி யென்னை? என்றாற்கு, பிறிது ஒன்றைவிடப் பெரிதாக என்பவால், எனின் அதனைக் கேட்டு ஒழியான்; பெரிது எனப்படுவது என்னை? என்றான்; எனச் சாலவாதல் என்றான்; என்பதனானும் ஒழியான், சாலவாதல் எனப்படுவது என்னை? என்றான்; என, எத்துணையும் பிறங்குதல் என்றான்; என, அத்துணையும் என்னை? என்று இவ்வாறு பிரித்துச் சொற்களான் தெரிபு கூறுமேல் அது வேண்டா என விலக்கினவாறு. *(94)*

### சொல்லினான் தாமே பொருளுணர வல்லார்க்குப் பொருள் உணர்த்த வேண்டா என்றல்

386. பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது மேற் சூத்திரத்திற்குப் புறனடை.

**உரை:** உரிச்சொல் பிறிதலது, அது பொருள் உணருமாறு வல்லாற்குப் பிறசொற்கொணர்ந்து பொருள் உணர்த்தல் வேண்டா; திரிபின்றி அச் சொல்லினானே உணரப்படும், எ-று.

என்னை, 'உறு' என்ற பதம் மிகுதிப் பொருட்டு என்றக்கால், அம் மிகுதியையும் அதனானே யுணரலாம்; உணருமாறு வல்லாற்குப் பிறசொற் கொணர்ந்து உரைத்தல் வேண்டா என்பது. *(95)*

### உணர்வோர்க்கு விளங்குமாற்றால் பொருளுணர்த்துக என்றல்

387. உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் புறனடை.

யாஞ் சொல்லிய சொல் வாயிலே பற்றி யுணர்த்துக, அத்துணை யான் உணர்வார்க்கு அதுவே உணர்ச்சி வாயிலாம்; அல்லாக்கால் அவ்வுணர் வோரை வலித்து ஆமாற்றான் உணர்த்துக என்பதாம்.

என்னை,

*''பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள''* (தொல். உரிச். 85)

என்பதனான், உணராத மடவோரை மற்றொரு வாய்பாட்டான் உணர்த்துக. அல்லாக்கால், மேல் நோக்கிச் சில மலர்கொடு தூவிக் காட்ட வுணருமேல் அஃதே உணர்ச்சி வாயிலாக அறிக என்பது. *(96)*

## சொற்பொருள் உணர்த்துங்காரணம் ஆசிரியர்க்கே புலப்படல்

388. மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் புறனடை.

**உரை:** மொழிப்பொருள்கள் என்பன அச்சொல்லப்பட்ட பொருள்கள் அப்பொருட்கட்கே என்றவாறாம். *(97)*

## உரிச்சொற்கு எழுத்துப் பிரிந்து இசையாமை

389. எழுத்துப்பிரிந் திசைத்தல் இவண்இயல் பின்றே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், புறனடை போல்வதொரு விதி கூறுதல் நுதலிற்று.

**உரை:** எழுத்துக்கள் பிரிந்திசைக்கப்படா, எ-று.

உரிச்சொல் என்றவை பிறிதிலக்கணமும் உடைய என்பது போந்ததாம். என்னை பிறிதிலக்கணமெனின்,

*''தம்மீறு திரிதலும் பிறிதவ ணிலையலும்''* (சூ. 246)

உடைய இவையும் என்பது.

யாதோவெனின், கடியென் கிளவி,

*''கடும்புனல்''* (குறுந். 103)

என்றாயிற்று.

நம்பு எனப்பட்டது,

*''நம்பி''*

என்றாயிற்று. பிறவும் அன்ன.

இனி,

*''உருகெழு தோற்றம்''*

என்புழி, உரு என்பதூஉம் கெழு என்பதூஉம் உரிச்சொல். *(98)*

## உரிச்சொற்களுக்குப் புறனடை

390. அன்ன பிறவும் கிளந்த அல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்

வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்து
ஓம்படை ஆணையின் கிளந்தவற் றியலான்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின்; இதுவும் ஒரு புறனடை.

**உரை:** அச் சொல்லிப்போந்த உரிச் சொற்களன்றி அவை போல்வன பிறவும் உலகத்துப் பலவாற்றானும் பரந்து வரும் உரிச்சொல் எல்லாவற் றையும் இசையும் குறிப்பும் பண்பும் என்னும் மூன்று வகைப்பட்ட பொருளையுஞ் சார்த்தி யுணர்த்துதற் குறை கூட்ட அம் மூன்று பொருண்மைக்கண்ணும் அவை யித்துணையே என்று வரையறுக்கும் வரையறை யின்மையின் முன்னர் உரிச்சொற்கு ஓதப்பட்ட இலக்கணத்திற் பிழையாமல் ஓம்படை யாணையிற் கிளந்தவற் றியலான் உணர்க, எ-று.

'ஓம்படையாணை' என்பது பாதுகாவல்பற்றிய ஆணை.

'அருமை, இருமை, தொன்று, கருமை, சேண்மை' என்னுந் தொடக்கத்தனவற்றைப் பிறநூலார்,

*''இருமை பெருமையுங் கருமையுஞ் செய்யும்''*

என்றும்,

*''தொன்றென் கிளவி தொழிற்பயில் வாகும்''*

என்றும் எடுத்தோதுப என்பதும் அது. (99)

## எட்டாவது உரியியல் முற்றிற்று.

# 9
# எச்சவியல்

### செய்யுட்குரிய சொற்கள்

391. இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே

என்பது சூத்திரம்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், எல்லா வோத்தினுள்ளும் எஞ்சிய பொருள்களை யுணர்த்தினமையின் எச்சவியல் என்னும் பெயர்த்து.

இனி, இத் தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இத் துணைப் பட்ட சொல்லினாற் செய்யுள் செய்யப்பெறும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இயற்சொல்லும் திரிசொல்லும் திசைச்சொல்லும் வடசொல் லும் என நான்கும் செய்யுள் செய்தற்குரிய சொல்லாதல் உடைய, எ-று.

இயற்சொல் என்பது தமிழ் வழங்கு நாட்டு விகாரமின்றித் தமி ழியற்கை யிலக்கணப்பாடு செவ்வனுடைய சொல்; அவை முன்னர் உணர்த்தும்.

திரிசொல் என்பது செய்யுளின்ப நோக்கி அவ்வியற் சொற்களை அவ்வாய்பாடு திரித்து வேறு வாய்பாட்ட ஆக்கும் செய்யுளுடைய சொல்.

என்னை,

*''சேரிச் சொல்லின் முட்டுற லஞ்சிச்*
*செய்யுட்குப் புலவர் செய்துகொண் டன்றே''*

என்பது *புறச் சூத்திரம்.

அவைதாம் வழக்கினுள் இன்மை காரணம் அமைதல் என்ப வாகலின், அவையும் முன்னர் உணர்த்தும்.

திசைச்சொல் என்பது செந்தமிழ்நாட்டை அடையும் புடையுங் கிடந்த திசைநாட்டார் வழங்குஞ் சொல்; அவையும் முன்னர் உணர்த்தும்.

வடசொல் என்பது ஆரியச் சொற்போலுஞ் சொல்; அவை முன்னர் விரித்துரைக்கும்.

பெயர், வினை, இடை, உரி எனப்பட்ட நான்கு சொல்லுமே இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனப்பட்டன; பிறவில்லை.

திரிசொல் செய்யுட்கே உரிய. ஒழிந்த மூன்றும் வழக்கிற்குரிய வாகிச் செய்யுட்கும் புகும் எ-று. *(1)*

* **(பாடம்)** ''பரிணாமச் சூத்திரம்''.

## இயற்சொல்லுக்கு இலக்கணம்

392. அவற்றுள்,
இயற்சொல் தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாஅமை இசைக்குஞ் சொல்லே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் நிறுத்த முறையானே இயற்சொல்லை யின்னவென்று இலக்கண முறைமையாற் பகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** மேற் சொல்லப்பட்ட நான்கு சொல்லுள்ளும் இயற்சொல் என்று கூறப்படுவன செந்தமிழ் நிலத்தார் வழங்கும் வழக்கத்திற்குப் பொருந்தித் தத்தம் பொருளின் வழாமல் நடக்குஞ் சொல், எ-று.

அவை: சோறு, கூழ், பால், பாளிதம் என்னுந் தொடக்கத்தன.

செந்தமிழ் நிலம் என்பது வையையாற்றின் வடக்கு, மருத யாற்றின் தெற்கு, கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு.

மற்று, இவற்றைத் தம் பொருள் வழாஅமை யிசைக்கும் என்பது என்னை? ஒழிந்தன தம் பொருள் வழுவுமோ எனின், அற்றன்று, நாயை ஞமலி என்ப பூழி நாட்டார், என்றக்கால் அச் சொல் எல்லா நாட்டாரும் பட்டாங்குணரார்; நாய் என்பதனையாயின் எவ்வெத் திசை நாட்டாரும் உணர்ப என்பது. *(2)*

## திரிசொல்லுக்கு இலக்கணம்

393. ஒருபொருள் குறித்த வேறுசொல் ஆகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், முறையானே திரிசொல் இவை என்று இலக்கணத்தாற் பகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** ஒரு பொருளைக் கருதிப் பலசொல்லான் வருதலும், பலபொருளைக் கருதி ஒருசொல்லான் வருதலும் என இருகூற்றன வாகும் திரிசொற்கள், எ-று.

ஒரு பொருளைக் குறித்த வேறு சொல்லாகி வருவன, அடுக்கல், பிறங்கல், விண்டு, ஓங்கல் என இவை.

வேறு பொருள் குறித்த ஒருசொல், உந்தி என்பது; ஆற்றிடைக் குறையும், கொப்பூழும், தேர்த்தட்டும், யாழகத்ததோர் உறுப்புமான ஞெழிலும் என இவையெல்லாம் விளங்கி நிற்கும்.

இனி, கிள்ளை, மஞ்ஞை என்னுந் தொடக்கத்தன ஒருகூறு நிற்ப ஒருகூறு திரிந்தன; உந்தி அடுக்கல் என்னுந் தொடக்கத்தன முழுவதூஉம் வேறுபடத் திரிந்தன. பிறவும் அன்ன. *(3)*

## திசைச்சொல்லுக்கு இலக்கணம்

394. செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நிறுத்த முறையானே திசைச் சொல் இவை என இலக்கணத்தான் பகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** செந்தமிழ் நாட்டை அடையும் புடையுங்கிடந்த பன்னிரு நிலத்தார், தங்குறிப்பினையே இலக்கணமாகவுடைய, திசைச்சொற் கிளவிகள், எ-று.

**(வ-று.)**

*தாயைத் தள்ளை என்ப குடநாட்டார்.*
*நாயை ஞமலி என்ப பூழிநாட்டார்.*

*பிறவும் அன்ன.*

*செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலமாவன:*

| | | | |
|---|---|---|---|
| *1.* | *பொதுங்கர் நாடு* | *7.* | *சீதநாடு* |
| *2.* | *தென்பாண்டி நாடு* | *8.* | *பூழிநாடு* |
| *3.* | *ஒளிநாடு* | *9.* | *மலைநாடு* |
| *4.* | *குட்டநாடு* | *10.* | *அருவாநாடு* |
| *5.* | *பன்றிநாடு* | *11.* | *அருவாவடதலைநாடு* |
| *6.* | *கற்காநாடு* | *12.* | *குடநாடு* |

*என இவை.*

*'தங்குறிப்பினவே' என்றது அவை ஒருவாய்பாட்டவேயல்ல; தத்தம் மரபினும் பின் வேறு வேறு வாய்பாட்ட என்றற்கும், அவர் எவ்வாறு குறித்து வழங்கினாரோ அஃதே அவற்றிற்கு இலக்கணம் என்றற்கும் என்பது.* *(4)*

## வடசொல்லுக்கு இலக்கணம்

395. வடசொற் கிளவி வடஎழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்ஆ கும்மே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின் நிறுத்த முறையானே வடசொல் இவை என்றவற்றிற்றை இலக்கணத்தான் அறிய உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** வடசொற் கிளவி என்று சொல்லப்படுவன ஆரியத்திற்கே உரிய எழுத்தினை ஒரீஇ இருதிறத்தார்க்கும் பொதுவாய எழுத்தினை யுறுப்பாக வுடையவாகுஞ் சொல், எ-று.

அவை, உலகம் குங்குமம் நற்குணம் என்னுந் தொடக்கத்தன.

குங்குமம் என்றவிடத்து இருசாரார்க்கும் பொது எழுத்தினான் வருதலுடைமையும் ஆரியத்தானும் தமிழானும் ஒருபொருட்கே பெயராகி வழங்கி வருதலுடைமையும் அறிக. *(5)*

## மேலதற்குப் புறனடை

396. சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் வட சொற்கிளவி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இருசார் எழுத்திற்கும் ஒத்த வழக்கினான் வாராது சிதைந்து வந்தனவாயினும் பொருந்தி வந்தன வரையப்படா வடசொல் லாதற்கு என்பது.

அவை,

*''நிதியந் துஞ்சும்''* (அகம். 227)

எனவும்,

*''தசநான் கெய்திய பணைமருள் நோன்றாள்''* (நெடுநல். 11)

எனவும் வரும். *(6)*

## செய்யுள் விகாரம்

397. அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை
வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலுந் தொகுக்கும்வழித் தொகுத்தலும்
நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், அந் நான்கு வகைச் சொல் லானும் செய்யுட் செய்யுமிடத்து இவ்வறுவகைப்பட்ட விகாரமும் படச் செய்யுட் செய்யப்பெறுப என்பது உணர்த்தியவாறு.

**உரை:** நாட்டல் வலிய என்றது - ஒருவன் நாட்டுதல் வன்மை யிலக்கணத்தினை அவை உடைய, எ-று.

வலிக்கும்வழி வலித்தல்:

குறுந்தாட் கோழி என்பதனைக்

*''குறுத்தாட் கோழி''*

என வலித்தல்.

*மெலிக்கும்வழி மெலித்தல்:*

*தட்டை எனற்பாலதனை,*

*''தண்டை''*

*என மெலித்தல்.*

*விரிக்கும்வழி விரித்தல்:*

*தண்டுறைவன் எனற்பாலதனைத்*

*''தண்ணந் துறைவன்''* (குறுந். 296)

*என விரித்தல்.*

*தொகுக்கும்வழித் தொகுத்தல்:*

*மழவரை யோட்டிய எனற்பாலதனை,*

*''மழவரோட்டிய''* (அகம். 1)

*எனத் தொகுத்தல்.*

*நீட்டும்வழி நீட்டல்:*

*பச்சிலை எனற்பாலதனை,*

*''பாசிலை''* (புறம். 54)

*என நீட்டல்.*

*குறுக்கும்வழிக் குறுக்கல்:*

*உண்டார்ந்து என்பதனை,*

*''உண்டருந்து''*

*எனக் குறுக்கல்.*

*பத்து வகை விகாரத்துள் அறுவகை விகாரம் ஈண்டுக் கூறினார். இனமில்லதனை இனமுள்ளது போலச் சொல்லுதலும், இனமுள்ள தனை இனமில்லது போலச் சொல்லுதலும்,*

*''இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை''* (தொல். கிளவி. 18)

*என்பதனுட் சொல்லிப்போந்தாம்.*

*இனி, இடைச்சொற் போக்கல், புடைச்சொற் புகுத்தல் என இரண்டும்,*

*''நிரனிறை சுண்ண மடிமறி மொழிமாற்று''* (தொல். எச்ச. 8)

*எனப்பட்டு அடங்கும்.* *(7)*

## பொருள்கோள்வகை

398. நிரல்நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
அவைநான் கென்ப மொழிபுணர் இயல்பே.

என்பது, நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என நான்கு வகையான் மொழிகள் தம்முள் புணருஞ் செய்யுளகத்து என்பது உணர்த்தியவாறு.

அவையாமாறு அவற்றவற்றுச் சிறப்புச் சூத்திரங்களான் அறிக. (8)

## நிரனிறைப் பொருள்கோள்

399. அவற்றுள்,
நிரல்நிறை தானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நிரனிறைப் பொருள்கோள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இச் சொல்லப்பட்டவற்றுள் நிரனிறையென்று சொல்லப் படுவது யாதோவெனின், வினையினானும் பெயரினானும் ஆராயத் தோன்றிச் சொல் வேறு வேறு நிற்பப் பொருள் வேறு வேறு நின்று உணரப்படும், எ-று.

அவற்றுள் வினையிற் றோன்றியது:

*''உடலு முடைந்தோடு மூழ்மலரும் பார்க்குங்*
*கடலிருளாம் பல்பாம் பென்னக் கெடலருஞ்சீர்த்*
*திங்க டிருமுகமாய்ச் சேர்ந்து''*

என்பது, உடலும் உடைந்தோடும் பார்க்கும் மலரும் என்ற வினைச் சொற்கள் தம்முள் பொருளியைபு இன்றி வேறு நின்றன. இனிக் கடல் இருள் ஆம்பல் பாம்பு என நின்ற பெயர்ச் சொல்லும் அவ்வாறே நின்றமை யறிக.

அவை தம்முள் பொருளியையுமாறு:

உடலுங் கடல், உடைந்தோடும் இருள், மலரும் ஆம்பல், பார்க்கும் பாம்பு எனக் கூட்டுக.

இனிப் பெயர் நிரனிறை வருமாறு:

*''கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி''*

என வரும்.

இனி, அவை பொருள் கொள்ளுங்கால், கொடி நுசுப்பு, குவளை உண்கண், கொட்டை மேனி என வரும்.

'நினையத் தோன்றும்' என்றதனான், மொழிமாற்றுப்போல நிற்கும் நிரனிறையும் உள என்பது.

*''களிறுங் கந்தும் போல நளிகடற்*
*கூம்புங் கலனுந் தோன்றும்''*

என வரும். களிறும் கந்தும் முறையானே கலனும் கூம்பும் எனற்பால; அவ்வாறு கூறாது, 'கூம்பும் கலனும்' என்றமையான், மயக்க நிரனிறை யாயிற்று என்பது. *(9)*

## சுண்ணப் பொருள்கோள்

400. சுண்ணம் தானே
பட்டாங் கமைந்த ஈரடி எண்சீர்
ஒட்டுவழி அறிந்து துணித்தனர் இயற்றல்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நிறுத்த முறையானே சுண்ணம் என்னும் பொருளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** சுண்ணம் எனப்படுவது இரண்டடியான் எட்டுச் சீராற் பொருந்துமாறு அறிந்து துணித்து இயற்ற வரும், எ-று.

**(வ-று.)**

*''சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய*
*யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப*
*கானக நாடன் சுனை''*

என வரும்.

இதனை ஒட்டுமாறு:

மொழிகளை, 'சுரை மிதப்ப, அம்மி யாழ, யானைக்கு நிலை, முயற்கு நீத்து' எனத் துணித்து இயற்றுக.

'பட்டாங் கமைந்த' என்பது, இயைபுடைய செய்யுள் நடைக் கொத்த அடியாகல் வேண்டும் என்றற்கு என்பது. *(10)*

## அடிமறிப் பொருள்கோள்

401. அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், அடிமறிப் பொருள்கோள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** அடிமறி என்று சொல்லப்படுவது சீர் கிடந்துழியே கிடப்ப, அடிகள் முதலும் இடையும் கடையும் படச் சொல்லிக் கண்டுகொள்க. *(11)*

## மேலதற்குப் புறனடை

402. பொருள்தெரி மருங்கின்
ஈற்றடி இறுசீர் எருத்துவயின் திரியுந்
தோற்றமும் வரையார் அடிமறி யான.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

**உரை:** *அடிமறிப் பொருள்கோள், ஆராயுமிடத்து, ஈற்றடியின் இறுதிச்சீர் எருத்தத்துச் சீராய்க் கிடந்தும் வரையப்படாது. எ-று.*

**(வ-று.)**

*''சூரல் பம்பிய சிறுகான் யாறே*
*சூரர மகளிர் ஆரணங் கினரே*
*சார னாட நீவர லாறே*
*வார லெனினே யானஞ் சுவலே''*

*என்புழி, அஞ்சுவல் யான் என இறுதிச் சீர் எருத்துவயிற் றிரிந்தவாறு கண்டுகொள்க. இவ்வாறு எங்கும் மாற்றுக.* *(12)*

## மொழிமாற்றுப் பொருள்கோள்

403. மொழிமாற் றியற்கை
சொல்நிலை மாற்றிப் பொருளெதி ரியைய
முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஒழிந்து நின்ற மொழி மாற்றுப் பொருள்கோள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *மொழிமாற்றினது தன்மையாவது, நின்ற சொல்லை மொழிமாற்றி, முன்னும் பின்னும் கொள்ளுமிடம் அறிந்து கொள்க, எ-று.*

**(வ-று.)**

*''குன்றத்து மேல குவளை குளத்துள*
*செங்கோடு வேரி மலர்''*

*என வரும். இதனைக் குவளை குளத்துள, செங்கோடு வேரிமலர் குன்றத்துமேல என மொழிமாற்றுக.*

*மற்றுச் சுண்ணத்தோடு இதனிடை வேற்றுமை யென்னை யெனின், சுண்ணம் ஈரடி எண்சீருள் அவ்வாறு செய்யப்படும்; இதற்கு அன்னதொரு வரையறை யில்லை என்றவாறாம்.* *(13)*

## கிளை நுதற் பெயர்கள் பிரிக்கப்படா

404. தநநு எஎனும் அவைமுதல் ஆகிய
கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஐயமறுத்தல் நுதலிற்று.*

**உரை:** *த - ந - நு - எ எனச் சொல்லப்பட்ட நான்கு எழுத்தினையும் முதலாகவும், ன - ள - ர என்னும் மூன்று எழுத்தினையும் ஈறாகவும் உடையவாகிய தொடர்ச்சிக்கிழமை கருதிவரும் பெயரவற்றைப் பிரித்து இடையறுத்து உணரலாங் கொல்லோ எனின், அவை பிரிப்பப் பிரியா, நின்றவாற்றானே நின்று பொருள்படினன்றி என்பது.*

**(வ-று.)** *தமன் - தமள் - தமர்; நமன் - நமள் - நமர்; நுமன் - நுமள் - நுமர்; எமன் - எமள் - எமர் என வரும்.*

உம்மையாற் பிறவும் பிரிப்பப் பிரியாதன உள; அவை, தாய் ஞாய் யாய் என வரும். வில்லி வாளி எனவும் பிறவும் அவ்வாறு வருவன பிரிப்பப் பிரியா என்று கொள்க. இவை ஒட்டுச் சொற் பொருளொடு நிற்பன என்றும், இவற்றை ஒருசொல் அன்று என்றும் மயங்கற்க. ஒரு சொல்லே என்பது கருத்து. (14)

### ஒருசொல் அடுக்கு

405. இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்று
அவைமூன் றென்ப ஒருசொல் அடுக்கே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் வழக்கிற்கும் செய்யுட்கும் பொதுவாயதொரு முடிபு கூறுதல் நுதலிற்று.

**உரை:** ஒருசொல் பலகால் அடுக்கி மூன்று காரணமும்படச் சொல்லப்படும், எ-று.

இசைநிறை எனவே, அது செய்யுள் இலக்கணம் என்பது போந்தது.

**(வ-று.)**

*''ஏஎ எஎ வம்பன் மொழிந்தனள்''*

என வரும்.

ஒழிந்தன இரண்டும் வழக்கினுள் அடுத்து வரும்.

*அசைநிலை:*

*''ஒக்குமொக்கும்''*

எனவும்,

*''மற்றோ மற்றோ''*

எனவும் வரும்.

**பொருளொடு புணர்தல்:**

பாம்பு பாம்பு, கள்ளர் கள்ளர், படை படை, தீத்தீ எனவரும். அவற்றை இணைத்தா லடுக்கிவரும் என்பதனை முன்னர்ச் சொல்லும். (15)

### தொகைமொழியின் வகை

406. வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்று
அவ்வா றென்ப தொகைமொழி நிலையே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், தொகைச் சொற்களைப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

பெயரும் முறையும் தொகையும் அதுவே. வேற்றுமைத் தொகையை முன்வைத்தார் அது பகுதிப் படுமாகலான்; அன்மொழித் தொகையைப் பின்வைத்தார் அஃது எல்லாவற்றையும் பற்றிப் பிறக்குமாகலான். (16)

## வேற்றுமைத் தொகை

407. அவற்றுள்,
வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நிறுத்த முறையானே வேற்றுமைத் தொகையது இலக்கணம் கூறுதல் நுதலிற்று.*

**உரை:** வேற்றுமையுருபு தொக்குநின்ற தொகைச் சொற்கள் அவ்வுருபு இருந்தாங்கே பொருள்படும், எ-று.

*அவையாவன:*

*நிலங் கடந்தான், தாய் மூவர், கருப்பு வேலி, வரை வீழருவி, யானைக்கோடு, குன்றக் கூகை என இவை.*

*இவற்றையும் அவ் வுருபு விரிந்தாங்கே பொருள் படுமாறு அறிந்து கொள்க. அத்தொகுதிக்கண் உருபுகள் பலவகையும் புலப்படாதே நின்றன என்ப ஒரு சாரார்; ஒரு சாரார் இல்லை என்ப. (17)*

## உவமத் தொகை

408. உவமத் தொகையே உவம இயல.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நிறுத்த முறையானே உவமத் தொகை உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** உவமத் தொகைக்கண் அவ் வுருபு தொக்கு நின்றாலும் அவ் வுருபு விரிந்தாங்கே பொருள்படும், எ-று.

*உவமம் தொகுங்கால் வினை, பயன், மெய், உரு என்ற நான்கும் பற்றித் தொகும்.*

*வினையுவமம்: புலிப் பாய்த்துள் என்பது.*
*பயனுவமம்: மழை வண்கை என்பது.*
*மெய்யுவமம்: துடி நடு என்பது.*
*உருவுவமம்: முத்த முறுவல் என்பது.*

*'முத்துப் போலும் முறுவல்' என்று உவம உருபு விரிந்து நின்றாங்கே அவ்வுருபு தொக்கநிலைமைக் கண்ணும் பொருள் ஒக்கும் என்பது.*

*மற்று, இவ் வுவமத்தொகை யென்று காட்டின வெல்லாம் வேற்றுமை யுருபுபற்றி யன்றி வாரா.*

*என்னை,*

*''துடி நடு''*

*என்றவிடத்து, துடியை ஒக்கும் நடு, துடி நடு என்று இரண்டனுருபு பற்றி வருமாகலின், உவமத் தொகை என்றது என்னையெனின், அதற்கு ஒரு சாரார் சொல்லுவது:*

துடி நடு என்புழி, உவமவுருபும் வேற்றுமையுருபும் என இரண்டும் தொக்கவேனும், துடி போலும் நடு எனத் தொகைக்கு உவமப் பொருளே சிறப்புடைத்தாகலின் அது தொகை யென்பது; ஐகார வுருபு அவ்வுவம வுருபினை நோக்கி வந்தது என்ப; என்னை, துடியை நடுவாகக் கொள்ளாதாகலின் என்பது. இனி, அதற்கு மெய்யுரை வல்லார்வாய்க் கேட்டுணர்க். *(18)*

## வினைத் தொகை

409. வினையின் தொகுதி காலத் தியலும்.

**உரை:** வினைச்சொல் தொகுங்கால், காலந்தோன்றத் தொகும், எ-று.

'காலத்தியலும்' என்றது எக்காலும் காலமுடையவாய் இயலும் எ-று.

**(வ-று.)** கொல் யானை என்பது கொன்ற யானை; கொல் யானை - கொல்லாநின்ற யானை; கொல் யானை - கொல்லும் யானை என மூன்று காலத்திற்கும் அதுவே வாய்பாடு; பிறிதில்லை.

மற்றுக் கொல்யானை என்றானேல், நிகழ்காலமும் அறியலாம்; கொல்லிய ஓடுவதனைக் கண்டு, 'கொல் யானை' என்றானேல், எதிர்காலம் என்பது அறியலாம், பிறவும் அன்ன. *(19)*

## பண்புத் தொகை

410. வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையினென்
றன்ன பிறவும் அதன்குணம் நுதலி
இன்ன திதுவென வரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே.

**உரை:** பண்பு தொகுமிடத்து இந் நான்கும்பற்றித் தொகும் என்பது கருத்து.

வண்ணம்பற்றித் தொக்கது:

கருங் குதிரை என்பது; இது விரியுங்காலை, கரியது குதிரை என விரியும்.

கரியதும் அதுவே, குதிரையும் அதுவே; கருமையுடைமையிற் குதிரை கரியது எனப்பட்டது. இன்னது இது என நிற்றல் அதற்கு இலக்கணம்.

இன்னது என்பது கரியது என்றல்; இது என்பது குதிரை என்றல்.

இனி, வடிவுபற்றித் தொகுத்தல்:

வட்டப் பலகை என்பது; அது விரியுங்கால், வட்டமாகியது பலகை என விரியும். ஆண்டும் இன்னது இது என்னுங் குணம் நுதலி நிற்கும்.

இனி, அளவுபற்றித் தொக்கது:

குறுங்கோல் என்பது; அது விரியுங்கால், குறியது கோல் என விரியும். ஆண்டும் இன்னது இது என நிற்கும்.

இனிச் சுவைபற்றித் தொக்கது:

தீங் கரும்பு என்பது; அது விரியுங்கால், தீவியது கரும்பு என விரியும். ஆண்டும் இன்னது இது என்னும் குணம் நுதலிற்று.

இனி, 'அன்ன பிறவும்' என்றதனான், தண்ணீர், நறும்பூ, நன்னுதல், பருநூல் மெல்லிலை, நல்லாடை என எத்துணையுளமன் அப்பொருள் குணம்; அக்குணம் நுதலி இன்னது இது என வருமவை யெல்லாம் பண்புத் தொகையே யென்று கொள்க என்பதாம்.

இனி, 'என்ன கிளவியும்' என்றதனான், கேழற்பன்றி, வேழக் கரும்பு, சகரக்கிளவி, அகரமுதல், மாமரம் என இவையுங் கொள்க. இவை ஒரு பொருட்கண் இருபெயர் பட வரும். இவற்றுக்கண்ணும் இன்னது இது என நிற்றல் ஒக்கும். கேழல் எனப்பட்டதுவும் அதுவே, பன்றியும் அதுவே. பிறவும் அன்ன.

மற்று, வேற்றுமைத் தொகையும் உவமத் தொகையும், வேற்றுமை யுருபும் உவம வுருபும் தொக்கமையான் தொகை யென்றல் அமையும்; ஒழிந்த வினைத்தொகையும், பண்புத் தொகையும் அவ்வாறு தொக்கு நின்றிலவால் எனின், அவ்வாறு தொகுதலே யன்று தொகையாவது.

கொல் யானை என்புழிக் கொல்லும் என்னும் வினைச்சொல் ஒருகூறு நிற்ப, ஒருகூறு தொக்கமையின் வினைத்தொகை ஆயிற்று.

கருங் குதிரை என்புழிக் கரியது என்னும் பண்புப் பெயர் ஒருகூறு நிற்ப ஒருகூறு தொக்கமையின் பண்புத் தொகை ஆயிற்று. (20)

## உம்மைத் தொகை

411. இருபெயர் பலபெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
எண்ணின் பெயரோ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே யும்மைத் தொகையே.

என்பது, இவ்வாறிடத்தும் உம்மை தொகற்பாலது என்று உணர்த்திய வாறு.

இருபெயர்க்கண் தொக்கது:

உவாப் பதினான்கு என்பது; அது விரியுங்கால், உவாவும் பதினான்கும் என விரியும்.

பலபெயர்க்கண் தொக்கது:

புலி விற் கெண்டை என்பது; அது விரியுங்கால், புலியும் வில்லும் கெண்டையும் என விரியும்.

அளவுபற்றித் தொக்கது:

தூணிப் பதக்கு என்பது; அது விரியுங்கால், தூணியும் பதக்கும் என விரியும்.

எண்ணியற்பெயர்பற்றித் தொக்கது:

பதினைவர் என்பது; அது விரியுங்கால், பதின்மரும் ஐவரும் என விரியும்.

நிறைப்பெயர்பற்றித் தொக்கது:

தொடியரை என்பது; அது விரியுங்கால், தொடியும் அரையும் என விரியும்.

எண்ணின் பெயர்பற்றித் தொக்கது:

பதினொன்று என்பது; அது, பத்தும் ஒன்றும் என விரியும்.

மற்றும், 'பலபெயர்' என அமையாதே, 'இருபெயர்' என வேண்டியது என்னை, இரண்டையும் பல என்பவால் எனின், அற்றன்று; இரண்டனையும் பன்மையென்று வேண்டான் இவ்வாசிரியன் என்பது. ஆயின், மேல்,

''ஒன்றறி சொல்லே பலவறி சொல்'' (தொல். கிளவி. 3)

என்புழி, இரண்டையும் பல என்று வேண்டினானாலெனின், அது விகாரம்; என்னை, இரண்டும் இரண்டிறந்த பன்மையும், 'வந்தன, போயின' என, ஒரு பன்மைச் சொல்லே யேற்குமாகலின், ஆண்டு இரண்டனைப் பலவற்றுள் அடக்கிக் கூறினார் என்பது. *(21)*

## அன்மொழித் தொகை

412. பண்புதொக வரூஉங் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் நிறுத்த முறையானே ஒழிந்துநின்ற அன்மொழித்தொகை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** அக் கூறப்பட்ட மூன்று தொகைச் சொல்லீற்றுக் கண்ணே நின்று நடக்கும் அன்மொழித்தொகை, எ-று.

பண்புத்தொகைப் புறத்துப் பிறந்தது.

வெள்ளாடை என்பது; அதனைப் படுத்தலோசையாற் சொல்ல, வெண்மைமேலும் ஆடைமேலுங் கிடவாது, அவ்வாடை யுடுத்தாள் மேல் கிடக்கும் என்பது; அந்நிறைமொழி யோசையன்றிப் பிறிதொரு மொழி யோசைபட்டுப் பொருள்கொள்ளு மாகலான், அம் மொழி அன்மொழி யாயிற்று என்பது.

அன்மொழித் தொகை யாயக்காலும் வெளியதாடை என்றே விரியும்; பிறிதில்லை.

உம்மைத்தொகைபற்றிப் பிறந்தது.

தகர ஞாழல் என்பது; அது விரியுங்கால், தகரமும், ஞாழலும் என விரியும். அன்னதன் றொகைக்கண் ஓசை வேறுபடச் சொல்லத் தகரத்தின் மேலும் ஞாழலின் மேலும் கிடவாது, அவை யுடையாள் மேல் கிடக்கும்.

இனி, வேற்றுமைத் தொகை பற்றிப் பிறந்தது:

பொற்றாலி என்பது; அது விரியுங்கால், பொன்னானாய தாலி, பொற்றாலி என்பதாம். பிறிதானும் விரியும்; பின்னர், அத்தொகை பொன்மேலும் தாலிமேலும் கிடவாது. பொற்றாலியுடையாள்மேல் நிற்கும், ஓசை வேறுபாட்டான் என்பது. இம் மூன்று தொகையும் பற்றிப் பிறத்தலின் ஒரு மிகுதிக்குறை யில்லை, ஒக்கும் என்றவாறு.

மற்று தொகையதிகாரத்தின் முன் வைக்கப்பட்டதூஉம் சிறப் புடையதூஉம் வேற்றுமைத் தொகையாதலின், ஈண்டு அதனை முற் கூறாது, பண்புத்தொகை முற்கூறியது என்னை யென்னின், அதனாற் பிறவும் உள கொள்ளப்படுவன; அவை யாவையோ எனின், ஒழிந்துநின்ற உவமைத்தொகையும் வினைத்தொகையும் பற்றிப் பிறக்கும் அன்மொழித் தொகை என்பது.

உவமைத்தொகை பற்றிப் பிறந்தது: அறற்கூந்தல் என்பது; அது விரியுங்கால், அறல்போலுங் கூந்தல் என விரியும். அது தொக்குழி அறல் மேலும் கூந்தல் மேலும் கிடவாது அறற் கூந்தல் உடையாள் மேல் நிற்கும்.

வினைத்தொகை பற்றிப் பிறந்தது: திரிதாடி என்பது; அது விரியுங் கால், திரித்த தாடி என விரியும்; அது தொக்குழி திரிவின்மேலும் தாடியின் மேலும் கிடவாது, திரி தாடியுடையான்மேல் நிற்கும். இவை இரண்டும் வழக்குப் பயிற்சி அவைபோல அக்காலத்து இன்மையின், இலேசுபற்றி யெடுத்துக்கொண்டார் என்பது. (22)

### தொகைச்சொற்களில் பொருள் சிறக்குமிடம்

413. அவைதாம்,
முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்
அம்மொழி நிலையா தன்மொழி நிலையலும்
அந்நான் கென்ப பொருள்நிலை மரபே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இதுவும் அத்தொகைக் கண்ணே கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** தொகுவன இருவகை மொழிகளான், அவ்விருவகை மொழியும் இருபொருளின்கண் தொக்கவிடத்து அவற்றைச் சொல்லு வான்,

அத்தொகைக்கண் முன்னதன் பொருளுணர்தலுற்றுச் சொல்லு தல், பின்னதன் பொருளுணர்தலுற்றுச் சொல்லுதல், இரண்டுடன் பொரு ளுணர்தலுற்றுச் சொல்லுதல், இரண்டன் மேலும் நில்லாது பிறிதொரு பொருளுணர்தலுற்றுச் சொல்லுதல் என நால்வகை யிலக்கணத்தாற் பொருளுணர நிற்கும், எ-று.

அவற்றுள், முன்மொழிப் பொருளுணர நின்றது, ‘வேங்கைப்பூ’ என்பது.

முன்மொழி பின்மொழி யாதல், இடமும் காலமும் என இருவகை யான் உணரப்படும். அவற்றுள் இடத்தான் முன்மொழிப் பொருளாயிற்று; காலவகை நோக்கிப் பின்மொழிப் பொருளாம்.

வேங்கை என்பதும் பொருள் இல்லாததன்றுமன்; அப்பொருளு டன் அறியலுற்றது பூவினை, அதனைச் சிறப்பிப்பான் வந்தது வேங்கை என்னுஞ் சொல் என்பது.

இருமொழிப் பொருள் உணர நின்றது உவாப் பதினான்கு என்பது. பிறவும் உம்மைத் தொகையான் வருவனவெல்லாம் இருமொழிப் பொருள்பட நிற்கும் என உணர்க.

அம் மொழிநிலையாது அன்மொழிப் பொருட்பட நின்றன, முன் அன்மொழித் தொகைப்படக் காட்டினவெல்லாம் என்பது.

அவை, வெள்ளாடை என்னுந் தொடக்கத்தன.

மற்று இன்னுழிப் பொருள்நிற்கும் எனின், ஒழிந்துழி யெல்லாம் பொருளில்லையாமாகாதே, ஆகவே,

‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே’ (தொல். பெயரி. 1) என்பதனொடு மலைக்கும் பிற எனின் மலையாது; என்னை, மற்றை யுழிப் பொருள் இல்லை என்பது அன்று; அவன் உணர்தலுறவு நோக்கி இது சொல்லினார் என்பது. (23)

### தொகைச்சொற்கள் ஒருசொல் தன்மைய

414. எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இதுவும் ஒட்டுச் சொற் கண்ணே கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** அறுவகைத் தொகைச்சொல்லும் எழுவாய் வேற்றுமை யியல்பாம் என்று ஈண்டு எய்துவித்தார், எ-று.

மற்று, ஒட்டுச் சொற்களை, ‘ஒருசொல் நடையன’ எனப் போந்த இலேசு என்னை யெனின், அவை பல சொன்மைப்படப் பொருளிசையா; ஒருசொல் விழுக்காடு படத் திரண்டிசைக்கும் என்பது கருத்து.

அதனை, யானைக்கோடு, வேங்கைப்பூ என்பனவற்றான் அறிக. கற்சுனை, குவளையிதழ் என்பதும் அது. (24)

### உயர்திணை உம்மைத்தொகை முடிபு

415. உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே
பலர்சொல் நடைத்தென மொழிமனார் புலவர்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், உம்மைத்தொகையுள் ஒருசாரனவற்றுக்கண் படுவதொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** உயர்திணை மருங்கின் உம்மைத் தொகைச் சொல்லுக்கு இறுதி பலரைச் சொல்லுஞ் சொன்னடைத்தாக என்று சொல்லுப ஆசிரியர், எ-று.

**(வ-று.)** கபிலபரணர் என வரும்.

இவ்வாறு அத் தொகைச்சொல் லிறுதி பலர் சொன்னடைத் தன்றிக் கபிலன் பரணன் என னகரவீறாய் நிற்பின், அது, 'வந்தான், போயினான்' என்னும் ஒருமை வினையேற்பினல்லது, 'வந்தார், போயினார்' என்னும் பன்மைவினை ஏலாது.

இனிப் 'பலர் சொன்னடைத்து' எனவே அவ்விருவர் மேலும் வினையேற்கும்; அதனான் இது சொல்லினான் என்பது.

மற்றுத் தொகைச் சொற்கண் தொகுவது தொக்கு நின்றக்கால், தம்மீறு கருதின பொருட்கேற்கும் முடிவினை நின்றாங்கே நின்று கொள்ளும்; இதுவாயின் இறுதி நின்றாங்கே நிற்பப் பொருட்கேற்ப முடிபு ஏலாமையான், இறுதிபோதல் வேண்டிற்று என்பது. (25)

### குறிப்பு மொழியின் இலக்கணம்

416. வாரா மரபின வரக்கூ றுதலும்
என்னா மரபின எனக்கூ றுதலும்
அன்னவை எல்லாம் அவற்றவற் றியலான்
இன்ன என்னுங் குறிப்புரை ஆகும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் தொகையதிகாரங் கூறினான்; அவையெல்லாம் விட்டு, இனி ஒரு சொன்மரபு வழூஉக் காத்தல் நுதலிற்று.

**உரை:** இயங்காதவற்றை இயங்குவது போலச் சொல்லுதலும், சொன்னிகழாதவற்றைச் சொன்னிகழ்த்துவன போலச் சொல்லுதலும், அவ்வப் பொருளியல்பு பற்றி அவை அன்ன செய்கை யுடையவற்றைப் போலச் சொல்லலுற்றான்; அது மனக் குறிப்பினான் ஆய்ந்து, அவற்றது உரை அன்று என்பது கொள்க.

'அன்னவை எல்லாம்' என்பது, அவ் வாராமரபினவும் பல்வகைய, ஒரோவொன்றேயல்ல என்றற்கு என்பது.

வாராமரபின வரக்கூறுதல் வருமாறு:

மலை வந்து கிடந்தது, நெறி வந்து கிடந்தது என வரும்; மலைக்கும் நெறிக்கும் அன்ன செய்கை யின்றாகலின் என்பது.

இனி, என்னா மரபின எனக்கூறுதல் வருமாறு:

நிலம் வல்லென்றது, நீர் தண்ணென்றது, இலை பச்சென்றது எனவும், 'செங்கானாராய்' எனவும் வரும்.

விலங்கும் மரனும் புள்ளும் உள்ள நோய் உற்றார்க்கு மனக் குறைக்கு மறுதலை மாற்றம் கூறுவனபோலுங் குறிப்பினவாகப் புலப்படு தலான் இது சொல்லப்பட்டது என்பது. (26)

## இசைநிறை விரைசொல் அடுக்கிற்கு வரையறை

417. இசைப்படு பொருளே நான்குவரம் பாகும்.

418. விரைசொல் அடுக்கே மூன்றுவரம் பாகும்.

இவை இரண்டு சூத்திரமும் உரையியைபு நோக்கி யுடனெழுதப் பட்டன.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல், இசைநிறை அசைநிலை, பொருளொடு புணர்தல் என்றவை மூன்றென்ப ஒரு சொல் அடுக்கு என்புழி; மூன்று வகையான் அடுக்கிவரப்பெறும் என்றவை எல்லையின்மையான், அவை யித்துணை யென்னும் வரையறை கூறினான் ஈண்டு என்பது.

**உரை:** அம் மூன்றனுள் இசைநிறைத்தற்கு அடுக்கப்படும் பொருள் நான்கு வரம்பாகும், எ-று.

இரண்டும் அடுக்கும், மூன்றும் அடுக்கும், நான்கும் அடுக்கும், நான்கிறந்து அடுக்கா என்பது கருத்து.

அது,

''பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ''

என வரும்.

இது, நான்கு அடுக்கி வந்தது. இசைநிறையெனவே, அது செய்யுட் கென்பது முடிந்தது.

இனி, அம் மூன்றுடன் பொருளொடு புணர்தலை விரை சொல்லடுக்கு என்பது; அதுதான் மூன்று வரம்பு இறவாது என்பது. 'பாம்பு, பாம்பு, பாம்பு', 'தீத் தீத் தீ' என வரும்;

மற்று, அசைநிலை யினைத்தால் அடுக்கும் என்பது எற்றாற் பெறுதும் எனின், மூன்றடுக்கும் பொருளொடு புணர்தலை முற்கூறற் பாலார், என்னை மூன்று நான்கு என்னும் எண்ணுமுறைமை நோக்கி; அவ்வாறு சொல்லாது மயக்கங் கூறியவதனான், மூன்றின் கீழ்க்கு முதல் இரண்டல்லது இல்லையன்றே; அவ்விரண்டெண்ணினான் அடுக்கப் படும் அசைநிலை என்பது கொள்க என்றவாறு.

**(வ-று.)** *'மற்றோ மற்றோ' 'அஃதே அஃதே' என வரும்.*

*இரண்டிறவாது என்பதனை இலேசினாற் கொண்டான், இடைச் சொல்லடுக்காதலின் என்பது. ஒழிந்த நால்வகைச் சொல்லும் அடுக்கும்.* *(27-28)*

### அசைநிலை அடுக்கு

419. கண்டீர் என்றா கொண்டீர் என்றா
சென்ற தென்றா போயிற் றென்றா
அன்றி அனைத்தும் வினாவொடு சிவணி
நின்றவழி அசைக்குங் கிளவி என்ப.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது வினையியலுள் ஒழிந்து நின்ற ஒழிபு கட்டுரை யெடுத்தது.*

*வினைச்சொற்கள், இங்ஙனம், வினாவொடுபட்டு நின்ற வழி யாயக்கால் அசைச் சொல்லாய் நிற்கும் என்பது கருத்து.*

**(வ-று.)**

*''கண்டீரோ, கண்டீரோ''*

*''கொண்டீரோ, கொண்டீரோ''*

*''சென்றதே, சென்றதே''*

*''போயிற்றே, போயிற்றே''*

*என வினாவொடுபட்டவழி அடுக்கி அசைநிலையாய் நிற்கும். அவ் வினாவொடு சிவணாக்கால் வினைச்சொல்லேயாம் என்பது, 'அன்றி யனைத் தும்' என்பது, அவையிற்றைத் தொகை கொடுத்துக் கூறினவாறு.*

*'வினாவொடு சிவணி' என்பது, ஆ ஏ ஓ என்னும் வினாக்களைக் கடையாத்து நின்றவழி என்றவாறு.* *(29)*

### இதுவுமது

420. கேட்டை என்றா நின்றை என்றா
காத்தை என்றா கண்டை என்றா
அன்றி அனைத்தும் முன்னிலை யல்வழி
முன்னுறக் கிளந்த இயல்பா கும்மே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இவை முன்னைய நான்கும் போல வினாவொடுபடாது வாளாதே நின்றுழி, இவையும் அசைச் சொல்லாய் நிற்கும் என்பது கருத்து.*

*முன்னின்றவற்று நிலைமையல்வழி யென்பான், 'முன்னிலை யல்வழி' என்றான் என்பது.*

**(வ-று.)**

*"கேட்டை, கேட்டை"*

*"நின்றை, நின்றை"*

*"காத்தை, காத்தை"*

*"கண்டை, கண்டை"*

என வரும். இவையும் கட்டுரைக்கண் வருமிடம் அறிந்து கொள்க.

இனி, இவை வினாவொடு பட்டுழியாயக்கால் அசைநிலை யாகா என்பது. (30)

## ஒருசார் வினைமுற்றுக்குக் குறியீடு

421. இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச்
சிறப்புடை மரபின் அம்முக் காலமும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தான் வினையினுங் குறிப்பினும்
மெய்ம்மை யானும் இவ்விரண் டாகும்
அவ்வா றென்ப முற்றியல் மொழியே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், வினையியலுள் ஓதப்பட்டன சில சொற்கள், முற்றுச் சொல் என்னும் குறியெய்துதல் நுதலிற்று.

அதனாற் பயந்தது என்னை எனின், அச் சொற்கு முன்பு முடிபு கூறி, ஈண்டுக் குறியிட்டான் என்பது பயன் என்பது.

இதன் பொழிப்பு: இறந்தகாலம் எதிர்காலம் நிகழ்காலம் என்னும் மூன்று காலமும் உடையவாய்த் தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் மூன்றிடத்தும் வினையும் வினைக்குறிப்பும் பற்றி, அம் மூன்றிடங்க டோறும் வினையும் வினைக்குறிப்பும் என இரண்டாம் அவ்வறுகூற்றுச் சொற்களை முற்றுச்சொல் என்று கூறுப ஆசிரியர் என்றவாறு.

'அவ்வாறு' என்றது, தன்மை இரண்டு பகுப்பவாயும், முன்னிலை இரண்டு பகுப்பவாயும், படர்க்கை இரண்டு பகுப்பவாயும் வருதல் நோக்கி என்பது.

**(வ-று.)** 'உண்டேன், கரியென்' எனவும்; 'உண்டாய், கரியை' எனவும்; 'உண்டான், கரியன்' எனவும் வரும். பிறவும் அன்ன.

'முற்றுச்சொல்' என்றது, செய்கையும் பாலும் காலமும் செயப்படு பொருளும் தோன்றிநிற்றலின் முற்றுச் சொல் என்பாரும், மற்றொரு சொல் நோக்காது முடிந்து நிற்றலின் முற்றுச்சொல் என்பாரும், எக்கால் அவை தம் எச்சம்பெற்று நின்றன அக்கால் பின் யாதும் நோக்காவாய்ச் செப்பு மூயிற்றுப்போல, அமைந்து மாறுதலின் முற்றுச்சொல் என்பாரும் என இப்பகுதியர் ஆசிரியர் என்பது. (31)

### மேலதற்குப் புறனடை

422. எவ்வயின் வினையும் அவ்விய னிலையும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது முற்றுச்சொல் லொழித்து ஒழிந்த பெயரெச்ச வினையெச்சங்கட்கு ஆவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** மேற் கூறப்பட்ட முற்றுச்சொல்லே யன்றிப் பெயரெச்சமும் வினையெச்சமும் மூன்று காலமும் மூன்றிடமும் உடையவாய் வினையும் வினைக்குறிப்பும் பற்றி வரும் என்பான்; 'எவ்வயின் வினையும் அவ்வியனிலையும்' என்றான் என்பது.

மற்று,

*''வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது*
*நினையுங் காலைக் காலமொடு தோன்றும்''* (தொல். வினை.1)

என்புழி, எல்லா வினைச்சொல்லும் மூன்று காலத்திற்கும் உரிய எனப் பட்டது.

இனி,

*''எஞ்சிய கிளவி யிடத்தொடு சிவணி*
*யைம்பாற்கு முரிய''* (தொல். வினை. 26)

என்புழி, எவ்விடத்திற்கும் உரிமையுங் கூறப்பட்டது பிறவெனின், மேல் அங்ஙனங் கூறினாரேனும், அது விலக்குப்பட்டது; ஈண்டுப் போதந்து முற்றுச் சொல்லையே விதந்து மூன்றிடத்திற்கும் உரிய என்றமையான், அது நோக்கி ஈண்டு இது கூறினான் என்பது. *(32)*

### வினைமுற்றுப் பெயரொடு முடிதல்

423. அவைதாம்,
தத்தம் கிளவி அடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர்முடி பினவே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது முற்றுச் சொல் என்று மேற்கூறப்பட்டனவற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

**உரை:** மேற் சொல்லப்பட்ட முற்றுச்சொற்கடாம் எத்துணைச் சொல்லையும் அடுக்கிப் பலவாய் வரினும் பெயர் கொண்டு முடிதல் இலக்கணத்தன, எ-று.

**(வ-று.)** 'உண்டான், தின்றான், ஓடினான், பாடினான் சாத்தன்' எனவரும்; இது வினை.

'நல்லறிவுடையன், செவ்வியன் சான்றார் மகன்' என வரும்; இது வினைக்குறிப்பு.

மற்று, 'எத்திறத்தானும்' என்றது என்னை யெனின், உண்டான் சாத்தன் என்பது பெயரை முன்னடுத்தும், சாத்தன் உண்டான் என்பது

பெயரைப் பின்னடுத்தும் வரும் என்பது அறிவித்தற்கு, 'எத்திறத்தானும்' என்றான் என்பது. பிறவுஞ் சொல்லுப; ''முன்னுமுரிய முற்றுச் சொல் லென'' என்பது. *(33)*

### எச்சங்கட்கு முடிபு

424. பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட் கிளவி.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேல் வினையியலுள்ளும் இடையியலுள்ளும் முடிபு கூறப்படாது நின்ற எச்சங்கட்கு முடிபு உணர்த்துவான் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *எல்லாவற்றையும் எச்சம் என்பதனைக் குறைத்துப் பின்னை எஞ்சு பொருட் கிளவி யென்றான், இறுதி விளக்காக. பிரிநிலையெச்சம் முதலாகக் கூறப்பட்ட பத்து வகை யெச்சங்களும் முன்பு முடிவு கூறப் படாது நின்றனவேனும், இனி நெறிப்படத் தோன்றும் அவை, எ-று.(34)*

### பிரிநிலை எச்சத்திற்கு முடிபு

425. அவற்றுள்,
பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நிறுத்த முறையானே பிரிநிலை எச்சத்திற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.*

**உரை:** *பிரிநிலையென்ப இருவகைய, ஏகாரப் பிரிநிலையும் ஓகாரப் பிரிநிலையும் என; அவை பிரிக்கப்பட்ட பொருடன்னையே கொண்டு முடிக, எ-று.*

**(வ-று.)** *'அவனே கொண்டான்' 'அவனோ கொண்டான்' என வரும். அவனே யெனப் பிரிநிலையெச்சம் ஏகாரந்தானின்று, அவனேயெனப் பிரிக்கப்பட்டானையே கொண்டு முடிதல்; இவை அவற்றுக்கு முடிபாவன எ-று.* *(35)*

### வினையெச்சத்திற்கு முடிபு

426. வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே
ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நிறுத்த முறையானே வினையெச்சத்திற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.*

**உரை:** வினையெச்சம் முடியுங்கால் வினையும் வினைக் குறிப்புங் கொண்டு முடியும்; அவ்விடத்துக் குறிப்புவினைச் சொல் ஆக்கச் சொல்லொடு வரும், எ-று.

**(வ-று.)** 'உழுது வந்தான்' என்பது, வினையெச்சம் தெரிநிலை வினைகொண்டு முடிந்தது. 'மருந்து உண்டு நல்லனாயினான்' என்பது, வினையெச்சம் வினைக்குறிப்புக் கொண்டு முடிந்தது; அவ்விடத்து வினைக்குறிப்பு ஆக்கமொடு வந்தவாறு கண்டு கொள்க.

இனி, 'நினையத் தோன்றிய' என்றதனான், 'உழுது வருதல்' 'உழுது வந்தவன்' எனத் தொழிற்பெயரானும் முடியும் என்றவாறு.

மற்று, இச் சூத்திரத்தான் வினையெச்சத்திற்கு முடிபு கூற வேண்டியது என்னை? வினையியலுள்,

> ''*முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின*'' (தொல். வினை. 31)

என்றும், ஒழிந்தனவற்றுக்கு,

> ''*ஏனை யெச்சம் வினைமுத லானும்*
> *ஆன்வந் தியையும் வினைநிலை யானும்*'' (தொல். வினை. 33)

முடியுமென்றுங் கூறியதே அமையும் பிறவெனின், அதற்கு விடை, ஆண்டு, வினைமுதலானும் முடியுமென்புழிப் பெயர் வினை முதலானும் முடியும் என்பது பட்டது; என்னை, வினை வினைமுத லென்றும், பெயர் வினைமுதல் என்றும் பகராது, பொதுவகையாற் கூறினாராகலின் இச் சூத்திரம் வேண்டும்; இது கூறாக்கால், உழுது சாத்தன் எனப் பெயர் வினை முதலானும் முடிவான் செல்லும் என்பது. அன்றியும், வினையெச்சத்திற்கு வினைக்குறிப்பு முடிபாங்கால், ஆக்கமொடு வருதல் எடுத்தோத வேண்டும் என்பது. *(36)*

## பெயரெச்சத்திற்கு முடிபு

427. பெயர்எஞ்சு கிளவி பெயரொடு முடிமே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், நிறுத்தமுறையானே பெயரெச்சத்திற்கு முடிபுகூறுதல் நுதலிற்று.

**உரை:** பெயரெச்சம் பெயர்கொண்டு முடியும், எ-று.

**(வ-று.)** 'உண்ணுஞ் சாத்தன்' 'உண்ட சாத்தன்' என வரும். உண்ணும், உண்ட என்பன பெயரெச்சம்; மற்று இது கூறவேண்டிய தென்னை?

> ''*நிலனும் பொருளும் காலமுங் கருவியும்*
> *வினைமுதற் கிளவியும் வினையும்*'' (தொல். வினை. 35)

பெயர்கொண்டு முடிதல் கூறப்பட்டது பிறவெனின், அதற்கு விடை, ஆண்டு வினைமுதற் கிளவியும் வினையும் எனவே, வினைச் சொல்லும் முடியும் என்பது பட்டது. வினைமுதற்கிளவி என்றக்கால் வினை வினை

முதலும் வினைமுதலாகலானும், இனி வினை என்றக்கால் வினைப் பெயரேயன்றி வினைச்சொல்லுமாகலானும் இச் சூத்திரம் வேண்டும் என்பது. *(37)*

## ஒழியிசை எச்சத்திற்கு முடிபு

428. ஒழியிசை எச்ச மொழியிசை முடிபின.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நிறுத்த முறையானே ஒழி யிசையெச்சம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** ஒழியிசை யெச்சமாவன மூன்று; அவை, மன்னை ஒழியிசையும், தில்லை ஒழியிசையும், ஓகார ஒழியிசையும் என; அவை மூன்றும், ஒழியிசைப் பொருள்கொண்டு முடியும், எ-று.

**(வ-று.)**

*''கூரியதோர் வாண்மன்''*

வாள் கோடிற்று, இற்றது எனப் பின்னும் வாள்மேலே முடிபு சென்றது.

இனி,

*''வருகதில் கொண்கன்''*

என, வருக எனப்பட்டானும் அவனே, கொண்கன் எனப்பட்டானும் அவனே, அதனான், அதுவும் அப்பொருள்கொண்டு முடிந்தது.

இனிக்,

*''கொளலோ கொண்டான்''*

என்புழிக் கொளலோ எனப்பட்டானையே கொண்டான் என்பது. அதனான், அதுவும் அவ் வொழியிசைப் பொருள்கொண்டு முடிந்தது. *(38)*

## எதிர்மறை எச்சத்திற்கு முடிபு

429. எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், நிறுத்த முறையானே எதிர்மறை யெச்சத்திற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** எதிர்மறை யெச்சம் என்பன இரண்டு, ஓகார எதிர்மறையும் உம்மை எதிர்மறையும் என; அவை, அவைதம் எதிர் மறைப்பொருள் கொண்டு முடியும், எ-று.

**(வ-று.)** *'யானோ கொண்டேன்'* என்பது; யானோவன்றே கொண்டேன் என்றாகும்; அதனான் அப்பொருள் கொண்டு முடிந்தது எனப்படும். *'நீயே கொண்டாய்'* என்றாற்கு எதிர்மறுத்தவாறு, 'யான் கொண்டிலென்' என என்பது.

இனி, உம்மையெதிர்மறை, 'வரலும் உரியன்' என்பது. ஆண்டு 'வரலும்' எனப்பட்ட உம்மை யெதிர்மறை, உரியன் எனப் பின்னும் அவனையே கொண்டு முடிந்தது. வாராமையும் உரியன் என்பது அதற்கு

எதிர்மறை, அவை ஒன்றொன்றனை நோக்க எதிர்மறை யென்ற வாறாயிற்று. *(39)*

### உம்மை எச்சத்திற்கு முடிபு

430. உம்மை எச்சம் இருவீற் றானும்
தன்வினை ஒன்றிய முடிபா கும்மே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது முறையானே உம்மையெச்சத்திற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

**உரை:** உம்மை யெச்சம் என்பது எச்சவும்மையாயிற்று; 'இருவீற் றானும்' என்றது, தானும் தன்னாற் றழுவப்பட்டதுமான இரண்டனையும் ஆயிற்று; அவை யிரண்டும் ஒன்றிய வினையே கொண்டு முடியும், எ-று.

**(வ-று.)** 'சாத்தனும் வந்தான்' என்றக்கால், பின்னைக் கொற்றனும் வந்தான் என்றானும், கொற்றனும் வரும் என்றானும் ஒன்றிய வினையே கொண்டு முடிக என்பது; 'சாத்தனும் வந்தான்' என்றக்கால், 'கொற்றனும் போயினான்' என்றுவிடின் அமையாது என்பதாம். *(40)*

### எச்ச உம்மைகளின் காலமயக்கம்

431. தன்மேல் செஞ்சொல் வரூஉங் காலை
நிகழுங் காலமொடு வாராக் காலமும்
இறந்த காலமொடு வாராக் காலமும்
மயங்குதல் வரையார் முறைநிலை யான.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இஃது அவ்வெச்ச வும்மையது மயக்கங் கூறுதல் நுதலிற்று.

**உரை:** தன் என்பது எச்ச வும்மை; செஞ்சொல் என்பது உம்மையில் சொல்; எச்சவும்மைச் சொல்லின்மேல் உம்மையில் சொல் வந்தக்கால் நிகழ்காலமும் எதிர்காலமும் மயங்கும், இறந்த காலமும் எதிர்காலமும் மயங்கும் மயங்கப்படும் முறை யிலக்கணமாகலான் வரையார் எ-று.

**(வ-று.)** 'கூழுண்ணாநின்றான்; சோறும் உண்பன்' என வரும்.

'கூழுண்ணாநின்றான்' என்பது செஞ்சொல்; 'சோறும் உண்பன்' என்னும் உம்மைச் சொல்லின்மேல் வந்தது.

உண்ணாநின்றான் என்னும் நிகழ்காலம் தன்னிகழ்காலமே கொள்ளாது. 'சோறும் உண்பன்' என்னும் எதிர்காலங் கொண்டமையின் வழுவாயிற்றாயினும், அமைக என்பது.

இறந்தவும் எதிர்வும் மயங்குமாறு: 'கூழுண்டான்; சோறுமுண் பான்' என வரும்.

இனி, 'முறை நிலையான' என்றதனான், இறந்ததனொடு நிகழா நின்றதூஉம் மயங்கும்; எதிர்வதனோடு இறந்ததுவும் மயங்கும் என்றவாறு.

**(வ-று.)** 'கூழுண்டான், சோறும் உண்ணாநின்றான்' என வரும்; 'சோறுண்பான், கூழுமுண்டான்' என வரும்; பரிமாறிக் கொள்க. *(41)*

## எனவென் எச்சத்தின் முடிபு

432. எனஎன் எச்சம் வினையொடு முடிமே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், நிறுத்த முறையானே எனவென் னெச்சத்திற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** எனவென நின்ற எச்சம் பெயர்கொண்டு முடியாது வினைகொண்டு முடியும், எ-று.

**(வ-று.)** 'கொள்ளெனக் கொண்டான்' என வரும். பிறவும் அன்ன.

*தன்வினையையோ பிறவினையையோ எனின், இன்ன வினை யென்பதில்லை, ஏற்ற வினையான் முடியும் என்ப.* *(42)*

## ஏனை எச்சங்கட்கு முடிபு வேற்றுமை

433. எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்
எஞ்சுபொருட் கிளவி இலவென மொழிப.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஒழிந்து நின்ற எச்சங்கள் திறத்துப் படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** *எஞ்சிய மூன்றும் என்பன, அவை மூன்றும் முந்தைய வற்றைப்போலத் தம்மை யின்னவந்து முடிப்பன என்று காட்டப்படும் எச்சச்சொல் இல்லை, எ-று.*

*மூன்றும் மேல்வந்து முடிக்கும் எச்சச்சொல் இல என, ஒன்று உடைத்தென்பதாம். அஃதியாதோவெனின் சொல்லெச்சம்; அதனை முன்னர்ச் சொல்லுதும்.* *(43)*

## குறிப்பெச்சமும் இசையெச்சமும் முடியுமாறு

434. அவைதாம்,
தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது 'குறிப்பே இசையே' (தொல். சொல். எச்சவி. 34) யென்று கூறப்பட்ட இரண்டெச்சமும் தங்குறிப்பிற்பற்றிய எச்சத்தானே முடிபு கூறப்படும், பிறிதில்லை என்பது.

**(வ-று.)** 'விண்ணென விசைத்தது' குறிப்பெச்சம்; அது தன் குறிப்பினையே கொண்டு முடிந்தது.

விண்ணென்றதே விசைத்தது எனப்பட்டது. அதனால் தத்தங் குறிப்பின் எச்சத்தானே முடிந்தது என்பது.

இனி, இசையெச்சம், ஒல்லெனவொலித்தது.

இடைச்சொல்லோத்துள் அறுபகுதிய என்று ஓதப்பட்ட, என என்பதை விகற்பித்து இரண்டு முடிபு கூறப்பட்ட தென்பது. மற்று ஆண்டுச் சொல்லெச்சம் என்பதில்லையால் எனின், விடை.

*''எனவெ னெச்சம் வினையொடு முடிமே''* (தொல்.சொல்.எச்சவி. 42)

என்று முடித்தார். வினையென வினை பின்னுந் தன்கண்ணதே சொல் லெச்சம், அதுகொண்டு முடிதல் இவ்வாய்பாடு, அவ் வேற்றுமை நோக்கி வேறு சொல்லெச்சம் என வேண்டினான் என்பது.

முன்னர் மூன்று மேல்வந்து முடிக்கும் எஞ்சு பொருட்கிளவியில என, ஒன்று உடைத்து என்பது பட்டுநின்றது, அஃதியாதோவெனின் சொல் லெச்சம் என்பது.

இனி, அதற்கு முடிபு கூறுகின்றார். *(44)*

## சொல் எச்சத்திற்கு முடிபு

435. சொல்என் எச்ச முன்னும் பின்னும்
சொல்அள வல்ல தெஞ்சுதல் இலவே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், சொல்லெச்சத்திற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

**உரை:** சொல்லெனெச்சம் முன்னாயினும் பின்னாயினும் சொல்லென்னுஞ் சொற்கொண்டு முடிதலல்லது பிறிதில்லை, எ-று.

**(வ-று.)** 'பசித்தேன் பழஞ்சோறு தா என நின்றாள் நுசுப்போ உலகம் பெறும்' என்பதாம்.

இது தா எனச் சொல்லி நின்றாள் எனச் சொல்லி என்பதனைக் கொண்டது.

மற்றுத் தா என நின்றாள் பிறளே யெனின், தா எனச் சொல்ல நின்றாள் என்பதாம். அவற்றுட் சொல்லி என்றானும் சொல்ல என்றானும் ஆக, இரண்டனுள் ஒன்றனான் முடியும் அது என்பது.

'முன்னும்' என்றது, தா எனச் சொல்லி நின்றாள் என்று கொணர்ந்து முடிப்பின், அது பின் முடிவுபட நின்றதாம் என்பது. *(45)*

## இடக்கர் அடக்கல்

436. அவைஅல் கிளவி மறைத்தனர் கிளத்தல்

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது 'தகுதியும் வழக்கும்' (தொல். சொல். கிளவி. 17) என்பதனுட் கூறப்படாது ஒழிந்து நின்றதொரு மரபு வழூஉக் காத்தல் நுதலிற்று.

**உரை:** நன்மக்களுட் கூறப்படாத சொல்லைக் கிடந்தவாறே சொல்லற்க; பிறிது வாய்பாட்டான் மறைத்துச் சொல்லுக எ-று.

**(வ-று.)** *'கான்மே னீர்பெய்துவருதும்' 'வாய்பூசி வருதும்'* என வரும். *(46)*

## மேலதற்கு ஒரு புறனடை

437. மறைக்குங் காலை மரீஇய தொராஅல்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இறந்தது காத்தது.

**உரை:** மேல் அவைக்குரியவல்லனவற்றை மறைத்தே சொல்லுக என்றார், இனி அவைதாம் மரீஇயடிப்பட்டவழியாயக்கால் மறைத்தல் வேண்டுவதன்று; அவை யொழித்து ஒழிந்தன மறைத்தே சொல்லுக என்றது என்பது.

இனி, அவ்வாறு மரீஇ வந்தன:

*'ஆட்டுப் பிழுக்கை', 'ஆப்பீ'* என வரும். *(47)*

## இரப்பு உணர்த்தும் சொற்கள்

438. ஈதா கொடு எனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைத்தே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் கிளவியாக்கத்துக் கூறப்படாது ஒழிந்துநின்றதொரு மரபிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இக் கூறப்பட்ட மூன்றும் இரப்போர் சொல்லுதற்குரிய, எ-று.

ஒருவரையொருவர் இரக்குங்கால் இம் மூன்றனுள் ஒன்று சொல்லி யிரப்பது எ-று. *(48)*

## ஈ என்பதன் மரபு

439. அவற்றுள்,
ஈஎன் கிளவி இழிந்தோன் கூற்றே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேற்கூறப்பட்ட மூன்றனுள், ஈ என்னுஞ்சொல் இரக்கப்படுவோரை இழிந்தோர் கூறி யிரக்குஞ்சொல் என்றவாறு.

**(வ-று.)** *'உடுக்கை ஈ', 'மருந்து ஈ'* என வரும். *(49)*

## தா என்பதன் மரபு

440. தாவென் கிளவி யொப்போன் கூற்றே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இரக்கப்படுவானை ஒப்பான் இரக்குங்கால் தா என்னுஞ் சொற் சொல்லி இரக்கும் என்பது உணர்த்தியவாறு.

**(வ-று.)** *'சோறு தா', 'ஆடை தா'* என வரும். *(50)*

### கொடு என்பதன் மரபு

441. கொடுஎன் கிளவி உயர்ந்தோன் கூற்றே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், கொடு என்னுஞ் சொல் உயர்ந்தோனாற் கூறப்படுஞ் சொல் எ-று.

**(வ-று.)** 'இவற்கு ஊண் கொடு, ஆடை கொடு' என வரும். *(51)*

### கொடு என்பது தன்மையினும் வருதல்

442. கொடுஎன் கிளவி படர்க்கை யாயினும்
தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பின்
தன்னிடத் தியலும் என்மனார் புலவர்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேற் சூத்திரத்துக்குப் புறனடையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** கொடு என்றது தன்மைக்கு ஏற்றதன்று, படர்க்கைக்கு உரியதோர் சொல்லாயிற்று; உயர்ந்தோன் இழிந்தோனை யிரக்குங்கால், தமனொருவனைக் காட்டி, இவற்குக் கொடு, என்பது; ஆண்டுப் படர்க்கை யிடத்திற்கு உரித்தாகக் கூறினான்மன்; ஆயினும், அது தன்மையிடத்து யியல்பே காட்டப் படர்க்கையிடத்திற்கு உரித்தாகாது, அவ் விரக்கப்படு பொருளும் அக் கொடு என்ற சொல்லும் என்பது, எ-று.

தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பின் தனக்குக் கொடு என்றது வாய்பாடன்றதேனும் அது தனக்கே சொல்லியவாறு.

உம்மையாற் பிற கிளவியும் படர்க்கையாயினும் தன்னைப் பிறன் போற் கூறுங் குறிப்பிற் றன்னிடத்து இயலும் என்றவாறு; ஆண்டு இரவின் கிளவியல்வழியென்பது. 'அங்ஙனஞ் சொல்லுவானோ பெருஞ்சாத்தன் தந்தை, சொல்லப்படுவாளோ பெருஞ்சாத்தன் தாய்' என்னும்; தன்னைப் பிறன் போல் கூறுவது தன்னிடத்து இயலும் எ-று. *(52)*

### ஒருசார் சொற்களின் வழுவமைதி

443. பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்
சினைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்
தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்
மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்
மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்
அன்றி அனைத்தும் கடப்பா டிலவே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், ஒருசார் வழூக்காத்தல் நுதலிற்று.

**உரை:** இவை மேற்கூறப்பட்ட இலக்கணத்தினை யின்றியமை யாமையில, எ-று.

'பெயர்நிலைக் கிளவியின்' என்பது, ஈண்டு உயர்திணைப் பெயரை யாயிற்று. அவ்வுயர்திணைப் பெயர் உயர்திணைப் பெயர்மேல் வழங்கப் படுதலின்றியும் அமையுமென்றவாறு. நம்பி என்னும் உயர்திணைப் பெயர் ஒரு யானை மேலானும், ஒரு கோழி மேலானும், பிறவற்றின் மேலானும் நிற்கும். நங்கை என்ப ஒரு கிளியையும் என்பது.

இனிச் சினைநிலைக் கிளவியினாவன கடப்பாடின்றி வருமாறு:

*''வெண்கொற்றப் படைத்தலைவன்''*

*''வெள்ளேறக் காவிதி''*

என்பன.

இவற்றை முன்னர்க் கிளவியாக்கத்துச் சிறப்புப் பெயர் நின்ற வழி இயற்பெயர் வைத்துக் கூறுக என்றான்; இனிச் சினைச் சொற்கணாயின் அது வேண்டுவதன்று என்பது கருத்து.

'தொன்னெறி மொழிவயி னாஅ குநவும்' என்பது முந்தைச் சொல், அவற்றையும் இவ்வாறே சொல்லப்படுதலின் இப்பொருள என்றொரு கடப்பாடில என்றார்.

**(வ-று.)** 'ஆற்றுட் செத்த வெருமை ஊர்க்குயவற் கிழுத்தல் கடன்' எனவும், 'யாட்டுளா னின்னுரை தாரான்' எனவும் வரும். பிறவும் அன்ன.

''மெய்ந்நிலை மயக்கி னாஅ குநவும்'' என்பது, மேல்,

*''தகுதியும் வழக்குந் தழீஇயின வொழுகும்''* (தொல்.சொல்.கிளவி.17)

என்புழி, மங்கல மரபினானும் குழுவின்வந்த குறிநிலை வழக்கினானும் கூறப்படுமென்றாரன்றே, இனி, அவை அவ்வாறன்றித் தத்தம் இலக்கணத் தானுஞ் சொல்லப்படும் என்றவாறு.

**(வ-று.)** சுடுகாட்டை நன்காடு என்னாது சுடுகாடு என்றும், செத்தாரைத் துஞ்சினார் என்னாது செத்தார் என்றும் கூறவும் அமையும் என்றவாறு.

இனி, 'மந்திரப் பொருள்வயி னாஅ குநவும்' என்பது:

*''நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திர மென்ப''* (தொல்.பொருள். செய்யு. 171)

அவை, கூறப்பட்ட எழுவகை வழுவிற் றீர்ந்து வருக என்ற கடப்பாடில என்றவாறு.

அவை,

*''திரிதிரி சுவாகா கன்று கொண்டு*
*கறவையும் வர்த்திக்க சுவாகா''*

என்றாற்போல வரும்.

இச் சூத்திரத்திற்குப் பிறிதுமொரு பொருள் உரைப்பாரும் உளர். இதுவும் மெய்யுரை போலும் என்பது. *(53)*

## செய்யாய் என்பது செய் என நிற்றல்

444. செய்யாய் என்னு முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது வினையியலுள் ஒழிந்துநின்ற ஒழிபு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** செய்யாய் என நின்ற முன்னிலை வினைச்சொல் செய்யென்னுஞ் சொல்லும் ஆமிடன் உடைத்து, எ-று.

'இந்நாள் எம்மில்லத்து உண்ணாய்' என்பது; அது செய்யாய் என்பது, அது செய் இனி என்றுமாம். *(54)*

## ஈ, ஏ என்பன முன்னிலையில் வருதல்

445. முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்ஊர்ந்து வருமே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இடைச்சொல்லோத்தினுள் ஒழிந்து நின்ற ஒழிபு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** முன்னிலைக்கண்ணான ஈகார ஏகார இடைச்சொற்கள் முன்னிலைக்குப் பொருந்திய மெய்யை யூர்ந்து வரும், எ-று.

**(வ-று.)**

*"சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே"* (அகம். 46)

எனவும்,

*"அட்டி லோலை தொட்டனை நின்மே"* (நற். 300)

எனவும், இவையிரண்டும் தத்தங் குறிப்பிற் பொருள் செய்யும் இடைச் சொல் என்பது; ஈண்டு எப்பொருளை விளக்கி நின்றனவோ எனின், புறத்துறவு நீர்மைப் பொருள்பட வந்த என்றவாறு. *(55)*

## பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்றல்

446. கடிசொல் இல்லைக் காலத்துப் படினே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், மேற் கூறப்பட்டவற்றுக் கெல்லாம் பொதுவாயதொரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

**(வ-று.)** அழான், புழான் என்பன; அக்காலத்து அவையுண்மையான் ஆசிரியனான் ஓதி முடிபு கூறப்பட்டன.

இனிச் சுட்டுச்சினை நீடிய ஐகாரவீற்றுப் பெயர் (தொல். எழுத்து. தொகைமரபு 17) உறழ்ந்து முடிக என்றான் ஆசிரியன், அக்காலத்து அவை யுண்மையான்; இப்பொழுது அவற்றிற்கு உதாரணமில்லை. பிறவும் அன்ன.

இனி, ஆசிரியனால் ஆகா என ஓதப்பட்டன தோன்றுவ உள; அவை, ஞண்டு என்றும், நீர்கண்டக என்றும், சம்பு, சள்ளை என்றும் வரும். *(56)*

## மூவகைக் குறைச்சொற்கள்

447. குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல்
குறைத்தன வாயினும் நிறைப்பெயர் இயல.

*இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், செய்யுட்கு ஆவதொரு முடிபு கூறுதல் நுதலிற்று.*

**உரை:** *முன் செய்யுளீட்டும் தன்மையானே கடியப்படுமென்றே யறியக்கிடந்தது; இனி, அவற்றை முழுவதூஉம் கிடை கடாவாது குறைத்துக் கடாவப்படுதலும் உடைய ஒரோவழி, அங்ஙனங் குறைக் கப்பட்டவேனுங் குறையாது நின்றவிடத்தியலுமாறே புலப்பட்டு இயலுஞ் செவிக்கு, எ-று.*

*இனி, அவை குறைக்குமிடத்துத் தலைக்குறைத்தலும் இடைக் குறைத்தலும் கடைக்குறைத்தலும் என மூன்று வகையாற் குறைக்கப் படும் என்பது.*

*அவற்றுள் தலைக்குறைத்தது:*

*''மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி''*

*என்பது; ஆண்டுத் தாமரை எனற்பாலார் மரை என்று தலைக்குறைத்தார் என்பது.*

*இடைக்குறைத்தல் என்பது:*

*''வெரிநி னோதி வெருக்கண் டன்ன''*

*என்பது; ஆண்டு, ஓந்தி எனற்பாலார் ஓதி என்று இடைக்குறைத்தார் என்பது.*

*இனிக் கடைக்குறைத்தல் என்பது:*

*''நீலுண் டுகிலிகை கடுப்ப''*

*என்பது; நீலமுண் டுகிலிகை எனற்பாலார், நீலுண் டுகிலிகை என்றார் என்பது.*

*'குறைக்கும்வழி யறிதல்' என்பது, குறைக்கைக்குத் தகக் குறைக்கப் படுவது என்றற்கு என்பது.*

*'நிறைப்பெயரியல' எனவே, இவ் விகாரம் பெயர்க்கண்ணதே யென்பது பெற்றாம்.*

*மற்றுச்,*

*''சென்றா ரென்பிலர் தோழி''*

*என, என்பாரிலர் எனற்பாலார், என்பிலர் என்றார்; எனவே, வினைச் சொல்லுங் குறைக்கப்பட்டதெனின், 'நிறைப்பெயரியல' என்றது,*

பெயர்ச்சொல் என்றவாறு. அக் குறைக்கப்பெறுவன அம் மூன்றிடத்துள் எவ்விடத்துங் குறைக்கப்பெறினும் பெறுக.

பெற்றன குறையாதபோது நின்ற தத்தம் நிறைபு நிலைப் பெயரவே யாக வுணரப்படும் என்பான், 'நிறைப் பெயரியல' என்றான் என்பது; இதுவும் ஒரு கருத்து. *(57)*

### இடைச்சொற்கள் வேற்றுமைச் சொல்லெனல்

448. இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இடைச்சொல் எனப்பட்டன வற்றுக்கட் படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** முன்னர் வேற்றுமை யோத்தினுள் ஐ ஒடு கு இன் அது கண் என்னும் உருபுகளையன்றே வேற்றுமைச் சொல்லென்று உணர்த்தியது. இனி அவையன்றி ஒழிந்த இடைச்சொற்களையும் வேற்றுமைச்சொல் என அமையும், எ-று.

என்னை, அவையும் தாமாக நில்லா, பெயரும் தொழிலும் அடைந்து நின்றும் அவற்றையே பொருள்வேற்றுமைப் படுக்குமாகலின் என்பது. *(58)*

### உரிச்சொற்களும் வேற்றுமைச் சொற்களே

449. உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், உரிச்சொற்கள் திறத்துப் படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லாதற்கு எவ்வாறுரியவாயினமன், அவ்வுரிமை உரிச்சொற்கண்ணும் எய்தும், எ-று.

உம்மை இறந்தது தழீஇயிற்று. உரிச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல் என்றது மேற்கூறிய இடைச்சொல்லேபோல உரிச்சொல்லும் தாமாக நில்லா, பெயரும் வினையும் அடைந்து பொருள் வேறுபடுத்த லுடைய, அது நோக்கி யென்பது. இருதலையாக அவற்றை வேற்றுமைச் சொல் எ-று. *(59)*

### வினையெச்சம் திரிந்து வேறுபடல்

450. வினைஎஞ்சு கிளவியும் வேறுபல் குறிய.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், முன்னர் வினையியலுள் வினையெச்சம் என்று ஓதப்பட்டனவற்றுக்கண் ஆவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** வினையெச்சம் என்று கூறப்பட்டன செய்யுட்கண் தாம் வந்து முடிபு கொண்டதன் றன்மைப்பாலே நில்லா; நின்றாற் பொரு ளிசையா

வாதலான், ஓர் எச்சந் திரிந்து ஓர் எச்சமாகியும் நிற்கும் இலக்கணத்தினை யுடைய, எ-று.

**(வ-று.)** ஞாயிறு பட்டு வந்தான், ஞாயிறு பட வந்தான் என்பதுமன் ஆகற்பாலது.

பட என்பது செயவெனெச்சம்; அது திரிந்து பட்டு என்னுஞ் செய்தெனெச்சமாகி நின்றதென்பது.

*''கோழிகூவிப் புலர்ந்தது''*

என்பதூஉம் செயவெனெச்சஞ் செய்தெனெச்சமாகித் திரிந்து நின்றது என்பது.

அங்ஙனம் நின்றவேனும், அவற்றைச் செயவெனெச்சமாக வுணர்ந்து கொளல் வேண்டும். அல்லாக்காற் சொன்முடிபு எய்தாது. என்னை, 'ஞாயிறு பட்டு' என்றக்கால், வந்தான் என்றலும் முடியற்பாலது. பின்னும் ஞாயிற்றின்மேல் வினை கொண்டு முடியற்பாற்று,

*''முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின''*(தொல். சொல். வினை. 31)

என்று உரைத்தானாகலின் என்பது. கோழி கூவப் புலர்ந்தது என்பதற்கும் அஃது ஒக்கும்.

இனி,

*''மோயின ளுயிர்த்த காலை''* (அகம். 5)

என்புழி, மோந்து என்னும் வினையெச்சம், மோயினள் என முற்றுச்சொல் வாய்பாட்டாற் றிரிந்து நின்றதேனும், வினையெச்சமே யாகல்வேண்டும். பிறவும் அன்ன.

பிற என்றதனான்,

*''ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்*
*வாரி வளங்குன்றிக் கால்''* (குறள். 14)

என்பது, குன்றியக்கால் என்னும் வினையெச்சம் குன்றிக்கால் என நின்றது. *(60)*

## தொடர்மொழிப்பொருள் வேறுபாடு

451. உரையிடத் தியலும் உடனிலை அறிதல்.

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், உலகத்து மாறுகொண்டு வேறுபட்டியலுஞ் சொற்களவை அமைக என்பது உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** கட்டுரை யுரைக்குமிடத்து நடக்கும் ஒருங்கு நிலையும் அறிக எ-று.

ஒன்று உரைக்கு மிடத்து இயைபில்லாத இரண்டு சொல் ஒரு பொருட்கண் நிற்பச் சொல்லுதலுண்டு, உண்டேனும் அஃது அமைக என்றவாறு.

**(வ-று.)** 'இந்நாழிக்கு இந்நாழி சிறிது பெரிது' என்பது; சிறிதென்ற சொல்லும் பெரிதென்ற சொல்லும் தம்முண் மாறுகோளுடைய; அந்நாழி மேலே நின்றனவேனும் அமையும் என்பது. என்னை அமையுமாறெனின், சிறிது என்று நின்றதன் சிறுமையே பெரிதென்பான் சொல்லினானல்லன், அந் நாழிக்கு இந்நாழி பெரிய துணை மிகுதியில்லை, பெருமை சிறிதெண்ணிய சொல்லினான்; அமையும் என்பது. *(61)*

## வினைக்குறிப்புச் சொல் பொருள்தரும் வேறுபாடு

452. முன்னத்தின் உணருங் கிளவியும் உளவே
இன்ன என்னுஞ் சொல்முறை யான.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் சொற்கண்ணதொரு பொருள்படுதல் வேற்றுமை யுணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** சொல்லினவிடத்துச் சொற்கிடந்தவாறே குறிப்பினாற் கொண்டு உணரப்படும் பொருளும் உள; சொற்கள் யாண்டாயினும் மற்று இன்னவென்று தன்மை வேறுபாடு சொல்லுதன் முறைக்கண், எ-று.

**(வ-று.)**

*''செஞ்செவி வெள்ளொக்கலர்''*

எனவும்,

*''குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர்''*

எனவும் வரும்.

செஞ்செவி வெள்ளொக்கலர் என்றால், உதிரஞ் சொரியுஞ் செவியர், வெளிய சுற்றத்தார் என்பது அன்று; செவியெல்லாஞ் சாலச்செம்பொன் அணிந்து, முட்டில் செல்வத்துக் கிளையுடையர் என்றவாறு.

'குழைகொண்டு கோழி யெறியும்' என்றக்காலும், கோழியெறித லென்று உணரற்பாலது, முட்டில் செல்வத்தார் என்பது உணரற் பாற்று. *(62)*

## ஒருபொருள் இருசொல்

453. ஒருபொருள் இருசொற் பிரிவில வரையார்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் மரபுவழுக் காத்தது.

**உரை:** ஒரு பொருண்மேற் கிடந்த இருசொற் பிரிவின்றி நின்றன, வரையப்படா எ-று.

*வரலாறு:*

*[1]''வையைக் கிறைவன் வயங்குதார் மாணகலந்*
*தையலா யின்றுநீ நல்குதி நல்காயேற்*
*கூடலார் கோவொடு நீயும் படுதியே*
*நாடறியக் கவ்வை யொருங்கு.''*

வையைக்கு இறை யெனப்பட்டானும், கோ எனப்பட்டானும் அவனாத லான், அவ்விருசொல்லும் ஒரு பொருட்கண்மேலே நின்றன; பிற பொருட்குப் பிரியா, அங்ஙனம் நிற்பன அமையும் என்பதாம்.

இனிப் 'பிரிவில வரையப்படா' எனவே, பிரிவுடையன வரையப் படும் என்பதாம்; அஃதியாதோ வெனின்,

*''கொய்தளிர்த் தண்டலைக் [2]கூற்றப் பெருஞ்சேந்தன்*
*வைகலு மேறும் வயக்களிறே - [3]கைதொழுதேன்*
*காலேக வண்ணனைக் கண்ணாரக் காணவெஞ்*
*சாலேகஞ் சார நட.''*

இதனுள், 'கூற்றப்பெருஞ் சேந்தன்' என்றார், பின்னைக் 'காலேக வண்ணன்' என்றார்; அவை யிரண்டு சொல்லும் பிரிவுடைய, அதனான் அமையா; யாதோ பிரிவெனின், 'காலேகவண்ணம்' என்பது சாந்து, கூற்றப்பெருஞ் சேந்தற்கே யுரித்தாய் நிற்பதொன்றன்று. 'காலேக வண்ணம்' என்னுஞ் சாந்து பூசினார்க் கெல்லாங் காலேக வண்ணர் என்று பெயராம், அதனாற் பிரிவுடைத்து; ஆதலான், அமையாது என்பது.

மேற் கிளவியாக்கத்து,

*''இயற்பெயர்க் கிளவியுஞ் சுட்டுப்பெயர்க் கிளவியும்''*
(தொல். சொல். கிளவி. 38)

என்றும்,

*''சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு''* (தொல். சொல். கிளவி. 41)

என்றும்,

*'ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி'* (தொல். சொல். கிளவி. 42)

என்றும் ஒருபொருண்மேல் இருபெயர் வழுவும், பல பெயர் வழுவும் கூறிப் போந்தான்; அவற்றோ டிதனிடை வேற்றுமை தெரிந்து கொள்க. *(63)*

[1]**(பாடம்)** 'வையைக் கிழவன்'

[2]**(பாடம்)** 'கூத்தப்பெருஞ் சேந்தன்'

[3]**(பாடம்)** 'கைதொழுவல்'

## பால்வழுவமைதி

454. ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காகும் இடனுமா ருண்டே.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் பால்வழு அமைக் கின்றது.

**உரை:** ஒருமை சுட்டி நின்ற பெயர்ச் சொல்லும் பன்மை கொண்டு முடியும் இடனும் உடைத்து, எ-று.

**(வ-று.)**

*''அங்கலுழ் மாமை யகுதை தந்தை*
*யண்ணல் யானை யடுபோர்ச் சோழர்''*

என வரும்.

இதனுள், 'தந்தை' எனநின்ற ஒருமை முறைப்பெயர், 'சோழர்' என்னும் பன்மைகொண்டு முடிந்தமையின், வழூஉவே யெனினும் அமையும் என்பது.

*''யானெம் மூர்புகுவல்''*

என்பதும் அது. *(64)*

## ஆற்றுப்படையில் முன்னிலையொருமை பன்மையொடு முடிதல்

455. முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை இன்றே
ஆற்றுப்படை மருங்கின் போற்றல் வேண்டும்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இது செய்யுட்கு உரியதொரு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** முன்னிலை சுட்டிய வொருமைச்சொல் பன்மை கொண்டு முடியினும் வரைந்து மாற்றப்படாது ஆற்றுப்படைச் செய்யுளிடத்து; அதனை ஆண்டுப் போற்றியுணர்க, எ-று.

*''கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ''* (மலைபடு. 50)

என்புழித் 'தலைவ' என்பது ஒருமைப் பெயர்; அது, பின்னை,

*''ஒருவி ரொருவி ரோம்பினிர் கழிமின்''* (மலைபடு. 218)

எனப் பன்மைகொண்டு முடிந்தது. முடிந்ததே யெனினும் அமைக என்பது; மற்று இதுவும் ஒருமைப்பெயர் பன்மைகொண்டு முடித லொக்குமாகலின், முன்னர்,

*'ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி'* (தொல். சொல். எச்ச. 64)

என்னுஞ் சூத்திரத்துள் அடங்கும் பிறவெனின், அற்றன்று, முன் செய்யுணோக்கிச் சொல்லினான் அல்லன்; இனிச் செய்யுள் நோக்கிச் சொல்லினான். எங்ஙனம்? முன்னிலையொருமை பன்மைகொண்டு முடிதல் ஆற்றுப்படைச் செய்யுட்கு முன்னிலைக் கட்டுரை பயின்றமை யினும் மேலதனைக்கொண்டும் அச்செய்யுள் விதியுடைத் தொன்றாதலா னும் அதனை யமைக்கவேண்டும், அதனாற் சொல்லினான் அதற்கே வரைந்து என்பது.

மற்று, ஆற்றுப்படை மருங்கினானே யமையாது 'போற்றல் வேண்டும்' என்பதனாற் பிறவும் உள ஈண்டுப் போற்றி யுணரப் படுவன என்பது.

*''நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளு*
*[1]மென்னையே குறித்த நோக்கமொடு''* (அகம். 110)

என்புழித் தானும் அன்னாருள்ளானாகலின் பல்லேமுள்ளும் எனற்பாற்று மன்; ஆயினும் அஃது அமைக என்பது.

இனி,

*''ஏவ லிளையர் தாய்வயிறு [2]கரிக்கும்''*

எனற்பாற்றன்றுமன், ஆயினும் அமைக என்பது. மற்று இளையர் பல்லாரையுமுடைய தாயைச் சொல்லிற்றாகப் பெறாதோ எனின், அற்றன்று. ஆண்டு ஆண் பூசலாட்களாகலான் அவர்க்கெல்லாம் ஒருதாயாத லியைபின்று என்பது. இனி, ஒரு சாரார்,

*''கறையணி மிடற்றினை''*

என்னும் முன்னிலையொருமை, கறையணி மிடற்றினவை என்னும் அஃறிணைப் படர்க்கைப் பன்மையானும் முடிந்ததென்று காட்டுப. இனிக் 'கறையணி மிடற்றினவை' என்றது, அத்தேவனார் கூளிகளை என்ப ஒரு திறத்தார்; அற்றன்று. பின்னையனையை யாதலின் என அத் தேவனார் தம்மேலேறுமாகலின் அமைக்கவேண்டுமென்பர் முன்னை யுரைப்பார்; பிறவுமிவ்வாறு வருவன போற்றி யுணரப்படும் என்றவாறு. *(65)*

[1] **(பாடம்)** 'என்னே குறித்த நோக்கமொடு' [2] **(பாடம்)** 'கரிப்ப'

## அதிகாரப் புறனடை

456. செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி எல்லாம்
பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்.

இச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், இவ்வதிகாரத்து எடுத் தோத்தே, இலேசேயன்றி இவ்வாற்றான் முடியாது நின்றனவற்றுக் கெல்லாம் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

**உரை:** செய்யுளிடத்தும் வழக்கிடத்தும் முன்னரே முடிபு கூறப்படாது நின்ற சொற்கள் இவை என்று தெரிந்து அவற்றை உத்திவகை இலக்கணத்தொடு படுத்திக் காட்டுக, எ-று.

**(வ-று.)**

*''தினைத்தா என்ன சிறுபசுங் கால*
*ஒழுகுநீ ராரல் பார்க்குங்*
*குருகு முண்டுதா மணந்த ஞான்றே''* (குறுந். 25)

என்புழிச் 'சிறுபசுங்கால' என்று பன்மையாற் கூறிப் பின்னைக் 'குருகு முண்டு' என்று ஒருமையாற் கூறுதல் வழுவாயிற்று; ஆயினும் அமைக என்பது.

*''இரண்டனுட் கூர்ங்கோட்ட காட்டுவல்''*

என்புழிக் கூர்ங்கோட்டது எனற்பாற்று. என்னை, இரண்டனுள் என்றாற் பின்னை ஒன்றேயாகலின் என்பது. ஆயினும் அமைக என்பது.

இனி, வழக்கினுள் எம்முளவனல்லன் நும்முளவனல்லன் என்னும்.

பிறவும் இவ்வாறு இடவழுப்பட வருவன அமைத்துக் கொள்க.

இனி, ஒரு சாரார், சம்பு சள்ளை சத்தி என்பன ஈண்டுக் காட்டுவாரும் உளர்.

பிறவும் முடியாது நின்றனவெல்லாம் இதுவே விதியோத்தாக முடித்துக்கொள்க என்பது. *(66)*

**ஒன்பதாவது எச்சவியல் முற்றிற்று.**

**சொல்லதிகாரமும் உண்மைப்பொருளும் வரலாறும் முடிந்தன.**

**சொல்:**

வேற்றுமை எட்டுத் திணையிரண்டு பாலைந்து
மாற்றுதற் கொத்த வழுவேழும் - ஆறொட்டும்
ஏற்றமுக் காலம் இடமூன்றோ டீரிடத்தும்
ஆற்ற வருவதாஞ் சொல்.

# நூற்பா நிரல்

**(எண் : நூற்பா எண்)**


| | |
|---|---|
| அஆ வஎன - சொல்லே | 9 |
| அஆ வஎன - படர்க்கை | 212 |
| அச்சக் கிளவிக்கு | 96 |
| அச்சம் பயமிலி | 249 |
| அசைநிலைக் கிளவி | 266 |
| அடிமறிச் செய்தி | 401 |
| அடைசினை முதலென | 26 |
| அண்மைச் சொல்லிற்கு | 128 |
| அண்மைச் சொல்லே | 124 |
| அத்திணை மருங்கின் | 215 |
| அதிர்வும் விதிர்ப்பும் | 310 |
| அதுஇது உதுவென | 164 |
| அதுச்சொல் வேற்றுமை | 210 |
| அதுவென் வேற்றுமை | 90 |
| அந்திலாங்க | 262 |
| அந்நாற் சொல்லும் | 397 |
| அப்பொருள் கூறின் | 36 |
| அம்ம என்னும் | 150 |
| அம்ம கேட்பிக்கும் | 271 |
| அம்முக் கிளவியும் | 226 |
| அமர்தல் மேவல் | 374 |
| அயல்நெடி தாயின் | 142 |
| அர்ஆர் பஎன | 203 |
| அரியே ஐம்மை | 350 |
| அலமரல் தெருமரல் | 304 |
| அவ்வச் சொல்லிற்கு | 290 |
| அவ்வழி அவனிவன் | 159 |
| அவ்வே இவ்வென | 116 |
| அவற்றின் வரூஉம் | 285 |
| அவற்றுள் அஎனப் | 105 |
| அவற்றுள் அழுங்கல் | 344 |
| அவற்றுள் இஈ | 118 |
| அவற்றுள் இகுமும் | 270 |
| அவற்றுள் இயற்சொல் | 392 |
| அவற்றுள் இரங்கல் | 353 |
| அவற்றுள் ஈயென் கிளவி | 439 |
| அவற்றுள் எழுவாய் | 66 |
| அவற்றுள் செய்கென் கிளவி | 201 |
| அவற்றுள் செய்யும் | 233 |
| அவற்றுள் தடவென் கிளவி | 315 |
| அவற்றுள் தருசொல் | 29 |
| அவற்றுள் நான்கே | 172 |
| அவற்றுள் நிரல்நிறை | 399 |
| அவற்றுள் நீயென் கிளவி | 186 |
| அவற்றுள் பன்மை | 206 |
| அவற்றுள் பிரிநிலை | 425 |
| அவற்றுள் பெயரெனப் | 157 |
| அவற்றுள் முதனிலை | 225 |
| அவற்றுள் முன்னிலை | 221 |
| அவற்றுள் முன்னிலைக் | 218 |
| அவற்றுள் யாதென | 32 |
| அவற்றுள் விறப்பே | 342 |
| அவற்றுள் வினைவேறு | 53 |
| அவற்றுள் வேற்றுமைத் | 407 |
| அவற்றொடு வருவழிச் | 230 |
| அவைஅல் கிளவி | 436 |

அவைதாம் அம் ஆம் 199
அவைதாம் இஉ 117
அவைதாம் உறுதவ 294
அவைதாம் தத்தம் கிளவி 423
அவைதாம் தத்தம் குறிப்பின் 434
அவைதாம் தத்தம் பொருள் 111
அவைதாம் புணரியல் 245
அவைதாம் பெண்மை 173
அவைதாம் பெயர் ஐ 65
அவைதாம் முன்மொழி 413
அவைதாம் முன்னும் 246
அவைதாம் வழக்கியல் 109
அளபெடைப் பெயரே 132, 138, 146
அளபெடை மிகூஉம் 122
அளவும் நிறையும் 113
அன் ஆன் 202
அன்ன பிறவும் 97, 163, 167, 390
அன்னென்னிறுதி 127
ஆஓ ஆகும் 192
ஆக்கக் கிளவி 22
ஆக்கந் தானே 21
ஆக ஆகல் 275
ஆங்கவுரையசை 272
ஆடூஉ வறிசொல் 2
ஆண்மை சுட்டிய 178
ஆண்மை திரிந்த 12
ஆண்மை யடுத்த 160
ஆரும் அருவும் 135
ஆறன் மருங்கின் 94
ஆறா குவதே 76
ஆனென் இறுதி 129
இசைத்தலும் உரிய 60
இசைநிறை அசைநிலை 405
இசைப்படு பொருளே 417
இசைப்பிசை யாகும் 303
இடைச்சொல் எல்லாம் 448
இடைச்சொற் கிளவியும் 156
இடையெனப் படுப 244
இதன திதுவிற்று 106
இதுசெயல் வேண்டும் 238
இயற்கைப் பொருளை 19
இயற்சொல் திரிசொல் 391
இயற்பெயர்க் கிளவியும் 38
இயற்பெயர்சினைப்பெயர் 171
இயைபே புணர்ச்சி 302
இர்ஈர் மின்னென 219
இரட்டைக் கிளவி 48
இரண்டன் மருங்கின் 89
இரண்டா குவதே 72
இருதிணைச் சொற்கும் 169
இருதிணைப் பிரிந்த 158
இருதிணை மருங்கின் 10
இருபெயர் பலபெயர் 411
இலம்பா டொற்கம் 354
இறப்பின் நிகழ்வின்...அ 197
இறப்பின் நிகழ்வின்...சி 421
இறப்பே யெதிர்வே 242
இறுதியும் இடையும் 99
இறைச்சிப் பொருள்வயின் 193
இன்றில வுடைய 216
இன்ன பெயரே 190
இனச்சுட் டில்லாப் 18
இனைத்தென வறிந்த 33
ஈதா கொடுவெனக் 438
ஈரள பிசைக்கும் 276
ஈற்றினின் றிசைக்கும் 281
ஈற்றுப்பெயர் முன்னர் 92
உகப்பே யுயர்தல் 299
உகரந் தானே 120
உசாவே சூழ்ச்சி 364
உணர்ச்சி வாயில் 387
உம்உந் தாகும் 287
உம்மை எச்சம் 430
உம்மை தொக்க 284
உம்மை யெண்ணின் 286
உம்மை யெண்ணும் 282

உயர்திணை மருங்கின் 415
உயர்திணை யென்மனார் 1
உயாவே யுயங்கல் 363
உரிச்சொற் கிளவி 292
உரிச்சொன் மருங்கினும் 449
உருபுதொடர்ந் தடுக்கிய 98
உருவுட் காகும் 295
உருவென மொழியினும் 24
உரையிடத் தியலும் 451
உவமத் தொகையே 408
உளவெனப் பட்ட 149
எச்சஞ் சிறப்பே 250
எச்ச வும்மையும் 278
எஞ்சிய இரண்டன் 141
எஞ்சிய கிளவி 220
எஞ்சிய மூன்றும் 433
எஞ்சுபொருட் கிளவி 279
எடுத்த மொழியினம் 61
எண்ணுங் காலும் 47
எண்ணே காரம் 283
எதிர்மறுத்து மொழியினும் 103
எதிர்மறை எச்சம் 429
எப்பொரு ளாயினும் 35
எய்யாமை யறியாமை 336
எல்லாச் சொல்லும் 152
எல்லாத் தொகையும் 414
எல்லாம் என்னும் 183
எல்லாரும் என்னும் 161
எல்லே விளக்கம் 264
எவ்வயிற் பெயரும் 69
எவ்வயின் வினையும் 422
எழுத்துப்பிரிந் திசைத்தல் 389
எற்றென் கிளவி 258
எறுழ்வலி ஆகும் 382
என்றுமெனவும் 289
என்றென் கிளவியும் 254
எனஎன் எச்சம் 432
ஏவுங் குரையும் 267
ஏழாகுவதே 77
ஏற்றம் நினைவும் 331
ஏனை உயிரே 121
ஏனைக் காலமும் 243
ஏனைக் கிளவி 187
ஏனைப் புள்ளி 126
ஏனை யிரண்டும் 30
ஏனை யுருபும் 107
ஏனை யெச்சம் 227
ஐந்தா குவதே 75
ஐயமும் கரிப்பும் 378
ஐயும் கண்ணும் 101
ஐவியப் பாகும் 379
ஒப்பில் போலியும் 273
ஒருபெயர்ப் பொதுச்சொல் 49
ஒருபொருள் இருசொல் 453
ஒருபொருள் குறித்த ... சொல் 393
ஒருபொருள் குறித்த ... கிளவி 42
ஒருமை சுட்டிய எல்லா 180
ஒருமை சுட்டிய பெயர் 454
ஒருமை யெண்ணின் 44
ஒருவர் என்னும் 188
ஒருவரைக் கூறும் 27
ஒருவினை ஒடுச்சொல் 87
ஒழியிசை எச்சம் 428
ஒன்றறி கிளவி 8
ஒன்றறி சொல்லே 3
ஒன்றன் படர்க்கை 213
ஒன்றுவினை மருங்கின் 54
ஓம்படைக் கிளவிக்கு 93
ஓய்த லாய்தல் 324
ஓவும் உவ்வும் 119
கடதற என்னும் 200
கடி சொல் லில்லைக் 446
கண்டீர் என்றா 419
கண்ணுந் தோளும் 62
கதழ்வுந் துனைவும் 309
கம்பலை சும்மை 343
கமம்நிறைந் தியலும் 349
கயவென் கிளவி 316

| | |
|---|---|
| கரும மல்லாச் | 80 |
| கருவி தொகுதி | 348 |
| கவவகத் திடுமே | 351 |
| கழிவே யாக்கம் | 247 |
| கழுமென் கிளவி | 345 |
| கள்ளொடு சிவணும் | 166 |
| கறுப்பும் சிவப்பும் | 366 |
| கன்றலுஞ் செலவும் | 82 |
| காலந் தாமே | 196 |
| கால முலகம் | 58 |
| கிளந்த அல்ல | 114, 291 |
| கிளந்த இறுதி | 147 |
| குஐ ஆன்என | 104 |
| குடிமை யாண்மை | 57 |
| குத்தொக வரூஉங் | 95 |
| குருவுங் கெழுவும் | 296 |
| குறிப்பினும் வினையினும் | 198 |
| குறைச்சொற் கிளவி | 447 |
| கூர்ப்புங் கழிவும் | 308 |
| கூறிய கிளவிப் | 384 |
| கூறிய முறையின் | 70 |
| கெடவரல் பண்ணை | 313 |
| கேட்டை என்றா | 420 |
| கொடுஎன் கிளவி உயர்ந்தோன் | 441 |
| கொடுஎன் கிளவி படர்க்கை | 442 |
| கொல்லே ஐயம் | 263 |
| சாயன் மென்மை | 319 |
| சிதைந்தன வரினும் | 396 |
| சிறப்பி னாகிய | 41 |
| சினை நிலைக்கிளவிக்கு | 81 |
| சீர்த்தி மிகுபுகழ் | 306 |
| சுட்டுமுதலாகிய | 40 |
| சுட்டுமுதற் பெயரும் | 145 |
| சுட்டுமுதற் பெயரே | 139 |
| சுண்ணம் தானே | 400 |
| செந்தமிழ் சேர்ந்த | 394 |
| செப்பினும் வினாவினும் | 16 |
| செப்பும் வினாவும் | 13 |
| செப்பே வழீஇயினும் | 15 |
| செய்து செய்யூச் | 223 |
| செய்தெ னெச்சத்து | 234 |
| செய்யாய் என்னும் | 444 |
| செய்யுள் மருங்கினும் | 456 |
| செயப்படு பொருளைச் | 241 |
| செயற்கைப் பொருளை | 20 |
| செல்ல லின்னல் | 297 |
| செலவினும் வரவினுந் | 28 |
| செழுமை வளனுங் | 346 |
| சேரே திரட்சி | 357 |
| சொல்என் எச்சம் | 435 |
| சொல்லெனப் படுப | 155 |
| ஞெமிர்தலும் பாய்தலும் | 355 |
| தகுதியும் வழக்குந் | 17 |
| தஞ்சக் கிளவி | 261 |
| தடவுங் கயவும் | 314 |
| தடுமாறு தொழிற்பெயர்க்கு | 91 |
| தத்தம் எச்சமொடு | 232 |
| தநநு எஎனும் | 404 |
| தநநு எயென | 151 |
| தன்மேற் செஞ்சொல் | 431 |
| தன்மைச் சொல்லே | 43 |
| தன்மை சுட்டலும் | 25 |
| தன்மை சுட்டின் | 189 |
| தன்னுள் உறுத்த | 184 |
| தாம்என் கிளவி | 181 |
| தாவென் கிளவி | 440 |
| தானென் கிளவி | 182 |
| தானென் பெயருஞ் | 134 |
| திணையொடு பழகிய | 194 |
| தீர்தலுந் தீர்த்தலும் | 312 |
| துயவென் கிளவி | 362 |
| துவன்றுநிறை வாகும் | 326 |
| துவைத்தலும் சிலைத்தலும் | 352 |
| தெரிநிலை யுடைய | 168 |
| தெரிபுவேறு நிலையலும் | 154 |
| தெவ்வுப் பகையாகும் | 340 |
| தெவுக்கொளற் பொருட் | 338 |
| தெளிவி னேயும் | 256 |

| | | | |
|---|---|---|---|
| தேற்றம் வினாவே | 252 | பிரிநிலை வினையே | 424 |
| தொழிலிற் கூறும் | 130 | பிறிதுபிறி தேற்றலு | 100 |
| தொழிற்பெயர் ஆயின் | 136 | பின்முன் கால்கடை | 224 |
| நம்புமேவு | 323 | புதிதுபடற் பொருட்டே | 373 |
| நளியென்கிளவி | 317 | புலம்பே தனிமை | 325 |
| நன்றீற் றேயும் | 277 | புள்ளியும் உயிரும் | 148 |
| நன்று பெரிதாகும் | 337 | புனிறென் கிளவி | 369 |
| நனவே களனும் | 370 | பெண்மைச்சினைப்பெயர் | 174 |
| நான்கா குவதே | 74 | பெண்மை சுட்டிய | 4, 175, 177 |
| நிகழூஉ நின்ற | 170 | பெண்மை முறைப்பெயர் | 176 |
| நிரனிறை சுண்ணம் | 398 | பெயர்நிலைக் கிளவி | 71 |
| நிலப்பெயர் குடிப்பெயர் | 162 | பெயர்நிலைக் கிளவியின் | 443 |
| நிலனும் பொருளும் | 229 | பெயரின் ஆகிய | 68 |
| நிறத்துரு வுணர்த்தற்கு | 367 | பெயரினுந் தொழிலினும் | 50 |
| நின்றாங் கிசைத்தல் | 59 | பெயரெஞ்சு கிளவி | 427 |
| நீயிர் நீயென | 185 | பெயரெஞ்சு கிளவியும் | 231 |
| நும்மின் திரிபெயர் | 140 | பேநா முருமென | 359 |
| நொசிவும் நுழைவு | 368 | பையுளுஞ் சிறுமையும் | 335 |
| பசப்புநிற னாகும் | 301 | பொருட்குத் திரிபில்லை | 386 |
| படரேயுள்ளல் | 334 | பொருட்குப் பொருள் | 385 |
| பண்புகொள் பெயரும் | 131, 137 | பொருண்மை சுட்டல் | 67 |
| பண்புதொக வரூஉம் | 412 | பொருண்மை தெரிதலும் | 153 |
| பணையே பிழைத்தல் | 333 | பொருள் தெரிமருங்கின் | 402 |
| பயப்பே பயனாம் | 300 | பொருளொடு புணராச் | 37 |
| பரவும் பழிச்சும் | 376 | பொற்பே பொலிவு | 329 |
| பல்ல பலசில | 165 | மகடூஉ மருங்கின் | 191 |
| பல்லா றாகப் | 79 | மதவே மடனும் | 371 |
| பல்லோர் படர்க்கை | 222 | மழவுங் குழவும் | 305 |
| பலவயி னானும் | 51 | மற்றென் கிளவி | 257 |
| பழுதுபய மின்றே | 318 | மற்றைய தென்னும் | 259 |
| பன்முறை யானும் | 228 | மறைக்குங் காலை | 437 |
| பன்மை சுட்டிய | 179 | மன்றஎன் கிளவி | 260 |
| பன்மையும் ஒருமையும் 205, 211, 214 | | மன்னாப் பொருளும் | 34 |
| | | மாதர் காதல் | 322 |
| பாலறி மரபின் | 208 | மாரைக் கிளவியும் | 204 |
| பான்மயக் குற்ற | 23 | மாலை யியல்பே | 307 |
| பிண்டப் பெயரும் | 86 | மாவென்கிளவி | 268 |
| பிணையும் பேணும் | 332 | மிக்கதன் மருங்கின் | 237 |
| பிரிநிலை வினாவே | 251 | மிகுதியும் வனப்பும் | 372 |

| | |
|---|---|
| மியாயிக மோமதி | 269 |
| முதலிற் கூறும் | 110 |
| முதலுஞ் சினையும் | 85 |
| முதற்சினைக் கிளவிக்கு | 83 |
| முதன்முன் னைவரின் | 84 |
| முந்நிலைக் காலமும் | 235 |
| முரஞ்சன் முதிர்வே | 327 |
| முழுதென் கிளவி | 320 |
| முற்படக் கிளத்தல் | 39 |
| முற்றிய வும்மைத் | 280 |
| முறைப்பெயர்க்கிளவி..ஏ | 133 |
| முறைப்பெயர்க்கிளவி..மு | 144 |
| முறைப்பெயர் மருங்கின் | 123 |
| முன்னத்தி னுணரும் | 452 |
| முன்னிலை சுட்டிய | 455 |
| முன்னிலை வியங்கோள் | 217 |
| முனைவு முனிவாகும் | 380 |
| மூன்றனும் ஐந்தனும் | 88 |
| மூன்றா குவதே | 73 |
| மெய்பெறக் கிளந்த | 383 |
| மொழிப்பொருட் காரணம் | 388 |
| மொழிமாற் றியற்கை | 403 |
| யாஅ ரென்னும் | 207 |
| யாகா பிறபிறக்கு | 274 |
| யாணுக் கவினாம் | 375 |
| யாதன் உருபின் | 102 |
| யாதெவன் என்னும் | 31 |
| ரஃகா னொற்றும் | 7 |
| வடசொற் கிளவி | 395 |
| வண்ணத்தின் வடிவின் | 410 |
| வம்பு நிலையின்மை | 321 |
| வயவலி யாகும் | 360 |
| வயாஎன் கிளவி | 365 |
| வறிதுசிறி தாகும் | 330 |
| வன்புற வரூஉம் | 239 |
| வார்தல் போகல் | 311 |
| வாராக் காலத்தும் நிகழும் | 236 |
| வாராக் காலத்து வினைச் | 240 |
| வாரா மரபின | 416 |
| வாளொளி யாகும் | 361 |
| வியங்கோ ளெண்ணுப் பெயர் | 45 |
| வியலென் கிளவி | 358 |
| விரைசொல் லடுக்கே | 418 |
| விழுமஞ் சீர்மையும் | 347 |
| விழைவின் றில்லை | 255 |
| விழைவே காலம் | 248 |
| விளிகொள் வதன்கண் | 64 |
| விளியெனப் படுப | 115 |
| விறப்பு முறப்பும் | 341 |
| வினாவுஞ் செப்பே | 14 |
| வினையிற் றோன்றும் | 11 |
| வினையின் தொகுதி | 409 |
| வினையினும் பண்பினும் | 143 |
| வினையெஞ்சு கிளவிக்கு | 426 |
| வினையெஞ்சு கிளவியும் | 450 |
| வினையெனப் படுவது | 195 |
| வினையே குறிப்பே | 253 |
| வினையே செய்வது | 108 |
| வினையொடு நிலையினும் | 288 |
| வினைவேறு படாஅப் | 55 |
| வினைவேறு படூஉம்..வி | 52 |
| வினைவேறு படூஉம்..வே | 53 |
| வெம்மை வேண்டல் | 328 |
| வெளிப்படு சொல்லே | 293 |
| வேற்றுமைத் தொகையே | 406 |
| வேற்றுமை தாமே | 63 |
| வேற்றுமைப் பொருளை | 78 |
| வேற்றுமை மருங்கின் | 112 |
| வேறுவினைப் பொதுச்சொல் | 46 |
| வையே கூர்மை | 381 |
| ளஃகா னொற்றே | 6 |
| னஃகா னொற்றே | 5 |
| னரலள என்னும் | 125 |

# சொல் நிரல்

## (மேற்கோள்)

### (எண் : நூற்பா எண்)


**அ**

அணிலே 148
அத்தா 123
அத்திகோசத்தார் 162
அது 245
அம் 245
அம்பர்கிழான் 162
அம்மா 150
அரசர் 162
அருமை 390
அருவாளன் 162
அல்லர் 210
அல்லள் 210
அல்லன் 210
அவர் 139
அவள் 145,158
அவன் 134,158
அழாஅன் 132
அன் 245
அன்னா 123

**ஆ**

ஆடூஉ 158
ஆம் 245
ஆயர் 162
ஆன் 245

**இ**

இருமை 390
இருவர் 162
இல்லது 167
இல்லர் 210
இல்லள் 210
இல்லன் 210
இல்லன 167
இவர் 139
இவள் 145
இவன் 134
இன் 245

**உ**

உடையர் 210
உடையள் 210
உடையன் 210
உடையாம் 210
உடையேன் 210
உண் 218
உண்கு 200
உண்கும் 199
உண்குவம் 199
உண்குவர் 203
உண்குவள் 202
உண்குவன் 202
உண்குவிர் 219
உண்குவெம் 199
உண்குவென் 200
உண்குவேன் 200
உண்குவை 218
உண்டது 8,213
உண்டல் 71
உண்டன 9,212
உண்டனம் 199
உண்டனர் 203
உண்டனள் 202
உண்டனன் 202
உண்டனிர் 219

உண்டனெம் 199
உண்டனை 218
உண்டாம் 199
உண்டாய் 130, 143, 218, 218, 421
உண்டார் 7, 203
உண்டாள் 6, 143, 202
உண்டான் 5, 130, 195, 197, 202, 244
உண்டி 218
உண்டீர் 219
உண்டு 200
உண்டும் 199
உண்டேம் 199
உண்டேன் 200,236,421
உண்ணா 9,212
உண்ணாநின்றனர் 203
உண்ணாநின்றனள் 202
உண்ணாநின்றனன் 202
உண்ணாநின்றனிர் 219
உண்ணா நின்றனெம் 200
உண்ணாநின்றனை 218
உண்ணாநின்றார் 7,203
உண்ணாநின்றாள் 6,202
உண்ணாநின்றான் 5,197,202
உண்ணாநின்றீர் 219
உண்ணாநின்றேன் 200
உண்ணாநின்றோம் 199
உண்ப 7, 203
உண்பது 8, 213
உண்பல் 200
உண்பன 9, 212
உண்பாம் 199
உண்பார் 7, 203
உண்பாள் 6, 202
உண்பான் 5, 197, 202
உண்பீர் 219
உண்பேம் 199
உண்மின் 219
உரினுதும் 199
உவர் 139
உவள் 145
உவன் 134
உழக்கு 113
உள்ளது 167
உள்ளன 167
உளர் 210
உளள் 210
உளன் 210

**ஊ**

ஊர 128

**எ**

எட்டி 163
எம்மார் 151
எம்மாள் 142,151
எமமான் 151
எமர் 151,404
எமள் 151,404
எமன் 151,404
எழுத்து 114

**ஏ**

ஏறு 110
ஏனாதி 163

**ஒ**

ஒடு 245
ஒருவர் 162
ஒன்று 114, 165

**க**

கடல் 166
கடியாள் 142
கடு 111
கண் 245
கண்டிகும் 245
கணியீரே 136
கணியே 121
கபிலம் 110
கரிய 9, 165, 216
கரியது 8, 165, 216
கரியர் 7, 210
கரியள் 6, 210
கரியன் 5, 195, 210
கரியாய் 131, 143
கரியாள் 143
கரியான் 162
கரியேன் 421
கழுதை 166

காவிதி 163
காளை 194
குண்டுகட்டு 8, 213
குத்து 110
குதிரை 166
குரிசீல் 141
குழவி 171
குழிப்பாடி 110
குறுங்கோட்டது 216
குறுங்கோட்டன 216
குறுங்கோல் 410
கூத்தீர் 135
கூந்தால் 147
கூயிற்று 8, 213
கேண்மியா 245, 269
கொல்லன் 162
கொற்றன் 171
கொன்னை 246
கோ
கோமாள் 142
கோவே 119

ச

சங்கிராமத்தார் 162
சாத்தற்கு 70
சாத்தன் 158, 171
சாத்தன்கண் 70
சாத்தனதனை 100
சாத்தனதனொடு 100
சாத்தனது 70
சாத்தனின் 70
சாத்தனை 90
சாத்தா 147, 149, 150
சாத்தீ 147
சில்லவை 167
சிறாஅர் 138
சீத்தலைசாத்தான் 171
சுண்ணத்தான் 163
சுருசுருத்தது 48
சுறுசுறுத்தது 48
செத்தார் 443
செய்ய 9
செய்யது 8
செய்யர் 7
செய்யள் 6
செய்யன் 5
செய்யாய் 131
செய்யான் 162
செய்யீரே 137
செல்வ 165
சென்றீரே 136
சேண்மை 390
சேர்ப்ப 128
சேர்ப்பன் 162
சேர்ப்பா 127
சேரமான் 129, 162
சேறு 200
சேறும் 199
சோ
சோழா 127
சோழியன் 162

ஞ

ஞமலி 394
ஞாய் 404

த

தச்சன் 162
தண்டை 397
தந்தாய் 147
தந்தை 171
தந்தையர் 162
தம்மார் 151
தம்மாள் 151
தம்மான் 151
தமர் 151, 404
தமள் 151, 404
தள்ளை 394
தாய் 177, 404
தாயர் 162
தாயிற்று 8, 213
தான் 134
திருமுதும் 199
தின் 218
தின்குவ 9, 212
தின்ப 7, 203

தின்பல் 200
தின்மின் 219
தின்றல் 71
தின்றான் 71
தின்றி 218
தின்னா 9, 212
தீயர் 210
தீயள் 210
தீயன் 210
துலாம் 113
தெங்கு 110, 111, 166
தொடி 113
தொல்காப்பியம் 110
தொழீஇ 122

**ந**

நங்காய் 118
நட 218
நம்பி 149, 158, 389
நம்பியீரே 136
நம்பீ 118
நம்மார் 151
நம்மாள் 151
நம்மான் 151
நமர் 151, 404
நமள் 151, 404
நமன் 151, 404
நரியே 148
நல்லர் 210
நல்லள் 210
நல்லன் 210
நன்காடு 443
நாய் 166
நாழி 113
நிலத்தர் 210
நிலத்தள் 210
நிலத்தன் 210
நீலம் 110, 111
நும்மார் 151
நும்மான் 151
நுமர் 151, 404
நுமள் 151, 404
நுமன் 151, 404
நூறு 114

**ப**

பட்டி 162
பத்து 114, 165
பல்லவை 167
பலா 166
பாசிலை 397
பார்ப்பார் 162
பார்ப்பீர் 135
பிற 167
பிறர் 163
பிறள் 163
பிறன் 163
பிறிது 167
புத்திரர் 162
புலியே 148
புழாஅன் 132
பூண்டே 147
பெண்டாட்டி 158
பெண்டிரே 126
பெண்பால் 142
பெண்மகன் 158
பெரியாள் 142
பெருங்காலர் 162
பெருங்காலன் 171
பெருங்கூத்தன் 18
பெருங்கொற்றன் 18, 61
பெருஞ்சாத்தன் 61
பெருந்தோளர் 162
பேரூர்கிழான் 162
பொற்றொடி 110
பொன்னன்ன 165
பொன்னன்னது 165, 216
பொன்னன்னர் 210
பொன்னன்னள் 210
பொன்னன்னன் 210
பொன்னன்னை 216
போந்தேன் 236

**ம**

மக்கள் 158
மக்காள் 141
மக 171
மகடூஉ 158
மகள் 158

மகளே 144, 147
மகனே 133
மகாஅர் 138
மரமே 148
மருமகளே 144
மருமகனே 133
மலையமான் 129, 162
மற்றையது 167
மற்றையவை 167
மற்றையார் 163
மற்றையாள் 163
மற்றையான் 163
மன்னை 246
முடவன் 171
முப்பத்துமூவர் 162
மூவர் 162

**ய**

யாது 31
யாய் 404
யாவர் 31
யாவள் 31, 145
யாவன் 31, 134
யாவை 31
யான் 134

**வ**

வண்ணத்தான் 163
வணிகர் 162
வருது 200
வருதும் 199
வருவ 165
வல்லர் 210
வல்லள் 210
வல்லன் 210
வனைந்தான் 108
வா 218
வாயிலான் 163
வாளி 404
விடலை 194
வில்லி 404
விழுமியர் 347
விளி 245
வெற்பன் 162
வெறுத்தார் 341
வேட்டுவர் 162
வேந்தே 119
வேளாளர் 162
வைதிலேன் 239
வைதேன் 239

# சொற்றொடர் நிரல்

## (மேற்கோள்)

### (எண் : நூற்பா எண்)


**அ**

அஃதே அஃதே 418
அக்குழு நன்று 57
அங்கலுழ் மாமை 454
அட்ட செந்நெற் சோறு 232
அடிசில் அயின்றார் 46
அடுஞ் செந்நெற் சோறு 232
அடைக்காயை எண்ணும் 72
அணிகலம் 329
அணிகலம் பொற்ப 329
அதிர்கண் முரசம் 310
அது இல்லை 222
அது உண்ட இல்லம் 229
அது உண்ணும் 222
அது உண்ணும் இல்லம் 229
அது உண்ணும் ஊண் 229
அது எறியுங் கல் 229
அது ஓதுங் காலை 229
அது கையிற்று வீழ்ந்தது 226
அது கையிறுபு வீழ்ந்தது 226
அது கையிறூ வீழ்ந்தது 226
அது செய்யும் பொருள் 229
அது செல்க 221
அது பிற 274
அது பிறக்கு 274
அது வந்தன 11
அது வந்தார் 11
அது வந்தாள் 11
அது வந்தான் 11
அந்தோ அந்தோ 277
அரசர் ஆயிர மக்களொடு தாவடி போயினார் 50
அரசர் பெருந்தெரு 50
அரசு வன்மை நன்று 57
அரசரைச் சார்ந்தான் என்புழி அரசர்கட் சார்ந்தான் 80
அரசனார் வந்தார் 265
அரசனொடு வந்தார் சேவகர் 87
அரசு நிலைத்ததுது 57
அரிசியை அளக்கும் 72
அலி வந்தது 57
அவர் இல்லை 220
அவர் உண்ட இல்லம் 229
அவர் உண்ணும் இல்லம் 230
அவர்க்கு அடிமை நன்று 57
அவர்க்கு ஆண்மை நன்று 57
அவர்க்கு இளமை நன்று 57
அவர்க்குக் குடிமை நன்று 57
அவர்க்கு மூப்பு நன்று 57
அவர் செய்ம்மன 220
அவர் செல்க 221
அவர் வந்தன 11
அவர் வேறு 220
அவள் இல்லை 220
அவள் உண்ட இல்லம் 229
அவள் உண்ணும் 222
அவள் உண்ணும் ஊண் 229
அவன் எறியுங் கல் 229
அவள் ஓதுங்காலை 229
அவள் செய்ம்மன 220
அவள் செய்யும் பொருள் 229
அவள் செல்க 221
அவள் வந்தது 11
அவள் வந்தார் 11

அவள் வந்தான் 11
அவள் வேறு 220
அவற்குக் கொடுக்குங் காணம் 30
அவற்குச் செல்லுங் காணம் 30
அவன் இல்லை 220
அவன் உண்ட இல்லம் 229
அவன் உண்ணும் 222
அவன் உண்ணும் இல்லம் 229
அவன் எறியுங் கல் 229
அவன் ஓதும் காலை 229
அவன் செய்ம்மன 220
அவன் செய்யும் பொருள் 229
அவன் செல்க 221
அவன் வந்தது 11
அவன் வந்தன 11
அவன் வந்தார் 11
அவன் வந்தாள் 11
அவன் வேறு 220
அவனது செயற்கை 76
அவனது துணை 76
அவனது முதுமை 76
அவனது வினை 76
அவனுந்தன் படைக்கலமுஞ் சாலும் 43
அவனே கொண்டான் 252, 425
அவனோ அலனோ 251
அவனோ கொண்டான் 251,425
அவை இல்லை 220
அவை உண்ட இல்லம் 229
அவை எறியுங் கல் 229
அவை ஓதுங் காலை 229
அவை செய்ம்மன 222
அவை செய்யும் பொருள் 229
அவை வந்தது 11
அவை வந்தார் 11
அவை வந்தாள் 11
அவை வந்தான் 11
அவை வேறு 222
அறஞ்செய்தான் சுவர்க்கம் புகும் 237
அறிவு துயவுறுத்தார் 362
அறுத்துக் குறைத்துச் சுகிர்ந்து வகிர்ந்திட்டான் 288
அறுத்தும் குறைத்தும் சுகிர்ந்தும் வகிர்ந்தும் இட்டான் 288
அன்றே அன்றே 277
அன்னோ அன்னோ 277


## ஆ


ஆ உண்டு 67
ஆ எவன் 67
ஆ கரிது 67
ஆ கிடந்தது 67
ஆசிரியன் பேரூர் கிழான் செயிற்றிய னிளங் கண்ணன் சாத்தன் வந்தான் 42
ஆ செல்க 67
ஆடை கொடு 441
ஆடை சாத்தனது 99
ஆடை தா 440
ஆண் பால் 142
ஆதீண்டு குற்றி 50
ஆயன் சாத்தன் வந்தான் 66
ஆவிற்குக் கன்று 106
ஆவினது கன்று 76, 106
ஆவும் ஆயனும் செல்க 45
ஆன் கன்று நீரூட்டுக 55
ஆன பயமுந் தூக்கினென் 300


## இ


இக்காடு போகிற் கூறை கோட்பட்டான் 240
இக்காடு போகிற் கூறை கோட்படும் 240
இசைந் தொழுகும் 303
இதனின் கடிது இது 75
இதனிற் சிறிது இது 75
இதனிற் பெரிது இது 75
இதனிற் நீது இது 75
இதனிற் நீவிது இது 75
இதனின் தண்ணிது இது 75
இதனின் நன்று இது 75
இதனின் நாறும் இது 75
இதனின் நெடிது இது 75
இதனின் மெலிது இது 75
இதனின் வட்டம் இது 75
இதனின் வலிது இது 75
இதனின் வெய்யது இது 75
இது பிற 274
இந்நாழிக்கு இந்நாழி சிறிது பெரிது 451

இப்பண்டியுள்ளது எவன்? 31
இப் பயறல்ல தில்லை 36
இம் மகள் கண் நல்லவோ?
இக் கயல் நல்லவோ? 16
இயமரம் இயம்பினார் 46
இயைந் தொழுகும் 302
இருந்தான் குன்றத்து 101
இருந்தான் குன்றத்துக்கண் 99,101
இல்லம் மெழுகிற்று 241
இலை நட்டு வாழும் 110
இவ்வெருது புற்றின்னும் 50
இவட்குக் கொள்ளும் இவ்வணி 106
இவர் பெரிதுஞ் சோறுண்ப 50
இவர் பெரிதும் கால்கொண் டோடுப 50
இவரின் சிலர் இவர் 75
இவரின் பலர் இவர் 75
இவற்கு ஊண் கொடு 441
இவற்குக் காலம் ஆயிற்று 58
இவற்குத் தெய்வம் ஆயிற்று 58
இவனிற் சிறந்தான் இவன் 75
இவனிற் பழையன் இவன் 75
இவனிற் புதியன் இவன் 75
இவனின் ஆயினான் இவன் 75
இவனின் இலன் இவன் 75
இவனின் இழிந்தான் இவன் 75
இவனின் உடையன் இவன் 75
இவனின் மூத்தான் இவன் 75
இவளைக் கொள்ளும் இவ்வணி 106
இவனைப் பூதம் புடைத்தது 58
இவை யல்லது பயறில்லை 36
இல்முன் என்பதனை
முன்றில் என்பது 17
இன்று இவ்வூர்ப் பெற்றமெல்லாம் அறங்
கறக்கும் 50
இன்று இவ்வூர்ப் பெற்றமெல்லாம்
உழவொழிந்தன 50
இன்று இவ்வூரெல்லாம்
தைநீர் ஆடுப 50

உ

உடம்பு நன்று 58
உடுக்கை ஈ 439
உடைய திகழ்ந்து
உயிரிரங்கி இருந்தார் 353
உண்கும் வந்தேம் 201
உண்கு வந்தேன் 201
உண்ட சாத்தன் 427
உண்டது 8, 213
உண்டருந்து 397
உண்டன 9,212
உண்டாய் அவன் 11
உண்டாய் யான் 11
உண்டார் 7,203
உண்டாள் 6,143,202
உண்டான் 5,130,195,197,202,244
உண்டான் தின்றான்
ஓடினான், பாடினான், சாத்தன் 423
உண்டான் நீ 11
உண்டான் யான் 11
உண்டு வந்தான் 231
உண்டுவருஞ் சாத்தான் 234
உண்டேன் அவன் 11
உண்டேன் நீ 11
உண்ணாச் சாத்தன் 231
உண்ணாது வந்தான் 231
உண்ணா நின்றது 8,213
உண்ணா வந்தான் 225
உண்ணான் சாத்தன் 231
உண்ணுஞ் சாத்தான் 231, 427
உண்ணும் அது 229
உண்ணும் அவர் 229
உண்ணும் அவன் 229
உண்ணூ வந்தான் 225
உண்பாக்கு வந்தான் 224
உண்பான் வந்தான் 224
உதுகா 274
உது பிற 274
உப்புக் கழிந்தது 308
உப்புக் கூர்ந்தது 308
உயிர் போயிற்று 58
உலகத்தார் பசித்தார் 60
உலகம் பசித்தது 58
உவாப்பதினான்கு 411
உழுது உண்டு தின்று ஓடிப்
பாடி வந்தான் 228
உழுது வந்தான் 225, 426
உழுது வந்தேன் 227

உழுது வருஞ் சாத்தன் 234
உழுந் தல்ல 216
உழுந்துள 216
உறையூர்க்குப் பெரிது கருவூர் 106
உறையூரிற் பெரிது கருவூர் 106

**ஊ**

ஊர்க்கண் ணிருந்தான் 77
ஊர்க்கா லிருந்தான் 77
ஊர்க்குச் சேயன் 106
ஊர்க்குத் தீர்ந்தான் 106
ஊர்க்குப் பற்று விட்டான் 106
ஊர் கடிந்தார் 377
ஊர் கம்பலை யுடைத்து 343
ஊர் சும்மை யுடைத்து 343
ஊர்ப்புடை யிருந்தான் 77
ஊரகத் திருந்தான் 77
ஊரய லிருந்தான் 77
ஊரிற் சேயன் 106
ஊரின் பற்று விட்டான் 75, 106
ஊரிற் றீர்ந்தான் 75, 106, 312
ஊரு ளிருந்தான் 77
ஊரை ஆக்கும் 72
ஊரைச் செறும் 72
ஊரைப் புகழும் 72
ஊரைப் பெறும் 72
ஊரையிழக்கும் 72
ஊரையின்புடையன் 72
ஊரை யொற்கந் தீர்க்கும் 354
ஊரைக் காக்கும் 72

**எ**

எட்குப்பை 76, 86
எட்சாந்து 86
எயிலை இழைக்கும் 72
எயின நாடு 49
எருப்பெய்து இளங்களை கட்டு நீர்கால்
யாத்தமை யாற் பைங்கூழ் நல்ல 22
எல்லாம் கொண்டாம் 280
எல்லாம் கொண்டார் 280
எல்லாம் வந்தன 183
எல்லாம் வந்தீர் 183
எல்லாம் வந்தேம் 183
எல்லாரும் வருவர் 280
எல்லாரும் வாரார் 280
எவன் அது 215
எவன் அவை 215
எள்ளினது சாந்து 76, 76
எள்ளொடு விராய அரிசி 73
எற்றத்திருந்தார் 331
எறும்பு முட்டை கொண்டு
தெற்றி ஏறின் மழைபெய்தது 240
எறும்பு முட்டை கொண்டு
தெற்றி ஏறின் மழைபெய்யும் 240
என் காதல் பொலிவாயிற்று 57
என் பாவை போயிற்று 27
என் யானை வந்தது 57
எனக்குத் தருங்காணம் 29
எனக்கு வருங்காணம் 29

**ஏ**

ஏர்ப்பின் சென்றான் 77
ஏழாட்டையான் 210
ஏனாதி நல்லுதடன் 41

**ஒ**

ஒக்கும் ஒக்கும் 405
ஒடுவங்காடு 49
ஒருத்தி யெனத் துணிந்தவழி
ஒருவன் அல்லன் ஒருத்தி 25
ஒருவர் அவர் 189
ஒருவர் வந்தார் 188
ஒருவன் எனத் துணிந்தவழி
ஒருத்தி அல்லள் ஒருவன் 25
ஒரு விரல் காட்டி நெடிதோ
குறிதோ என்பது வினா வழுஉ 13
ஒல்லென ஒலித்தது 434
ஒழுகு கொடி 311
ஒன்றுகொல்லோ பல
கொல்லோ செய் புக்க பெற்றம் 24

**ஓ**

ஓஒ பெரியன் 251, 256
ஓ கொண்டார் 246
ஓ தந்தார் 246
ஓர் ஆவினையும் எம்
அன்னை போயினள் 27
ஓர் ஆவினையும் எம்
அன்னை வந்தாள் என்ப 27

க

கடந்தான் நிலத்தை 99, 101
கடந்தான் நிலம் 101
கடலொடு காடொட்டாது 97
கடவுள் பரவினார் 376
கடிசூத்திரத்திற்குப் பொன் 74
கடித் தளிர் 377
கடிது வந்தார் 377
கடுங்கண் யானை 377
கடுத் தின்றான் 110
கடுவன் முதுமகன் 193
கடுவுங் கைபிழி யெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்லவாயின 21
கண் கதழ எழுதினார் 384
கண் கழீஇ வருதும் 17
கண் குறியரா யிருந்தார் 17
கண் சிவந்தன 367
கண்டை கண்டை 420
கண்ணாற் கொத்தை 73
கண்ணுட் குத்தினார் 81
கண்ணைக் குத்தினார் 81
கண் நல்லள் 62
கபில பரணர் 415
கபிலரது பாட்டு 76
கமுகந் தோட்டம் 49
கரும்பிற்கு வேலி 74
கரும்பு வேலி 407
கருவூர்க்குக் கிழக்கு 106
கருவூர்க்கு வழியெதென்றார்க்குப் பருநூல் பன்னிரு தொடியென்பது செப்பு வழுஉ 13
கருவூரின் கிழக்கு 106
கருவூரின் கிழக்கு மருவூரின் மேற்கு 75
கள்ளரின் அஞ்சும் 75
கள்ளரை யஞ்சும் 72
கறு கறுத்தது 48
கறுத்து வந்தார் 366
கன்னி எயில் 27
கன்னி ஞாழல் 27
காக்கையிற் கரிது களம்பழம் 75
காட்டது யானை 94
காட்டுச் சாரோடும் 77
காணத்தாற் கொண்டவரிசி 73
காத்தை காத்தை 420
காது நல்லள் 62
காரைக்காடு 49
காலன் கொண்டான் 60
காலெனா 284
கான்மேல் நீர்பெய்து வருதும் 436
கிளியை ஓப்பும் 72
குதிரைத்தேர் 79
குதிரை மேல் இருந்து கோல்தா என்றால் மத்திகைக் கோலாமாகலானும் சுள்ளற் கோலாமாகலானுஞ் செல்லும் 53
குதிரை வந்தது 168
குதிரை வந்தன 168
குரிசில் வந்தது 57
குருடு வந்தது 57
குருத்துளி பொழிந்தது 296
குழக்கன்று கடிதியாத்தாள் 305
குழல் கேட்டான் 114
குழவி அழுதது 57
குழைகொண்டு கோழி யெறியும் வாழ்க்கையர் 452
குழையை யுடையன் 72
குளம் பின்று 8
குற்றி கொல்லோ மகன் கொல்லோ தோன்றுகின்ற உரு 24
குற்றி யல்லன் மகன் என் புழிக் குற்றியின் அல்லன் என்று ஐந்தன் உருபு விரித்து உரைக்க 25
குற்றிளை நாடு 49
குறுந்தாட் கோழி 397
குன்றக் கூகை 407
குன்றத்துக்கண் ணிருந்தான் 99
கூழமர்ந் துண்டாள் 374
கூரியதொரு வாள்மன் 247, 428
கூழ் உண்டான் சோறும் உண்ணா நின்றான் 431
கூழ் உண்ணாநின்றான் சோறும் உண்பன் 431
கூழ்கண்டு வயாவினர் 365
கூழுக்குக் குற்றேவல் செய்யு மென்பது 74
கெழீஇயிலி வந்தது 57
கேட்டை கேட்டை 420

கைக்கு யாப்புடையது கடகம் 74
கையிற்று வீழ்ந்தான் 226
கையிறுபு வீழ்ந்தான் 226
கையிறூஉ வீழ்ந்தான் 226
கையும் மெய்யும் ஆய்ந்திருந்தார் 324
கொடி ஆடிற்று 109
கொடியாடித் தோன்றும் 234
கொடுத்தான் சாத்தற்கு 99
கொடும்புற மருது வந்தது 180
கொடும்புற மருது வந்தாள் 180
கொடும்புற மருது வந்தான் 180
கொப்பூழ் நல்லள் 62
கொல்யானை 68, 409
கொள்ளென்று கொண்டான் 254
கொள்ளெனக் கொண்டான் 253, 432
கொற்றன் என்றா 285
கொற்றன் நல்லனோ சாத்தன் நல்லனோ என்று கூறிய விடத்துக் கொற்றனிற் சாத்தன் நல்லன்; சாத்தனிற் கொற்றன் நல்லன் என்றிறுக்க 16
கொற்றன் மயிர் நல்லவோ சாத்தன் மயிர் நல்லவோ என்று வினாயினான் அவ் விடத்துக் கொற்றன் மயிரிற் சாத்தன் மயிர் நல்ல, சாத்தன் மயிரிற் கொற்றன் மயிர் நல்ல என்றிறுக்க 16
கொற்றன் வந்தான் அவற்குச் சோறு கொடுக்க 38
கொற்றன் வருதற்கும் உரியன் 250
கொற்றனெனா 285
கொன்னே வந்து கொன்னே போயினார் 249
கோட்டது நுனியைக் குறைத்தான் 85
கோட்டு நூறு 86
கோட்டை நுனிக்கண் குறைத்தான் 85
கோட்டை நுனியைக் குறைத்தான் 85
கோடில 216
கோடின்று 8, 216
கோடுடைத்து 216
கோதை வந்தது 180
கோதை வந்தாள் 180
கோதை வந்தான் 180

ச

சாத்தற்குச் சோறு 74
சாத்தற்கு நெடியன் 106
சாத்தற்குப் படுபொருள் கொற்றன் 74
சாத்தற்கு மகளுடம்பட்டார் 74
சாத்தன் என்றா 285
சாத்தன் ஓதல் வேண்டும் 238
சாத்தன் கையெழுதுமாறு வல்லன், அதனான் தன் ஆசிரியன் உவக்கும்40
சாத்தன் கையெழுதுமாறு வல்லன், அதனான் தன் தந்தை உவக்கும் 40
சாத்தன், கொற்றன், பூதன் என மூவரும் வந்தார் 285
சாத்தன் யாழ் எழூஉம் 170
சாத்தன் வந்தது 169, 178
சாத்தன் வந்தான் 153, 169, 178
சாத்தன், வந்தான், கொற்றன் வந்தான், வேடன் வந்தான், அம் மூவரும் வந்தார், அம்மூவரும் வந்தமை யான் கலியாணம் பொலிந்தது 288
சாத்தன தாடை 99
சாத்தன தியற்கை 76
சாத்தனது கலம் 76
சாத்தனது கிழமை 76
சாத்தனது சொல் 76
சாத்தன துடைமை 76
சாத்தனது நிலை 76
சாத்தனது வாழ்ச்சி 76
சாத்தனது வாள் 76
சாத்தனின் நெடியன் 106
சாத்தனும் வந்தான் 430
சாத்தனெனா 285
சாத்தனே, கொற்றனே பூதனே என மூவரும் வந்தார் 285
சாத்தனொடு வந்தான் கொற்றன் 73
சாத்தா உண்ணாயோ என்று வினாயி னாற்கு உடன்படுதல், மறுத்தல் என்று ஒன்றே இறுத்தற்பாலது 14
சாத்தா உறையூர்க்குச் செல்லாயோ வெனின் கடமுடையார் வளைப் பார் பகைவர் எறிவர் 15
சாத்தா உறையூர்க்குச் செல்லாயோ வெனின் கால் முள்குத்திற்று தலை நோகின்றது 15
சாத்தா உறையூர்க்குச் செல்லாயோ வெனின் நீசெல் 15
சாத்தி சாந்தரைக்கும் 170
சாத்தி வந்தது 177

சாத்தி வந்தாள் 177
சான்றார் மகன் 423
சான்றாருழைச் சென்றான் 77
சிவந்து நோக்கினார் 366
சுடுகாட்டை நன்காடென்றல் 17
சூதின்கட் கன்றினான் 82
சூதினைக் கன்றினான் 82
சூதினைக் கன்றும் 72
செஞ்செவிய வெள்ளொக்கலர் 452
செத்தாரை துஞ்சினார் என்றல் 17
செய்யை நோக்கும் 72
செலவழுங்கினார் 344
செவ்வாய் எழுந்தது 58
செவியிலி 216
செவியிலி வந்தது 180
செவியிலி வந்தாள் 180
செவியிலி வந்தான் 180
செவியின்று 216
செவியுடைத்து 216
செவியுடைய 216
செழுஞ் செந்நெல் 346
சென்மதி பெரும 269
சென்றதே சென்றதே 419
சொல் நன்று 58
சோழனா டென்பதைச் சோணாடு என்பது 17
சோழன் நலங்கிள்ளி 41
சோறு அட்டது. 241
சோறுண்பான் கூழுமுண்டான் 431
சோறுதா 440

ஞ

ஞாணை அறுக்கும் 72
ஞாயிறு எழுந்தது 58
ஞாயிறு பட்டு வந்தான் 450
ஞாயிறு பட வந்தான் 450

த

தட்டுப் புடைக்கண் வந்தான் 77
தடந்தோள் 314
தந்தை வந்தது 178
தந்தை வந்தான் 178
தம்முனே 126
தமிழ் நாட்டு மூவரும் வந்தார் 250
தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார் 33
தாம் வந்தன 181
தாம் வந்தார் 181
தாய்க்குக் காதலன் 74
தாய் மூவர் 407
தாய் வந்தது 177
தாய் வந்தாள் 177
தாயை ஒக்கும் 72
தாயைக் கொன்றான் நிரயம் புகும் 237
தான் வந்தது 182
தான் வந்தாள் 182
தான் வந்தான் 182
திங்கள் எழுந்தது 58
தினையிற் கிளியைக் கடியும் 98
தூணிப் பதக்கு 411
தெங்கினது காய் தெங்கு 112
தெங்கு தின்றான் 110
தொடியரை 411
தோள் நல்லள் 62

ந

நகுபு வந்தான் 225
நங்கை முலையிரண்டும் வீங்கின 33
நங்கை வாழி 124
நம் அரசன் ஆயிரம் யானையுடையன் 50
நம் எருதுள் ஐந்தனுள் யாது கெட்டது? 32
நம்பிக்கு மகன் 90
நம்பி கண்ணிரண்டும் நொந்தன 33
நம்பி நூறு எருமையையுடையவன் 50
நம்பி வந்தான் அவற்குச்சோறு கொடுக்க38
நம்பி வாழி 124
நரகர் வந்தார் 4
நரகன் வந்தான் 4
நரகி வந்தாள் 4
நரியன்று 216
நயார் வந்தார் 265
நளியிருள் 317
நன்றும் அன்று தீதும் அன்று 250
நன்றே நன்றே 277
நன்றோ, அன்று; தீதோ, அன்று 251
நாகர்க்குப் பலி 95
நாகர் பலி 95
நாகரது பலி 95
நாட்டைச் சிதைக்கும் 72
நாட்டைப் பழிக்கும் 72

நாமுசாக் கொள்ளாமோ 364
நாய்க்கு நட்புடையன் 74
நாய்கொல்லோ நரிகொல்லோ 263
நாயாற் கோட்பட்டான் 73
நாயொடு நம்பி வந்தான் 87
நாலாட்டையான் 210
நாவினை வளைக்கும் 72
நிலங்கடந்தான் 100, 407
நிலத்தின தகலம் 76
நிலத்தைக் கடந்தான் 99
நிலம் வலிது 19
நிலனும் நீரும் தீயும் வளியும் 250
நிலனும் நீரும் தீயும் வளியும் வெளியும் நல்ல 282
நிலனென்றா 284
நிலனெனா 284
நிலனே நீரே தீயே வளியே ஆகாயத் தோடைந்தே பூதம் 289
நிலனே நீரே தீயே வளியே ஆகாயமே252
நின்றை நின்றை 420
நினக்குத் தரும் காணம் 29
நினக்கு வருங் காணம் 29
நீஇர் உண்ணும் இல்லம் 230
நீ இல்லை 220
நீ உண்ணும் இல்லம் 230
நீ செல்க 221
நீ செய்ம்மன 220
நீயும் நின் படைக்கலமுறீ சாரீஞ் 43
நீயேஎ கொண்டாய் 256
நீயே கொண்டாய் 252
நீஇர் செல்க 221
நீரென்றா 284
நீரெனா 284
நீலத்தையுடைய ஆடை நீலம் 112
நீ வந்தாய் 186
நீ வெம்மையள் 328
நீ வேறு 221
நுந் நாடி யாது? 31
நுந் நாடி யாது? என்றால் தமிழ் நாடென்றல் 13
நூலைக் கற்கும் 72
நெடியனும் வலியனும் 250
நெடுங்கழுத்தல் வந்தது 179
நெடுங்கழுத்தல் வந்தன 179
நெடுங்கழுத்தல் வந்தாள் 179
நெடுங்கழுத்தல் வந்தான் 179
நெடுவெண்மதி 148
நெல்லைத் தொகுக்கும் 72
நெற்குப்பை 86
நெறிக்கட் சென்றான் 82
நெறியைச் செல்லும் 72
நெறியைச் சென்றான் 82

## ப

பசப்பித்துச் சென்றார் 301
பசுப் போல்வானைப் பசு என்ப 114
படர்மலி வெற்பர் 334
படையது குழாம் 76
படையை வெகுளும் 72
பண்டு காடுமன் 153, 247
பண்ணுக்குத் தக்கது பாடல் 74
பணைத்துப்போய் வீழ்ந்தது 333
பத்தானும் எட்டானும் கொடு 250
பத்துங் கொடான் 280
பயறல்ல 216
பயறுள 216
பயறுளவோ வணிகீர் என்றால் உழுந்தல்ல தில்லை என்க 35
பயிர் நல்ல வாயின 20
பவழக்கோட்டு நீலயானை சாத வாகனன் கோயிலுள்ளும் இல்லை 34
பழுதே வந்தார் 318
பாம்பு பாம்பு 405
பாம்பு பாம்பு பாம்பு 418
பார்ப்பனச் சேரி 49
பார்ப்பார் வந்தார் 265
பார்ப்பான் கண்ணன் 41
பாவை போல்வாளைப் பாவை என்ப 114
புருவம் நல்லன் 62
புலிகொல் யானை 91
புலிகொல் யானைக் கோடு வந்தன 92
புலிகொல்யானை கிடந்தது 92
புலிகொல்யானை தோன்றும் 92
புலிபோற்றிவா வாழி ஐய 93
புலியின் அஞ்சும் 96
புலியை அஞ்சும் 96
புலிவிற் கெண்டை 411
பூதன் என்றா 285

பூதனே 285
பூ நட்டு வாழும் 110
பூவிற்குத் தக்கது வண்டு 74
பெண்மகன் வந்தாள் 191
பெண்மை அடங்கிற்று 57
பெருங்கால் யானை வந்தது 179
பெருங்கால் யானை வந்தன 179
பெருங்கால் யானை வந்தாள் 179
பெருங்கால் யானை வந்தான் 179
பெருந்தேவி பொறையுயர்த்த
கட்டிற்கண் நால்வர் மக்கள் உளர் 50
பெருவிறல் வந்தது 57
பேடியர் வந்தார் 4
பேடி வந்தது 57
பேடி வந்தாள் 4
பேடி வந்தான் 4, 12
பேய்தீர்த்தான் 312
பைங்கூழ் நல்ல 22
பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றல் 17
பொறையுயிர்த்தார் 17
பொன்னை நிறுக்கும் 72
போயிற்றே போயிற்றே 419

ம

மக்கட்குப் பகை பாம்பு 74
மங்கலம் என்பதோர் ஊர்
உண்டு போலும் மழநாட்டுள் 273
மதகளிறு 371, 372
மயிர் நல்ல வாயின 20, 22
மரத்தைக் குறைக்கும் 72
மரத்தைக் குறைத்தான் 72
மரத்தைக் குறையான் 103
மரம் குழைத்தது 227
மருந்து உண்டு நல்லனாயினான் 426
மலை நிற்கும் 235
மலையொடு பொருத மாஅல்யானை 73
மழை பெய்தென உலகம் ஆர்ந்தது 227
மழை பெய்ய எழுந்தது 227
மற்றோ மற்றோ 405, 418
மனையிழந் தழுங்கினார் 344
மனைவியைக் காதலிக்கும் 72
மா காய்த்தது 53
மாடத்தின் கீழிருந்தான் 77
மாடத்தின் மேலிருந்தான் 77
மாடத்துக்கண் ணிருந்தான் 77
மாதர் வண்டொடு சுரும்பிசைத்தது 322
மா தளிர்த்தது 53
மா பூத்தது 53
மாரிக்கு வந்தான் 106
மாரியுள் வந்தான் 77, 106
மா வீழ்ந்தது 54
மாவும் மருதும் ஓங்கின 53
மாவும் மரையும் புலம்படர்ந்தன 53
முடக்கொற்றன் வந்தது 178
முடக்கொற்றன் வந்தான் 178
முடக்கொற்றி வந்தது 177
முடக்கொற்றி வந்தாள் 177
முடத்தி வந்தது 177
முடவன் வந்தது 169, 178
முடவன் வந்தான் 169, 178
முத்தொடு முழாக் கோத்து 73
முப்பத்து மூவரும் வந்தார் 4
முயற்சியிற் பிறத்தலின் ஒளி நிலையாது 75
முலை நல்லள் 62
முழுக்கறை பெய்தான் 320
முறைக் குத்தினார் 97
மூக்கு நல்லன் 62
மேற்சேரிக் கோழி அலைத்ததெனக்
கீழ்ச்சேரிக் கோழி அலைப்புண்டமை
சொல்லாமையே முடிந்ததாம். 61
மைந்தன் வருக 42

ய

யாட்டுப் பிழுக்கை 437
யாட்டுளான் இன்னுரை தாரான் 443
யா பன்னிருவர் உளர் போலும்
மாணாக்கர் அகத்தியனார்க்கு 274
யாம் உண்ணும் இல்லம் 230
யாம் பண்டு விளையாடும் கா 243
யாம் பண்டு விளையாடுவது இக்கா 242
யார் அவர் 207
யார் அவள் 207
யார் அவன் 207
யாழ் கேட்டான் 114
யாழும் குழலும் பறையும் இயம்பினார் 47
யாறு ஒழுகும் 235
யான் இல்லை 220
யான் உண்ணும் இல்லம் 230

யான் உனக்கியாதும் ஆகேனோ 275
யான் செய்ம்மன 220
யான் செல்க 221
யான் வேறு 220
யானைக்குக் கோடு கூரிது 106
யானைக் கோடு 407
யானைக் கோடு உண்டு 68
யானைக் கோடு செல்க 68
யானைக் கோடு பத்து 68
யானைக் கோடு யாது 68
யானைக் கோடு வீழ்ந்தது 68
யானைக் கோடு வெளிது 68
யானையது கோட்டைக் குறைத்தான் 83
யானையது கோட்டை நுனிக்கண் குறைத்தான் 98
யானையது கோடு 76
யானையது கோடு கூரிது 106
யானையார் வந்தார் 265
யானையும் தேரும் ஆளும் எறிந்தார் 286
யானையை ஊரும் 72
யானையைக் கோட்டுக்கட் குறைத்தான் 84
யானையைக் கோட்டைக் குறைத்தான் 84
யானை வந்தது 179
யானை வந்தன 179
யானை வந்தாள் 179
யானை வந்தான் 179
யானோ கொண்டேன் 251, 429

**வ**

வட்டப்பலகை 410
வடாது வேங்கடம் 211
வடுகரசர் ஆயிரவர் மக்களை யுடையர் 50
வடுகரசர்க்குச் சிறந்தார் சோழிய வரசர் 74
வண்ணக்கர் காணத்தை நீலம் என்றல் 17
வண்ணான் சாத்தன் 41
வந்தான் சாத்தனொடு 101
வயக்கஞ் சால் சீர்த்தி 306
வலியான் சாத்தனின் 99
வரைவீழ் அருவி 407
வளியென்றா 284
வறிது நெறியொரீஇ 330
வாசுதேவன் வந்தான் 4
வாணிகத்தான் ஆயினான் 73, 88
வாணிகத்தின் ஆயினான் 88
வாம்புரவி 233
வாய்க்காலைச் சாரும் 72
வாய்க்குத் தக்கது வாய்ச்சி 106
வாய்பூசி வருதும் 436
வாயாற் றக்கது வாய்ச்சி 73
வாயான் தக்கது வாய்ச்சி 106
வார்கயிற் றொழுகை 311
வானானாய உபகாரம் நோக்கி வாழும் 89
விண்ணென விசைத்தது 433
வியலிரு வானம் 358
விரலை முடக்கும் 72
விழுமு முற் றிருந்தார் 347
விற்பற்றி நின்று கோல் தா என்றால் கணைக் கோலின் மேல் நிற்கும் 53
வெள்ளி எழுந்தது 58
வேந்து செங்கோலன் 59
வேந்து வாழி 124
வேலா லெறிந்தான் 73
வேலியைப் பிரிக்கும் 72

# செய்யுள் நிரல்

## (மேற்கோள்)

### (எண் : நூற்பா எண்)


**அ**

அட்டி லோலை *(நற். 300)* 445
அடகு புலால் பாகு பாளிதமும் உண்ணான் 279
அண்டர் கயிறு அரி எருத்திற் *(குறுந். 117)* 309
அதிர்கண் முரசம் 310
அதுமற் கொண்கன் றேரே 290
அது மன் *(புறம். 147)* 244
அந்தில் கச்சினன் *(அகம். 76)* 262
அம்ப லூரு *(குறுந். 51)* 233
அம்ம வாழி தோழி *(ஐங். 31)* 271
அரிமயிர்த் திரண் முன்கை *(புறம். 11)* 350
அரும்பிணை அகற்றி வேட்ட ஞாட்பினும் 332
அலமர லாயம் *(ஐங். 64)* 304
அவனணங்கு நோய் 39
அழுங்கன் மூதூர் *(நற். 203)* 343
அறாஅ யாண ரகன்றலை *(அகம். 44)* 373

**ஆ**

ஆங்கக் குயிலும் மயிலுங் காட்டி 272
ஆர்த்தர் கொண்மார் 7
ஆர்த்தர் கொண்மார் வந்தார் 204
ஆரியர் துவன்றிய *(பதிற்றுப். 11)* 326
ஆற்றுட் செத்த எருமை ஊர்க்குயவற்கு இழுத்தல் கடன் 443
ஆன் பயமுந் தூக்கினெ 300

**இ**

இரவரன் மாலையன் *(குறி. பாட்டு 239)* 307
இலம்படு புலவர் *(மலைபடு. 576)* 354
இளம்பாண்டில் தேரூரச் செம்மாந்தது போல் மதைஇனள் *(கலித். 109)* 372

**உ**

உப்பின்று புற்கை யுண்கமா 232
உருகெழு தோற்றம் *(புறம். 58:17)* 389
உருவக் குதிரை *(அகம். 1)* 295
உவக்குந ளாயினும் *(அகம். 203)* 299
உறந்த விஞ்சி யுயர்நிலை மாடம் 341
உறுகால் *(நற். 300)* 153
உறுகா லொற்ற வொல்கி *(நற். 300)* 292, 294

**ஊ**

ஊன்றுவை கறிசோ *(புறம். 14)* 46

**எ**

எய்யா மையலை *(குறிஞ். 8)* 336
எல்வளை *(புறம். 24)* 264
எற்றென்னுடம்பினெ ழினநலம் 258
எற்றேற்ற மில்லாருள் யானேற்ற மில்லாதேன் 258

**ஏ**

ஏஎ வம்பல் மொழிந்தனள் யாயே 267
ஏஎ எஎ வம்பன் மொழிந்தனள் 405
ஏக லடுக்கம் *(அகம். 52)* 298
ஏரின்உழா அர் *(குறள். 14)* 450
ஏனோரோ தஞ்சம் இருபிறப்பினோர் வெகுளின் வானோர்க்கும் வாழ்த லரிது 261

**ஐ**

ஐதே காமம் யானே *(நற். 143)* 379

**ஒ**

ஒருவ ரொருவரைச் *(நாலடி. 309)* 190

ஒருவி ரொருவி *(மலைபடு. 218)* 455

**ஓ**

ஓண்டுவி நாராய் 148
ஓய்கலை யொருத்தல் 324
ஓர்கமா தோழியவர்
*(நற். 145), (அகம். 273)* 290
ஒல்லென்று ஒலிக்கும் *(ஐந். 28)* 254

**க**

கடல்போற் றோன்றல காடிறந் தோரே
*(அகம். 1)* 252, 281
கடிகா *(களவழி. 29)* 377
கடிமிளகு தின்ற கல்லா மந்தி 378
கடியுடை வியனகர் *(புறம். 95)* 383
கடுங்கண் யானை *(அகம். 63)* 377
கடுஞ்சூ டருகுவன் *(அகம். 110)* 377
கடுத்தன எல்லளோ வன்னை 378
கடும்பகல் *(கலி. நெய். 28)* 377
கடும்புனல் *(குறுந். 103)* 377, 389
கடுவன் முதுமகன் 193
கண்டிகு மல்லமோ கொண்க
*(ஐங்குறு. 121)* 270
கண்ணும் படுமோ வென்றிசின்
யானே *(நற். 61)* 270
கண்ணே நோக்கி வாளிழந்
தனவே *(குறுந். 44)* 361
கமஞ்சூன் மாமழை யிசைக்கும்
*(முருகு. 7)* 349
கயந்தலை மடப்பிடி *(நற். 137)* 316
கயலற லெதிரக் கடும்புனற்
சாஅய் *(நெடு. 18)* 324
கயவெள் ளருவி *(அகம். 38)* 314
கருங்கட் டாக்கலை *(குறுந். 69)* 339
கருங்கால் வெண்குருகு *(நற். 54)* 148
கருவி வானம் கதழுறை சிதறி
*(அகம். 4)* 348
கலங்கொண்டனங் கள்ளென்கோ
*(யாப். விருத்தியுரை 93ஆம் நூற்பா)* 290
கலம்பெறு கண்ணுள *(மலைபடு. 50)* 455
கலிகெழு மூதூர் *(அகம்.11)* 343
கழுமிய ஞாட்பினுள் மைந்
திழந்தாரிட்ட *(களவழி. 11)* 345
காட்டுச் சாரோடுங் குறுமுயால் 148
காப்பும் பூண்டிசிற் கடையும்
போகலை *(அகம். 7)* 269
காமஞ் செப்பாது கண்டது
மொழிமோ *(குறுந். 2)* 269
கார்மன்ற என்பவள் கண்ணுள்ளே
காதலர் தேர்மன்றத் தோன்றியது 260
காவ லோனைக் களிறஞ் சும்மே 105
கிளையரில் நாணற் கிழங்குமணற்கு
ஈன்ற *(அகம். 212)* 102
கிழவோ டேஎத்து *(இறை. கள. 8)* 77
குறவரும் மருளும் குன்றத்துப்
படினே *(மலைபடு. 275)* 250
குறையறப் பூத்த கொடிமுல்லாய் 117
குன்றத்து மேல குவளை 403
கெடவர லாயம் 313
கேழ்கிள ரகலத்து *(மதுரைக். 493)* 296
கைதொழூஉப் பழிச்சி *(மதுரைக். 694)* 376
கொடியுவணத்தவரரோ 274
கொடும்பூண் கவைஇய கோல
மார்பு 351
கொய்தளிர்த் தண்டலை 453
கொள்ளை மாந்தரி னானது
கவரும் *(அகம். 3)* 356
கொன் முனை யிரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சு நாளே*(குறுந் . 91)* 249
கொன்வரல் வாடை நின
தெனக் கொண்டேனோ 249
கொன்னூர் துஞ்சினு மியாந்
துஞ் சலமே *(குறுந். 138)* 246, 249
கோடுபல முரஞ்சிய கோளி
யாலம் *(மலைபடு. 268)* 327

**ச**

சாரல் நாட நீவர லாறே 402
சாரல் நாடன் சாயன் மார்பு *(பதிற். 16)* 319
சிறியகட் பெறினே எமக்கீயு
மன்னே *(புறம். 235)* 247
சிறுபைந் தூவிச்*(அகம். 57)* 26
சிறுமை யுறுப செய்பறி யலரே *(நற். 1)* 335
செங்கால் நாராய் 117
செழுஞ் செந்நெல் 346
செழுந்தடி தின்ற செந்நா யேற்றை 346
சென்றீ பெருமநிற் 290
நகைக்குநர் யாரோ *(அகம். 46)* 445
சென்றோ ரன்பிலர் *(அகம். 31)* 208

சேர்ந்துசெறி குறங்கு *(நற். 170)* 357
சேற்றுநிலை முனைஇய *(அகம் 46)* 380

**த**

தச்சன் செய்த சிறுமா வையம் *(குறுந். 41)* 73
தசநான் கெய்திய *(நெடுநல். 11)* 396
தடமருப் பெருமை *(நற். 120)* 315
தண்டுறை யூரயாங் கண்டிக 269
தண்ணந்துறைவன் *(குறுந். 269)* 397
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரிய *(நற். 143)* 355
தவச்சேய் நாட்டா ராயினும் *(நற். 115)* 294
தாவி னன்பொன் *(அகம். 212)* 339
திரிதிரி சுவாகா 443
தினைத் தாளன்ன *(குறுந். 25)* 456
துனைபறை நிவக்கும் *(மலைபடு. 55)* 309
தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது *(அகம். 36)* 30
தெவ்வர் தேயத்து *(புறம். 6)* 340
தேவரே தின்னினும் வேம்பு கைக்கும் *(நாலடி. 2)* 250

**ந**

நகூஉப் பெயர்ந்தோள் *(அகம். 248)* 208
நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி *(அகம். 198)* 323
நல்லறிவுடையன், செவ்வியன் சான்றார் மகன் 423
நளிமலை நாடன் *(புறம். 150)* 314
நன்றும் அரி துதுற் றனையாற் பெறும *(அகம். 10)* 338
நனந்தலை யுலகு *(குறுந். 6)* 370
நனவுப்புகு விறலியிற் றோன்று நாடன் *(அகம். 82)* 370
நனிசேய்த் தன்றவன் *(மலைபடு. 487)* 294
நாடுகாண மேன்மே லுகமின் 299
நாமவருந்த துறைபேடந்து *(அகம். 18)* 359
நிதியந் துஞ்சும் *(அகம். 227)* 396
நில்லாது பெயர்ந்த *(அகம். 110)* 455
நிழத்த யானை *(மதுரைக். 303)* 324
நீர்க்கோழி கூய்ப் பெயர்க்குந்து *(புறம். 395)* 287
நீர்த்தெவு நிரைத்தொழுவர் *(மதுரைக். 89)* 338
நீலுண் டுகிலிகை கடுப்ப 447
நொசி மருங்குல் 368

**ப**

பசித்தேன் பழஞ்சோறு தாவென நின்றாள் 435
பணைத்தோள் *(அகம். 1)* 333
பருந்திருந் துயாவிளி பயிற்று மியாவுயர் நனந்தலை *(அகம். 19)* 363
பல்குரைத் துன்பங்கள் சென்று படும் *(குறள். 1045)* 267
பாசிலை *(புறம். 54)* 397
பாணன் பறையன் *(புறம். 335)* 51
பிரியின் வாழாது என்போ தெய்ய 274
புண்ணுமிழ் குருதிப் புனல் பாய்ந்து *(குறிஞ்சிப். 172)* 355
புரைய மன்ற புரையோர் கேண்மை *(நற். 1)* 295
புலம்புவிட் டிருந்தார் *(மலைபடு. 49)* 325
புனறரு பசுங்காய் *(குறுந். 292)* 30
புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி *(அகம். 56)* 369
பெற்றாங் கறிகதில் லம்ம விவ்வூரே *(குறுந் 14)* 248
பெறுகதில் அம்ம யானே *(குறுந். 14)* 255
பேணினெ னல்லனோ மகிழ்ந *(அகம். 16)* 332
பேரிசை நவிர மேஎ யுறையும் *(மலைபடு. 82)* 323
பையு ணல்யாழ் *(அகம். 216)* 335

**ம**

மண்டில மழுங்க மலைநிறங் கிளர *(அகம். 260)* 288
மணங்கமழ் வியன்மார்பு *(அகம். 22)* 297
மரையிதழ் புரையு 447
மழகளிறு *(புறம். 38)* 305
மழவரோட்டிய *(அகம். 1)* 397
மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள் *(குறுந். 87)* 359
மாக்கட னிவந்தெழுதரு *(புறம். 4)* 18
மாதர் வாண்முக மதைஇய நோக்கே *(அகம். 130)* 371
மாயக் கடவுட் குயர்கமா வலனே 268

மெல்லம் புலம்ப கண்டிகும் 269
மோயினள் உயிர்த்த காலை *(அகம். 5)* 450

**ய**

யாட்டுளான் இன்னுரை தாரான் 443
யாணது பசலை என்றனன் *(நற். 50)* 375
யாரஃ தறிந்திசி னோரே *(குறுந். 18)* 270
யானுமென் னெஃகமுஞ் சாறும் 43

**வ**

வடவேங்கடந் தென்குமரி 18
வடுக ரருவாளர் 51
வந்தாய் மன்ற *(அகம். 80)* 209
வம்ப நாரை *(அகம். 190)* 321
வம்ப வடுகர் *(அகம். 375)* 321
வயக்கஞ்சால் சீர்த்தி 306
வரிவளை துவைப்ப *(புறம். 158)* 352
வருகதில் அய்ய *(அகம். 276)* 244
வருகதில் லம்ம *(அகம். 276)* 246
வருகதில் லம்ம வெஞ்சேரி
சேர *(அகம். 276)* 246
வருந்தினை வாழியென்
நெஞ்சம் *(அகம். 19)* 148
வருமே சேயிழை அந்திற்
*(குறுந். 293)* 262
வார் கயிற் *(அகம். 173)* 311
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்
மொழி யரிவையைப் பெறுகதில்
லம்ம யானே *(குறுந். 14)* 248
வாள்வரி வேங்கை வயப்புலி 360
வாளுடை யெறுழ்த்தோள்
*(அகம். 24)* 382
வான் நோக்கி வாழும் *(குறள். 542)* 89
விதிர்ப்புற்றுக் கண்ணிமையார் 310
வில்லோன் காலன *(குறுந். 7)* 192
விளங்குமணிக் கொடும்பூண் ஆய்
*(புறம். 130)* 126
விளிந்தன்று மாதவ *(நற். 178)* 274
வினவி நிற்றந்தோன் *(அகம். 48)* 208
வெண்கோட்டி யானை *(குறுந். 75)* 18
வெயில்புறந் தரூஉ *(மலைபடு. 374)* 297
வெரிநி னோதி 447
வெறுத்தார் *(புறம். 53)* 341
வையிலை நெடுவேல் 381
வையைக் கிறைவன் 453

# கலைச்சொல் நிரல்

## (நூற்பாவழி)

### (எண் : நூற்பா எண்)

அ

அஃறிணை 1, 3
அஃறிணை இயற்பெயர் 168
அஃறிணைக் கிளவி 43
அஃறிணைக்கு உரிமை 198
அஃறிணை விரவுப்பெயர் 147
அச்சக் கிளவி 96
அசைக்குங் கிளவி 419
அசைச்சொல் நீட்டம் 150
அசைநிலைக் கிளவி 245, 262, 266, 274
அடிமறிச் செய்தி 401
அடிமறி மொழிமாற்று 398
அண்மைச் சொல் 124, 128
அதுச்சொல் வேற்றுமை 210
அதுவென் வேற்றுமை 83, 90
அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி 76
அவையல் கிளவி 436
அளபெடைப் பெயர் 132, 138, 146
அளவின் பெயர் 411
அறியாப் பொருள் 31
அன்மைக் கிளவி 25
அன்மொழித் தொகை 406, 412

ஆ

ஆக்கக் கிளவி 22
ஆக்கமொடு கூறல் 20
ஆகுபெயர்க் கிளவி 110
ஆடியற் பெயர் 162
ஆடூஉ வறிசொல் 2, 5
ஆண்மை யறிசொல் 12
ஆண்மை இயற்பெயர் 173
ஆண்மைச் சினைப்பெயர் 174
ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயர் 175
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி 4, 12
ஆண்மைமுறைப் பெயர் 176
ஆய்என் கிளவி 209
ஆய்தப் பெயர் 164
ஆரைக் கிளவி 265
ஆற்றுப்படை 455

இ

இகர இறுபெயர் 122
இசைநிறைக் கிளவி 245
இசைப்படு பொருள் 418
இடைச்சொற் கிளவி 156
இடைநிலை 232
இதுசெயல் வேண்டும் என்னுங் கிளவி 238
இயற்கைப் பொருள் 19
இயற்சொல் 391, 392
இயற்பெயர் 171, 172
இயற்பெயர்க் கிளவி 38, 41, 193
இரட்டைக் கிளவி 48
இரவின் கிளவி 438
இருதிணை 10
இருதிணைக்கும் ஓரன்ன உரிமை 198
இருதிணைச் சொல் 169, 217
இருதிணைப் பிரிந்த ஐம்பால் கிளவி 158
இருபாற் கிளவி 215
இருபாற் சொல் 3
இருபெயர் 411
இருபெய ரொட்டு 110
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையல் 413

இருவயின் நிலையும் வேற்றுமை 97
இற்றெனக் கிளத்தல் 19
இறைச்சிப் பொருள் 193
இன்எனனப் பெயரிய வேற்றுமைக் கிளவி 75
இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர் 18

ஈ

ஈஎன் கிளவி 439

உ

உடன்மொழிப் பொருள் 185
உடனிலை அறிதல் 451
உடைப் பெயர் 162
உம்மை எச்சம் 430
உம்மைச் சொல் 250
உம்மைத் தொகை 406, 411, 415
உம்மை தொக்க எனாவென் கிளவி 284
உம்மை தொக்க பெயர் 412
உயர்திணை 1, 2, 4
உயர்திணைக்கு உரிமை 198
உரிச்சொல் கிளவி 156, 292
உருபுதொக வருதல் 100
உருபுதொடர்ந்து அடுக்கிய வேற்றுமைக் கிளவி 98
உருபுநிலை 70
உவமத் தொகை 408
உள்ளதன் நுணுக்கம் 324
உளஎன் கிளவி 216
உறழ்துணைப் பொருள் 16
உறுப்பின் கிளவி 57

எ

எச்சக் கிளவி 280
எஞ்சுபொருட் கிளவி 279, 424, 433
எடுத்த மொழி 61
எண்ணியற் பெயர் 162, 411
எண்ணின் பெயர் 411
எண்ணுக்குறிப் பெயர் 165
எண்ணுத்திணை விரவுப்பெயர் 51
எதிர்மறை எச்சம் 429
எழுத்துப்பிரிந் திசைத்தல் 389
எழுவாய் வேற்றுமை 66
எற்றென் கிளவி 258
என்றென் கிளவி 254
என்னா மரபு 416
எனஎன் எச்சம் 432
எனவென் கிளவி 253
ஏதுக் கிளவி 88

ஐ

ஐம்பால் 10
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி 72

ஒ

ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி 73
ஒப்பல் ஒப்புரை 73
ஒப்பில் போலி 273
ஒப்பி னாகிய பெயர்நிலை 165
ஒப்பொடு வருஉம் கிளவி 160, 216
ஒருசொல் அடுக்கு 405
ஒருசொல் பலபொருள் 292
ஒருபெயர்ப் பொதுச்சொல் 49
ஒருபொருள் இருசொல் 453
ஒருபொருள் குறித்த வேறுசொல் 393
ஒருமைஇயற் பெயர் 173
ஒருமைச்சினைப் பெயர் 174
ஒருமை சுட்டிய சினைமுதற் பெயர் 175
ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி 454
ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி 27
ஒருவினை ஒடுச்சொல் 87
ஒருவினைக் கிளவி 73
ஒழியிசை எச்சம் 428
ஒன்றறி கிளவி 8
ஒன்றறி சொல் 3
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவி 27
ஒன்றுமார் வினை 82

ஓ

ஓம்படை ஆணை 390
ஓம்படைக் கிளவி 93

க

கடிஎன் கிளவி 377
கடிசொல் 446
கண்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி 77
கண்ணென் வேற்றுமை 80, 84, 210
கயவென் கிளவி 316
கழுமென் கிளவி 345
காரணக் கிளவி 40
காலக் கிளவி 204, 216

காலங் கண்ணிய என்ன கிளவி 224
காலமொடு வரூஉம் வினைச்சொல் 198
கிளை நுதற் பெயர் 404
குடிப்பெயர் 162
குரை 267
குழுவின் பெயர் 162
குற்றிய லுகரம் 120
குறிப்பொடு வரூஉங் காலக் கிளவி 211
குறுக்கும்வழிக் குறுக்கல் 397
குறைச்சொற் கிளவி 447
குன்றிய லுகரம் 8, 200, 213
கொடுஎன் கிளவி 441, 442
கொடையெதிர் கிளவி 95
கொன்னைச் சொல் 249

**ச**

சார்பென் கிளவி 80
சினை நிலைக்கிளவி 81
சினைநிலைப் பெயர் 162
சினைப்பெயர் 171, 172
சினைமுதற் கிளவி 16, 33
சினைமுதற் பெயர் 171, 172
சினையறி கிளவி 110
சுட்டிக் கூறல் 36
சுட்டுப்பெயர் 40
சுட்டுப்பெயர்க் கிளவி 38
சுட்டுமுதற் பெயர் 134, 139, 145
சுண்ணம் 398, 400
செஞ்சொல் 279, 431
செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் 394
செந்தமிழ் நிலம் 392
செய்கென் கிளவி 201
செய்தென் எச்சம் 234
செய்யு என் கிளவி 230
செய்யும் என்னும் கிளவி 222
செய்யுள் ஈட்டச் சொல் 391
செய்யுள் மருங்கு 456
செய்யென் கிளவி 444
செயப்படு பொருள் 241
செயற்கைப் பொருள் 20
செயற்படற்கு ஒத்த கிளவி 106
செறற்சொல் 57
சேய்மையின் இசைக்கும் வழக்கம் 149
சொல்என் எச்சம் 435
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல் 399
சொற்குறிப்பு 85
சொன்மை தெரிதல் 153

**த**

தகுதி 17
தஞ்சக் கிளவி 261
தடஎன் கிளவி 315
தடுமாறு தொழிற்பெயர் 91
தருசொல் 29
தன்மைச் சுட்டல் 25
தன்மைச் சொல் 43, 199
தன்மை திரிபெயர் 57
தன்வினை உரைக்குந் தன்மைச் சொல் 200
தன்னுள் உறுத்த பன்மை 184
தாஎன் கிளவி 181, 182
தாவென் கிளவி 440
தானென் பெயர் 134
திசைச் சொல் 391
திசைச்சொற் கிளவி 394
திணைநிலைப் பெயர் 162
திரிசொல் 391
திரிசொற்கிளவி 393
தில்லைச் சொல் 248
தீர்ந்துமொழிக் கிளவி 106
துயவென் கிளவி 362
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவி 4
தெரிந்த கிளவி 32
தெரிந்துமொழி கிளவி 56
தெரிபுவேறு நிலையல் 154
தொகுக்கும்வழித் தொகுத்தல் 397
தொகைமொழி நிலை 406
தொழிற்படக் கிளத்தல் 241
தொழிற்பெயர் 136
தொழின்முதல் நிலை 108
தொன்னெறி மரபு 106
தொன்னெறி மொழி 443

**ந**

நளிஎன் கிளவி 317
நிரல்நிறை 398, 399
நிலப்பெயர் 162

நிறைப் பெயர் 447
நிறைப்பெயர்க் கிளவி 411
நின்றாங்கு இசைத்தல் 59
நீட்டும்வழி நீட்டல் 397
நும்மின் திரிபெயர் 140
நோக்கல் நோக்கம் 89

ப

பகுதிக் கிளவி 17
பண்பின் தொகை 406, 410
பண்பினாகிய சினைமுதற் கிளவி 216
பண்புகொள் கிளவி 216
பண்புகொள் பெயர்110, 131, 137, 162, 165
பண்புதொக வரூஉங் கிளவி 412
பதினோ ரெழுத்து 10
பல்லோர் அறியும் சொல் 2
பல்லோர் படர்க்கை 222
பலசொல் ஒருபொருள் 292
பலபெயர் 411
பலர்சொல் நடை 415
பலரறி சொல் 7
பலவற்றுப் படர்க்கை 212
பலவறி சொல் 3, 9, 166
பற்றுவிடு கிளவி 106
பன்மை இயற்பெயர் 173
பன்மை உரைக்கும் தன்மைக் கிளவி 206
பன்மைச் சினைப்பெயர் 174
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி 62
பன்மை சுட்டிய சினைமுதற் பெயர் 175
பால்திரி கிளவி 191
பால்பிரிந் திசையா உயர்திணை 58
பான்மயக்குற்ற வையக் கிளவி 23
பால்வரை கிளவி 106, 170
பால்வரை தெய்வம் 58
பாலறி மரபு 208
பாலறி வந்த அஃறிணைப் பெயர் 164
பாலறி வந்த உயர்திணைப் பெயர் 159
பாலறி வந்த என்ன பெயர் 163, 167
பிண்டப் பெயர் 86
பிரிநிலை எச்சம் 425
பிரிவில் அசைநிலை 275
பிறிதுபிறி தேற்றல் 100
பிறிதுபொருள் கூறல் 35
பிறிதுபொருள் சுட்டல் 111
பின்மொழி நிலையல் 413
புணரியல் நிலை 245
புனிறென் கிளவி 369
பெண்டென் கிளவி 160
பெண்மை இயற்பெயர் 173
பெண்மைச் சினைப்பெயர் 174
பெண்மை சுட்டிய வுயர்திணை 4
பெண்மை சுட்டிய சினைமுதற் பெயர் 175
பெண்மை முறைப்பெயர் 176
பெண்மை அடுத்த மகனென் கிளவி 161
பெயர்க்குரி மரபு 285
பெயர்ச்சொற் கிளவி 106
பெயர்தோன்று நிலை 66
பெயர்நிலைக் கிளவி 41, 71, 161, 183, 188, 443
பெயர்ப்பய னிலை 67
பெயரின் தோன்றும் பாலறி கிளவி 11
பெயரினாகிய தொகை 68
பெயரெஞ்சு கிளவி 231, 233, 427
பொதுப்பிரி பாற்சொல் 44
பொருட் கிளவி 74
பொருண்மை தெரிதல் 153
பொருண்மை நிலை 154
பொருள்செல் மருங்கு 102
பொருள்தெரி நிலை 53
பொருள்நிலை மரபு 413
பொருள் புணர்ந்த கிளவி 15
பொருளொடு புணர்தல் 405
பொருளொடு புணராச் சுட்டுப் பெயர் 37

ம

மக்கட் சுட்டு 1
மகடூஉ வறிசொல் 2, 6
மகளென் கிளவி 160
மகனென் கிளவி 160
மந்திரப் பொருள் 443

மயங்குமொழிக் கிளவி 242
மற்றென் கிளவி 257
மற்றையது என்னும் கிளவி 259
மன்றஎன் கிளவி 260
மன்னா பொருள் 34
மன்னைச் சொல் 247
மாஎன் கிளவி 268
மாரைக் கிளவி 7, 204
மிகுதி செய்யும் பொருள் 294
முதலறி கிளவி 110
முதற்சினைக் கிளவி 83
முந்நிலைக் காலம் 235
முப்பால் 207
முப் பாற்சொல் 2
முழுதென் கிளவி 320
முற்படக் கிளத்தல் 39
முற்றிய உம்மைத் தொகை 280
முற்றியல் மொழி 421
முறைநிலைப் பெயர் 162
முறைப்பெயர் 123, 150, 171, 172, 176
முறைப்பெயர்க் கிளவி 133, 144
முன்மொழி நிலையல் 413
முன்னத்தின் உணருங் கிளவி 57, 452
முன்னிலை அசைச்சொல் 269
முன்னிலைக் கிளவி 218
முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி 455
முன்னிலை வினைச்சொல் 444
மூவிடம் 28
மெய்ந்நிலைப் பொதுச் சொல் 235
மெய்ந்நிலை மயக்கு 443
மெய்ப்பொருள் 117
மெய்பெறக் கிளந்த உரிச்சொல் 383
மெய்பெறக் கிளந்த கிளவி 456
மெய்யறி பனுவல் 92
மெலிக்கும்வழி மெலித்தல் 397
மேலைக் கிளவி 211
மொழிப்பொருட் காரணம் 388
மொழிபுணர் இயல்பு 398
மொழிமாற்று 398
மொழிமாற்று இயற்கை 403

**ய**

யாணர்க் கிளவி 373
யானென் பெயர் 134

**வ**

வடசொல் 391
வடசொற் கிளவி 395
வடவெழுத்து 395
வண்ணச் சினைச்சொல் 26
வயாஎன் கிளவி 365
வருசொல் 29
வலிக்கும்வழி வலித்தல் 397
வழக்கியன் மருங்கு 456
வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி 27
வழக்கு 17
வழக்குவழி 50
வழாஅல் ஓம்பல் 13
வாராக் காலம் 234, 236, 240
வாரா மரபு 416
வாழ்ச்சிக் கிழமை 94
வியங்கோள் 217
வியங்கோள் எண்ணுப் பெயர் 45
வியங்கோள் கிளவி 221
விரிக்கும்வழி விரித்தல் 397
விரைசொல் அடுக்கு 418
விரைந்த பொருள் 236
விளிகொள்பெயர் 125
விறற்சொல் 57
வினாவின் கிளவி 32, 207
வினாவின் பெயர் 134, 140, 145
வினாவுடை வினைச்சொல் 239
வினைக்குறிப்பு 72
வினைச்சொற் கிளவி 236, 240
வினைசெய் இடம் 77
வினைசெயல் மருங்கு 245
வினைப்படு தொகை 33
வினைப்பெயர் 162
வினைப்பெயர்க் கிளவி 165
வினைமாற்று 257
வினைமுதல் உரைக்குங் கிளவி 110
வினைமுதல் கருவி 73
வினைமுதற் கிளவி 229, 237

வினையின் தொகுதி 409
வினையின் தொகை 406
வினையிற் றோன்றும் பாலறி கிளவி 11
வினையெஞ்சு கிளவி 217, 223, 426, 231, 450
வினைவேறு படாஅப் பல பொருள் ஒருசொல் 52, 55
வினைவேறு படூஉம் பல பொருள் ஒருசொல் 52, 53
வெளிப்பட வாரா உரிச்சொல் 293
வெளிப்படு சொல் 293
வேட்கைப் பெருக்கம் 365
வேற்றுமைக் கிளவி 106
வேற்றுமைத் தொகை 406, 407
வேற்றுமை தொக்க பெயர் 412
வேற்றுமைப் பொருள் 78
வேறுபெயர்க் கிளவி 42
வேறுபொருள் குறித்த ஒரு சொல் 393
வேறுவினைக் கிளவி 73
வேறுவினைப் பொதுச்சொல் 46
வேறென் கிளவி 217

# கலைச்சொல் நிரல்

## (உரைவழி)

### (எண் : நூற்பா எண்)

**அ**

அஃறிணை வினைக்குறிப்பு 211
அதனினியறல் 73
அருத்தாபத்தி 61
அவ்விடனறிதல் 233
அறுவகை ஒட்டு 1

**ஆ**

ஆக்கமில்லை 184
ஆக்கமொடு வருதல் 426
ஆணொழிமிகுசொல் 50
‘ஆ நீண்டு குற்றி’ 50

**இ**

இசைக்குஞ் சொல் 1
இசைக்குமன் 1
இடைச் சொற்கள் 244
இதனது இது 76
இது வினைக்குறிப்புப் பெயர் 211
இருமொழிப் பொருள்பட 413
இருவீற்றானும் 430
இலக்கணத்துப் பட்டன 100
இலக்கணம் வலித்தாயிற்று 213
இலேசினான் 4
இலேசு என்னையெனின் 414
இலேசு காட்டுவதென்னெனின் 227
இலேசுபற்றி 412
இலேசேயன்றி 456
இற்றது 428
இறந்தது காத்தது 437
இறந்தது காத்தல் 123, 124
இறந்தது தழீஇயற்று 449
இறப்பு 197
இறப்பும் நிகழ்வும் எதிர்வும் 197
இன்னது இது என நிற்றல் 410
இன்னான் 73

**உ**

உடம்பொடு புணர்த்தான் 33
உடைத்தென்பதாம் 433
உணர்ச்சி வாயில் 387
‘உய்த்துணரவைத்தல்’ 45
உரியவை யுரிய 158
உருவக் குதிரை 295
உலகத்து இயல்பாகி வாராநின்ற பொருள் 19
உலகத்து மாறுகொண்டு வேறுபட்டியலுஞ் சொற்கள் 451
உளப்பாட்டுத் தன்மை 200
உறழ்ந்து முடிக 446
உறுப்பின் கிழமை

**எ**

எச்சம் 450
எடுத்தோத்து 456
எண்ணுநிலை 1
எதிர்மறை 281
எதிர்வு 197
எய்தாதது எய்துவித்தல் 121, 126, 142
எய்தியதன்மேல் சிறப்புவிதி 231
எய்தியதன் மேற்சிறப்பு விதி 136, 137
எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் 128, 130, 131, 144
எய்தியது விலக்கல் 122, 145
எய்தியது விலக்குதல் 39, 221, 222
எருத்தத்துச் சீராய் 402

எல்வகை 264

ஏ

ஏகாரவெண் 283
ஏதுப் பொருட்கு ஒத்த கிழமை 88

ஐ

ஐயம் அகற்றல் 191
ஐயமறுத்தது 121, 126
ஐயமறுத்தல் 404

ஒ

ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டின 112
ஒப்பொடு வரூஉங் கிளவி 216
ஒருங்கு உளப்படுத்தல் 199
ஒருசொல் நடையன 414
ஒரு சொன் மரபு 416
ஒருதலை 237
ஒரு பொருண்மேல் இருபெயர் வழுக்காத்தல் 40
ஒரோ பெயரென்பது 69
ஒழிந்த தற்கிழமை 86
ஒழிந்து நின்ற ஒழிபு 445
ஒழிபாகி நிற்பது 217
ஒழியிசை 247
ஒழிவுப் பொருளை 280
ஒன்றன் பெயர் ஒன்றற்காய் நிற்றல் 110
ஒன்று உடைத்தென்பதாம் 433
ஒன்றுபலகுழீஇய 76

ஓ

ஓம்படுத்தல் 93
ஓம்படைப் பொருள் 93

க

கடையாத்து நின்ற வழி 419
கணைக்கோல் 53
கருமச் சார்பு 80
கருமமல்லாச் சார்பு 80
கழிந்தது 308
கழிவின்கண் வந்தது 247
குணமருங்கு 16
குழுவின் வந்த குறிநிலை வழக்கு 17
குறிப்பாற் றோன்றலும் 154
குறிப்பிற்றோன்றின 154
குறிப்பொடு தோன்றும் 210
குறைக்கும் வழிக் குறைத்தல் 1
கொடை எதிர்தல் 95
‘ஞாபகங் கூறல்’ 42

ச

சார்ந்து தோன்றும் 156
சிவணும் 232
செலவழுங்கல் 344

த

தகர ஞாழல் 412
தட்டுப்புடை 77
தடுமாறித் தோன்றுதல் 292
தடுமாறுதல் 91, 292
தடுமாறு தொழிற்பெயர் 91
தந்திரவுத்தி 2
தன்னின் வேறாகிய பொருள் தெரியப்படுதல் 153
தன்னையறியப்படுதல் 153
தனித்து உளப்படுத்தல் 199
திணை வழுக்காத்தல் 57
துணை 16
தெரித்துச் சொல்யாக்கல் 56
தெரிநிலையும்மை 250
தேவகை 77
தொடர்ச்சிக்கிழமை 404

ந

நடை 26
நிகழ்வாவது 197
நிகழாநின்ற 170
நிகழூஉநின்ற 170
நிமித்தமாகத் தோன்றும் 72
நிறுத்த முறையானே 141
நினையத் தோன்றிய 426
நினையத் தோன்றும் 399
நூற்புணர்ப்புப்பட 205
நெறிப்படுத்துதல் 99
நேர்வுபடும் 239
நேரத்தோன்றும் 7
நொசி 368
நோக்கல் நோக்கம் 89
நோக்கிய நோக்கம் 89

ப

பக்கச்சொற் கடியப் படா 17
பகந்திருந், துயாவிளி 363
படர்மலி வெற்பர் 334
பண்பினாகிய சினைமுதற்கிளவி 216
பணைத்துப்போய் 333
பணைமருள் 396
பரிமாண சூத்திரம் 61
பற்றுவிட்டான் 75
பால்வரை கிளவி 170
பாளிதம் 392
பிண்டப் பெயர் 86
பிரிப்பப் பிரியா 404
பிரிவில வரையப்படா 453
பிறவும் உள 455
பிறிதிலக்கணம் 389
பிறிதுமொன்று கொணர்ந்து இறுத்தமையின் 35
பின்னையனையை 455
புலிவிற்கெண்டை 411
புறனடை உணர்த்துதல் 456
புறத்துப்படுவதோர் இலக்கணம் 100
புறத்துறவு நீர்மை 445
பெண்ணொழி மிகுசொல் 50
பொரூஉப்பொருள் 75
பொருண்மையி னிற்றல் 110
போற்றியுணரப் படுவன 455

ம

மத்திகைக் கோல் 53
மயக்க நிரனிறை 399
மயங்கல் கூடா 11
மயங்கிவரு மரபு 243
மரபு வழுக்காத்தல் 49
மலைக்கும் பிற எனின் மலையாது 413
மறித்துச் சொற் பல்காமைத் தொகுத்திறுக்கும் 35
மறைத்துச் சொல்லுக 436
மனக்குறைக்கு மறுதலை 416
மாட்டேற்று வகை 146
மாட்டேறு சொல்லாமை 133
முண்மாறுகோளுடைய 451
முதலே பொரூஉக 16
முறை நிலையான 431
முறையி னுணர்தல் 190
முன்மொழி பின்மொழியாதல் 413
முன்னத்தான் உணரப்படும் 58
மூயிற்றுப்போல 421
“முரசிரங்கு முற்றம்” 352
மூவகைச் சொல் 203
மெய்யறி பனுவல் 92
மேல் எய்தியது விலக்கல் நுதலிற்று 140

ய

யாப்பறுத்தல் 31

வ

வழக்குப்பெற 116
வழூஉக் காத்தல் 416
வழூஉத் திரிபன்று 206
வாராமரபின வரக் கூறுதல் 416
வாளா தோதுஞ் சூத்திர மெல்லாம் வழக்கே நோக்கும் 22
விண்ணென விசைத்தது 253
விதந்த மொழியினம் வேறுஞ் செப்பும் 61
விதந்து ஓதினமையான் 148
விதப்பினான் 18
விதியோத்தாக 456
விரித்தது தொகுத்தல் 205
விரவுப் பெயராயின 194
விரவுப் பெயர்கள் 193
விரைவு நிலைமைக்கண் 236
வினாவொடு சிவணி 419
வினை கொண்டு முடியும் 432
வினைத்திறம் படுதல் 109
வினையை ஒழிபாக நிற்றல் 224
வினையொடு முடித்தல் இயல் 265
வேறு பலகுழீஇ 76


❖❖❖❖❖